# காணிக்கை

தமிழக அரசின் ஓராண்டுப் பணிகள் தொகுப்பு மலரைத் தமிழக மக்களுக்குக் காணிக்கையாக்குகிறோம்.

அரசின் பணிகளைப் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லி வரும் 'தமிழரசு' தனது ஒன்பதாவது ஆண்டைத் துவக்குகிறது.

'தமிழரசுக்குத் தங்கள் மேலான ஆதரவை நல்கி வரும் அனைவருக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி!


## தமிழரசு

மலர் 9 1-7-1978 இதழ் 1


## தமிழக அரசின் ஓராண்டுப் பணிகள் தொகுப்பு மலர்

# முதல்வரின் உறுதி

**"இரண்டு ஆண்டுகளில் தமிழகத்தில் மதுவிலக்கை முழு வெற்றி பெறச் செய்யமுடியும். இந்தப் பிரச்சினையை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு செயல்பட நான் உறுதி கொண்டுள்ளேன்", என்று தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் சென்னை பத்திரிகை நிருபர்கள் சங்கத்தில் ஜூன் மாதம் 11-ஆம் தேதி உரையாற்றுகின்றபோது குறிப்பிட்டார்.**

**அவர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது :**



மதுத் தீமையை ஒழிப்பதற்குத் தமிழக அரசு பல்வேறு திட்டங்களையும் உருவாக்கிக் கொண்டு வருகிறது. மதுவிலக்கை அமல் செய்வதற்காகத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சட்டத்தை மீறி மது அருந்துகிறவர்களையும் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களையும் தண்டிப்பதற்கான சட்டங்கள் மேலும் கடுமையாக்கப்படும்.

மற்ற மாநிலங்களில் மது விலக்கு முயற்சி தோற்றுவிட்டது என்பதற்காகத் தமிழகத்திலும் அது தோல்வி அடைய வேண்டும் என்கிற அவசியமில்லை. மது விலக்குக் கொள்கை வெற்றி பெறுவதும் தோல்வி அடைவதும் அந்த மாநிலத்திலுள்ள மக்களுடைய விருப்பத்தையும், மனோபாவத்தையும் பொறுத்த விஷயம். அண்டை மாநிலங்கள் மது விலக்கை அமல் செய்யத் தயக்கம் காட்டுகின்றன என்பதற்காக அந்த விஷயத்தில் நாம் பின்வாங்கத் தேவை இல்லை.

## மொழிப் பிரச்சினை

இந்தி மொழி மீது நமக்கு வெறுப்பு இல்லை. இந்தி ஆட்சி மொழியாக ஆவதை நாம் எதிர்ப்பதற்குக் காரணம் உண்டு. இந்தி மட்டுமே ஆட்சி மொழியானல் இந்தி பேசாத மக்களை அது இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கிவிடும். பல ஆண்டுகளுக்கு முன் மேற்கு வங்க முதலமைச்சராக இருந்த பி.சி. ராய் அவர்கள், 'மேற்கு வங்கத்தின் மீது இந்தி திணிக்கப்படுமானல் அது பிரிவினையில் தான் போய் முடியும்' என்று மத்திய அரசை எச்சரித்து இருக்கிறார். இந்தித் திணிப்பால் இந்திய ஒருமைப்பாடு பாதிக்கப்படும் என்று நாம் சொல்லுகிறோம். மொழி விஷயத்தில் நம்முடைய உணர்ச்சிகளை இந்தி பேசுகிறவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டுமென்று நான் விரும்புகிறேன். மத்திய-மாநில உறவுகளுக்குத் தொடர்பு மொழியாக ஆங்கிலத்தை வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லுகின்றவர்கள் மாநிலத்துக்கு மாநிலம் தொடர்பு மொழியாக இந்தி மொழி இருக்கலாம் என்று கூறுவது எப்படி என்று எனக்குப் புரியவில்லை. மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே தொடர்பு மொழியாக ஆங்கிலம் இருக்கலாம் என்றுல் அதே ஆங்கிலம் மாநிலங்களுக்கிடையே தொடர்பு மொழியாக ஏன் இருக்கக்கூடாது? மத்திய அரசோடு ஆங்கிலத்தில் தொடர்பு வைத்துக்கொள்ளும் மாநில அரசின் அதிகாரிகள் ஆங்கிலத்தில் பயிற்சி பெற்றவர்களாக இருப்பார்கள். ஆகவே, இன்னொரு மாநிலத்தோடு நிர்வாகத் தொடர்பு வைத்துக்கொள்ளும்பொழுது ஆங்கில மொழியைப் பயன்படுத்துவதுதானே அவர்களுக்கு வசதியாக இருக்கும்? ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக ஏற்றுக்கொண்டுவிட்ட பிறகு, இந்தி எதற்காகத் தேவை என்றே எனக்குப் புரியவில்லை.

## பத்திரிகைகள்

வெறும் விளம்பரத்திற்காக இந்த அரசு எந்தக் காரியத்திலும் ஈடுபடாது. மக்களுக்காக என்ன செய்கிறோம் என்பதுதான் முக்கியமானதே தவிர, என்ன செய்யப் போகிறோம் என்று சொல்லி விளம்பரங்கள் செய்துகொண்டு இருப்பதால் யாருக்கும் எந்தவிதமான பயனும் இல்லை.

நான் பத்திரிகைக்காரர்களை அடிக்கடி சந்திப்பது இல்லை என்கிற குறை இருந்து வருவது எனக்குத் தெரியும். ஓர் அரசு வெற்றிகரமாகச் செயல்பட்டு அதனுடைய கொள்கைகளையும், திட்டங்களையும் அவ்வப்போது பத்திரிகைகள் வாயிலாக மக்களுக்குத் தெரிவிப்பது எவ்வளவு அவசியமானது என்பதை அறியாதவன் அல்ல நான்.

ஆனல், நான் அரசின் சார்பாக வெளியிடுகின்ற எண்ணங்களையும் கருத்துக்களையும் எந்த அளவுக்குப் பத்திரிகைகள் திரித்துப் போடாமல் அப்படியே வெளியிடும் என்பது பற்றி எனக்குக் கொஞ்சம் அச்சம் உண்டு. கருத்துக்கள் சரியான முறையில் பத்திரிகைகளில் வெளியாகாமல் போய் விடுகிறபோது, எந்த நோக்கத்துக்காக அந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டனவோ அந்த நோக்கமே வெற்றி பெருமல் போவதற்கு அது வழி வகுத்து விடக்கூடும். ஆகவேதான் பத்திரிகையாளர்களைச் சந்திப்பது பற்றித் தயக்கம் காட்ட வேண்டியவனாக இருந்தேன். இப்போது இந்த அரசு பொறுப்பு ஏற்று ஓர் ஆண்டு முடியப் போகிறது. இனி, பத்திரிகையாளர்களைச் சந்திக்கும் வாய்ப்பை நிறைந்த அளவில் நான் பயன்படுத்திக்கொள்வேன்.

## மக்கள் வைத்துள்ள நம்பிக்கை

மக்கள், நான் நல்லவன் என்று நம்பித்தான் என்னைப் பெரிய பொறுப்புக்குத் தேர்ந்து எடுத்து இருக்கிறார்கள். எனக்கு வேறு எந்தத் தகுதியும் இருப்பதாக நான் கருதவில்லை. நான் நல்லவனா, இல்லையா என்பதைப் பற்றிக்கூட நானாக ஒன்றும் சொல்லமுடியாது. வருங்காலச் சந்ததியர்கள் தான் அதைப் பற்றி அபிப்பிராயம் சொல்லமுடியும். ஆனல், என்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்துகொள்ள என்னாலான எல்லா முயற்சிகளையும் செய்வேன் என்று மட்டும் என்னல் உறுதியாகச் சொல்லமுடியும். ஆகவேதான் என்னுடைய ஒவ்வொரு நடவடிக்கையிலும் நான் மிகுந்த கண்காணிப்புடனும் விழிப்புடனும் இருக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

# நோயில்லா அரசு









நிர்வா கத்தில் நிகரிலா நாணயம்
தலையீ டில்லாச் சக்கரச் சுழற்சி
காலத் தாலே காரியம் செய்தல்
இன்ன தேவை இப்பொழு தென்று
அன்னதை மட்டும் அளந்து முடித்தல்
வெற்றுப் பேச்சுகள் விளம்பர மேளம்
அண்டா திருக்கும் அடக்கப் பெருநிலை
மந்திரி என்னும் மமதையில் லாமல்
கலந்து பழகும் கண்ணியப் போக்கு
போலீஸ் கூட்டம் புடைசூ ழாமல்
மக்கள் நடுவே வலம்வரும் அழகு
வேளாண் மைக்கு வியத்தகும் உதவி
தமிழின் மேன்மையைத் தரணியில் காக்க
புதுப்புதுச் செயல்கள்! பொன்னெழுத் தாக
எழுதும் வண்ணம் இயக்கும் திறமை;
குறையையே தேடும் கூட்டங் களுக்குத்
தீனிபோ டாத செம்மையும் மேன்மையும்
பற்றுக் குறையெனப் பதறு திருத்தல்
கடன்களை எழுப்பிக் கவலை தராமல்
நிவாரணப் பணிஎன நிதிதிரட் டாமல்
திட்டத் துடனே செயல்படும் உயர்வு;
கட்சிக் காரனைக் கட்டுப் படுத்தி
ஆட்சி நேர்மையின் அறத்தினைக் காத்தல்;
வள்ளுவன் வகுத்த வழிகளுக் கிணங்க
நல்லர சொன்றை நடாத்திக் காட்டுதல்;
இவையெலாம் பெற்றதே இன்றைய ஆட்சி ;
சுவையெலாம் திரண்டு சோற்றில் விழுந்தபோல்
பசியுள பேர்க்கெலாம் பயனுள விருந்து
புகழ்ந்து பேசாது போகின் றவர்களும்
இகழ்ந்து பேசிட எதுவுமே இல்லை;
நல்லர சென்று நவிலும் முறைக்கு
இலக்கணம் வகுத்தது இன்றைய ஆட்சி ;
ஓராண்டு போல உயர்ந்து வளர்ந்து
நூறாண்டு வாழ்கஇந் நோயில்லா அரசு.





அரசவைக் கவிஞர்

கண்ணதாசன்



# இடுக்கண் களைந்த அரசு

## 1977-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள்!

வடகிழக்குப் பருவ மழை தீவிரமடைந்த நேரம்!

"இலங்கை அருகே கடலில் உருவாகி உள்ள புயல், கன்னியாகுமரிக்கும் இலங்கைக்கும் இடையே மையம் கொண்டிருந்தது. இதன் விளைவாக, தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரியிலும் பலத்த மழை பெய்யும். . ." என்று வானிலை ஆராய்ச்சி நிலையம் அவ்வப்போது அறிவித்துக் கொண்டிருந்த சூழ்நிலை!

பிறகு இந்தப் புயல், தமிழ்நாட்டுக்குக் கிழக்கே வங்காள விரிகுடாவில் 1,000 மீட்டர் (625 மைல்) தூரத்தில் உருவாகி தமிழ்நாட்டின் கரையைத் தாக்கிய வேளை!

இவ்வாறு கோரப் புயலும், கனத்த மழையும் சேர்ந்து ஆடிய ஆட்டத்தில் தமிழகமே ஆட்டங் கண்டதல்லவா!

**சென்னையில் வெள்ளக் காடு !**

அக்டோபர் மாதம் 17ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை பெரும்பாலும் விடா மழை பெய்ததால் சென்னை மாநகரின் தாழ்வான பகுதிகளில் நீர் புகுந்தது. பொதுமக்களின் அன்றாட வாழ்வு சீர் குலைந்தது. சென்னையில் வியாசர்பாடிப் பகுதி-குறிப்பாகப் பெரிதும் பாதிக்கப்பட்டது. அடையாற்று வெள்ளம் கோட்டூர்புரத்திலுள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் புகுந்தது.

**முந்திக் கொண்டது !**

தமிழ்நாட்டிற்கு மழை வழங்கும் வடகிழக்குப் பருவ மழை இந்த ஆண்டில் (1977) முன் கூட்டியே—அக்டோபர் மாத ஆரம்பத்திலேயே தொடங்கி, 17ஆம் தேதி முதல் வலுத்துப் பெய்தது.

வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளபடி 1977 அக்டோபர் முதல் நாள் முதல், 17 ஆம் நாள் வரை 14,824 மில்லி மீட்டர் அளவுக்குப் பெரு மழை பெய்திருக்கிறது. வழக்கமாகப் பெய்யும் மழையளவைக் காட்டிலும் இது 6,219 மில்லி மீட்டர் அதாவது 72 சதவிகிதம் கூடுதலானதாகும்.

**நாகம் போல் சீறியது !**

அக்டோபர் மாதம் பெய்த மழையின் பிடியிலிருந்து முற்றிலுமாக நாம் விடுபடும் முன்னர், மேலும் ஓர் இடியாகக் கடும் சூறைக் காற்று நவம்பர் 12ஆம் தேதி காலையிலிருந்தே மணிக்கு 100 கிலோ மீட்டருக்கும் அதிகமான வேகத்துடன் நாகப்பட்டினம் நகரை வன்மையாகத் தாக்கிச் சீர் குலைத்துச் சின்னாபின்னப்படுத்தியது.

**கிராமங்கள் மூழ்கின !**

பெரும் புயலோடு வலுத்த மழையும் தமிழகத்தைத் தாக்கியது. கால்வாய்களும், காட்டாறுகளும், சிற்றாறுகளும், பேராறுகளும் பெருக்கு எடுத்துக் கரை புரண்டு சுற்றுப்புறங்கள் அனைத்தையும் வெள்ளக் காடாக்கின. புதுக்கோட்டை மாவட்டத்தில் வெள்ளாற்றிலும், குண்டாற்றிலும் வெள்ளம் மிகுந்து பல கிராமங்களை மூழ்கடித்தது.

மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர் அருகேயுள்ள குடகனாற்று அணை உடைந்து, தாழ்வான பகுதிகளிலிருந்த கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

**சோதனை மேல் சோதனை !**

நாகப்பட்டினத்தைப் புயல் தாக்கியவுடன் மேலும் ஒரு புயல் உருவாகித் தீவிரமடைந்து வருவதாக வானிலை ஆராய்ச்சித் துறை அறிவித்தது. இச்சூறைக் காற்று, நவம்பர், 17, 18 தேதிகளில் பாம்பன் கடற்கரையைத் தாக்கக்கூடும் என்று முதற்கண் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அது வடக்கே நகர்ந்து நாகப்பட்டினம், கடலூர், சென்னைப் பகுதிகளை நோக்கி வந்தது. பின்னர் திசை மாறி வடக்கு நோக்கி மேலும் நகர்ந்து 19ஆம் தேதி பிற்பகல் ஆந்திர மாநிலத்தில் சிராலாப் பகுதியைத் தாக்கிச் சீரழித்தது.

**முன்னெச்சரிக்கையாக.... !**

தமிழ்நாட்டின் கடற்கரையோர மாவட்டங்களில் வாழும் மக்கள் அனைவருமே இப் புயலால் அஞ்சிப் பெரிதும் திகைத்தனர். புயலால் நேரவிருந்த பாதிப்பை, முடிந்த அளவுக்குத் தணிப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு உடனே மேற்கொண்டது.

வரலாறு காணாத வகையில் தமிழகத்தைத் தாக்கிய கடும் புயலாலும், பெரு வெள்ளத்தாலும்





பாதிக்கப்பட்டு மோசமாகச் சேதமடைந்த தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, மதுரை, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் துயர்துடைப்புப் பணிகள் துரிதமாக நடைபெற்றன.

அரசின் வேண்டுகோளுக்கு இணங்கி விமானப் படையினரும், கப்பற் படையினரும் பெரிதும் உதவினர்.

**போர்க்காலப் பணி போல்.... !**

இத்தகைய சோதனையான சூழ்நிலையில், தமிழக அரசு துயர் துடைப்புப் பணிகளைக் கொஞ்சமும் துவளாமல், தளராமல் போர்க் காலப் பணிகளைப் போல் விரைவாகச் செயல்படுத்தியது.

**முதல் தவணையாக....**

20—11—'77 அன்று மாண்புமிகு முதல் அமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் உயர் அதிகாரிகளுடன், புயல்-வெள்ள நிவாரண நடவடிக்கைகள் குறித்துக் கலந்தாலோசித்தார். அந்தக் கூட்டத்தில் வெள்ள நிவாரண நடவடிக்கைகளுக்கு முதல் தவணையாக ரூ. 15 கோடி ஒதுக்குவது என்று தமிழக அரசு முடிவு செய்தது.

அதோடு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் கொடுக்கப்படும் உதவித் தொகை ரூ. 80லிருந்து ரூ. 100 ஆக உயர்த்தப்படும்; அது தவிர ஒவ்வொரு குடும்பத்துக்கும் 2 சேலைகளும், 2 வேட்டிகளும் வழங்கப்படும்' என்றும் தீர்மானிக்கப்பட்டது.

**குடியரசுத் தலைவர் பார்வையிட்டார்....**

மேதகு குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்களும், மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களும் 25-11-'77 அன்று விமானம் மூலம் வெள்ளச் சேதப் பகுதிகளைப் பார்வையிட்டனர்.

**"முன்னெச்சரிக்கையாக இருந்ததால், தமிழ்நாடு காப்பாற்றப்பட்டது. அதிகாரிகளும், மருத்துவர்களும் உடனடியாக வெள்ளப் பகுதிக்கு விரைந்து சென்று நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்"** என்று குடியரசுத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

புயல், மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், நாகப்பட்டினம் பகுதிகளைப் பார்வையிடுவதற்காக மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் 30-11-'77 அன்று திருச்சிக்கு வருகை தந்தார்கள்.

பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட பிரதமர் அவர்கள், தமிழகத்தில் நடைபெற்று வரும் நிவாரணப் பணிகளைப் பற்றி வெகுவாகப் பாராட்டினார்கள்.

**"தமிழ்நாடு அரசு அதிகாரிகள் காட்டும் சமூகப் பணி உணர்வைப் பாராட்ட வேண்டும்"** என்று அவர் அப்போது கூறினர்.

**விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அரசு வழங்கியுள்ள சலுகைகள் :**

கடும் புயல், பெய்த பெரும் மழை ஆகியவற்றினல் பாதிக்கப்பட்ட விவசாயிகட்கு, தமிழக அரசு பல சலுகைகளை வழங்கியது. 28-11-'77 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இது தொடர்பாக ஓர் அறிக்கையை வெளியிட்டார். அவ்வறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விவசாயிகள் சம்பந்தப்பட்ட சலுகைகளாவன :

புயலாலும், வெள்ளத்தாலும் பயிர்கள் சேதமடைந்துள்ள பகுதிகளில் கூட்டுறவுத் துறை மூலம் வழங்கப்பட்டுள்ள குறுகிய காலக்கடன், மத்திய காலக் கடனாக மாற்றப்படும். இதற்கு "அன்னவாரி" சான்றிதழ் அளிக்க ஏற்பாடு செய்யப்படும்.

மத்திய காலக் கடன்களைப் பொறுத்த வரையில் இயன்ற நிவாரணம் அளிக்க 'ரிசர்வ்' வங்கியுடன் தொடர்பு கொள்ளப்படும்.

தாளடிப் பயிருக்கு நாற்றுப் பாவிட, நெல் விதைகள் இனமாக வழங்கப்படும்.

வெள்ளத்தாலும் புயலாலும் சேதமடைந்த பகுதிகளில் தாளடிப் பயிருக்கு உரமிடுவதற்காகச் செயற்கை உரங்கள் 25 சதவிகித மானியத்துடன் வழங்கப்படும். உரச் செலவுக்கான மீதமுள்ள தொகை, கூட்டுறவுக் கடனாக வழங்கப்படும்.

சம்பாப் பயிர்கள் பல பகுதிகளில் நீரில் மூழ்கி விட்டன. இதனல் மகசூல் பாதிக்கப்பட்டது. இந்தப் பகுதிகளில் மீண்டும் ஒரு முறை யூரியா மேலுரமாக இடுவது அவசியம். மேலுரம் இடுவதற்கான உரச் செலவில் 25 சதவிகிதம் மானியமாக அளிக்கப்படும். உரத்திற்கான மிகுதிப் பணம் கூட்டுறவுக் கடனாக வழங்கப்படும்.

**1978 மார்ச் மாதம் 31ஆம் நாள் வரை, மாநிலம் முழுவதும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் 25 சதவிகித மானியத்துடன் எல்லா விவசாயிகளுக்கும் வழங்கப்படும்.**

மணலால் மூடப்பட்ட நிலங்களில் சிறு விவசாயிகளுக்கு அரசே தன் பொறுப்பில் மண்ணை அகற்றித் தரும்.

ஏனைய விவசாயிகளுக்கு மண்ணை அகற்ற 50 சதவிகிதம் மானியம் வழங்கப்படும்.

பரந்த அளவில் தென்னை மரங்கள் சேதமடைந்துள்ளன. தென்னை சேதமுற்ற பகுதிகளில் தென்னங் கன்றுகள் இனமாக வழங்கப்படும்.

சேதமுற்ற கரும்பு, வாழைத் தோட்டங்களை மீண்டும் புதுப்பிக்க ஓர் ஏக்கருக்கு ரூ. 100 என்ற அடிப்படையில் மானியம் அளிக்கப்படும்.

விதை, உரம், விதை முதல் போன்ற பொருளுக்கான மானியங்கள் சிறு விவசாயிகளுக்கு வழங்கப்படும் [நீர்ப் பாசன வசதியுள்ள நிலமாக இருந்தால் (நன்செய்) 2.50 ஏக்கரும், அதற்குக் குறைவான நிலங்கள் உடையவர்களும், இதர நிலங்களாக இருந்தால் (புன்செய்) 5 ஏக்கரும், அதற்குக் குறைவான நிலங்கள் உடையவர்களும், குத்தகைக்குச் சாகுபடி செய்பவர்களும் சிறு விவசாயிகள் எனக் கணக்கிடப்படுவர்].

புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நிலவரி, நீர்த் தீர்வை, இதர வரிகள், வர்த்தகப் பயிர்கள் வரி ஆகியவைகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

எங்கு நில வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் உள்ளூர் வரி ('லோக்கல் செஸ்)' விலக்கும் அளிக்கப்படும்.

இதே இடங்களில், ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளூர் வரியின் மேல் விதிக்கும் கூடுதல் வரியையும் (லோக்கல் செஸ் சார்ஜையும்) தள்ளுபடிசெய்ய வேண்டும் என்று அரசு கேட்டுக் கொள்ளும்.

நிலவரி மற்றும் 'லோக்கல் செஸ்' தள்ளுபடி பெறுகின்ற நபர்களுக்குத் தக்காவிக் கடன் பாக்கிகளும், நடப்பு ஆண்டில் செலுத்த வேண்டிய தக்காவிக் கடன் தவணையும் 1387ஆம் பசலியிலிருந்து 1388ஆம் பசலிக்குத் தள்ளி வைக்கப்படும்.

கால்நடைகளை இழந்த விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் கால்நடை வாங்கக் கடன் உதவி வழங்கப்படும்.

புயல்-வெள்ளத்தினல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின்சாரக் கம்பங்கள் விழுந்ததன் காரணமாகவும், 'டிரான்ஸ்ஃபார்மர்'கள் கீழே சாய்ந்து பாழ்பட்டதன் காரணமாகவும் கடந்த 11-11-'77, 12-11-77 ஆகிய இரு நாட்களில் மின்சாரத் தொடர்பு அறவே இல்லாமல், கிராமங்களும் நகரங்களும் இரவில் இருண்டு கிடந்தன!

பாழ்பட்ட 'டிரான்ஸ்ஃபார்மர்களை'ச் சீரமைத்து மீண்டும் மின்சாரத் தொடர்பை அளித்திடுவதற்கு மின்சார வாரியத்தின் பணியாளர்கள் இரவு பகலெனப் பாராமல்—கொட்டும் மழையையும் குளிரையும் பொருட்படுத்தாமல்—மின்னல் வேகத்தில் பணியாற்றினர்கள்! அதன் பயனாய், 5,402 ஆக இருந்த பாழ்பட்ட டிரான்ஸ்ஃபார்மர்களின் எண்ணிக்கை 10 நாட்களில் 759 ஆகக் குறைந்தன!

இயற்கையின் கோரத் தாண்டவத்தால் வீடு இழந்த ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ. 200 வீதம் கொடுக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடைப்புகள் அடைக்கப்பட்டுச் சீரமைக்கப்பட்டன. சாலைகள் செப்பனிடப்பட்டன. தொலைபேசிகள் மீண்டும் தொடர்பு பெற்றன. டிரான்ஸ்ஃபார்மர்கள், மின் கம்பங்கள் பழுதுபார்க்கப்பட்டன.

குடிசை இழந்தவர்களுக்குக் கருணை மானியமும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேட்டிகளும், புடவைகளும் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு தடுப்பு ஊசிகளும் போடப்பட்டன. சம்பாதிக்கும் குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்களுக்குக் கருணை உதவி வழங்கப்பட்டது.

புயலால் பாதிக்கப்பட்ட பள்ளிக்கூட மாணவர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கும், மீனவர்களுக்கும் அரசு விரைந்து தக்க உதவிகள் செய்தன.

**குடிசைகள் கட்டுவதற்கான தென்னந் தட்டிகள், பனந் தட்டிகள், சவுக்குக் கம்புகள், மூங்கில் மரங்கள், கயிறுகள் ஆகிய ஐந்து பொருள்களையும் அத்தியாவசியப் பொருள்கள் எனத் தமிழ்நாடு அரசு பிரகடனம் செய்தது.**

''இயற்கையின் கடுமையான சீற்றத்துக்கு ஆளாகி, தொடர்ந்து பெய்த பெருமழையின் காரணமாக வீடு, கால்நடைகள், உடைமைகள் அனைத்தையும் இழந்தோர், கண்ணீர் சிந்தி நிற்கும் தாய்மார்கள் இவர்கள் தம் துயர் துடைக்கும் பணியில் மிகத் தீவிரமாகச் செயலாற்றிடும் தமிழக அரசிற்கு உதவிட ஏராளமான, தாராள உள்ளம் படைத்த பெருமக்கள் முன்வந்துள்ளனர். அவர்களுக்கெல்லாம் எனது நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள்.

உடனே ''முதலமைச்சர் நிவாரண நிதி''க்கு வெள்ளம்போல் நிதிகள் வந்து குவிந்தன.

புயல்-வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்ட மத்திய அரசு தக்க உதவி செய்தது.

முதலமைச்சரின் நிவாரண நிதிக்கு தமிழ் நாட்டு மக்களிடமிருந்தும் இந்தியாவின் பல பகுதிகளிலுள்ள மக்களிடமிருந்தும், பல நிறுவனங்கள், அறக்கட்டளைகள் மூலமும் நன்கொடைகள் வந்து குவிந்தன. உலக நாடுகளும் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்ததுடன், தம்மாலியன்ற நிதியை, பொருள்களாக உதவின. 'யூனிசெஃப்', செஞ்சிலுவைச் சங்கம், ஐ. நா. நிறுவனம், 'கேர்' நிறுவனம், 'காஸா' நிறுவனம் போன்ற பல்வேறு நிறுவனங்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தமது பங்கைச் செலுத்தின.



## இடுக்கண் களைந்த அரசு !

இயற்கையின் கொடுமைகளுக்கு ஆளாகி, அல்லற்பட்டு ஆற்றாது அழுதவரின் கண்ணீரைத் துடைக்க, தமிழ்நாடு அரசு துயர் துடைப்புப் பணிகளைப் போர்க்காலப் பணிகளைப் போல விரைவாகச் செயல்படுத்தியது.

உடுக்கை இழந்தவன் கைபோல, விரைந்து சென்று இடுக்கண் களைந்த தமிழக அரசை அனைவரும் பாராட்டுகின்றனர்.

# எல்லாரும் எல்லாம் பெற வேண்டும்

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பார்கள். 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்றும் சொல்வார்கள். இதனை உணர்த்த வந்த புதுயுகக் கவிஞர் பாரதியும் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்று ஒரே வரியில் முழங்கிச் சொன்னார். கூட்டுறவின் அருமை பெருமையினை இந்த வரிகள் நமக்குச் சொல்லாமல் சொல்கின்றன அல்லவா?

கூட்டுறவின் மூலம் எல்லாரும் எல்லாம் பெற வேண்டும். அதன் மூலம் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்ற நன்னோக்கோடு உருவானதுதான் கூட்டுறவு இயக்கம்.

தமிழ்நாட்டில் பல்வேறுபட்ட பொருளாதார நடவடிக்கைகளிலும் விரிந்து பரந்துள்ள கூட்டுறவு இயக்கம் தொடர்ந்து படிப்படியாக முன்னேற்றமடைந்து வருகிறது.

குறிப்பாகக் கீழ்க்காணும் முக்கியத் துறைகளில் கூட்டுறவு இயக்கம் சீரான முறையில் முன்னேற்றம் அடைந்து வருகிறது. அவை :

* வேளாண்மைக் கடன் வசதி

* விற்பனை வசதி

* வேளாண் விளைபொருள்கள் பதனிடுதல்

* பயன்கொள்வோர் நுகர் பொருட்கள் பங்கீடு

வேளாண்மைக் கடன் வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களை வழங்குவதில் கணிசமான அளவு முன்னேற்றம் எய்தியுள்ளன.

தமிழ்நாட்டில் 45.63 இலட்சம் உழவர் குடும்பங்கள் உள்ளன. இவர்களில் 31.3.'78 வரை மொத்தம் 38.72 இலட்சம் உழவர் குடும்பங்கள், அதாவது, தமிழ்நாட்டில் உள்ள மொத்த உழவர் குடும்பங்களில் 84.8 சதவீதக் குடும்பங்கள் வேளாண்மைக் கடன் வசதிக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகியுள்ளன. இன்னும் குறிப்பாகச் சொன்னால், தமிழ்நாட்டில் உள்ள சிறு உழவர்கள் மிகச் சிறு உழவர்கள், நிலமற்ற குத்தகைக்காரர்கள் ஆகிய மூவகையினரின் குடும்பங்களது மொத்த எண்ணிக்கையில் 22.83 இலட்சம் குடும்பங்கள் இந்தச் சங்கங்களில் உறுப்பினர்களாகியுள்ளன. 30-6-'77 வரை 22.28 இலட்சம் குடும்பங்கள் உறுப்பினர்களாயிருந்தனர்.










வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்கள் குறுகிய கால, நடுத்தரக் காலக் கடனுக வழங்கிய தொகை முதல் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் ரூ. 5 கோடியாக இருந்துள்ளது. 1976-77ல் இவ்வாறு வழங்கப்பட்ட தொகை 125 கோடி ரூபாயாக உயர்ந்தது. நடப்பாண்டில் (1977-78ல்) இத்தொகை 127 கோடியாக மேலும் உயர்ந்தது.

இவ்வாறு வழங்கப்படும் கடன் அளவை, 1978-79ஆம் ஆண்டில் 145 கோடி ரூபாயாக உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. இத்தொகை இம் மாநிலத்திலுள்ள உழவர்களுக்குத் தேவைப்படுகின்ற குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களின் அளவில் 70 சதவீதத்துக்குச் சற்றுக் கூடுதலாக இருக்கும்.

பயிர்க் கடன்களுக்கான வட்டி விகிதம் 12.6 சதவீதத்தில் இருந்து 12 சதவீதமாக அண்மையில் குறைக்கப்பட்டுள்ளது. உணவுப் பயிர் செய்யும் சிறு விவசாயிகளுக்கான கடன்களின் வட்டி வீதம், 10.5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. சிறு விவசாயிகளுக்கு மேலும் ஒரு சலுகை வழங்கும் நோக்கத்துடன் இந்த 10.5 சதவீதம் வட்டி, உணவுப் பயிர்களுக்கு மட்டும் பொருந்தும் என்ற நிலையை மாற்றி, சிறு விவசாயிகளின் எல்லாப் பயிர்க் கடன்களுக்கும் பொருந்தும் என்று இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

நடுத்தரக் காலக் கடன்களுக்கான 13.8 சதவீத வட்டிக்குப் பதிலாக இப்பொழுது 12.5 சதவீத வட்டியே செலுத்த வேண்டியுள்ளது. நகைகளின் மீதான கடனுக்கு வட்டி வீதம் 16 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

பஞ்சம், வெள்ளம், வறட்சி முதலியவற்றின் காரணமாகப் பயிர் விளைச்சல் பாதிக்கப்படுகின்ற போது, உழவர்கள் வாங்கியுள்ள குறுகிய காலக் கடன்களை, நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றுவதன் மூலம் அவர்களுக்கு நிவாரணமளிக்கும் நோக்குடன், மாநிலக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள், வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்கள் ஆகியவை தத்தம் நிலையில் வேளாண்மைக் கடன் வசதி நிலைப்படுத்து நிதியை ஏற்படுத்தித் தங்களது நிகர ஆதாயத்திலிருந்து இந் நிதிக்குத் தொகை வழங்கி வருகின்றன.

புயல்-வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட உழவர்களுக்குக் குறுகிய காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றியதன் மூலமும், முன்னதாக மாற்றப்பட்ட கடன்களை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்ததன் மூலமும் நிவாரண வசதி அளிக்கப்பட்டது.

1977-78ன் முற்பகுதியில் வறட்சி நிலை ஏற்பட்டபோதும், 1977 நவம்பர் மாதத்தில் புயல் மற்றும் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டபோதும் ரூ. 26.97 கோடிக்குக் கடன் வசதி மாற்றியளிக்கப்பட்டது. மற்றும் ரூ. 17.79 கோடிக்குக் கடனைத் திருப்பித் தரும் காலம் நீட்டிக்கப்பட்டது.

நீண்ட காலக் கடனைப் பொறுத்த வரையில், மாநில நிலவள வங்கி 3 கோடி ரூபாய்க் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான தவணைகளை மாற்றியமைக்கக் கருதுகிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் நீண்ட காலக் கடன் பெற்றவர்கள் அதற்கு அளித்துள்ள பிணையச் சொத்துக்களின் மதிப்பு இயற்கை இன்னல்களின் காரணமாகக் குறைந்து போனதால், அவற்றிற்கு ஈடாக அரசு உத்தரவாதமளிக்கவும் முடிவு செய்துள்ளது. இது ஏறத்தாழ 1 கோடி ரூபாயாக இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, மாநில நிலவள வங்கி ஆகியவை பாதிக்கப்பட்ட இடங்களில் தொடர்ந்து கடன் அளிக்கும் பொருட்டு அரசு இவ்வங்கிகள் ஒவ்வொன்றுக்கும் வழி வகை முன் பணமாக முறையே 5 கோடி ரூபாய், 7 கோடி ரூபாய் கொடுத்துள்ளது.

அண்மையில் ஏற்பட்ட புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் வேளாண்மைக் கடன் வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் உரம் வாங்குவதற்காக 1.02 கோடி ரூபாய் அளவுக்குக் கூடுதல் கடன்களையும், பயிர்கள் முற்றிலும் சேதமடைந்துள்ள பகுதிகளில் புதிதாகப் பயிர் செய்ய 5.54 கோடி ரூபாய் அளவுக்குப் புதிய கடன்களையும் வழங்கின.

செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள சிறு விவசாயிகளுக்குத் தாளடிப் பயிருக்கு ஓர் ஏக்கருக்கு 50 ரூபாய், சம்பாப் பயிருக்கு ஓர் ஏக்கருக்கு 20 ரூபாய் என்ற உச்ச வரம்புக்குட்பட்டு, உரத்திற்கான விலையில் 25 சதவீதத்தை உதவித் தொகையாக வழங்க அரசு 150 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள எல்லா உழவர்களுக்கும் வழங்கப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கான விலையில் 25 சதவீதத்தை உதவித் தொகையாக ரூ. 18.75 இலட்சம் வரை 1978ஆம் ஆண்டு மார்ச் மாதம 31ஆம் தேதி வரையில் வழங்க, அரசு வகை செய்துள்ளது.

உழவர்களுக்கு, குறிப்பாக சிறு உழவர்கள், மிகச் சிறு உழவர்கள் ஆகியோருக்கு ஒரே அமைப்பின்கீழ் ஒருங்கிணைந்த கடன் வசதியையும், வேளாண் பணிகளையும் அளிக்கும் பொருட்டு, சிறு உழவர்கள் வளர்ச்சி நிறுவனம், மாநில அரசு இவற்றின் உதவியுடன் அண்மையில் 1977 நவம்பர் மாதத்தில் அமைக்கப்பட்ட 14 சங்கங்கள் உட்பட, 26 உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1977-78ல் குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களாக 3.23 கோடி ரூபாயும் மற்றும், 1.23 கோடி ரூபாய்க்கு நகை ஈட்டுக் கடன்களாகவும் சொந்த ஜாமீன் பேரில் நுகர் கடன்களாகவும் இந்தச் சங்கங்கள் வழங்கியுள்ளன.

749 வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் வசதிச் சங்கங்களும், 331 மத்திய-மாநிலக் கூட்டுறவு வங்கி

களின் கிளைகளும், 128 கூட்டுறவு நகர வங்கிகளும் நகைகளின் பேரில் கடனுதவி அளித்து வருகின்றன.

1976-77ல் ரூ. 40.10 கோடி ரூபாய்க்கு நகையீட்டுக் கடன்களை 919 கூட்டுறவு நிறுவனங்கள் வழங்கியதற்குப் பதிலாக, 1,208 கூட்டுறவு நிறுவனங்கள் 1977-78ஆம் ஆண்டிற்கு 50.77 கோடி ரூபாய்க்கு நகையீட்டுக் கடன்கள் வழங்கியுள்ளன.

நகை ஈட்டுக் கடன் வசதியை விரிவாக்கும் பொருட்டு கூட்டுறவு நிறுவனங்களின் எண்ணிக்கை 300க்கு மேல் அதிகரித்துள்ளது. 1978-79ல் மேலும், 300 வேளாண்மைக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் நகை ஈட்டுக் கடன் வசதியை அளிக்கும். ஒரு கிராம் தங்கத்திற்கு முன்னதாக ரூ. 20 என்ற வீதத்தில் அளித்து வந்த கடன் தொகையை இப்பொழுது கிராம் 1க்கு ரூ. 40 வீதம் அளிக்கக் கூட்டுறவு நிறுவனங்கள் கோரப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாநில வங்கி, மாவட்ட மத்திய வங்கிகள், வேளாண்மைக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை 30-6-77ல் 154.24 கோடி ரூபாய் அளவுக்கு வைப்புத் தொகைகளைத் திரட்டியிருந்தன. 1978-79ஆம் ஆண்டிற்கான கடன் வழங்கு திட்டத்தை அனுசரித்து, இவை, வைப்புத் தொகைகளை 185 கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்தத் திட்டமிட்டுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள உழவர்களுக்குத் தேவைப்படும் நீண்ட காலக் கடன்களை மாநில நிலவள வங்கியுடன் இணைந்துள்ள 223 தொடக்க நிலவள வங்கிகள் வழங்கி வருகின்றன. 1977-78ல் நீண்ட காலக் கடன்களாக ரூ. 12.28 கோடி வழங்கப் பட்டுள்ளது.

வேளாண் மறு நிதி வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் திட்டங்களை வகுப்பதன் மூலம், வேளாண்மை வளர்ச்சிக்குக் கடன் வழங்கப் பகுதி வாரியான வளர்ச்சி பற்றித் திட்டமிடப்பட்டது. 37.22 கோடி ரூபாய் மொத்த நிதி ஒதுக்கீடு கொண்ட 45 சிறு பாசனத் திட்டங்களும், 11.08 கோடி ரூபாய் மொத்த நிதி ஒதுக்கீடு கொண்ட 30 சிறு பாசனமில்லாத திட்டங்களும் இப்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தொடக்க நிலவள வங்கிகள், சிறு பாசனத் திட்டங்களுக்கும், நில மீட்புக்காகவும், டிராக்டர்கள் வாங்குவதற்காகவும், நிலம் வாங்குவதற்காகவும் கடனுதவி வழங்கி வருகின்றன.

1978-79ல் சாதாரணத் திட்டத்தின்கீழ் 11.10 கோடி ரூபாயும், வேளாண் மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் உதவி பெறும் திட்டங்களின்கீழ் 7.90 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 19 கோடி ரூபாய் அளவுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கப்படும்.

நிலத்தடி நீர் பற்றுக் குறையினால் சிறு பாசனத் திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கான வாய்ப்புக் குறைந்து வருவதால், தென்னை, முந்திரி, காப்பி பயிரிடுதல், மலைத் தோட்டங்கள் அமைத்தல், பட்டுப் புழு வளர்த்தல், டிராக்டர்கள், கலப்பைகள் வாங்குதல், பண்ணை வீடுகள், கால்நடைக் கொட்டகைகள், பால் பண்ணைத் திட்டங்கள், குத்தகைதாரர்கள் நிலம் வழங்குதல் முதலிய சிறு பாசனத் திட்டங்களுக்காகக் கடன் வழங்க நிலவள வங்கிகள் முயன்று வருகின்றன.

நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் உபரி நிலம் ஒப்படைக்கப் பெற்றவர்கள் தங்கள் நிலத்தை நிலவள வங்கிகளிடம் அடமானம் வைத்து அரசு உத்தரவாதத்துடன் வளர்ச்சிக் கடன் பெற அரசு அனுமதி அளித்துள்ளது. சுமார் 85,000 ஏக்கர் நிலம் ஒப்படைக்கப் பெற்ற சுமார் 50,000 சிறு உழவர்கள் இதனால் பயனடைவர்.

1977- ஜூலை முதல் 1978 ஏப்ரல் முடிய 85 பகுதிகளில் 33,529 நிலத்தடி நீர்ப் பிரிவுகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டது. 30-4-'78 வரையில் 6,028 நிலநீர்ப் பிரிவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 12,000 நிலநீர்ப் பிரிவுகளுக்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. 1977 ஜூலை முதல் 1978 ஏப்ரல் முடிய நிலவள வங்கிக் கடன்களைக் கொண்டு கிணறுகளில் நிறுவப்பட்ட 1,747 மின் சாரப் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டது.

புதுக் கிணறு வெட்டுவதற்காகும் செலவில் 25 சதவீதம் அல்லது 500 ரூபாய், இதில் எது குறைவானதோ அத்தொகையை உதவித் தொகையாகத் தொடக்க நிலவள வங்கிகள் மூலம் சிறு உழவர்களுக்கு அரசு வழங்கி வருகிறது. 1977-78ல், 1,002 சிறு உழவர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்தனர். மேலும், 1,000 சிறு உழவர்களுக்கு ஒரு கிணற்றுக்கு 500 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்க 1978-79ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொடக்க நிலையில் 118 வட்டக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இருந்தன. இவை மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்போடு இணைந்துள்ளன. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு ஒன்றுதான், மாவட்ட அளவில் உள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கமாகும்.

1976-77ல் ரூ. 35.72 கோடிக்கு வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. 1977-78ல் ரூ. 53.44 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டன. 1976-77ல் ரூ. 49.20 கோடி பெறுமானமுள்ள 3.03 இலட்சம் டன் இரசாயன உரத்தைக் கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகம் செய்தன. 1977-78ல் ரூ. 56.34 கோடி பெறுமான 3.48 இலட்சம் டன் இரசாயன உரத்தை விநியோகித்துள்ளன.

மக்களுக்கு, குறிப்பாகக் கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கும், நலிந்த பிரிவைச் சார்ந்தவர்களுக்கும் இன்றியமையாத நுகர் பொருட்கள், தரமானவையாகவும் குறைந்த விலையிலும் கிடைக்கும் பொருட்டு, பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



## கேடுகள் களைய

கூட்டுறவுச் சங்கங்களின் நிர் வாக முறையில் மலிந்திருந்த முறைகேடுகளையும், ஒழுங்கீனங்களை யும் அதற்கென்று ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்த பாரதி குழு தன்னுடைய அறிக்கையில் தெளி வாகச் சுட்டிக் காட்டியிருந்தது. அந்த அறிக்கையின் அடிப்படை யில், ரூ. 45.88 இலட்சம் தொகை தொடர்பாக 233 நேர்வுகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன. மேலும் 49 நேர்வுகளில் வழக்கு மன்றங்களில் வழக்குகள் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. கூட்டுறவு அமைப் புகள் சீரான முறையில் இயங்க வும், குறைநீக்கி, தூய்மையான முறையில் செயல்படவும் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன

30-6-77ல் 20 சிறப்பங்காடிகளும், 86 சிறப்புச் சிற்றங்காடிகளும் இருந்தன. 2 சிறப்பங் காடிகளும், 29 சிறப்புச் சிற்றங்காடிகளும் புதிதாக நிறுவப்பட 1977-78ல் அரசு நிதி உதவி அளித்துள் ளது. இதே ஆண்டில் சமுதாயத்தில் நலிந்தவர் களுக்காக 32 சிறிய கிளைகளையும், 38 மிகச் சிறிய கிளைகளையும் கூட்டுறவு நுகர்வோர் சங்கங்கள் அமைக்க அரசு நிதி உதவி வழங்கியுள்ளது.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் கொள் முதலை ஓர் அமைப்பின் மூலம் ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன் வட்டாரப் பகிர்ந்தளிப்பு நிலை யங்கள் நிறுவும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோவையில் ஒரு நிலையம் அமைக்க ஏற்கெனவே அனுமதி அளிக்கப்பட்டு ஏற்பாடுகள் நடந்து வரு கின்றன. மற்றொரு நிலையம் சென்னையில் நிறுவப் பட 1977-78ல் அரசு 25 இலட்சம் ரூபாய் நிதி உதவி அனுமதித்துள்ளது.

1977-78ஆம் ஆண்டில் வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்கள் மூலமாக 25 கிராமப்புற நுகர் வோர் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின் றன. மேலும், 43 திட்டங்களுக்கு அனுமதி வழங்கு வதற்கான செயற்குறிப்புகள் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு அனுப்பப்பட்டு, இவற்றில் 30 திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த 30 திட்டங்கள் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ. 39.81 இலட்சம் செலவில் நிறைவேற்றப்படும். இதனால், படித்து வேலையில்லா மல் இருப்பவர்களில் 647 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலம் முழுவதிலும் பத்தாயிரம் நியாய விலைக் கடைகள் உள்ளன. இவற்றுள் சுமார் ஏழாயிரம் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் ஒரு நியாய விலைக் கடையாவது திறப்பது அரசின் கொள்கை யாகும். இதனால் அத்தியாவசியப் பண்டங்கள் தாராளமாகக் கிடைப்பதற்கு வகை செய்யப்படும். முதல் கட்டமாக திருநெல்வேலி, மதுரை, இராம நாதபுரம் மாவட்டங்களில் இவை திறக்கப்படும். திருநெல்வேலி மாவட்டத்தில் இத்திட்டம் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும், மற்றும், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் இத் திட்டம் கூட்டுறவுச் சங்கங்களினுலும் அமல் நடத்தப்படும்.

ஒரு கிராமத்திற்கு ஒரு நியாய விலைக் கடை அமையும் வகையில், ஏற்கெனவே உள்ள 1,176 கடைகளுக்கும் கூடுதலாக மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்களினுல் 1,045 புதிய நியாய விலைக் கடைகளைத் திறக்க ரூ. 43.71 இலட்சம் அரசு நிதியுதவி அனுமதித்துள்ளது.

விடுதியில் தங்கிப் பயிலாதவர்களுக்கும், கிரா மப்பகுதியிலிருந்து வந்து பயில்வோருக்கும் மலி வான விலையில் உணவு வழங்கக் கல்லூரி மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகளில் பொதுச் சமையல் நிலையங்களை ஏற்படுத்துவதற்கான திட்டம் ஒன்று தமிழ்நாட்டில் அண்மையில் கொண்டுவரப்பட்டு உள்ளது. 1977-78ல் 24 நிலையங்கள் துவக்கப் பட்டன.

1976-77ல் சென்னை மாநகரம் நீங்கலாக மாநிலத்தின் மற்ற இடங்களில் தேசியமயமாக்கப் பட்ட பாட நூல்கள் விற்பனை செய்யும் பணியை மாநில அரசு முதன் முறையாகக் கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைத்தது. 1977-78ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் 3.70 கோடி ரூபாய் மதிப்புள்ள 236.91 இலட்சம் பாடநூல்களை விற்பனை செய்துள்ளன. 35,530 பள்ளிகளில் பயி லும் சுமார் 77 இலட்சம் மாணவர்களுக்குச் சரி யான விலையில் உரிய நேரத்தில் இப்பாட நூல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அரசு எடுத்த முடிவினையொட்டி பின்தங்கிய வகுப்பினர் அரிசனங்கள், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும், மெட்ரிக் வகுப்பிற்கு முந்திய படிப்பு உதவித் தொகை



பாட நூல்கள் வடிவில்தான் 1977-78ல் கொடுக்கப் பட்டது. ரொக்கமாகக் கொடுக்கப்படவில்லை. 1978-79ஆம் ஆண்டிலும் கூட்டுறவுச் சங்கங்கள் பாடநூல்கள் விற்பனையைத் தொடர்ந்து செய்து வருகின்றன.

சலுகைக் கட்டணத்தில் தாள்களை இந்திய அரசிடம் பெற்று, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து மாநில அரசு முடிவு செய்யும் விலையில் மாணவர்களுக்கு விற்பனை செய்து வருகின்றன.



நலிந்த பிரிவினருக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல், தம் பணிகளைப் பெருக்கிடும் பொருட்டு அவற்றிற்கு உதவி செய்தல் ஆகியவற்றிலும் அரசு அக்கறை கொண்டது. இவ்வகைச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

திண்டுக்கல்லில் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. சைக்கிள் ரிக்ஷா வாங்குவதற்கு ஒவ்வொருவருக்கும் மான்யமாக ரூ. 200ம், வட்டியில்லாக் கடனாக ரூ. 800ம் 50 பேருக்கு வழங்கப்படும். இச்சங்கத்திற்கு மான்யமாக ரூ. 6,600, வட்டியில்லாக் கடனாக ரூ. 5000 நடைமுறைச் செலவுக்காக வழங்கப்பட்டுள்ளது.

நவீன உலர் சலவை நிலையங்களை அமைப்பதற்காக ஒவ்வொன்றுக்கும் ரூ. 33,000 வீதத்தில் மதுரையிலும், ஈரோட்டிலும் இரண்டு சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 1978-79ல் மேலும் இரண்டு சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நவீன முடிதிருத்தும் நிலையங்களை அமைப்பதற்காக ஒவ்வொன்றுக்கும் ரூ. 21,000 வீதத்தில் பரமக்குடியிலும், உடுமலைப்பேட்டையிலும் முடிதிருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டிற்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 1978-79ல் மேலும் இரண்டு முடிதிருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த உதவியைப் பெறும்.

ஐந்து தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. 1978-79ல் மேலும், இரண்டு வனத் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மூன்று இலட்சம் ரூபாய் அளவிற்கு உதவியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாநிலத்திலுள்ள 15 கூட்டுறவு அச்சகங்களில் 5 கூட்டுறவு அச்சகங்களுக்கு அரசு பங்கு மூலதன உதவி அளித்துள்ளது. 1978-79ல் மேலும் 5 கூட்டுறவு அச்சகங்களுக்குப் பங்கு மூலதனமளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மலைச்சாதியினர் மிக அதிகமாக வாழ்கின்ற பகுதிகளில், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக ஒரே இடத்தில் கடன் மற்றும் விற்பனை வசதிகளுக்கும், ஏனைய ஒருங்கிணைந்த பணிகளுக்கும் வகை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1976-77ஆம் ஆண்டில் சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் ஏழு பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்(LAMPS)அமைக்கப்பட்டன. மலைச்சாதி உறுப்பினர் ஒருவர் குறுகிய காலக் கடன் மற்றும் நடுத்தரக் காலக் கடன் மீது செலுத்த வேண்டிய வட்டி 4 சதவீதம் மட்டுமேயாகும். சாதாரணமாக, வசூலிக்கப்படும் வட்டி வீதங்களுக்கும் இந்த வட்டி வீதத்திற்கும் உள்ள வித்தியாசம், அதாவது குறுகிய காலக் கடன்களுக்கு 6.5 சதவீதமும், நடுத்தரக் காலக் கடன்களுக்கு 8.5 சதவீதமும் அரசால் மான்யமாக ஈடு செய்யப்படுகிறது.

1977-78ஆம் ஆண்டில் மேலும் இரு பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வட ஆர்க்காடு மாவட்டத்தில் புதூர் நாட்டில் ஒன்றும், சேலம் மாவட்டத்தில் அருநூத்துமலையில் மற்றொன்றுமாக அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்சொன்ன சங்கங்களில் 9,254 மலைச்சாதியினர் உறுப்பினர்களாக உள்ளனர். இவை 1977-78ல் 30.95 இலட்சம் ரூபாய் அளவிற்கு விவசாய உற்பத்திக் கடன்களையும் 23,000 ரூபாய் அளவிற்கு நுகர்பொருள் கடன்களையும், 7.84 இலட்சம் ரூபாய் அளவிற்கு நடுத்தரக் காலக் கடன்களையும் வழங்கின. இச்சங்க உறுப்பினர்கள் 5.19 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள காடுபடு சிறுபொருள்களைத் திரட்டினர். உறுப்பினர்களுக்கு 6.65 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நுகர் பொருட்கள் விற்கப்பட்டன.

மலைச்சாதியினரின் முன் கடன்களைத் தீர்ப்பதற்காக, அவர்களுக்குக் கடன் வசதி செய்து தரும் பொருட்டு இச்சங்கங்களுக்கு ஒரு நிதி உருவாக்கப்படும். இதற்காக 1978-79ல் அரசு 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

தமிழ்நாட்டில் கூட்டுறவுக் கல்வி, பயிற்சி, விளம்பரம் ஆகியவற்றின் பொறுப்பை சென்னையிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் நிறைவேற்றி வருகிறது. கூட்டுறவுத் துறையின் இடைநிலையில் உள்ள பணியாளர்களுக்குக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி மூலமும், இளநிலைப் பணியாளர்களுக்குச் சென்னையில் உள்ள மத்தியக் கூட்டுறவுப் பயிற்சிச் சாலை மூலமும் கூட்டுறவுப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்களில் தேவைப்படும் இளநிலைப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக மாவட்டங்களில் உள்ள 7 கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியினால் 36 இலட்சம் ரூபாய் செலவில் கட்டடத் தொகுதி ஒன்று கட்டப்படுகிறது. இதற்காக அரசு தனது பங்காக 10 இலட்சம் ரூபாய் 1977-78ல் மான்யமாக வழங்கியுள்ளது.

இவ்விதமாக, கூட்டுறவின் மூலம் எல்லாருக்கும் எல்லாம் கிடைத்திடும் பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நிலையை மேம்படுத்த எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.



# காலநடைகளைக் காத்திட!

நமது நாட்டின் மக்கள் தொகையில் பெரும்பான்மையோர் கிராமப் புறங்களில் வாழ்கின்றனர். அவர்களின் முன்னேற்றத்திற்கான தேவைகளை தமிழக அரசு நன்குணர்ந்துள்ளது. இவர்களில் 70 முதல் 80 சதவிகிதத்திற்கும் மேலான மக்கள் சமுதாயத்தின் தாழ்த்தப்பட்ட பிரிவினர்களான சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் இதுபோன்றவர்கள் ஆவர். கால்நடைப் பராமரிப்புத் துறையில் கண்ட முன்னேற்றங்களும், சாதனைகளும் இத்துறை புணரமைக்கப்பட்டதால் பெருமளவு பாதிக்கப்பட்டு செயலற்றுப் போய் விட்டது. புணரமைப்பால் ஏற்பட்ட குறைகளைக் களைந்து கால்நடை வளர்ச்சியின் பல்வேறு திட்டங்களுக்குப் புத்துயிர் கொடுத்து செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

ஆகவே, அதன் முதற்கட்டமாக தீவிர கால்நடைப் பராமரிப்புத் திட்டங்களும், கேந்திர கிராமத் திட்டங்களும் மீண்டும் துவங்கப்பட்டன. தற்போது 4 தீவிர கால்நடை வளர்ச்சித் திட்டங்களும், 39 கேந்திர கிராமத் திட்டங்களும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இவை தவிர, தற்போது 29 கோழி விரிவாக்க நிலையங்களும், இரண்டு குஞ்சு பொரிக்கும் நிலையங்களும் இயங்கி வருகின்றன. மேற்கூறியவைகள் அனைத்தும் இன்றைய அரசு கிராமப்புற வளர்ச்சியில் தனி கவனம் செலுத்துகிறது என்பதைத் தெளிவாக்குகிறது.

1977-78-ஆம் ஆண்டில் கால்நடை பராமரிப்பில் கண்டுள்ள சில குறிப்பிடத்தக்க சாதனைகள் பின்வருமாறு:—

1. கால்நடைகள் விவசாயிகளுக்கு உறுதுணையாக இருப்பதாலும் அவைகள் அடிக்கடி தொத்து நோய்களினால் பாதிக்கப்பட்டு அகாலமாகச் செத்து போய் விவசாயிகளுடைய பொருளாதார முன்னேற்றத்தைத் தடுப்பதாலும் இவ்வரசு தனி கவனம் செலுத்தியது. இதன் பலனாக, கடந்த ஓராண்டில் இராணிப்பேட்டையிலுள்ள கால்நடைநோய்த்தடுப்பு ஆராய்ச்சி நிலையம் (1) தென்னிந்தியாவிலேயே முதன் முறையாக வெறி நோய் ஒற்றை ஊசித் தடுப்பு மருந்தைத் தயாரித்து மக்களின் நீண்ட நாள் தேவையைப் பூர்த்தி செய்துள்ளது (2) புதியதொரு ஆட்டு அம்மை தடுப்பு மருந்தை தயாரித்து விரைவில் வெளியிடவிருக்கிறது. (3) கோமாரி நோய் தடுப்பு மருந்தையும் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

**2. கால்நடை நோய் புலனாய்வு நிலையங்கள் :**

தேவையான தடுப்பு மற்றும் சிகிச்சை முறைகளைக் கையாண்டு கொடிய கால்நடை நோய்களைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன், கால்நடை நோய் புலனாய்வு நிலையங்கள் மதுரை, திருநெல்வேலி, வேலூர், உதகமண்டலம், கடலூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

**3. ஈச்சங்கோட்டையில் உயர் அயலின கால்நடை பண்ணை நிறுவுதல் :**

தமிழகத்தில் செயல்படும் பல்வேறு கால்நடைத் திட்டங்களுக்குத் தேவையான உயர் அயலின காளைகளை அளிக்கும் நோக்குடன் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டையில் 50 ஜெர்சி கிடாரிகளையும், 2 ஜெர்சி காளைகளையும் கொண்டு உயர் அயலின கால்நடைப் பண்ணை நிறுவப்பட்டுள்ளது. மேலும் மானியத் தொகை உதவியுடன் உறைவிந்து வங்கி ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தஞ்சையைச் சுற்றிலும் தரமான அயலினக் கலப்பு கன்றுகள் உற்பத்தியாகும்.





**4. கால்நடை சுகாதாரப்பணி :**

கால்நடை சுகாதாரப்பணிகளை விரிவாக்கும் வகையில் 12 புதிய கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஏற்கனவே இயங்கி வந்த 5 கால்நடை மருந்தகங்கள் (Dispensaries) கால்நடை மருத்துவ மனைகளாக (Hospitals) உயர்த்தப்பட்டன. 1977-78-ம் ஆண்டில் 1 பிரதம மருத்துவ மனையும், 3 கால்நடை மருத்துவ இயங்கும் நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டன. 3 வெக்கை நோய் சோதனைச் சாவடிகளும், 1 நோய் கண்டுபிடிக்கும் சுழற்சி நிலையமும், 15 கேந்திர கிராம நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டன. இதுதவிர 80 ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களும் நிறுவப்பட்டன. பசுந்தீவன வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிறு அளவிலான புல் வளர்ப்புத் திட்டத்தின் மூலம் 450 பேர் பயனடைந்தனர்.

**5. சிறப்புத் திட்டங்கள் :**

(அ) சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 4303 பேர்களுக்கு, கன்று மானியம் வழங்கப்பட்டன. இது தவிர 2450 ஆடு வளர்ப்பு நிலையங்களும், 29 கோழி வளர்ப்பு நிலையங்களும் நிறுவப்பட்டன.

(ஆ) வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 258 கறவை மாடுகள் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. 43 பேர்களுக்கு உழவுப் பயிற்சி அளிக்கப்பட்டன. 699 ஆடு வளர்ப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டன. 595 பேர்களுக்கு, கன்று மானியம் வழங்கப்பட்டது. 19 கோழி விரிவாக்க நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டன.



மேற்கூறிய இச் சிறப்புத் திட்டங்கள், தமிழகத்திலுள்ள சேலம், வடஆர்க்காடு, மதுரை, தென்ஞர்க்காடு, கோயம்புத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு, தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றன.

**6. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :**

**(Hill area development Scheme)**

மலைப்பகுதியில் வாழும் சமுதாயத்தின் மிக அடித்தளத்திலுள்ள மக்களின் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 200 ஆடு வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இத்திட்டத்தைச்செயல்படுத்துவதற்காக நீலகிரி மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் :**

**(Western-ghat development Scheme)**

இத்திட்டத்தின் கீழ் சமுதாயத்தின் தாழ்த்தப்பட்ட பிரிவினரைச் சேர்ந்தவர்களிடமிருந்து 1000 கன்றுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவைகளுக்கு, கன்று மானியம், கால்நடைத் தீவனமாக வழங்கப்பட்டது.

**மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் :**

**(Tribal Welfare Scheme)**

தமிழகத்தில் சேலம், தென்ஞர்க்காடு, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, வடஆர்க்காடு ஆகிய 5 மாவட்டங்களில் மலைவாழ் மக்கள் வாழும் 9 பகுதிகள் உள்ளன. மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மக்களுக்கு, கறவை மாடுகள் வளர்ப்பதற்கும், கோழி, பன்றி வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்தவும் மற்றும் பசுந்தீவன நாற்றுகள் வழங்கவும் சுகாதார வசதிகளை அளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. இப்பகுதிகளில் மலைவாழ் மக்களுக்கு 420 கறவை மாடுகள் வழங்கப்பட்டன. 128 ஆடு வளர்ப்பு நிலையங்களும், 105 பன்றி வளர்ப்பு நிலையங்களும் 135 கோழி வளர்ப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## உணவுதானிய உற்பத்தியில் ஒரு சாதனை !

தமிழ்நாட்டில் 1977-78 ஆம் ஆண்டில் மொத்த உணவு தானியங்களின் உற்பத்தி 81.10 இலட்சம் டன்களாகும். முந்தைய ஆண்டு உணவு தானியங்களின் மொத்த உற்பத்தியின் அளவு 70.68 இலட்சம் டன்களாகும்.

அகில இந்திய அளவில் இவ்வாண்டு உணவுதானியங்களின் உற்பத்தியின் மொத்த அளவு 12 கோடியே 50 இலட்சம் டன்களாகும். கடந்த ஆண்டில் உணவுதானியங்களின் மொத்த உற்பத்தி 11 கோடியே 10 இலட்சம் டன்களாகும். உணவுதானியங்களின் உற்பத்தி அகிலஇந்திய அளவில் 12.6 சதவீதம் அதிகமாகியுள்ளது. அதேசமயத்தில் தமிழ்நாட்டில் உணவுதானியங்களின் உற்பத்தி 14.7 சதவீதம் அதிகமாகியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

# வளரும் வனவளம்



**பு**திய அரசு பொறுப்பேற்ற பின்னர் வனத்துறையின் வளர்ச்சித் திட்டங்கள் புதிய நோக்குடன் விரைந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மரங்களைப் பயன்படுத்தி நடைபெறும் தொழில்கள் வளர வனவளம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. காகிதம் செய்வதற்குப் பயன்படும் மரங்களை ஏலம் விட்டால், அத் தொழிலுக்குத் தேவையான மரங்கள் போதிய அளவுக்கு இருப்பில் இல்லாமல் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும். எனவே, ஏலம் விடுவது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இடைத்தரகர்களின் தலையீடும் தவிர்க்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் கிடைக்கும் மூங்கிலும், பிரம்பும் தமிழகத் தொழில்களுக்குத் தேவைப்படும் அளவு கிடைக்க வேண்டும் என்பதற்காக, பிற மாநிலங்களுக்கு அவற்றை ஏற்றுமதி செய்வது தடைப்படுத்தப் பட்டுள்ளது. இதனால் குடிசைத் தொழில்களுக்குத் தேவைப்படும் பிரம்பு தாராளமாகக் கிடைக்கவும் வழி ஏற்படும்.

காகிதம் தயாரிக்கப் பயன்படும் மரவகைகளைத் தொடர்புடைய தொழில்களுக்கு வழங்குவதில் புதிய முறை கையாளப்படுகிறது. நீண்ட காலத் தவணையில் வழங்கி வந்ததை மாற்றி ஆண்டுதோறும் வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் ஆண்டுதோறும் விலைகளைத் திருத்தி அமைக்கவும், ஆண்டுதோறும் பல்வேறு தொழில்களுக்கு எவ்வளவு மரங்கள் வழங்கப்படுகின்றன என்பதைக் கணக்கிடவும் அரசுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. சில மர வகைகளின் விலைகள் உயர்த்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சேஷசாயி பேப்பர் & போர்ட்ஸ் நிறுவனத்தாருக்கு வழங்கப்பட்ட யூகலிப்டஸ் மரங்களின் விலை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 60 என்றிருந்த விலை ரூ. 80 என்ற அளவுக்கு உயர்த்தப் பட்டுள்ளது. இவ்வாறே கேரளாவில் உள்ள குவாலியர் ரேயான் நிறுவனத்திற்கும், சௌத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனத்தாருக்கும் வழங்கப்படும் யூகலிப்டஸ் மரப் பொருட்களுக்கும் விலை உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் வனத்துறையின் வருவாயும் பெருகுகிறது; பேப்பர் ரேயான், போன்றவற்றின் மொத்த விலையும் முறையாக விதிக்கப்படுகிறது.

தீப்பெட்டி செய்வதற்குரிய மென் மரப்பொருட்கள் ஏலத்தில் விற்கப் பட்டால், தீப்பெட்டித் தொழில் போன்ற சிறு தொழில்கள் பெரும் ஏலப்போட்டியில் போட்டியிட்டுத் தமக்கு வேண்டியவற்றைப் பெற முடியாமல் தளர்ந்துவிடுகின்றன. எனவே, தீப்பெட்டித் தொழில்களுக்கான பொருட்களைத் தயாரிக்கும் தொழில்கள்தான் மென் மர ஏலப் போட்டியில் பங்குபெற வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

வன வளத்தைக் காப்பாற்ற விழிப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மைசூர் மாநிலத்தின் எல்லையை அடுத்துள்ள கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்து சந்தனக் கட்டைகள் அதிகம் கடத்தப்படுவதால், பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த எல்லைப் பகுதிகளிலுள்ள காவல் துறையினரை விழுப்புடன் இருக்கும் படி அரசு ஆணையிட்டுள்ளது. தவறு செய்கிறவர்களுக்குத் தண்டனை வழங்கப்படுகிறது. வனத்துறை அலுவலர்மீது ஏதாவது குற்றம் சாட்டப்பட்டு ஆதாரம் இருப்பதாகத் தெரிந்தால் உடனே நடவடிக்கை எடுக்கப்படுகிறது; வனவளம் காப்பாற்றப்படுகிறது.




## என்ன?

உடல் ஆரோக்கியத்துடனும், மகிழ்ச்சியுடனும் குடும்பம் இருப்பதுதான் குடும்ப நலத்தின் நோக்கம்.

## ஏன்?

ஒவ்வொரு பிரசவத்திற்குப் பின்னரும் தாயின் உடலிலுள்ள ரத்தம் குறைந்து கொண்டு வருகிறது. அடிக்கடி பிரசவித்தால் ரத்தம் மேலும் குறைந்து உடலையும் உயிரையும் பாதிக்கும் வியாதிகள் பிடிக்கும்.

## எப்பொழுது?

திருமணமான புதிதிலேயே குடும்பநல வழிமுறைகளை கடைபிடித்தல் வேண்டும். சரியான வழிமுறைகளை கடைபிடித்தால் நீங்களும் குழந்தைகளும் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

## எவ்வாறு?

குடும்ப நல வழி முறைகளில் ஒன்றை கடைபிடிக்கவும். முதல் குழந்தை வேண்டும் என்று விரும்பும் வரை நிரோத்தையும், சாப்பிடும் மாத்திரைகளையும் உபயோகிக்கவும். முதல் குழந்தை பிறந்த பின் லூப்பையும் முறையைப் பயன்படுத்தவும். இரண்டு குழந்தைகளுக்குப் பின் அறுவை சிகிச்சை செய்துக் கொள்ளவும்.

குடும்ப நல வழிமுறைகளுக்கும் சாதனங்களுக்கும் அருகிலுள்ள ஆதார சுகாதார நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**மகனோ மகளோ - இரண்டு குழந்தைகள் தான்!**

davp 77/591



# மகளிர் நலங்காக்கும் மகத்தான பணி!



'பெண்களே, நாட்டின் வாழ்வுக்கும் வளத்திற்கும் கண்கள்' என்பதை நாம் உணர்ந்து செயல்படும் காலமிது.

மகளிர் நலனுக்காகப் பாடுபடுவது சமுதாய வளர்ச்சிக்கான அடிப்படையாகும். எனவே, இப்பணியில் மிகுந்த அக்கறையுடன் நமது அரசு செயல்பட்டு வருகிறது. கடந்த ஓராண்டில் மகளிர் நலனுக்காக ஆற்றியுள்ள பணிகள் வருமாறு :—

ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்குக் குறைவாக உள்ள குடும்பத்தைச் சேர்ந்த 16-30 வயதுக்குட்பட்ட பெண்களில் 1,000 பேருக்குத் தட்டச்சு-சுருக்கெழுத்து ஆகியவற்றில் பயிற்சி பெற ஒவ்வொருவருக்கும் உதவி நிதியாக ரூ. 150 தரப்படுவதற்கான திட்டத்தை அரசு அறிவித்துள்ளது.

கைம்பெண்களுக்கு உதவுவதற்காக அரசு மேற்கொண்டுள்ள பணிகளை அறியாதோர் பலர். அவர்களுக்கு அத்திட்டங்களைப் பற்றி விளக்குவதற்காக மாநிலத்தில் பல்வேறு இடங்களில் ஆலோசனை நிலையங்கள் நிறுவப்படும் என்று 1977-'78ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி முதற்கட்டமாக சென்னை, தஞ்சை, மதுரை, கோவை ஆகிய இடங்களில் ஆலோசனை நிலையங்கள் அமைக்கும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்குக் குறைவாக உள்ள குடும்பங்களைச் சேர்ந்த விதவைப் பெண்களின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் 1977-'78-ல் அறிவிக்கப்பட்டு இந்த ஆண்டிலிருந்து தொடங்கப்படுகிறது.

முன்பு தாம்பரம்-கடலூர் — தஞ்சாவூர் ஆகிய மூன்று இடங்களில் மகளிர் பணி மனைகள் இருந்தன. இந்த அரசு புதிதாக இரண்டு இடங்களில் (திருநெல்வேலி, சேலம்), மகளிர் பணி மனைகள் தொடங்க ஆணையிட்டுள்ளது.

கிராமப் புறங்களில் நல்ல முறையில் மகளிர் நல்வாழ்வுப் பணிகளுக்காகப் பாடுபடும் தனியார் நிலையங்களுக்கு ஊக்கமூட்டுவதற்காக மானியம் வழங்கும் திட்டத்தையும் அரசு அறிவித்துள்ளது.

ஆதரவற்றுப் போன கைம்பெண்களில்—தையல் வேலை தெரிந்தவர்களுக்கு அந்தத் தொழில் செய்வதற்கு உதவியாக 1977-'78-ம் ஆண்டில் ரூ. 3 இலட்சம் மதிப்புள்ள 500 தையல் இயந்திரங்கள் வழங்கப் பட்டுள்ளன.

கைம்பெண்கள் மறுமணத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதிலும் இந்த அரசு ஆர்வத்துடன் உள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் விதவைகள் மறுமணத்தின்போது ஒவ்வொரு தம்பதிக்கும் ரூ. 5,000 மதிப்புள்ள 7 ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வழங்க அரசு ரூ. 5 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

**பெண் கல்வி**

**வெறும் உத்தியோக நோக்குடன் கல்வி பயில்வதோடு நின்றுவிடாமல் நம் பெண்கள் அறிவு வளர்ச்சி வேகத்தோடும் கல்விபெற முற்படுவது மிக முக்கியம்!**

—பண்டித நேரு

இவ்வாறு மகளிர் நலனுக்காக, கடந்த ஓராண்டில் மட்டும் பல்வேறு பணிகளை நமது அரசு முனைப்புடன் செயலாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

### சிறுவர் சீர்திருத்தப் பணிக்காக...

சிறுவர் சீர்திருத்தப் பள்ளிகளில் இடநெருக்கடி இல்லாமல் அங்குள்ள சிறுவர்களுக்குப் போதிய இடவசதி இருக்க வேண்டும் என்பதற்காக அரசு கூடுதலான சீர்திருத்தப் பள்ளிகள் கட்ட வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் பொழுது இது ஒரு சாதாரண திட்டமாகத் தோன்றினாலும், மனோதத்துவ ரீதியில் சிறுவர்கள் தங்களைத் தாங்களே சீர்திருத்திக்கொள்ள இத்தகைய பணிகள் பேருதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது இம்மாநிலத்தில் 3,154 குழந்தை நல நிலையங்கள் உள்ளன. இவற்றுள் 30 நிலையங்கள் இந்த ஓர் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டவையாகும். 1978-79-ல் புதிதாக 150 நிலையங்கள் தொடங்கப்படும்.

உடல் ஊனமுற்ற-குறிப்பாக இரண்டு கால்களும் செயலற்றுப் போனவர்களின் நடமாட்டத்திற்கு உதவுவதற்காக அரசு இந்த ஆண்டில் (1977-78) ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள மூன்று சக்கர வண்டிகள் 500 வழங்கியுள்ளது.

காது கேளாச் சிறுவர்கள்—கண்பார்வையற்றோர் ஆகியோரும் அரசின் கவனத்துக்கு வந்துள்ளனர். காது கேட்கும் கருவிகள் வழங்கப்பட்டன. கண்பார்வையற்றோர் கைத்தறி நெசவு-பாய் முடைதல் ஆகிய சிறு தொழில்களில் பயிற்சி பெறுவதற்காக 40 பேர் தங்கிப் படிக்கக் கூடிய ஒரு தொழிலகமும் தொடங்கப்பட்டுள்ளது.



# குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு பயிர்களுக்குத் தேவை விஜய்



குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.

ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

**VIJAY**
MADRAS FERTILIZERS




MFL-1517





# சீரான நிதி நிலைமை

**வே**லை வாய்ப்பைப் பெருக்குதல், வறுமை நிலையை அகற்றுதல், கிராமப்புற வளர்ச்சி, சமுதாயத்தில் அடித்தள மக்களின் மேம்பாடு ஆகியவையே அரசின் அடிப்படைக் குறிக்கோள்கள். சொல்லப்போனால், இவையே தற்போது தேசிய அளவிலும் குறிக்கோள்களாக விளங்குகின்றன.

நாட்டின் இன்றையப் பொருளாதார நிலைமையைக் கவனிக்குங்கால், உணவுத் தானியங்களும், அன்னியச் செலாவணியும் பெரும் அளவில் இருப்பது அரிய வாய்ப்பாகும். விலைவாசிகளில் ஓரளவு ஏற்றம் இருப்பினும், இது அச்சமுறுமளவுக்கு இல்லையென்றே சொல்ல வேண்டும்.

மின் உற்பத்திக்குப் பயன்படும் அணைகளில் நீர் அளவு நன்றாக உள்ளது. தென் மேற்குப் பருவ மழை இயல்பாக இருந்தால், வரும் ஆண்டில் மின் வெட்டு ஏதும் இராதென்று எதிர்பார்க்கலாம். வேளாண்மைக்குத் தேவையான இடுபொருள்களின் இருப்பு திருப்திகரமாக உள்ளது. தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருள்களிலும் பற்றாக்குறை ஏதும் இல்லை. தொழிலாளர் நலத் துறையில் பல பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டு, பெருமளவிற்கு அமைதி நிலவுகிறது. இந்த அரிய வாய்ப்புகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு, வளர்ச்சியின் வேகம் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

நிறைவேறத் தயாராயுள்ள நல்ல திட்டம் எதுவும், நிதிப் பற்றாக்குறையின் காரணமாகத் தடங்கலோ தாமதமோ அடையக் கூடாது. இந்த அடிப்படையில், மத்திய அரசு, மாநிலங்களுக்குப் போதிய நிதி உதவி செய்து, அவர்களுடன் தோளோடு தோள் நின்று செயல்பட வேண்டுமென்பதே தமிழக அரசின் விருப்பமும் வேண்டுகோளும் ஆகும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தை இந்த ஆண்டுடன் முடித்து, 1978-79-ஆம் ஆண்டிலிருந்து புதிய ஐந்தாண்டு விரிவடையும் திட்டம் ( Rolling Plan ) ஒன்று தொடங்கப்படும் என்று தேசிய அளவில் எடுக்கப்பட்டுள்ள முடிவை அனைவரும் அறிவர்.

வரும் ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்கும் முன்னர், 1978-79 ஆம் ஆண்டுத் திட்டம், 1974-75-லிருந்து செயற்படுத்தப்பட்டு வந்த ஐந்தாவது திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்கு 1974 முதல் 1979 வரையிலான ஐந்து ஆண்டுத் திட்ட அளவை 1,122 கோடி ரூபாய் எனத் தேசிய வளர்ச்சிக் குழு நிர்ணயித்து இருந்தது. இந்தக் கால அளவில் நடப்பாண்டுடன் முடிவடையும் நான்கு ஆண்டுகளில், நமது திட்டச் செலவு 864 கோடி ரூபாயாக இருக்கும். வரும் ஆண்டில், திட்ட அளவு 305 கோடி ரூபாயாக இருக்கும். இது நடப்பாண்டிற்கு ஒப்புக்கொள்ளப்பட்ட திட்ட அளவான 260 கோடி ரூபாய்க்கு மேல், 45 கோடி ரூபாய் அளவில், அதாவது 17 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. இது, திட்டவட்டச் செலவை மேம்படுத்துவதில் அரசு கொண்டுள்ள அக்கறைக்கு அறிகுறியாகும். 1974 முதல் 1979 வரை நமது திட்டச் செலவு 1,169 கோடி ரூபாயாக, அதாவது தேசிய வளர்ச்சிக் குழு நிர்ணயித்த அளவுக்கு மேலாகவே இருக்கும்.

கிராமப் பகுதிகளுக்கும் நலிந்த பிரிவினருக்கும் முன்னுரிமை கொடுத்து, வளர்ச்சிப் பணிகளுக்கான ஒதுக்கீடுகளை இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மேலும் உயர்த்துவது நமது அடிப்படை நோக்கம் ஆகும்.

## மத்திய அரசு பாராட்டும் வகையில் மாநிலத்தின் சாதனை !

**கிராமங்களில் நியாயவிலைக் கடைகளைத் திறப்பதற்கு மத்திய அரசும் ஒரு திட்டம் வகுத்துள்ளது; அதற்கு முன்னதாகவே அத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழக அரசு முனைந்துள்ளது.**

**இதனை மத்திய அரசும் மனமுவந்து பாராட்டி உள்ளது.**

**மத்திய அரசு வகுத்துவரும் திட்டத்தின் அடிப்படையில் இப்புதிய விநியோகச் சங்கிலித் தொடரை விரிவுபடுத்தவும், மாநில அரசுக்கு ஏற்படும் கணிசமான செலவை ஈடுசெய்ய, மத்திய அரசு மாநில அரசுக்கு நிதியுதவி செய்ய முன்வரவேண்டுமென்று வலியுறுத்தப்பட்டு வருகிறது !**

# மேலுரமிட்டு மகசூல் பெருக்குவீர்!
# மேலுரமிட மேன்மையான உரம்
# ஸ்பிக் யூரியா




* அழகிய வெண்முத்து வடிவங்கள்
* அதிகத் தழைச்சத்து 46.2%
* மிகக் குறைவான பையூரெட்-0.3% தான்
* ஆசியாவிலேயே மிகப் பெரிய, ஸ்பிக் தொழிற்சாலையில் தயாராகிறது.

CAS SPIC 4 TM 77

சிறப்பான யூரியா வேண்டுமா? **ஸ்பிக் யூரியா** என்று கேட்டுவாங்குங்கள்.

## கிருஷ்ணா ஆற்றிலிருந்து

# சென்னைக்குக் குடிநீர்!



ஆந்திர மாநிலத்திலுள்ள கிருஷ்ணா ஆற்றிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவருவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் கோடைக் காலத்தில் ஏற்படும் தண்ணீர்த் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்காக கிருஷ்ணா ஆற்றிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டது. அதற்கான பேச்சுவார்த்தை 1978 ஜூன் 15ஆம் நாளன்று ஆந்திராவிலுள்ள ஐதராபாத் நகரில் நடந்தது.

இந்தப் பேச்சு வார்த்தையில் இரு மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் எடுத்துச் சொன்ன கருத்துக்களை அனைவரும் கவனத்துடன் ஆலோசனை செய்தனர்.

பேச்சு வார்த்தை நடந்து ஒரு மணி நேரத்தில் ஒப்பந்தம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஆந்திராவிலுள்ள ஸ்ரீசைலம், சோமசீலா அணைக் கட்டிலிருந்து கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீரைத் திறந்த கால்வாய் மூலம் கொண்டுவருவதா? அல்லது பாதுகாக்கப்பட்ட மூடிய கால்வாய் வழியாகக் கொண்டு வருவதா? என்று இனிமேல்தான் முடிவு செய்யப்படும். அதுபற்றி ஆராய நிபுணர்கள் குழுவொன்று உடனடியாக அமைக்கப்பட்டு, வேலைகள் உடனடியாகத் தொடங்கப்படுகிறது.

கிருஷ்ணா ஆற்றிலிருந்து சென்னைக்குக் குடிநீருக்காக ஆண்டுதோறும் 1500 கோடி கன அடி தண்ணீர் எடுத்துக் கொள்ள ஆந்திரம், கர்நாடகம், மராட்டிய மாநிலங்கள் சம்மதம் அளித்துள்ளன.

எனவே, கிருஷ்ணா ஆற்றின் மீதுள்ள ஸ்ரீசைலம் அணைக்கட்டிலிருந்து தண்ணீரை எடுத்து, 98 மைல் தூரத்துக்குக் கால்வாய்மூலம் கொண்டுவந்து சோமசீல அணையில் விடப்படும். அங்கிருந்து 162 மைல் தூரமுள்ள பூண்டி நீர்த் தேக்கத்திற்குத் தண்ணீர் கொண்டுவரப்படும். பூண்டியில் சென்னைக் குடிநீர்த் திட்டத்துடன் அது இணைக்கப்படும்.

கிருஷ்ணா ஆற்றுக்கும் பூண்டி நீர்த் தேக்கத்துக்கும் இடையே உள்ள தூரம் 260 மைல் ஆகும்.

இந்தப் பேச்சு வார்த்தையில் தமிழ்நாட்டின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், மின்சாரத்துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் அவர்கள், வேளாண்மை-நீர்ப்பாசன அமைச்சர் திரு பி. குழந்தைவேலு அவர்கள் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் மூவர் கலந்து கொண்டனர்.

ஆந்திர மாநிலத்தின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் சென்னாரெட்டி அவர்கள், வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. சுதாகர ராவ் அவர்கள், வேளாண்மைத்துறைச் செயலாளர், பாசனத்துறை ஆலோசகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வரும் விடுதலை நாளில் வெற்றிக்கு திறவுகோல் இதோ!




# தமிழ்நாடு பரிசுச் சீட்டு விடுதலை நாள் சிறப்புக் குலுக்கல்!

சிறப்பு முதல் பரிசுகள் இரண்டு
ஒவ்வொன்றும்

**ரூ. 5,00,000** வீதம்.

சிறப்பு இரண்டாவது பரிசுகள் மூன்று
ஒவ்வொன்றும் ரூ. **1,00,000** வீதம்.
முதல் பரிசுகள் வரிசைக்கு இரண்டு
ஒவ்வொன்றும் ரூ. **50,000** வீதம்.
மற்றும் ஆறுதல் பரிசுகளும் ஏராளமான இதர பரிசுகளும் உண்டு
மேலும் அதிக மக்கள் வெற்றி பெற்றிட வாய்ப்புகள் அதிகம்.

**குலுக்கல் நாள் 19-8-1978**

**மொத்தப் பரிசுத் தொகை ரூ. 41 லட்சம்**
**10 வரிசைகள் — மொத்தப் பரிசுகள் 13,075**

மறவாதீர்! தமிழ்நாடு பரிசுச் சீட்டுத்திட்டம்
ஒரு நல்வாழ்வுத்திட்டம்— நீங்கள் செலவிடும்
தொகைக்கு உரிய பயன் உண்டு.

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத்திட்டம்,
அரசினர் தோட்டம், சென்னை-600 002





# புகழோடு வளரும்

# போக்குவரத்துத் துறை



சாலை வசதிகளும், போக்குவரத்தும் இணைந்து வளர்ந்தாலன்றி ஒரு மாநிலம் எல்லாத் துறைகளிலும் சம முன்னேற்றம் காண்பது எளிதல்ல. அந்த ஒருங்கிணைந்த வளர்ச்சியினைக் கருதித்தான் சாலை வசதிகள்-போக்குவரத்து ஆகிய இரு துறைகளும் ஒரே அமைச்சரின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. படிப்படியாக ஒரே செயலாளரின் நிர்வகிப்பின் கீழும் கொணரப்பட்டன.

புதிதாக ஒரு சாலை உருவாக்கப்படுகிறபோது, அதனை மக்களுக்குப் பயன்படுகின்ற பேருந்துத் தடமாக்குவதென்பது அவ்வகை நிர்வாகச் சீரமைப்பால் எளிதாகுமல்லவா?

அரசுடைமையாக்கப் பட்ட பின்னாலே, நமது மாநிலத்தில் போக்குவரத்துத் துறை பெரிதும் வளர்ச்சி யடைந்து வருகிறது.

இங்குள்ள பத்தாயிரம் பேருந்துகளில், 52 சதவீதம் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன. அரசுடைமையாக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கைக் கேற்ப மாநிலத்திலுள்ள ஏழு பேருந்து போக்குவரத்துக் கழகங்கள் சீராகப் பணியாற்றிச் சிறப்புற வளர்ந்துள்ளன.

அவற்றில் இரண்டொரு போக்குவரத்துக் கழகங்களில் நிதி நெருக்கடி இருந்தபோதிலும், மொத்தத்திலே பார்க்கிறபோது 1977-78-ல் போக்குவரத்துத்துறை அடைந்துள்ள முன்னேற்றம் மகத்தானதாகும். ஆகவே, இந்த ஆண்டிலே மட்டும் மூன்று கோடி ரூபாய் இத்துறை மூலம் இலாபம் கிட்டுமென எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த எதிர்பார்ப்பின் காரணமே—

பேருந்துகளின் பராமரிப்பு, தேவையான நேர மாறுதல்கள், தொழிலாளர் பெருமக்களின் துவளாத தொண்டின் அடிப்படையிலான உற்பத்திப் பெருக்கம், நட்டமில்லாத வருவாய் ஆகியவைகளேயாகும்!

இந்த ஓராண்டுக் காலத்தில்—டீசல், டயர் போன்றவற்றின் விலை உயர்ந்துவிட்டதனை யாரும் மறுக்க முடியாது. அந்த நிலைமையிலேயும் பேருந்துகளின் கட்டணம் உயர்த்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதுமட்டுமல்ல; விரைவுப் பேருந்துகளிலேயே ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு ஆறு காசு கட்டணம் என்றிருந்ததை, ஐந்து காசாக அரசு குறைத்திருக்கிறது.

வேலைநிறுத்தம் போன்ற இடர்ப்பாடுகளை இடையிலே சந்திக்க நேர்ந்தபோதிலும், ஏழை எளியோர் நலன் பற்றி இந்த அரசு சிந்திக்கத் தவறாது என்பதற்கு இவையெல்லாம் சிறந்த உதாரணங்கள் அல்லவா?

போக்குவரத்துக் கழகங்களின் மூலம் வருகின்ற வருவாயில் பெரும் பங்கு, சாலை வளர்ச்சி போன்ற அது தொடர்பான பணிகளுக்கும் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

கிராமப் பகுதிகளில் சிற்றுந்துகள் ( Mini Buses ) இயக்கிடவும் திட்டம் இடப்பட்டுள்ளது. இந்த ஓராண்டுக் காலத்திற்குள் 221 புதிய வழித் தடங்களில் பேருந்துகளை இயக்கி இதுவரை போக்குவரத்துத் தொடர்பில்லாத 466 கிராமங்களில் உள்ள 7 இலட்ச மக்கள் பயன்பெறுமாறு பேருந்து வசதிகளைப் பெருக்கியுள்ளது இவ்வரசு.

புதிய வழித் தடங்கள் மட்டுமல்லாமல், 681 புதிய பேருந்துகள் இவ்வாண்டில் ரூ. 10.22 கோடி மதிப்பில் வாங்கப்பட்டு பேருந்துத் தடங்களில் பணிபுரிகின்றன. அத்துடன் சென்னைப் பெருநகரில் மட்டும், நிறைவுற்ற இவ்வாண்டில் 59 புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. அத்துடன் இன்னும் மூன்று ஆண்டுகளில் தடங்களில் புதிதாக 550 பேருந்துகள் அதிகமாக விடப்படும்.

பழைய பேருந்துகளுக்குப் பதிலாக 380 புதிய பேருந்துகளை சென்னைப் பெருநகர் பிரிவிற்கு உலக வங்கியின் உதவி கொண்டு வாங்கி இயக்கிடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவை மட்டுமல்ல; 3 புதிய பணிமனைகள், 8 பேருந்து முனை நிலையங்கள், 400 நிழற்கொடைகள் ஆகியவற்றைக் கட்டிடவும், 2 பெரும் கிடங்குகள் 1 சிறுகிடங்கு ஆகியவைகளுக்காகவும் ரூ. 6.55 கோடி செலவில் அமைத்திடத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவைகளினால் பயணிகளுக்கு மட்டுமல்லாமல் வேலையில்லா

மல் அவதிப்படும் இளைஞர்களுக்கும் பயன் உண்டு. இத்திட்டங்கள் இப்போது உள்ளதைவிட 1,275 புதிய நபர்கள் வேலை பெறும் வாய்ப்பினையும் அளிக்கும்.

ஏறத்தாழ எட்டு இலட்சம் மக்கள் வாழக்கூடிய 325 கிராமங்களுக்குப் புதிதாகப் பேருந்துகள் விடப்பட்டன. பயணிகளின் வசதி கருதி இந்த ஆண்டிலே மட்டும் போக்குவரத்துக் கழகங்கள் ரூ. 2.38 கோடி செலவிட்டுள்ளன.

பயணிகளின் வசதி கருதிச் செலவிடும் நேரத்தில், போக்குவரத்துக்கழகத் தொழிலாளர் நலன் கருதுவதும் இன்றியமையாததல்லவா?

இந்த ஆண்டில்-தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் பல, அரசினாலே ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றன. அதன் மூலம் உண்டான கூடுதல் செலவு மூன்று கோடியே 53 இலட்சம் ரூபாயாகும்.

அண்மையில்-பேச்சு வார்த்தைகளினால் ஏற்பட்ட உடன்பாட்டின் பயனாக, போக்குவரத்துப் பிரிவிலுள்ள ஒவ்வொரு தொழிலாளியும் கூடுதல் ஊதியம் மற்றும் பிற படிகள் என்ற வகையில் அதிகமாக ரூ 62-ம் (ஓட்டுநர் எனில் ரூ. 69-ம்) பெறுவதோடு, பிற சலுகைகள் என்ற அடிப்படையில் ரூ. 24-ம் பெறுவர்.

தொழிலாளர்களுக்கென நிதி உதவிபெற்ற சிற்றுண்டிச் சாலை வசதி, தொழிலாளர்களின் பிள்ளைகள் கல்வி நலம் பெற பள்ளி-கல்லூரி சென்றுவர இலவசப் போக்குவரத்து வசதி, ஓட்டுநர்களுக்குக் குளிர் கண்ணாடி, நியாய விலைக்கடைகள், மருத்துவ வசதி எனத் தொழிலாளர்களுக்கு உற்றுழி உதவி வருகிறது அரசு.

விபத்தின்றிப் பேருந்தைச் செலுத்திடுவோர்க்கு ரொக்கப் பரிசுத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பணிக்காலத்தில் இறந்து போகும் தொழிலாளர் குடும்பத்தில் எவரேனும் ஒருவருக்கு வேலை வாய்ப்பளிக்கப்படுகிறது.

இப்படிப் பல்வேறு வகையிலே போக்குவரத்துத் துறை ஆற்றி வரும் பயனுள்ள பணிகள் ஏராளமாகும். போக்குவரத்துத் துறையின் ஓராண்டுக் கால வளர்ச்சியும் சாதனைகளும் அரசின் பெருமைக்கு அணி செய்வதன்றோ!

## சிறிய நலநிலையம்
# சிறந்திட அரசு உதவி

**ஆரம்ப சுகாதார நிலைய அமைப்பில், கிராம மக்களுக்கு மருத்துவப் பணிகளை வழங்கத்தக்க அமைப்பொன்றினை உருவாக்குவது பயன்மிக்கதாயிருக்குமெனக் கருதியது அரசு.**

**அந்த அடிப்படையில், 1976ல், சென்னை-அடையாறில் உள்ள சுகாதாரத் தொண்டு நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் சஞ்சீவி 'சிறிய சுகாதார நிலையம்' என்றோர் திட்டம் துவக்குவது குறித்து,தக்க கருத்தினைத் தெரிவித்தார். அதன்படி அன்றைய அரசு மூலம் 34 சிறிய சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டன. மத்திய அரசு, மாநில அரசு, தொண்டு நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து பெறும் நிதியுதவியோடு இந்நிறுவனம்—கிராமங்களில் நோய்த்தடுப்பு, நோய் நிவாரணம், நோய்க்குப்பின் உடல்நலம் பேணல் ஆகிய பணிகளைக் கவனிக்கும்.**

**இச்சிறிய சுகாதார நிலையங்கள் சாதிமத பேதமின்றி ஆயிரம் குடும்பங்களுக்கு அல்லது ஐயாயிரம் பேருக்கு சுகாதார நலப் பணிகளை வழங்கும்.**

**மருத்துவ அதிகாரி, பெண் பணியாளர், ஆண் பணியாளர், சுகாதாரப் பணியாளர் ஆகியோரே சிறிய சுகாதார நிலையத்தில் இருப்பர். அவர்களுக்கான சம்பளத் தொகையோடு மருந்துகள், எழுதுபொருள், எதிர்பாராத செலவு, பயணப்படி மற்றும் வருகை தருவோர்க்கான செலவுகள் ஆகியவற்றுக்குமாகச் சேர்த்து ஆண்டொன்றுக்குப் பதினெட்டாயிரம் ரூபாய் செலவாகும்.**

**இத்திட்டம் மக்களுக்குப் பயன்படும் வகையில் சிறப்புறச் செயல்பட வேண்டும் என்பதற்காகவும், செலவினங்களை ஏற்கின்ற வகையில் தயக்கமின்றி, மத்திய அரசின் பங்கு கிடைக்கின்ற வரையில் ஆகும் காலதாமதத்தையும் தவிர்க்கின்ற வகையிலே சிறிய சுகாதார நிலையம் அமைப்பதில் ஆகும். அந்த ஆண்டுச் செலவில் சரிபாதியை ஏற்கத் தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.**

**1976-77 மற்றும் 1977-78-ஆம் ஆண்டுகளில் 54 சிறிய சுகாதார நிலையங்களை ஏற்படுத்த, தொண்டு நிறுவனங்களுக்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது.**

**1978-79-ஆம் ஆண்டு பகுதித் திட்டத்தின்கீழ் மேலும் 50 சிறிய சுகாதார நிலையங்களை அமைத்திடவும் அரசு ஆலோசித்து வருகிறது. இதனைச் செயல்படுத்த ரூ. 4.50 இலட்சம் வரை செலவாகும். விரைவில் இதற்கான உத்தரவு தமிழக அரசினாலே பிறப்பிக்கப்படும்!**



# உணவுத் துறையில் ஓராண்டுச் சாதனைகள்

இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, இந்த ஓர் ஆண்டுக் காலத்தில், உணவு முனையில் மத்திய அரசின் கொள்கை முடிவுகளின் காரணமாக, எதிர்பாராத பல திருப்பங்களும் மாறுதல்களும் ஏற்பட்டன.

1976 அக்டோபர் முதற் கொண்டு, கேரளம் நீங்கலாக, ஆந்திரம், கர்நாடகம், பாண்டிச்சேரி ஆகிய பகுதிகள் உள்ளடங்கிய தென் உணவு மண்டலத்தில் தமிழ்நாடு இணைக்கப்பட்டிருந்தது. 1977 ஆம் ஆண்டில் கேரளத்தையும் தென் உணவு மண்டலத்துடன் சேர்த்துக் கொள்ளலாமா என்பது குறித்து மாநில அரசுகளின் கருத்துக் கேட்கப்பட்டது.

தமிழ் நாட்டிலும் கேரளத்திலும் பெரிதும் புழங்கப்படுவது புழுங்கல் அரிசியே. ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் பெரும்பாலும் தயாரிக்கப்படுவதும் புழங்கப்படுவதும் பச்சரிசியே. இந்நிலையில் கேரளத்தைத் தென் உணவு மண்டலத்துடன் இணைத்துவிட்டால், தமிழகத்தின் நலன்கள் பாதிக்கப்படும் என்று இந்த அரசு அஞ்சியது. தமிழ் நாட்டிலிருந்து புழுங்கல் அரிசி பெருமளவு கேரளத்திற்குச் சென்றுவிட்டால், அதற்கு ஈடு செய்யும் அளவுக்கு ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களிலிருந்து புழுங்கல் அரிசு வருவதற்கு வாய்ப்பு இராது என்பதையும், ஆகவே தமிழகத்தின் உணவு நிலைமை பாதிக்கப்படும் என்பதையும் எடுத்துக் காட்டி இதுவரை இருந்தது போலவே, தென் உணவு மண்டல ஏற்பாடு தொடர்ந்து இயங்கலாம் என்ற கருத்தை இந்த அரசு மத்திய அரசிடம் வற்புறுத்தியது.

இக்கருத்துப் பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்த நேரத்திலேயே மாநில அரசைக் கலக்காமலும், மாநில அரசுக்கு எந்தவிதமான முன்னறிவிப்புச் செய்யாமலும், நாடு முழுவதையும் ஒரே உணவு மண்டலமாக அமைத்து, மத்திய அரசு 1977 அக்டோபரில் ஆணையிட்டது.

அகில இந்திய உணவுக் கொள்கை அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ள இந்தக் கொள்கை முடிவை, இதனால் தமிழகத்திற்குப் பாதிப்பு வராமல் பார்த்துக் கொள்ள மத்திய அரசும் உதவும் என்ற உறுதிமொழி கூறப்பட்டதன் பேரில், முழு மனதுடன் செயல்படுத்தத் தமிழக அரசு முன் வந்தது.

நாடு முழுவதையும் பொது உணவு மண்டலமாக அறிவித்ததனால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை அறுதியிட்டுக் கூற இயலாத நிலை இருந்தும்கூடத் தமிழகத்தின் உணவு நிலைமையைச் சீராகச் சமாளித்து முடிந்துள்ளது, முன்னெச்சரிக்கையாக இந்த அரசு மேற்கொண்ட பல நடவடிக்கைகளுக்கும், நிலைமைக்கு ஏற்றவாறு நெறி முறைகளை வகுத்து நிர்வகித்த தமிழக அரசின் கொள்கைகளுக்கும் சீரிய வெற்றியாகும்.

உணவுக் கொள்கையில் ஏற்பட்ட இந்த அடிப்படை மாறுதலுக்கு ஈடு கொடுப்பதில் தமிழக அரசு முனைந்திருந்த நேரத்திலேயே, 1977ஆம் ஆண்டு இறுதியில் வெள்ளம்-புயலினால் ஏற்பட்ட பாதிப்புக்குப் பின்பும், தமிழகத்தில், அரிசியைப் பொறுத்த வரையிலே, எந்தவிதத் தட்டுப்பாடு இல்லாமலும், விலை உயர்வு இல்லாமலும், வெளிச் சந்தையில் அரிசிப் புழக்கம் இயல்பாகவும், பொது விநியோக முறையின் கீழ் அரிசி வழங்குதல் சீராகவும் நடந்து வருகின்றன.

உணவு உற்பத்தியைப்பெருக்க் மேற்கொள்ளப்பட்டுள்ள பல நடவடிக்கைகளின் பயனாக, 1978-79ஆம் பசலி ஆண்டில் 64 இலட்சம் டன்கள் அரிசி உற்பத்தியாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இது நம் மாநிலத்தின் தேவைகளுக்குப் போதுமானதாகும். வெளிச் சந்தையில் அரிசியின் விலைவாசிகள் உயர்ந்துவிடாமல் காக்கும் பொருட்டும், வெளிச் சந்தை வியாபார மாற்றங்களுக்கும் விலை ஏற்றங்களுக்கும் உட்படாமல், ஆண்டு முழுவதும் தொடர்ந்து நிர்ணயிக்கப்பட்ட நியாயமான விலைகளில் அரிசி மக்களுக்குக் கிடைக்க வழி செய்வதற்கும், பொது விநியோக முறையைத் தொடர்ந்து நடத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது.



இந்த அரசு நிர்வாகப் பொறுப்பேற்று ஓர் ஆண்டு நிறைவு பெறும் இக்கட்டத்திலே, உணவு நிலைமை சீராக அமைந்துள்ளது என்பது குறித்தும், அறுவடை இல்லாத நேரங்களிலும், தட்டுப்பாடு ஏற்படாமலும், விலை ஏறாமலும், பொது மக்களுக்குப் பொது விநியோக முறையின் கீழ் நிர்ணய விலைகளில் அரிசி வழங்குவதற்கு அரசிடம் கணிசமான கையிருப்பு உள்ளது என்பது குறித்தும் இந்த அரசு மட்டுமல்ல, தமிழக மக்களும், மன நிறைவு கொள்ளலாம்.

பொது விநியோகத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று முடிவு செய்யப்பட்ட அதே நேரத்தில், வெளிச் சந்தை வர்த்தகம், சுதந்திரமாகவும் சுமுகமாகவும் செயல்படுத்துவதற்குச் சாதகமான சூழ்நிலைகளையும் இந்த அரசு உருவாக்கியுள்ளது. விவசாயப் பெருமக்களுக்கு இடர்ப்பாடு ஏற்படாத வகையிலும் தன்னுடைய கொள்முதல் கொள்கையிலும் மாற்றங்களைச் செய்துள்ளது.

நெல்லின் உற்பத்திச் செலவுக்கு ஏற்ப நியாயமான விலை விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை உண்டு. நெல்லின் கொள்முதல் விலையை நிர்ணயிப்பது மத்திய அரசு. மத்திய விவசாயப் பொருள்கள் விலைவாசி ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் மத்திய அரசு இந்த விலைகளை நிர்ணயிக்கின்றது.

**1977-78**ஆம் ஆண்டுக்கு விலை நிர்ணயப் பிரச்சினை எழுந்த பொழுது, நெல் கொள்முதல் விலைகளைக் கணிசமாக உயர்த்த வேண்டுமென்று தமிழக அரசு வன்மையாக வற்புறுத்தியது. அதற்கு முன்பு மோட்டா ரக நெல்லுக்கு, குவிண்டாலுக்கு ரூ. 74 என்று நிர்ணயிக்கப்பட்டிருந்த கொள்முதல் விலையை ரூ. 77 என்ற அளவில் உயர்த்தி, மத்திய அரசு ஆணைகள் பிறப்பித்தது. அனைத்திந்திய அடிப்படையில் மத்திய அரசு நிர்ணயிக்கும் இந்தக் கொள்முதல் விலைகள், எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும். தங்கள் சொந்த நிதிப் பொறுப்பிலிருந்து கூட, மாநில அரசுகள் இந்தக் கொள்முதல் விலைக்கு மேலாக, போனசாகவோ வேறு எந்த இனத்திலோ, கூடுதல் தொகை வழங்கக் கூடாது என்பதும் மத்திய அரசால் தெளிவாக்கப்பட்டுள்ளது.

**1978-79**ஆம் ஆண்டுக்கு நெல் கொள்முதல் விலை நிர்ணயப் பிரச்சினை 1978 செப்டம்பரில் ஆய்வுக்கு வரும். அக்கட்டத்திலும் விவசாயிகளுக்கு மன நிறைவு ஏற்படும் வகையில் கொள்முதல் விலைகளை உயர்த்த வேண்டுமென்றகருத்தைத் தமிழக அரசு மீண்டும் மத்திய அரசிடம் வலியுறுத்தும்.

கொள்முதல் விலைகளை உயர்த்தும் அதிகாரம் மாநில அரசுக்கு இல்லையென்ற நிலையில், தமிழக விவசாயிகளுக்கு இலாபகரமான விலை கிடைக்க வகை செய்யும் பொருட்டுத்தான், கட்டாயக் கொள்முதல் நீக்கப்பட்டு, தங்கள் நெல்லை, வியாபாரிகளுக்குத் தடையின்றி விற்றுக்கொள்வதற்கு விவசாயிகளுக்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது. 1977 அக்டோபருக்குப் பின்பு, விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யாமல், மொத்த வர்த்தகம் செய்த பெரிய ஆலைகளிடமிருந்து, அவை உற்பத்தி செய்யும் அரசியில் 20 சதவீத லெவி வசூலிப்பது என்ற கொள்கை பின்பற்றப்பட்டு வந்தது. இத்திட்டத்தின் கீழும், தமிழகத்தில் உள்ள சுமார் 14,000 ஆலைகளில் 9,000க்கு மேற்பட்ட ஆலைகள், ஆலைகள் என்று கருதப்பட்டு, அவற்றிற்கு லெவித் திட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. உபரி மாவட்டங்களிலிருந்து மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் நெல் அரிசியில், நெல்லில் 20 சதவீதமும் அரிசியில் 10 சதவீதமும், வர்த்தக லெவி விதிக்கப்பட்டது.

தமிழகத்தில் உற்பத்தியாகும் 64 இலட்சம் டன்கள் அரிசியில், கொள்முதல் மூலம் அரசு சேகரிப்பது ஆண்டுக்கு 6 இலட்சம் டன்களுக்கும் குறைவாகவே இருக்கும். ஆகவே, உற்பத்தியில் பத்தில் ஒரு பங்குக்கும் குறைவாகவே எந்த ஆண்டிலும் வழக்கமாகக் கொள்முதல் ஆகும். அதிலும் சென்ற ஓர் ஆண்டில், விவசாயிகளிடமிருந்து கட்டாயக் கொள்முதல் நிறுத்தப்பட்டதையொட்டியும், ஆலை லெவி, வர்த்தக லெவி மூலம் மட்டுமே கொள்முதல் நடந்ததை யொட்டியும், இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்டது, ஒரு இலட்சம் டன்களுக்கும் குறைவாகவே இருந்தது. ஆகவே, இந்த ஓராண்டில் அரசு கொள்முதல் விலைகளில் வாங்கியது, உற்பத்தியில் அறுபதில் ஒரு பங்குதான் ஆகும்.



இந்நிலையில், விவசாயிகளின் உபரி நெல்லை இலாபகரமான விலைக்கு வெளிச்சந்தையில் விற்றுக் கொள்ள அவர்களுக்கு முழு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது தெளிவாகும். இவ்வளவு குறைவான அளவிலே கொள்முதல் செய்யப்பட்ட போதிலும் கூட, லெவி விதிக்கப்படுவதால், தங்களுக்கு வெளிச் சந்தையில் இலாபகரமான விலை, வர்த்தகர்களிடமிருந்து கிடைக்கவில்லை என்ற குறையை விவசாயிகள் தெரிவித்து வந்தனர்.

மேலே சொன்ன புள்ளி விவரங்களிலிருந்து இக்குறைக்கு நியாயமான இடம் இல்லையென்பது தெளிவாகும் என்ற போதிலும் விவசாயிகளுக்கு இருந்த இந்தக் குறையையும் போக்க வேண்டும் என்ற கவலையில், 1978 மே பதினொன்றாம் தேதி முதற் கொண்டு இந்த லெவிகளையும் அரசு நீக்கி விட்டது. இப்புதிய கொள்கை 1978ஆம் ஆண்டு

இறுதி வரை ஆய்வு முறையில் செயல்படுத்தப்படும் என்றும், இந்த அனுபவத்தை ஆய்ந்து அதன் அடிப் படையில் அடுத்த ஆண்டின் உணவுக் கொள்கை வகுக்கப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

கொள்முதல் விலைகளை உயர்த்த மாநில அரசுக்கு வழியில்லை என்ற போதிலும் இலாபகர மான விலைக்கு விவசாயிகள் நெல்லைவிற்றுக்கொள்ள செய்து தரக் கூடிய வசதிகளையெல்லாம் தமிழக அரசு செய்துள்ளது என்பது இதிலிருந்து தெள்ளத் தெளிவாகும்.

வெளிச் சந்தையில் இலாபகரமான விலை விவ சாயிகளுக்குக் கிடைப்பதற்கு உந்துதலாக, தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம், மோட்டா ரக நெல்லை குவிண்டாலுக்கு ரூ. 90 என்ற விலையிலும், நடுத்தர ரக நெல்லை குவிண்டா லுக்கு ரூ. 95 என்ற விலையிலும் விவசாயிகளிட மிருந்து நேரடியாக வாங்கத் தமிழக அரசு ஏற்பாடு செய்தது. 1978 பிப்ரவரி முதற்கொண்டு செயல் படும் இத்திட்டத்தின் பயனாக, இந்த அதிகப்படி யான விலைகளில் ஒரு இலட்சம் டன்களுக்கு மேலாக நெல் வாங்கப்பட்டுள்ளது. மத்திய அரசு மோட்டா ரக நெல்லுக்கு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ. 77. இந்த நெல்லை, வாணிபக் கழகம் ரூ. 90 என்ற விலைக்கு வாங்குகிறது. நடுத் தர ரக நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கொள் முதல் விலை ரூ. 81. இதை வாணிபக் கழகம் குவிண் டாலுக்கு ரூ. 95 என்ற விலைக்கு வாங்குகிறது.



நெல்லை, விவசாயிகளிடமிருந்து நேரடியாக வாங்க வாணிபக் கழகம், நூற்றுக்கணக்கான கிரா மங்களில், நேரடி நெல் வாங்கும் நிலையங்களைத் திறந்து நிர்வகித்து வருகிறது. இத்திட்டத்தின் பலன் விவசாயிகளுக்குப் பெரும் அளவில் மேலும் சேர வகை செய்ய வேண்டுமென்ற அடிப்படையில், 1978 ஜூன் மாதம் முதற் கொண்டு, வட ஆர்க் காடு, தஞ்சை ஆகிய இரு மாவட்டங்களிலும் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மூலமாக வாணிபக் கழகம் விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. ஆய்வு முறையில் இரண்டு மாவட்டங்களில் செயல் படும் இத்திட்டம் படிப்படியாக மற்ற மாவட்டங் களுக்கும் விரிவாக்கப்படும். விவசாயிகளின் நலனைக் கருதித் தமிழக அரசு மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கைகள் பொதுமக்களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளதோடு, மற்ற மாநிலங்களின் கவனத் தையும் ஈர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இயல்பான சூழ்நிலையை உருவாக்க இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட அதே நேரத்தில், நுகர்வோரின் நலனுக்கு ஒவ்வாத முறையில் விலை வாசிகள் ஏறிவிடாமல் காக்கவும், கண்காணிக்கவும் விழிப்பான பல நடவடிக்கைகளைத் தமிழக அரசு இந்த ஓராண்டுக் காலத்தில் தீவிரமாக மேற்கொண் டுள்ளது.

1975ஆம் ஆண்டில், உபரி மாவட்டங்களில் அரிசியின் விலை கிலோ ரூ. 3 வரையிலும், பற்றாக் குறை மாவட்டங்களில் ரூ. 4 வரையிலும் எட்டி யிருந்தது. இப்பொழுது நடுத்தரப் புழுங்கல் அரிசியின் விலை உபரி மாவட்டங்களில் கிலோ ரூ. 1.50 முதல் ரூ. 1.65 வரையிலும் பற்றாக்குறை மாவட்டங்களில் ரூ. 1.80க்கு மேற்படாமலும் உள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் ஜூன் மாதத் தில் நிலவிய விலைகளை விட அரிசியின் விலை ஜூன் 78ல் மிகக் குறைவாக உள்ளது.

பருப்பு வகைகளைப் பொறுத்த வரை சென்ற ஆண்டு நிலவிய விலைகளை விட இவ்வாண்டு விலைகள் சற்று உயர்ந்துள்ளன. இதற்குக் காரணம் தமிழ் நாட்டில் பருப்பு வகைகளின் உற்பத்தி மிகக் குறைவே. வெளி மாநிலங்களிலிருந்துதான் வாங்க வேண்டியுள்ளது. வெளி மாநிலங்களில் உற்பத்தி ஆகும் இடங்களிலேயே விலைகள் அதிகமாக உள்ளன.

கடலை எண்ணெய்யின் விலை 1975ல் கிலோ ரூ. 8.80க்கும், 1976ல் கிலோ ரூ. 10.00 அளவிற்கும், 1977 பிப்ரவரி மாதத்தில் ரூ. 11.70 அளவிற்கும் உயர்ந்து இருந்தது. இப்பொழுது, கடலை எண் ணெய்யின் விலை கிலோ ரூ. 6.50 முதல் ரூ. 7.00 வரை அமைந்துள்ளது. மணிலாப் பருப்பு, கடலை எண்ணெய் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச் செல் லப்படுவதை ஒழுங்குபடுத்துவதற்கு விதிக்கப்பட் டிருந்த சில ஏற்பாடுகள், விவசாயிகளின் நலனைக் கருதி அண்மையில் நீக்கப்பட்ட பின்பும், கடலை எண்ணெய்யின் விலை கட்டுப்படுத்தப்பட்டிருப்பது மிகவும் தெம்பு ஊட்டுவதாகும். நல்லெண்ணெயின் விலையும் சென்ற ஆண்டு ஜூன் மாதத்தில் கிலோ ரூ. 10.15க்கு விற்றது, இப்பொழுது ரூ. 8.50 அளவில் நிலவுகிறது.

மிளகாயின் விலை 1975ல் கிலோ ரூ. 15.50 முதல் ரூ. 20 வரை சென்றது. இவ்வாண்டு ஜூன் மாதத்திய விலைகள் கிலோ ரூ. 6 முதல் ரூ. 7 வரை நிலவுகின்றன. தனியாவின் விலையும் ஜூன் 77-ல் கிலோ ரூ. 8 அளவில் இருந்ததற்கு எதிராக, இப்பொழுது ரூ. 4.50 முதல் ரூ. 5.50 வரை உள்ளது. சிறு தானியங்களின் விலைகளும் 1975ல் கிலோ ரூ. 2.00 முதல் ரூ. 2.40 வரை நிலவிய தற்கு எதிராக இப்பொழுது கிலோ ரூ. 1.00 முதல் ரூ. 1.25 வரை நிலவுகின்றன. சென்ற ஆண்டு நிலவிய விலைகளை விட கிலோவுக்கு 20 காசு அளவில் விலைகள் குறைந்துள்ளன.

பதுக்கல், நடுத் தரகர்கள் கொள்ளை இலாபம் அடித்தல், வியாபாரச் சூதாட்டம் ஆகிய சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்தப் பல வர்த் தக ஒழுங்கு முறை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன. இவற்றின் பயனாக, வர்த்தகர்களின் சுதந்தி ரத்தில், தேவைக்கு மீறிக் குறுக்கிடாத அதே நேரத்தில், நுகர்வோரின் நலனையும் பாதுகாக்கக் கூடிய நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

அன்றாடத் தேவைக்கு இன்றியமையாத பொருட்கள் மக்களுக்கு நியாயமான விலைகளில் கிடைக்கச் செய்யும் பொருட்டு ஒவ்வொரு கிராமத் திற்கும் ஒரு நியாய விலைக் கடை திறக்கும் திட் டத்தை இந்த அரசு வகுத்துள்ளது. தமிழகத்தில் இது வரை இயங்கி வந்த சுமார் 9,000 பொது விநியோகக் கடைகளில் அரிசி, கோதுமை, லெவி சர்க்கரை மட்டுமே வழங்கப்பட்டு வந்தன. பருப்பு

வகைகள், சமையல் எண்ணெய் வகைகள், புளி, மிளகாய் போன்ற பண்டங்களையும் வழங்கும் வகையில் இவற்றைப் பல பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றவும், தேவைப்படும் இடங்களில் புதுக் கடைகளைத் திறக்கவும், நடவடிக்கைகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் அடிப்படையில் நெல்லை மாவட்டத்தில் 442 புதிய நியாய விலைக் கடைகள் கிராமங்களில் திறக்கப்பட்டுள்ளன. மதுரை, இராமநாதபுரம் மாவட்டத்தில் 1,046 புதிய கடைகள் திறக்கப்பட்டு வருகின்றன. நெல்லை, மதுரை, முகவை மாவட்டங்களின் அனுபவத்தின் அடிப்படையில் சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்த அரசு உத்தேசித்துள்ளது.



உற்பத்தியைப் பெருக்குவது, விவசாயிகளுக்கு நியாயமான விலைகள் கிடைக்க வகை செய்வது, உற்பத்தியாகும் உணவுப் பொருட்களைச் சீராக விநியோகிப்பது, தனியார் வர்த்தகம் சுதந்திரமாகவும், அதே நேரத்தில் சமுதாயப் பொறுப்புணர்வுடனும், இயங்குவதற்கு ஏற்ற சூழ்நிலையை அமைப்பது, வெளிச்சந்தை விலைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் விரிவான பொது விநியோக முறையை, அரசுச் சார்புடைய நிறுவனங்கள் மூலமாகவும், கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவும் தீவிரமாக நடத்துவது ஆகியவையே தமிழக அரசின் உணவுக் கொள்கையின் அடிப்படை அம்சங்களாக அமைந்துள்ளன.

விவசாயிகள், வர்த்தகர்கள், நுகர்வோர் ஆகிய பல்வேறு சாராரின் நலன்களையும் பாதுகாக்கும் முறையில், ஒருங்கிணைந்த உணவுக் கொள்கையைத் தமிழக அரசு பின்பற்றி வருகிறது. அமைதிக்கு உலை வைக்கக் கூடிய பிரச்சினையாக உணவுப் பிரச்சினை இருந்த ஒரு காலம் மாறி, உணவு முனையில் நிறைவும், நிம்மதியும், ஆக்கமும், ஊக்கமும் நிலவும் சூழ்நிலையை விவசாயிகள், வர்த்தகர்கள், பொது மக்கள் ஆகியோர் ஒத்துழைப்புடன், இந்த ஓர் ஆண்டுக் காலத்தில் உருவாக்க முடிந்தது பற்றித் தமிழக அரசும் மக்களும் பெருமிதம் கொள்ளலாம்.

---

## விவசாயப் பெருமக்களின் வேதனை துடைக்கும் அரசு!

தமிழ்நாடு விவசாயிகளின் குறைகளையும், கோரிக்கைகளையும் ஆராய்ந்து ஆவன செய்திட முன்பிருந்த அரசுகள் போதுமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை. அவ்வப்போது கிளர்ச்சிகள் நடந்தபோது மட்டுமே விவசாயிகளின் குறைகளைத் தீர்க்க, தாற்காலிக பரிகாரத்தை அப்போதிருந்த அரசுகள் —ஓரளவே செய்து வந்தன.

இந்த அரசு பொறுப்பேற்றபின், நாலரைக் கோடி மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபடும் ஏழை விவசாயிகளின் இன்னல் நீக்கிட நிரந்தரமான ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. அக்குழுவினரின் ஆலோசனைப்படி நல்லதோர் முடிவினை, காலந்தாழ்ந்தாமல் மேற்கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டிருப்பது பெருமையோடு குறிப்பிடத்தக்கதாகும்.





முந்தைய அரசு—வேளாண்மைத்துறை, மற்றும் பல்கலைக்கழகத்தினால் கண்டுபிடிக்கப்பட்ட விதைகளுக்கு அரசியல்வாதிகளின் பெயரையோ அல்லது வேறெந்தத் தனியார் பெயரையோ வைத்தது.

உதாரணமாகக் குறுவைக்கு 'கருணா' என்றும், பாசிப்பயிறுக்கு 'அஞ்சுகம்' என்றும் அப்போது பெயரிடப்பட்டன.

ஆனால் இன்றைய அரசு அமைந்தபிறகோ, அம்முறை மாறிவிட்டது. ஆராய்ச்சிப் பண்ணைகள் மூலம் கண்டுபிடிக்கப்படும் வீரிய அல்லது புதிய விதைகளுக்கு அவற்றைக் கண்டுபிடித்த விஞ்ஞானியின் பெயர் வைக்கப்படும் என்றும், புதிய ரகத்தைக் கண்டுபிடிப்பவர்கள் பலரானால் அவர்கள் சார்ந்த ஆராய்ச்சிப் பண்ணையின் பெயர்தான் சூட்டப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அரசியல்வாதிகளின் பெயரோ, ஏனைய தனியார் பெயரோ அவற்றிற்கு வைக்கப்பட மாட்டாது என்று அரசு ஆணையே பிறப்பித்திருக்கிறது.

## அரிய கண்டுபிடிப்புகளுக்கு ஆராய்ச்சியாளர்களின் பெயர்கள்

# தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி



விவசாய மாநிலமாகவே இருந்த தமிழ்நாடு கடந்த இருபது ஆண்டுகளில் படிப்படியாகத் தொழில் வளர்ச்சி பெற்று இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. கனி வளம், மூலப் பொருள், எரி பொருள் போன்றவற்றின் பற்றாக் குறை, இடவசதிக் குறை போன்ற தடைகளுக்கிடையிலும் தமிழகம் பெற்றிருக்கிற தொழில் வளர்ச்சி பெருமைக்குரியதாகும்.

மக்களால் அதிக அளவில் பயன்படுத்தப்படும் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கவும், கிராமப் பகுதிகளிலும், பின்தங்கிய பகுதிகளிலும் வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும் சிறு தொழில் வளர்ச்சியே சிறந்தது என்று உணரப்பட்டுள்ளது. 1977 ஜூன் திங்கள் முடிய 46,725 சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. 1977 ஜூலை முதல் 1978 மார்ச் முடிய 8,567 சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டன. ஆக, 1978 மார்ச் திங்கள் முடிய மொத்தம் 49,292 சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1977 ஜூலை முதல் 1978 மார்ச் முடிய 35,388 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும் 28,090 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் மொத்தம் 63,478 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

### கிராமத் தொழில், சிறுதொழில்களுக்கு ஊக்கம்

சிற்றூர்களிலும், சிறுநகர்ப் பகுதிகளும் பரவலாக அமைக்கப்பட்டுள்ள கிராமத் தொழில்களை ஊக்கப்படுத்துவதே முக்கிய குறிக்கோள் என்று 1977 டிசம்பர் திங்களில் அறிவிக்கப்பட்ட புதிய தொழிற் கொள்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. சிறு தொழில்களாலும், கிராமத் தொழில்களாலும் உருவாக்கப்படக் கூடிய பொருட்களை அந்தத் தொழில்களின் மூலமே உற்பத்தி செய்யவேண்டும் என்பதே அரசின் கொள்கையாகும். சிறு தொழில்கள் மூலம் உற்பத்தி செய்வதற்காக முன்பு ஒதுக்கப்பட்டவை 180 வகைப் பொருட்களே. அவை இப்போது 504 வகைப் பொருட்களாக உயர்த்தப்பட்டுள்ளன. இவைகளை எப்படியெல்லாம் உற்பத்தி செய்யலாம் என்பது குறித்து ஆராய்ந்து, அதற்குரிய சிறு தொழில்களைத் துவக்க முன் வரும் தொழில் முனைவர்களுக்குத் தொழில் திட்டங்களை அதிகாரிகளின் மூலம் வகுத்து, உதவிடத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஐம்பதாயிரம் பேருக்குக் குறைந்த மக்கள் தொகை கொண்ட சிறுநகர்ப் பகுதிகளில் ஒரு லட்சம் ரூபாய் வரை செலவிடப்பட்டு நடைபெற்று வரும் சிறு தொழில்களின் வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்தப்படும். வேலையில்லாத் திண்டாட்டத்தை, குறிப்பாக படித்தவர்களிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தினைப் போக்க, சிறு தொழில், குடிசைத் தொழில்களை வளர்த்து, அத்தொழில்களில் படித்தோர் ஈடுபட்டுத் தாமே தொழில் தொடங்கி முன்னேறும் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. எனவே, 10,000 சிறு தொழில்களை ஓராண்டுக்குள் ஏற்படுத்தி 50,000 பேருக்கு வேலை வாய்ப்பளிக்க ஏற்ற தொழில்கள் எவையெவை என்பதைக் கண்டறியவும், தொழில் முனைவர்களை ஊக்கப்படுத்தி அவர்களுக்குத் தொழில் அமைப்பதற்கான இடங்களையும், மின் வசதிகளையும், உரிமங்களையும் பெற்றுத் தருவதில் உதவி செய்வதற்கும் தக்க ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது. தொழிலை நடத்துவதற்கான பயிற்சி பெறுவதற்கும் அரசு உதவுகிறது. இதனால், கிராமப் புற மக்கள் தமது தொழில்களைத் தொடர்ந்து வளர்ப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

1978 பிப்ரவரித் திங்கள் முடிய 946 சிறு தொழிலமைப்புக்கள் தொடங்கப்பட்டு 12,714 பேருக்கு வேலை தரப்பட்டுள்ளது.

கிராமப்புறத் தொழில் திட்டம், மத்திய அரசின் உதவியுடன், சேலம், தர்மபுரி, செங்கற்பட்டு, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. கிராமப் பகுதிகளில் மட்டுமே வளரக் கூடிய தொழில்களை வளர்த்து, கிராமங்களின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு உதவுவதே கிராமப் புறத் தொழில் திட்டத்தின் குறிக்கோளாகும்.

கிராமப் புறத் தொழில் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த 5 மாவட்டங்களிலும் 1976-77ல் 2,163 தொழில்கள் பதிவு செய்யப்பட்டன. 1977-78-ல் 2,693 தொழில்கள் பதிவு செய்யப்பட்டன.

### மாவட்டத் தொழில் மையங்கள்....

மத்திய அரசின் புதிய தொழிற்கொள்கையில், கிராமத் தொழில்களுக்கும், சிறு தொழில்களுக்கும் ஒரே இடத்திலிருந்து உதவிகள் கிடைத்து, அவை




வளர வேண்டுமென்னும் நோக்குடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தொழில் மையம் அமைக்கப் பட வேண்டும் என்ற ஆலோசனை வழங்கப்பட்டது. தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள், இயந்திரங்கள், கடன் உதவிகள் ஆகியவற்றைப் பெற்றுத் தொழில்கள் தொடங்குவதில் இம்மையங் கள் தொழில் முனைவர்களுக்கு உதவும்.

மத்திய அரசின் ஆலோசனையை ஏற்றுத் தமிழக அரசு, செங்கற்பட்டு, தர்மபுரி, சேலம், இராமநாதபுரம், திருநெல்வேலி, தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங் கள் இத்தொழில் மையங்களை அமைக்கத் திட்டம் இட்டுள்ளன. முதல் ஐந்து மாவட்டங்களில் இவ் வாண்டு ஜூன் திங்களிலும் ஏனைய மூன்று மாவட் டங்களில் ஆகஸ்டு திங்களிலும் இம் மாவட்ட மையங்கள் அமைக்கப்படும்.

இந்த மையங்கள் தொழில்-வணிகத் துறை இயக்குநரகப் பணிகளின் ஒரு பகுதியை மாவட்ட அளவில் நிறைவேற்றுவதுடன், மின்வாரியம், நக ராட்சி, மக்கள் நல்வாழ்வுத் துறை அலுவலர்களு டன் தொடர்பு கொண்டு தொழில்கள் வளர்வதற்கு எல்லா வகையான ஒத்துழைப்பையும் நல்கும். சிறு தொழில் மையங்களை அமைப்பதற்குத் தேவையான அனுமதிகளை மாவட்ட அளவிலேயே வழங்கி, விரைந்து பணிகள் தொடர்வதற்காக, இம் மா வட்ட மையங்களுக்குத் தேவையான அதிகாரங் களும் வழங்கப்படும்.

**பட்டுப் புழு வளர்த்தல்....**

கிராமப் புறங்களில் மக்களுக்கு உதவும் தொழில்களில் பட்டுப் புழு வளர்ப்பு, முக்கிய இடம் வகிக்கிறது. கிராமங்களில் சிறு விவசாயிகள் இதனை ஒரு துணைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். விவசாயத்தோடு இணைந்த இந்தத் தொழிலை வளர்ப் பதில் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது. 1976-77ல் முசுக்கட்டை மரங்கள் வளர்க்கப்பட்ட நிலப்பரப்பு 11,900 ஏக்கர்; 1977-78ல் அது 13,900 ஏக்கராக உயர்ந்துள்ளது. 1976-77ல் உற்பத்தி செய்யப்பட்ட பட்டுப் புழுக் கூடுகள் 10.06 இலட்சம் கிலோ கிராம். 1977-78ல் 16.06 இலட் சம் கிலோ கிராம். 1976-77ல் உற்பத்தி செய்யப் பட்ட கச்சாப் பட்டு 16,285 கிலோ கிராம்; 1977-78ல் உற்பத்தி செய்யப்பட்ட கச்சாப் பட்டு 27,853 கிலோ கிராம்.

மத்திய அரசின் புதிய அனுமதியின் கீழ், தமிழ்நாட்டில் தஞ்சை, குமரி மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் பட்டுப் புழு வளர்ப்பு ஊக்குவிக்கப்படும். அதன் பிறகு, நான்கு ஆண்டுகளில் மேலும் 11,900 ஏக்கர் நிலத் தில் முசுக் கட்டை மரங்கள் வளர்க்கப்பட்டு, 2,50,000 கிலோ கச்சாப் பட்டுக் கிடைக்க வகை செய்யப்படும். இத் திட்டத்தால் 58,000 பேர் வேலை வாய்ப்புப் பெறுவர்.

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் வழங் கும் கடன் தவிர, 25 சதவிகிதம் உதவித் தொகை வழங்கப்படும். இத்தொழிலுக்காகக் கிணறுகள் தோண்டவும், கூடங்கள் அமைக்கவும், பிற தேவைகளை நிறைவேற்றவும் நிதி உதவி அளிக்கப் படும்.

**தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)**

கிராமப்புறத் தொழில்களை வளர்ப்பதில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் சிறந்த பணியாற்றி வருகிறது. இக்கழகம், தமிழ கத்திலுள்ள தச்சர், கருமார் போன்ற தொழிலா ளர்களுக்கு உதவுவதற்காகவே தனித் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. அவர்களுக்குத் தொழிற் கூடங்கள் அமைக்கப்பட்டு தவணை முறையில் வாங்குவதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது. தொடக் கத்தில் ரூ. 413 முன் தொகையாகக் கட்டவேண்டும். பின்னர் நாள்தோறும் ரூ. 3 மட்டும் கட்டினால், 10 ஆண்டுகளில் அந்தக் கூடம் தொழிலாளருக்கே சொந்தமாகிவிடும்.

ரூ. 319 இலட்சம் மதிப்புள்ள பல்வேறு தொழிற்கூடங்களை அரசு அமைத்துள்ளது. அவற் றால் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள 347 தொழில் முனைவர்கள் பயன் பெற்றுள்ளனர். மேலும், அம்பத்தூர், ஒசூர், இராணிப்பேட்டை, திருப்பூர், திருச்செங்கோடு, நாமக்கல், கிருஷ்ண கிரி, வடலூர் போன்ற பல இடங்களில் 200 தொழிற்கூடங்களைக் கட்டத் திட்டமிடப்பட்டு உள்ளது.

1977-78ஆம் ஆண்டில் ரூ. 1,686 இலட்சம் மதிப்புள்ள இயந்திரங்களைத் தவணை முறையில் பெற்று 1,050 தொழில் முனைவர்கள் பயனடைந் துள்ளனர். அதே ஆண்டில் ரூ. 2,910 இலட்சம் மதிப்புள்ள கச்சாப் பொருட்கள் வாங்கப்பட்டு சிறு தொழில் முனைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இச் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1977-78ல் 233 தொழில் அமைப்புகளுக்கு ரூ. 57.34 இலட்சம் உதவியாக வழங்கியுள்ளது. சிறுதொழில் நிறுவனங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கும், உற் பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கும் உதவி செய்து வருகிறது.

கிராமப் புறங்களில் 11,661 பேருக்கும் நகர்ப் புறங்களில் 10,161 பேருக்கும் ஆக மொத்தம் 21,822 பேருக்கு வேலை வாய்ப்புக்களைத் தந்து உள்ளது. அதற்காகப் பயன்படுத்தப்பட்ட தொகை ரூ. 1,672 இலட்சமாகும்.

'சிட்கோவின்' உதவியால் நடைபெறும் தொழில்களையும், வேறு தொழில்களையும் பற்றிய விவரங்களைச் சேகரித்து, வளர்ச்சியடையாமல் தயங்கி நிற்கும் தொழில்களை மீண்டும் இயக்கிட உதவுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

எல்லாத் தொழில்களுக்கும் ஆலோசனை வழங் குவதற்காக ஓர் அமைப்பினை உருவாக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி)**

தமிழகத்தில் முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு, தமிழக அரசின்

தொழில்-வணிக இயக்குநரகத்தின் மேற்பார்வையில் இருந்து வந்த சிறு தொழில்களை வணிக அடிப்படையில் நடத்தும் நோக்குடன் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் அமைக்கப்பட்டது. அரசு இந்த நிறுவனத்திற்குக் கடன் தந்து உதவுகிறது. தொழில்களை வணிக முறையில் நடத்தி இலாபம் தேடுவதில் இந்நிறுவனம் அக்கறை கொண்டுள்ளது.

இந் நிறுவனம் 'தமிழ்நாடு மொபெட்ஸ் லிமிடெட்' என்ற துணை நிறுவனத்தை நிறுவி 'மயூரம்' என்னும் பெயரில் மொபெட்ஸ் ஸ்கூட்டர்களைத் தயாரிக்கும் பணியை மேற்கொண்டு உள்ளது. 'டான்சி' 1977-78ல் மேற்கொண்ட திட்டங்கள் :

1. இயந்திரக் கருவிகள் தயாரிப்புத் திட்டம், இராணிப்பேட்டை.

2. கருங்கல் நிலையம், குன்னம்.

3. கடிகார இணைப்பு அமைப்பு, உதகமண்டலம்.

தனது பணிகளை விரிவுபடுத்திப் புதிய தொழில்களைத் தொடங்கவும், உற்பத்தியைப் பெருக்கவும், வேலைவாய்ப்பை அதிகப்படுத்தவும் டான்சி திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது.

டான்சி, தொழிலாளர்களுடன் நல்லுறவு கொண்டுள்ளது. கிண்டியிலுள்ள கண்ணாடிப் பிரிவில் பணியாற்றிய 200 தொழிலாளர்கள், அந்தப் பிரிவு இயந்திரக் கோளாறினால் இயங்க முடியாமல் மூடப்பட்டதால் வேலையிழக்க நேரிட்டுவிட்டது. மூன்றாண்டுகள் தொழிலகம் மூடப்பட்டிருந்தது. 1977 அக்டோபர் திங்கள் முதல், தொழிலாளர்கள் வேலைக்கு மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இப்போது தெர்மாஸ் பிளாஸ்க்குக்குரிய கண்ணாடிக் குடுவைகள் தயாரிக்கப்படுகின்றன.

**சர்க்கரைத் தொழில்**

1977-78ஆம் ஆண்டில் கரும்பு பயிரிட்டு சர்க்கரைத் தொழில் நடைபெறுவதற்கான பருவ காலத்தில் 20 சர்க்கரை ஆலைகள் இருந்தன. இந்த ஆலைகள் அனைத்தும் நாள் ஒன்றுக்கு 34,750 டன் கரும்பு பிழியும் திறன் கொண்டவை. தினமும் 1,250 டன் பிழிவுத் திறன் கொண்ட பொதுத் துறை ஆலை ஒன்று திருச்சி மாவட்டத்தில் உள்ள எறையூரில் அமைக்கப்பட்டு வந்தது. இந்த ஆலை கட்டி முடிக்கப்பட்டால் கிராமப் புற மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்பதால், அதனை விரைந்து முடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, 1978ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலேயே சோதனையோட்டமாகச் சாறு பிழியப்பட்டது. 700 பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். சோதனைக் கட்டத்திலேயே 1.3இலட்சம்டன்கரும்பு இங்கே பிழியப்பட்டது. இந்தியாவிலேயே வேறு எந்த ஆலையும் இந்த அளவுக்கு சோதனைக் கட்டத்திலேயே சாதனை புரிந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சர்க்கரைத் தொழிலுக்கேற்ற பருவ காலத்தில் நான்கு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் விரிவாக்கப்பட்டு, தமது அரைவைத் திறனை நாள் ஒன்றுக்கு மேலும் 3,000 டன் கரும்பு பிழியும் அளவுக்கு உயர்த்திக் கொண்டன. அத்துடன் 300 பேருக்கு வேலை வாய்ப்பும் கிடைத்தது.

1977-78ஆம் ஆண்டில், ஆம்பூர், மதுராந்தகம் ஆகிய இரண்டு இடங்களில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் வேலை நிறுத்தம் நடைபெற்றது. ஆம்பூரில் தொடங்கிய வேலை நிறுத்தம், உடன்பாட்டு முயற்சிகளின் விளைவாக விரைவிலேயே நிறுத்தப்பட்டது. மதுராந்தகத்திலும் அரசு காட்டிய அக்கறையின் விளைவாக வேலை நிறுத்தம் நின்றது.

அடிக்கடி மிகையூதியம் கேட்டுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதைத் தவிர்க்க, ஊக்க ஊதியம் வழங்க வேண்டும் என்று அரசு ஆலோசனை கூறியது. அதனைக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களும், நிர்வாகத்தினரும் ஏற்றுக் கொண்டனர். அதையொட்டிக் கூட்டுறவு ஆலைகளுக்கும், தொழிலாளர் சங்கங்களுக்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. ஒப்புக்கொண்ட உடன்பாட்டின்படி, 1977-78ஆம் ஆண்டுக்கும் 1978-79ஆம் ஆண்டுக்கும் தொழிலாளர்களுக்கு உற்பத்தி ஊக்க ஊதியம் வழங்கப்படும். வேலை நிறுத்தங்கள் நடைபெற்ற போதெல்லாம் கரும்பு பயிரிடுவோர்க்கும் தொழிலாளர்களுக்கும் இழப்பு ஏற்படாத வகையில் உடன்பாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வேலை நிறுத்தங்கள் நிறுத்தப்பட்டு வந்துள்ளன.

கரும்பு பயிரிடுவதில் புதிய முறைகளைக் கையாள்வதாலும், கரும்புக்கு மத்திய அரசு விதித்துள்ள விலையைவிடவும் அதிகமாக விலை தரப்படுவதாலும் 1977-78-ல் 56 இலட்சம் டன் கரும்பு சாறு பிழிவதற்குக் கிடைத்தது. இதனால் 4.5 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. இது முந்திய ஆண்டைவிட 40 சதவிகிதம் அதிகம் என்பதுடன் இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்த அளவு உற்பத்தி என்பதும் குறிப்பிடத்தக்கது.

**தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (டி.ஐ.ஐ.சி.)**

1949ஆம் ஆண்டு இந்திய நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவில் மாநில அளவில் அமைந்துள்ள நிதி நிறுவனங்களில் இது ஒரு முன்னோடி அமைப்பாகும். தமிழ்நாட்டில் தொழில்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து தொழில் வளத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் இது அமைக்கப்பட்டது. இக் குறிக்கோளுடன் செயற்படும் இந் நிறுவனம், தொழில் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் நிரந்தரச் சொத்துக்களான நிலம், கட்டடங்கள், இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கு நீண்டகால—நடுத்தரக் காலக் கடன்களை வழங்குகிறது. தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்கு





கள், கடனீட்டுப் பத்திரங்கள், இவைகளுக்கு உத்தரவாதம் அளிக்கிறது. மேலும் தவணை முறையில் இயந்திரங்கள் வாங்குவதற்காகத் தொழில் நிறுவனங்கள் செய்து கொண்ட உத்தரவாதம்/மாற்று உத்தரவாதம் அளிக்கிறது. இந் நிறுவனம், கிராமப் பகுதிகளில் பணியாற்றும் மருத்துவர்களுக்கும் போக்குவரத்து வாகன உரிமையாளர்களுக்கும் ஓட்டல் உரிமையாளர்களுக்கும் உதவுகிறது. தொழிற்சாலைகளைப் புதிதாக ஆரம்பிப்பதற்கு மட்டுமல்லாமல், ஏற்கெனவே செயற்பட்டு வரும் தொழிற்சாலைகளை விரிவுபடுத்தவும் புதிய முறையில் மாற்றியமைக்கவும், தொழில்களைப் பல்திறப்படுத்துவதற்கும் நிதி உதவி அளிக்கிறது. இதன் மூலம், சிறுதொழில் வினைஞர்களுக்கும் 'தொழில்நுட்ப முனைவோர் திட்டம்' என்னும் சிறப்புத் திட்டத்தின் கீழ் அதிக நிதியுதவி அளிக்கப்படுகிறது. இயந்திரங்கள், இயந்திரப் பாகங்கள் போன்றவற்றை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய உலக வங்கியின் மூலமாக அந்நியச் செலாவணிக் கடன் உதவியையும் இந்நிறுவனம் வழங்குகிறது.

### தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ)

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஆலங்குளத்தில் சிமிண்ட் தொழிற்சாலையையும், அரக்கோணத்தில் தமிழ்நாடு உருக்காலை என்று அழைக்கப்படுகிற தொடர் வார்ப்பட உருக்காலையையும் அமைப்பதற்காக 1965ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. பின்னர் தனியார் தொழில் முனைவர்களின் உடனுழைப்புடன் கூட்டுத் துறையில் தொழில் நிறுவனங்களை அமைக்கும் வகையில் அதனுடைய நடவடிக்கை விரிவுபடுத்தப்பட்டது.

### பொதுத் துறைத் திட்டங்கள்

தற்போது இந்நிறுவனத்தின் கீழ் 5 பொதுத் துறைத் தொழில் திட்டங்கள் இருக்கின்றன. அவற்றில் ஆலங்குளம் சிமிண்ட் ஆலையும், அரக்கோணம் உருக்காலையும் ஏற்கெனவே உற்பத்திப் பணியைத் தொடங்கிவிட்டன. எஞ்சிய மூன்று தொழில்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. இத் திட்டங்களின் முதலீட்டு விவரமும், அவற்றால் உருவாகும் வேலை வாய்ப்பு விவரங்களும் வருமாறு:

| | 30-6-'77 முடிய ரூபாய் (கோடியில்) | 31-5-'78 முடிய ரூபாய் (கோடியில்) |
|---|---|---|
| 1. பொது, கூட்டுத் துறைத் தொழில் திட்டங்களில் மொத்த முதலீடு | 131 | 139 |
| 2. கூட்டுத் துறைத் திட்டங்களில் மொத்த முதலீடு | 152.61 | 37.72 |
| 3. வேலை வாய்ப்புக்கள் (உருவாக்கிக் கொண்டிருக்கிற திட்டங்கள் உட்பட) | 5000பேர் | 7600பேர் |

### அரியலூர் சிமெண்ட் ஆலை

அரியலூரில் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் சிமெண்ட் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்காகத் தொழில் உரிமம் ஒன்று பெறப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலை உலர்ந்த முறைப்படி சிமெண்ட் தயாரிக்கும். இத்திட்டத்திற்குரிய மூலதனச் செலவு ரூ. 28.76 கோடி. இதற்கான கட்டட அமைப்பு வேலைகள் முடிந்து, 1978 செப்டம்பர் திங்கள் முதல் இயங்கத் தொடங்கும்.

அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு 1-4-'76 முதல் 30-6-'77 வரை ரூ. 358.26 இலட்சமும், 1-7-'76 முதல் 31-5-'78 வரை ரூ. 889.9 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேறினால் 1,100 பேருக்கு வேலை கிடைக்கும்.

### கல்நார் தகடுகள் தயாரிப்புத் திட்டம்

ஆண்டொன்றுக்கு 36,000 டன் உற்பத்தித் திறன் உள்ள கல்நார் தகடுகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆலங்குளத்தில் 1.66 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவிருக்கிறது. 1978-79ஆம் ஆண்டில் இது நிறுவப்படும். இத்திட்டம் நிறைவேறினால் 270 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

### உருக்கு உருளை ஆலைத் திட்டம்

தமிழ்நாடு உருக்கு உற்பத்திப் பொருள் இரகங்களைப் பலதரப்படுத்தவும், அவற்றை மேலும் ஆதாயம் ஈட்டும் வகையில் செயற்படச் செய்யவும், தனி உருக்குப் பாளங்களை மீண்டும் உருட்டியடிக்கும் வசதிகளுடன் கூடிய உருளை ஆலை ஒன்றை ரூ. 8 கோடி செலவில் நிறுவுவது குறித்துத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் பரிசீலித்து வருகிறது. இத் திட்டம் 1978-79ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும்.

### நியூஸ் பிரிண்ட் திட்டம்

கரும்பாலையிலிருந்து கிடைக்கும் சக்கை போன்ற பொருட்களைக் கொண்டு ரூ. 100 கோடி செலவில், செய்தித் தாள்களுக்கான தாள் தயாரிக்கும் திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் நடத்த வேண்டும் என்று அரசு திட்டம் வகுத்து வருகிறது.

### மக்னீசிய உலோகத் திட்டம்

1978ஆம் ஆண்டு தேசிய ஆராய்ச்சிக் கழகம், இந்திய மின்சார இரசாயன ஆய்வு நிலையம் ஆகிய

வற்றின் ஒத்துழைப்புடன் பொதுத் துறையில் ஒரு மக்னீசிய உலோகத் திட்டம் ஒன்றை நிறைவேற்ற அரசின் அனுமதியைத் தமிழ்நாடு தொழில்வளர்ச்சி நிறுவனம் தந்து, அதனை அரசு ஏற்றுக் கொண்டு உள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 200 இலட்சம் செலவாகும்; 200 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

**கூட்டுத் துறை நிறுவனங்கள்**

தொழில் அனுபவமும், முதலீட்டு வசதியும் கொண்ட தொழில் முனைவர்களுடன் இணைந்து கூட்டுத் துறையில் தொழில் திட்டங்கள் பலவற்றை நடத்துவதில் 'டிட்கோ' பெரும் பங்கு வகிக்கிறது. இன்றைய அரசு பொறுப்பேற்ற பிறகு கூட்டுத் துறையில் பின் வரும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் சில நிறைவேற்றப்பட்டும் வருகின்றன.

**கங்கப்பா காகித ஆலை**

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ரூ. 350 இலட்சம் செலவில் இந்தக் காகித ஆலை நிறுவப்பட இருக்கிறது. இதனால் 400 பேர் நேரடியாகவும், 2,000 பேர் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புக்களைப் பெறுவர்.

**தமிழ்நாடு இரசாயனப் பொருள் உற்பத்தி**

இரசாயனப் பொருள் உற்பத்தித் திட்டம் இராமநாதபுரம் மாவட்டம், காரைக்குடி வட்டத்தில் உள்ள கழனிவாசல் கிராமத்தில் நிறைவேற்றப்பட்டு, ஆண்டொன்றுக்கு 3,300 டன் சோடியம் சல்ஃபைட் உற்பத்தி செய்ய வகை செய்யப்பட்டு உள்ளது. 1977ஆம் ஆண்டில் டிசம்பர் திங்களில் உற்பத்தி தொடங்கியது. இத்திட்டத்தில் 1978 மார்ச் திங்கள் வரை 250 பேர் வேலை வாய்ப்புக்களைப் பெற்றிருக்கின்றனர்.

**கலப்பு உலோக வார்ப்படத் திட்டம்**

தொழில் நுணுக்க வல்லுநர் திரு பி. எஸ். சந்திரசேகருடன் இணைந்து கலப்பு வார்ப்படத் திட்டம் ஒன்றை நிறைவேற்ற 'டிட்கோ' அளித்த கோரிக்கையை, 1978 மே மாதத்தில் அரசு ஏற்பளித்தது. இத்திட்டம் 320 பேருக்கு வேலை வாய்ப்பைத் தரும். தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தொழிலில் பின் தங்கிய பகுதியான ஓசூரில் இத் திட்டம் இடம் பெறும்.

**வானவில் வண்ண இரசாயனத் திட்டம்**

கைத்தறி நெசவாளர்களுக்குப் பயன்படும் இரசாயன வண்ணக் கலவைகளை உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்றுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 'கோ-ஆப்டெக்ஸ்' இதற்கு ஒத்துழைப்புத் தருகிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள கடலூரில் இது துவக்கப்படும். இதற்குச் செலவு ரூ. 3.5 கோடி ஆகும். 400 பேர் வேலை வாய்ப்புப் பெறுவர்.

**தொலைக்காட்சிக் கருவி உற்பத்தி**

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட கூட்டுத் துறை நிறுவனமான 'டைனவிஷன்' எனும் அமைப்பு பரவலாகப் புகழ் பெற்று விற்பனையாகிக்கொண்டிருக்கிற 'டயனோரா' தொலைக்காட்சிப் பெட்டிகளை உற்பத்தி செய்கிறது.

1976ஆம் ஆண்டு 4,308 தொலைக் காட்சிப் பெட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டன. 1977ஆம் ஆண்டில் இது 10,766 ஆக வளர்ந்தது. இதனால் 240 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

**தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் (சிப்காட்)**

தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் 1971ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கே முழுவதும் சொந்தமான வரையறுக்கப்பட்டதொரு நிறுவனமாக, தனியார் துறையில் நடுத்தர, பெரிய தொழில்கள் முன்னேறுவதற்கும், விரிவடைவதற்கும், இது வரை இம் மாநிலத்தில் பின் தங்கியுள்ள பகுதிகளை விரைவாகத் தொழில் மயமாக்குவதற்கும் அமைக்கப்பட்டதாகும். 'சிப்காட்' உதவியுடன் தொழில்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் :

(1) சாத்தியக் கூறு ஆய்வுகளுக்கு உதவித் தொகை.

(2) நடுத்தர, பெரிய தொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக் கடன்.

(3) மத்திய அரசின் உதவித் தொகை.

வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டை, தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஒசூர் ஆகிய இரண்டு பின் தங்கிய இடங்களில் இரண்டு





தொழில் வளர்ச்சி மையங்களை 'சிப்காட்' அமைத்து உள்ளது.

**நலிவுற்ற தொழிற் பிரிவுகளுக்கு உதவி:**

தொழில் நிறுவனங்கள் தொடர்பான தொழில் நல்லுறவுகள், நிதிக் கட்டுப்பாடுகள் போன்றவற்றைப் பொறுத்த வரையில் நலிவுற்ற ஆலைகளுக்குக் குறிப்பிட்ட காலத்திற்கு அரசு பாதுகாப்பு அளித்தல், வேலைவாய்ப்பு இழப்பைத் தடுத்தல், ஆகிய நோக்கத்தின் அடிப்படையில் நலிவுற்ற ஆலைகளுக்குக் குறிப்பிட்ட அரசு 1969ல் ஒரு சட்டத்தை இயற்றியது.

இந்தச் சட்டத்தின்படி 17 நிறுவனங்கள் நிவாரணம் பெறத் தக்கவை என்று இந்த அரசு அறிவித்தது. அந்த 17 நிறுவனங்களில் 7 நிறுவனங்கள் 1977-78ஆம் ஆண்டில் முதல் முறையாக நிவாரணம் பெற்றன.

ரூபாய் 1 கோடி மூலதனம் வரை உள்ள தொழில்களுக்கு மட்டும் என்றில்லாமல் அதற்கு மேலும் மூலதனம் உள்ள நலிவுற்ற தொழில்களுக்கும் அரசு நிவாரணம் அளித்துள்ளது.

**நிவாரணம் பெற்ற நிறுவனங்கள்:**

1. சதர்ன் சுவிட்ச் கியர் லிமிடெட், சென்னை
2. சௌத் இந்தியா கிளாஸ் அண்ட் எனுமல் ஒர்க்ஸ் லிமிடெட், சேலம்.
3. ரவீந்திரா மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.
4. மது ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ் லிமிடெட்.
5. பிரகாஷ் மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.
6. கோயம்புத்தூர் கமலா மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.
7. சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், முத்தனேந்தல், இராமநாதபுரம் மாவட்டம்.

இன்றையத் தமிழக அரசு மூலதனத்திற்காகவும், இயந்திரங்கள் வாங்குவதற்காகவும் சில நிறுவனங்களுக்குக் கடனுகவும், கருவிகள் பொருட்கள் வாங்க முன் பணமாகவும் கீழ்க்கண்ட ஆலைகளுக்கு நிதியுதவி அளித்துள்ளது. அவையாவன :

1. சதர்ன் ஸ்ட்ரக்சரல் லிமிடெட், சென்னை.
2. சக்தி பைப்ஸ் லிமிடெட், சென்னை.
3. டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட், சென்னை
4. லோட்டஸ் மில்ஸ், கோயம்புத்தூர்.

**மூடிக்கிடந்த ஆலைகள் திறக்கப்பட்டன:**

**இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட் . .**

இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம் 1974 நவம்பர் முதல் மூடிக்கிடந்தது. நிதி நிறுவனம், தொழில் புனரமைப்புக் கழகம், மத்திய அரசு, பாரத் எலெக்ட்ரிகல்ஸ் ஆகியவற்றுக்கிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் தமிழக அரசு விறுவிறுப்புடன் கலந்து கொண்டு, இந்நிறுவனத்திற்குப் புது வாழ்வு தருவதற்குத் திட்டம் வகுத்தது. அத்திட்டத்தின்படி, இந்த நிறுவனத்திற்கு ரூ. 47 இலட்சம் தந்து உதவிய இந்திய மத்திய வங்கிக்குத் தமிழக அரசு பொறுப்புறுதி அளித்துள்ளது. அத்துடன், தமிழ் நாடு மின் வாரியம் இந்நிறுவனத்திலிருந்து முதலாண்டில் 50,000 மீட்டர்களையும், பின்னர் நான் காண்டுகள், ஆண்டுதோறும் 1,00,000 மீட்டர்களையும் வாங்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஆணையிட்டது. இந்த நிறுவனம் 1977 டிசம்பர் திங்களில் மீண்டும் திறக்கப்பட்டது. இதுவரை 436 பேர் மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளப் பட்டனர்.

**30-6-'77ல் மூடிக்கிடந்த நெசவு ஆலைகள்:**

1. பத்மா மில்ஸ், கோவை.
2. லோட்டஸ் மில்ஸ், கோவை.
3. சோமசுந்தரம் சூப்பர் மில்ஸ், முத்தனேந்தல், இராமநாதபுரம் மாவட்டம்.
4. தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், திருப்பூர்.
5. ராஜா மில்ஸ், மதுரை.
6. சிவகுமார் ஸ்பின்னிங் மில்ஸ், திருநெல்வேலி.
7. லட்சுமி மில்ஸ், மதுரை.
8. பிரகாஷ் மில்ஸ், கோவை.

**தமிழக அரசு விரைந்து செயற்பட்டுத் திறந்துவிட்ட நெசவாலைகள்:**

1. லட்சுமி மில்ஸ், மதுரை.
2. சிவகுமார் ஸ்பின்னிங் மில்ஸ், நெல்லை.
3. பிரகாஷ் மில்ஸ், கோவை.
4. லோட்டஸ் மில்ஸ், கோவை.
5. சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், முத்தனேந்தல்,இராமநாதபுர மாவட்டம்.

இந்த ஆலைகள் மீண்டும் இயங்குவதற்கு வங்கிகள் அளித்த ரூ. 120 இலட்சத்திற்குத் தமிழக அரசு பொறுப்பேற்றுக் கொண்டதுடன், தமிழக அரசே ரூ. 30 இலட்சம் கடனுக வழங்கியுள்ளது. இந்த ஐந்து ஆலைகளில் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சோமசுந்தரம் சூப்பர் ஸ்ப்பின்னிங் மில்ஸ் என்ற நிறுவனத்தின் மேலாண்மையை தமிழக அரசே ஏற்று நடத்துகிறது. இந்த ஐந்து ஆலைகளைத் திறந்து மீண்டும் இயங்க வைத்ததால் 1,740 பேருக்குவேலை கொடுக்கப்பட்டது.

இவ்வாறு தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் தமிழக அரசு ஆர்வம் காட்டி, தொழில் வளத்தைப் பெருக்கி வருகிறது. தொழில் வளர்ச்சி தொடர்கிறது. துயரெல்லாம் மறைகிறது.

# வீட்டு வசதிக்கு ஆற்றிய பணிகள்!

சமுதாயத்தில் வாழும் அனைவருக்கும் உணவும் உடையும் உறையுளும் வழங்குவது நல்லரசின் கடமையாகும். அந்த வகையில் நமது அரசு பல்வேறு சிறப்பான பணிகளைச் செய்து வருகிறது.

மக்கள் தொகைப் பெருக்கம் நாளுக்கு நாள் பெரும் பிரச்சினைகளை உருவாக்கி வரும் இந்நாளில் மக்களுக்கு வீட்டுவசதி அளிக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். இவ்வகையில், நமது அரசு கடந்த ஓராண்டில் 1977-78-ல் வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் ஆற்றியுள்ள அரும்பணிகளை நாம் காணலாம்.

இந்த ஆண்டில் வீட்டுவசதித் திட்டங்களுக்காக 17.41 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இது, 1969-70-ல் செலவு செய்யப்பட்டதைவிட 300 விழுக்காடு அதிகமாகும்.

5,108 குடியிருப்புகள் கட்டி அவை மக்களுக்கு ஒப்படைக்கப்பட்டன. மேற்கொண்டும் 1318 குடியிருப்புகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்களுக்காக ரூ. 96.91 இலட்சம் செலவில் 2465 குடியிருப்புகள் (1866 முடிவுற்றவை-595 முடியும் நிலையில் உள்ளவை) உருவாக்கப்பட்டுள்ளன.

குறைந்த வருமானமுள்ளவர்களுக்காக ரூ. 275.99 இலட்சம் செலவில் 5140 குடியிருப்புகள் கட்டும் பணியில் 1368 குடியிருப்புகள் முடிவடைந்துவிட்டன. எஞ்சியவை முடிவடையும் நிலையில் உள்ளன.

நடுத்தர வருமானமுள்ளோருக்காக 2604 குடியிருப்புகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் 1238 குடியிருப்புகள் கட்டிமுடிக்கப்பட்டு-உரியவர்களுக்கு வழங்கப்பட்டு விட்டன. இதற்கான செலவு ரூ. 478.57 இலட்சம்.

அரசு ஊழியர்களுக்கு வாடகைக்குத் தருவதற்காக மேற்கொண்டு கூடுதலாக 636 குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டன.

சென்னை நகரிலும்-அதைச் சுற்றிலும் நில ஆர்ஜிதம் மற்றும் அபிவிருத்திக்காகவும் ஈரோடு—திருச்செங்கோடு- புதுக்கோட்டை ஆகிய இடங்களில் புறநகர்கள் அமைக்கவும் ரூ. 3.46 கோடி செலவிடப்பட்டுள்ளது.

சென்னை நகரை விரிவுபடுத்துவதற்காக, சென்னை-திருச்சி சாலையில் சென்னையிலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில் மறைமலை நகரையும் சென்னை-பொன்னேரி சாலையில் சென்னையிலிருந்து வடக்கே 12 கிலோ மீட்டர் தொலைவில் ஒரு சிறு நகரையும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அமைத்து வருகிறது. இந்த இரு திட்டங்களுக்கும் ரூ. 6 கோடி செலவாகும். இதில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தீவிரப் பங்கேற்று, சாலை அமைத்தல், சிறு மதகுகள் கட்டுதல், நிலத்தைச் சமப்படுத்துதல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது. இது தவிர 543 குடியிருப்புகள் கட்டும் பணியையும் மேற்கொண்டுள்ளது.

சென்னை நகரிலும்-சுற்றுப் புறங்களிலும் உள்ள பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியிருக்கும் மக்களுக்காக உலக வங்கியானது ரூ. 9.33 கோடி செலவில் 13,467 வீட்டு மனைகளை ஏற்படுத்தித் தர திட்டமிட்டு, அதற்கான பொறுப்பைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைத்துள்ளது. இது, இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரும் திட்டமாகும்.

கோவையிலும் மதுரையிலும் தொழிலாளர் குடியிருப்புகள்—அங்காடிகள்-குடிநீர் வசதி ஆகியவை செய்துதர மத்திய அரசு ரூ. 15.62 கோடி செலவில் திட்டங்கள் வகுத்துள்ளது. இத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தீவிரமாக முனைந்துள்ளது.

ஏழை எளியோருக்காக குறைந்த வாடகையில் வீடு கட்டிக் கொடுத்துவிட்டால் மட்டும் போதாது. அவர்களிடமிருந்து வாடகையை வசூலிக்க வேண்டும். இல்லையென்றால் தொடர்ந்து வரும திட்டங்களுக்குப் போதுமான நிதி இராது. இந்த ஆண்டு வாடகை வசூல் இதற்கு முன்பு எப்போதுமில்லாத அளவுக்கு அதாவது ரூ. 947.95 இலட்சமாக உயர்ந்துள்ளது. முந்திய ஆண்டு வசூலான வாடகை ரூ. 575.72 இலட்சம் தான்.

புதிதாகக் குடியிருப்புகள் கட்டி வாடகைக்கு விட்டதால் இந்த ஆண்டு ஓரளவு கூடுதலாக வாடகை வந்ததாக வைத்துக் கொண்டாலும், இந்த ஆண்டின் வாடகை வசூல் குறிப்பிடத்தக்கதாகும்.

1977-78-ல் இவ்வளவு சிறப்பான பணிகளை ஆற்றியுள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்-1978-79-ல் ரூ. 24 கோடி செலவில், 10,000 குடியிருப்புகளைக் கட்டித் தரும் பணியினை மேற்கொண்டுள்ளது.

பாளையங்கோட்டை பேருந்து நிலையமருகே 6.34 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசு ஊழியர் குடியிருப்புகள் 24ன் தோற்றம்



# எக்ரோமின் கண்கூடான பயனைத் தருகிறது...
# லாபம் 20 சதவீதத்திற்கு மேல் உயர்கிறது




## தாவர உணவுச் சத்துக்கள் சிலேடெட் வடிவில் அடங்கியிருப்பதனால் எக்ரோமின் பயிர் விளைச்சலைச் சிக்கனமான முறையில் 20% அல்லது அதற்கு மேலும் உயர்த்துகிறது.

- எக்ரோமின் இந்தியாவின் முதல் தாவர உணவு இலைத் தெளிப்பாகும். ஈரப்படுத்தவும், பரப்பவும் உதவும் ஊக்கி, கிரகிப்புத் தன்மையை மேலும் அதிகரிக்கிறது.
- எக்ரோமின் தண்ணீரில் கரைகிறது. மற்ற எக்ரோ கெமிக்கல்களுடன் இதை உபயோகிக்கலாம்.
- எக்ரோமின் முக்கியமான ரசாயன உரங்களின் உபயோகிப்புத் தன்மையை உயர்த்துகிறது.
- எக்ரோமின் பயிர்களின் மகசூலையும், தரத்தையும் செம்மையாக்குகிறது.




நிச்சயமான பயனைத் தருவதற்கென எக்ரோமின் சிலேட் செய்யப்பட்டுள்ளது

நியூட்ரியன்டுகள் (ஊட்டச் சத்துக்கள்) படிப்படியாக முழுவதும் கிரகிக்கப்படுவதை சிலேஷன் உறுதி செய்கிறது...



**நிரூபணம் இதோ:**

''நெல்... எக்ரோமின் மூலம் விளைச்சல் 20% அதிகரித்தது''

ஆண்டிப்பாளையம்
தமிழ்நாடு

அதிகப்படி விவரங்களுக்கு இந்த முகவரிக்கு எழுதவும்
ஏரிஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் பிரை.லிட்.
தபால் பெட்டி எண் 9417, பம்பாய் 400 093

Grant.52 TM

# வணிக வரி-சில சிறப்பு அம்சங்கள்

பெரும்பான்மை மக்களின் பேரபிமானத்தைப் பெற்று இந்த அரசு பொறுப்பேற்ற பின்னலே, வணிகப் பெருமக்களின் வாட்டம் நீங்கியிருப்பதனை யாரும் மறுக்க முடியாது. வணிகவரி வசூலில் இருந்த தேக்கநிலை மாறி அதில் ஒரு புது வேகம் ஏற்படவும், ஊழல்கள் ஒழியவும், பிறரால் நேரும் பெருந்துன்பங்களிலிருந்து வணிகர்கள் விடுபடவும் பல்வேறு ஏற்பாடுகளைச் செய்தது இந்த அரசு.

இலாப மதிப்பீடு, வரிவிதிப்பு மற்றும் அப்பீல் செய்வது தொடர்பானவற்றை ஆராய்ந்து ஆலோசனை கூறுவதற்காக நிபுணர் குழு அமைக்கப்பட்டது அவற்றுள் குறிப்பிடத்தக்கதாகும்.

**ஒட்டு மொத்தக் கணிப்பு முறை :**

சிறு வணிகர்களுக்கு உதவுவதற்காக அரசு செய்துள்ள மற்றொரு புதிய ஏற்பாடு ஒட்டு மொத்தக் கணிப்பு முறை. இந்த முறைப்படி ஒரு லட்சம் ரூபாய்க்கு அதிகப்படாமல் வணிகம் செய்யும் வணிகர்கள் மூவகை நிபந்தனைகளுக்கு உட்பட்டு தங்கள் கணக்குகளுக்கு மதிப்பீட்டு அதிகாரிகளின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்ள முடியும்.

முதலாவதாக அந்த வணிகர் முழுவதும் பலமுனை வரி விதிப்புப் பொருள்களை விற்பனை செய்பவராக இருக்க வேண்டும்.

இரண்டாவதாக - வணிகரது விற்பனைத் தொகை குறித்த விவரக்கணக்கு வணிகப் போக்குக்கு நிகராக இருக்க வேண்டும்.

மூன்றுவதாக-வணிக இடங்களைப் பார்வையிடுகையில் மோசமான முறைகேடுகள் இல்லாததாக இருக்க வேண்டும்.

**ஒருங்கிணைந்த வரிவிதிப்பு**

'வர்த்தக வரித்துறையைச் சார்ந்த ஆய்வு அலுவலர்கள், உடனுக்குடன் ஒருங்கிணைந்த வரி விதிக்கிறார்கள்; வர்த்தகர்கள் விளக்கம் சொல்லக்கூட அனுமதிக்கப்படுவதில்லை' என்று நெடுங்காலமாகக் குறை சொல்லப்பட்டு வந்தது. இப்போதுள்ள அரசு இதனை மாற்றிவிட்டது. இனிமேல் ஆய்வு அலுவலர்கள் தாங்களாகவே ஒருங்கிணைந்த வரியை விதிக்காமல், தாங்கள் கண்டுபிடித்த முறைகேடுகளை வணிகவரி அலுவலருக்குத் தெரிவிக்க வேண்டும். அவர் அந்த முறைகேடுகளைப் பரிசீலித்து எவ்வளவு ஒருங்கிணைந்த வரி விதிக்கலாம் என்பதனை முடிவு செய்வார்.

**கேளிக்கை வரி**

1977-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26-ஆம் நாள் முதல் ஊராட்சி கிராமங்கள், பேரூராட்சிகள் மற்றும் இரண்டாம் நிலை மூன்றும்நிலை நகராட்சிகள் ஆகியவற்றிலுள்ள திரையரங்கங்களுக்கு இவ்வரங்குகளின் மொத்த இருக்கைக்கான வசூல் அடிப்படையில் காட்சி ஒன்றிற்கு மொத்தமாக வரி விதிக்க அரசு முடிவு செய்தது.

ஒரு திரைப்பட அரங்கில் நடத்தப்படும் ஒவ்வொரு காட்சிக்கும் அந்த அரங்கில் இருக்கக் கூடிய இருக்கைகளினால் வசூலாகும் மொத்த வசூலில் 20 சதவீதத்திலிருந்து 27.5 சதம் வரை வரி நிர்ணயிக்க தற்போதுள்ள முறையில் வகையுள்ளது. ஒரு திரைப்பட அரங்கில் ஒரு வாரத்தில் எத்தனைக் காட்சிகள் நடத்தப்பட்ட போதிலும் வாரம் ஒன்றுக்கு 14 முதல் 20 வரை குறிப்பிட்ட எண்ணிக்கையிலான காட்சிகளுக்கு ஆகும் மொத்த (இருக்கைகளுக்கான) வசூலில், 15 சதவீதத்திலிருந்து 22.5 சதவீதம் வரை வரி செலுத்துவதன் மூலம் வரி இணக்கம் செய்து கொள்ள உரிமையாளர்களுக்கு விருப்ப உரிமை அளிக்கவும் இம்முறையில் வழி உள்ளது.

1974-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 1975 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் வரையில் மிகவும் குறைந்த கால அளவிற்கு நடைமுறையிலிருந்து வந்த, முன்பிருந்த முறையினைக் காட்டிலும் தற்போது நடைமுறையிலிருந்து வரும் வரிவிதிப்பு முறை சில சிறப்பு அம்சங்களைப் பெற்றுள்ளது. பழைய முறையில் வரி வீதமானது மொத்த வசூலில் 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரையிலிருந்தாலும் இணக்க முறையில் வரி செலுத்த விருப்பப்பட்ட திரையரங்க உரிமையாளர்கள், மொத்த வசூலில்-இருக்கைகளின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினையோ அல்லது ஒரு வரையறுக்கப்பட்ட கால வரையறைக்குள் நடைபெறும் ஒரு காட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய அனைத்து வரிகளின் சராசரி தொகை இவைகளில் எது அதிகமாக உள்ளதோ அத்தொகையினை வரியாகச் செலுத்த வேண்டும். எதிர்பார்த்த அளவிற்கு இத்திட்டம் வெற்றியடையாத காரணத்தினால் 1975-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21-ஆம் நாள் முதல் நடைமுறையிலிருந்து விலக்கப்பட்டது. வசூலும் திருப்திகரமானதாக இல்லாததோடு பல நிர்வாகச் சிக்கல்களும் அத் திட்டத்தில் ஏற்பட்டிருந்தன.

மாநிலத்திலுள்ள 1,500 திரையரங்குகளில் 1,000 திரையரங்குகள் புதிய முறை வரி விதிப்பின் கீழ் வந்துள்ளன. பெரும்பான்மையான திரையரங்கங்கள் இணக்க முறையில் வரி செலுத்த விரும்புவது குறிப்பிடத்தகுந்ததாகும். வரி ஏய்ப்பு செய்பவர்களுக்கு கடும் தண்டனை அளிக்கவும் திருத்தச் சட்டம் வழி வகை செய்கிறது.

தவறான வழியில் வரி ஏய்ப்பு செய்யும் குற்றத்திற்கு ஓராண்டு வரையில் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம்.

திரையரங்க உரிமையாளர்களினால் செய்யப்படும் வரி ஏய்ப்பினைத் தடுக்கவும் வரி வசூலிக்கும் அதிகாரிகளிடையே லஞ்சத்தினை ஒழிக்கவும், அரசினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் மிகவும் சிறந்ததென இத்திட்டம் கருதப்படுகிறது.




# விளக்கேற்றி வைத்த அரசு

**ஒ**ருங்கிணைந்த வரிச் சட்டத்தில் சில பல முக்கியத் திருத்தங்கள் இன்றைய அரசினால் அண்மையில் செய்யப்பட்டன. அதனால் திரையரங்க உரிமையாளர்கள் பெறும் பயன்கள் குறித்தும், அரசுக்கு உண்டாகும் வருவாய் குறித்தும், முன்னைய சட்டத்திற்கும் இன்றைய சட்டத்திற்கும் உள்ள வேறுபாடு-மக்கள் அதனால் பெறும் பலாபலன்கள் பற்றியும் தமிழ்நாடு திரையரங்குகள் உரிமையாளர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. டி. ராமாநுஜம் அவர்களைப் பேட்டி கண்டோம். அப்போது அவர் சொன்ன சில முக்கிய கருத்துக்களாவன:

. தமிழ்நாட்டில் 1,500 திரையரங்குகள் உள்ளன. இதில் 750 'டூரிங்' தியேட்டர்கள். 750 நிரந்தர அரங்குகள். இதே அளவு 1974ஆம் ஆண்டிலும் இருந்தன. ஆனால், அன்றையதினம அரசுக்குத் தமாஷா வரி மூலம் ரூ. 13 கோடிதான் வந்தது. இன்றைய தினம் 1977-78-ஆம் ஆண்டின் பட்ஜெட்படி அரசின் வருமானம் தமாஷா வரி மூலம் மட்டும் வந்த தொகை ரூ. 21 கோடி!

**படத்தொழில் நசிந்தது!**

தமாஷா வரிதான் அதிகமாயிற்றே தவிர, திரையரங்குகளின் வருமானம், படம் பிடிப்பவர்களுடைய வருமானம் இவைகளெல்லாம் ஒரேயடியாகக் குறைந்து, ஸ்டுடியோக்களை மூடுவதாகவும், திரையரங்குகளை நடத்தாமல், அரசின் உணவுக் கிடங்குகளுக்கு வாடகைக்குக் கொடுக்கும் அளவுக்கும் படத் தொழில் நசிந்து விட்டது.

அண்டை மாநிலங்களான கர்நாடகம், கேரளம், ஆந்திரம், பாண்டிச்சேரி இங்கெல்லாம் நாளுக்கு நாள் திரைப்படத் தொழில் வளர்ச்சி அடையவும், படப்பிடிப்புகள் சுறுசுறுப்பாக இயங்கவும், திரையரங்குகளின் எண்ணிக்கை அதிகமாகப் போகவும், தமிழ்நாட்டில் மட்டும் திரைப்படத் தொழில் குன்றி, கூனி, கருகிக் கொண்டுவந்தது!

**வரி விகிதம் அதிகம் !**

இதற்குக் காரணம், மற்ற மாநிலங்களைவிட இங்குத் தமாஷா வரி அதிகமாக இருப்பதுதான் என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். இதற்கு முந்திய அரசுகள்கூட வரி விகிதம் அதிகம் என்பதை ஒப்புக் கொண்டார்களே தவிர, இந்தத் தொழிலை அந்தக் கஷ்டத்திலிருந்து விடுவிக்க ஏனோ பாடுபடவில்லை. பாடுபடாததுமட்டுமல்ல. படம் பார்ப்பதற்கான நுழைவுக் கட்டணம் 17 காசு என்றால், அதற்கு வரி மட்டும் 23 காசு என்ற அளவிலே 1974 ஆம் ஆண்டு ஆகஸ்டில் அதிகமாக்கி விட்டார்கள்.



**கலையின் சக்தி**

**கலையையும், இலக்கியத்தையும் நான் பெரிதும் மதிக்கிறேன்; விரும்புகிறேன். ஏனென்றால் கோடிக்கணக்கான மக்களுடன் பேசும் சக்தி கொண்டவை அவை என்பதுதான்!**

**—அண்ணல் காந்தியடிகள்**

இதன் காரணமாகப் படங்கள் அதிகமாக ஓடமுடியாத நிலைமையும், படங்களை ஏழை மக்கள் அதிகம் பார்க்க முடியாத நிலையும், அப்படி அதிக நாள் ஓடாத காரணத்தால், தியேட்டர்களின் படத்தேவைக்காக அதிகமான படங்கள் தயாரிக்கவும், அதன் காரணமாகத் தொழிலின் மூலதனம் அதிகமாகி, தொழில் ஸ்தம்பித்துவிட்டது.

**விளக்கு அணையாமல் :**

'டூரிங்' தியேட்டர்களின் வளர்ச்சி குறைந்துவிட்டது. ஏழை-எளிய மக்களின் பொழுது போக்காக உள்ள இந்தச் சாதனமும் அவர்களுக்கு இல்லாமல் போய்விட்டது.

இந்நிலையில்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பதவியேற்றதும் முதன் முதலில் அளித்த வரவு செலவுக் கணக்கில் சுமார் 4 கோடி மக்கள்-குறைந்த செலவில் சினிமா பார்க்கின்றவர்களுக்கு-உபரி வரியாக வசூலித்துக் கொண்டிருந்த 5 அல்லது 10 காசுகள் குறைத்தார். இதனால் மட்டும் அரசுக்கு ரூ. 1.5 கோடி இழப்பு ஏற்பட்டது. இதுமட்டுமல்லாமல் தொழிலில் இருந்தவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவும், பிலிம் விசாரணைக் குழு சிபாரிசினை ஒப்புக் கொண்டு அரசின் வருமானம் குறையாமலும், அதே சமயம் வரி ஏய்ப்பினால் சிதறிப்போகும் தொகையை மீண்டும் இத்தொழிலுக்கே கிடைக்கும் அளவுக்கு ஒட்டு மொத்த வரி விதிப்பு (Compound-Tax) கொண்டு வந்தார்கள். திரையுலக விளக்கு அணைந்து விடுமோ என்று பயந்தவர்களின் மனத்தில் நிம்மதி ஏற்படுத்தினார்கள்.

**ஆறு வகையான வரிகள் :**

இந்த ஒட்டுமொத்த வரி தமிழ்நாட்டிலுள்ள 1500 திரையரங்குகளில் இரண்டாவது மட்ட முனிசிபல் நகரங்கள் வரையிலுள்ள சுமார் 1050 திரையரங்குகளுக்குப் பொருந்தும்படி செய்யப்பட்டது. இதுவரை (1) தமாஷா

வரி (2) தமாஷா வரி, உபரி தமாஷா வரி (3) கூடுதல் தமாஷா வரி (4) காட்சி வரி (5) கூடுதல் காட்சி வரி (6) அமித கூடுதல் வரி-ஆக 6 விதமான வரிகள் கட்டிக் கொண்டிருந்த 1050 திரையரங்குகள், ஒரே வரியாகக் காட்சி வரி என்ற பெயரில் கட்ட அனுமதித்ததும், இதைக் கட்டுவதில் இதுவரை அனுபவித்து வந்த தொந்தரவை, அறவே நீக்கவும் இது வழிசெய்ததையும் திரையுலகத்தில் உள்ள அனைவரும் பாராட்டுதலுடன் வரவேற்றார்கள்.

அரசின் வருமானம் குறையாமலும், அதே சமயத்தில் திரையரங்கு உரிமையாளர்களும், திரைப்படத் தொழிலில் உள்ளவர்களும் இதை வரவேற்பதற்கு என்ன காரணம் என்பதையும் நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.



1-10-'77 அன்று கலைவாணர் அரங்கில் நடந்த தமிழ் நாடு திரையரங்குகள் உரிமையாளர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள்

இந்த வரி விதிப்பின் மூலம், வரி ஏய்த்தவர்கள் இனி ஏய்க்காமல் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கட்டுவதற்கு, ஏற்கெனவே ஒழுங்காக வரி கட்டிக் கொண்டிருந்தவர்கள், வரியைக் குறைத்துக் கட்டி, வரியின் பளுவிலிருந்து அவர்களை விலக்கிவிடவும் இந்தத் திட்டம் வழி செய்தது. இது மட்டுமல்ல; வரி ஏய்ப்பினால் அரசுக்கும் வராமல், திரைப்படத் தொழிலுக்கும் வராமல் வரி ஏய்ப்புச் செய்ய உடந்தையாக இருந்தவர்களுக்குச் சுமார் 2லிருந்து 3 கோடி ரூபாய் சிதறிக் கொண்டிருந்த அந்தப் பணம், இன்று அரசு வரி வருமானம் குறையாமலே, இன்றைய தமிழ்த் திரை உலகிற்கும் எவ்விதமான பயம் இல்லாமல் வந்துகொண்டிருக்கிறது.

**பெரிய சாதனை!**

அரசின் வருமானம் குறையாமலே இந்தத் தொழிலைச் சேர்ந்தவர்களுக்கு 2, 3 கோடி ரூபாய் ஆண்டுதோறும் திரையுலகிற்குச் சுலபமாகவும் நியாயமாகவும் வந்து சேரும் அளவுக்கு அமல் செய்யப்பட்ட திட்டம்தான் இந்த ஒட்டுமொத்த வரியாகும். மொத்தத்தில் சுமார் 60லிருந்து 65 வரை வரியாகக் கட்டிவந்த தமாஷாவரி இன்று 33 அளவுக்குக் குறைந்திருக்கிறது என்றால், இதை ஒரு பெரிய சாதனையாகத்தான் கருத வேண்டும்.

இதன்காரணமாக, அன்று 10,000 ரூபாய் வசூலாகியிருந்தால் 6,000 ரூபாய் வரி கிடைக்கும், 20,000 ரூபாய் வசூலாகி இருந்தால், 12,500 ரூபாய் வரி கிடைக்கும். 30,000 ரூபாய் வசூலாகியிருந்தால் 16,000 ரூபாய் வரி கிடைத்திருக்கும். இதைத் தமிழக அரசு திரைப்படத் தொழிலுக்குச் செய்த சாதனையாக இருந்தாலும் அரசையும், அரசின் வருமானம் குறையாமல் இருக்கவேண்டும் என்பதையும் மனத்தில் கொண்டு அதே சமயத்தில் திரைப்படத் தொழிலில் ஏய்க்கப்படும் பணம் வெளியில் செல்லாமல், அந்தப் பணம் திரைப்படத் தொழிலிலேயே இருக்க வேண்டும் என்று செய்த இந்த முறையினால்தான் இன்று தமிழ்ப்பட உலகம் பெருமையுடன் தலைநிமிர்ந்து நிற்கிறது, இழுத்து மூடி வைக்கப்பட்ட ஸ்டுடியோக்கள் பெருமையுடன் திறந்து செயலாற்றுகின்றன.

கடந்த ஆண்டு வந்த தமிழ்ப் படம் 60. இந்த ஆண்டு எதிர் பார்க்கப்படும் தமிழ்ப்படம் 150. கடந்த ஆண்டு வெளிவந்த தமிழ் வெற்றிப் படங்கள் 5. இந்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் தமிழ் வெற்றிப் படங்கள் 20. எடுக்கப்படும் தமிழ்ப் படங்கள் போட்ட முதலீட்டை எடுக்கும் திறன் பெற்றுள்ளது. இவ்வளவுக்கும் காரணம் ஒட்டு மொத்த நிர்ணய வரி தான் என்றால் அது மிகையல்ல.

**தொழில் முன்னேற....**

இதைத் தவிர அரசு செய்துள்ள கீழ்க்கண்ட காரியங்களும் இந்தத் தொழில் முன்னேற்றமடைவதற்குக் காரணங்களாக அமைந்தன. மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றவுடனே அரசின் அதிகாரிகளையும் தொழிலில் உள்ளவர்களையும் சேர்த்து ஒரு கூட்டம் நடத்தி, அரசின் கொள்கை திரைப்பட அரங்குகள் நிறைய வளர வேண்டும் என்று சொல்லி, அதற்கான சட்ட திட்டங்களை இலகுவாக்கினது மேலும் பல திரைப்பட அரங்குகள் வருவதற்கு வழி செய்வதாகும்.

திரையரங்குகளுக்கு நன்மை செய்யும் அதே நேரத்தில் பொது மக்களுக்கும், திரையரங்குகள் நல்ல சௌகரியத்தையும் சுகாதார வசதியையும் செய்து கொடுக்க வேண்டியது திரையரங்குகளின் உரிமையாளர்களின் பொறுப்பு என்று சுட்டிக் காட்டியதிலிருந்தே மக்கள்பால் அவர்கள் கொண்டுள்ள அக்கறை நன்கு தெரிகிறது.

'டூரிங்' சினிமாக்களுக்கு 3 ஆண்டு லைசென்ஸ் கொடுத்ததும் மேலும் திரையரங்குகளைக் கட்டும் விதிகளைத் தளர்த்தியதையும், மேலும் பல திரைப்பட அரங்குகள் வருவதற்கு வழி செய்யும் என்னும் நம்பிக்கை வீண்போகாது.

இதே ஒட்டுமொத்த வரியை மற்ற இடங்களுக்கும் விரிவாக்க அரசு உறுதி பூண்டிருக்கிறது என்பதும், அதுவும் அமலாக்கப்பட்டு விட்டால், இந்தத் தொழிலின் எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

என்ன நன்மை?

இதனால் பொது மக்களுக்கும் நன்மை ஏற்படாமல் இல்லை. இந்தத் திட்டத்தால் பல ஊர்களில் பல திரையரங்குகளில் வரி குறைவு காரணமாக நுழைவுக் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன. பெரிய ஊர்களில் 'பால்கனி'யில் உட்கார்ந்து படம் பார்க்க ரூ. 2.50 என்று இருந்த கட்டணம் இன்று ரூ. 1.25 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, வடார்க்காடு மாவட்டம் ஆரணி கார்த்திகேயன் திரையரங்கில் மற்றும் அதுபோன்ற ஊர்களில் உயர்ந்த வகுப்பு நுழைவுக் கட்டணம் ரூ. 2.50லிருந்து இப்போது ரூ. 1.25 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. கடைசி வகுப்பு 70 காசிலிருந்து இப்போது 50 காசாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஏழை மக்கள் குறைந்த கட்டணமாக ரூ. 1.25 கொடுத்து இன்று மேல்வகுப்பில் (சோபா) உட்காரவும், 50 காசு கொடுத்து திரும்பத் திரும்பக் குடும்பத்துடன் படம் பார்க்க வசதியும், மக்களிடம் நம்பிக்கை கொண்டுள்ள இந்த அரசைவிட வேறு யார் செய்ய முடியும்?

சுருங்கச் சொன்னால் இந்த ஒட்டு மொத்த வரியினால் விளைகின்ற நன்மைகள்தான் எத்தனை எத்தனை!

*அரசின் வரிவருமானம் குறையவில்லை.

*திரையரங்க உரிமையாளர்கள் வரவேற்கிறார்கள்.

*கிராமங்களில் சினிமா பார்க்கும் நுழைவுக் கட்டணம் குறைந்திருக்கிறது.

*நிறைய தமிழ்ப்படங்கள் தயாராகின்றன.

*ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நிம்மதியுடன் வாழ்கிறார்கள்.

*வரி ஏய்ப்பினால் வெளியே போய்க்கொண்டிருந்த கோடிக்கணக்கான பணம் மீண்டும் திரைப்படத் தொழிலுக்கே வரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது!

இந்த ஓராண்டில் தமிழ்த் திரைப்படத் தொழிலின் விதியை மாற்றி, இந்தத் திரைப்படத் தொழிலில் உள்ள அனைவரின் இல்லங்களிலும் விளக்கேற்றி வைத்த தமிழக அரசுக்கும், முதல்வர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்களுக்கும், தமிழ்த் திரையுலகம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறது.

# எளியோர்க்கு உதவும் சட்டங்கள்

1-7-'77 முதல் 31-12-'77 முடிய புத்து சட்டங்கள், தமிழ்நாடு சட்டமன்றத்தில நிறைவேற்றப்பட்டன. 1-7-'78லிருந்து இன்றைய நாள் வரை 25 சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆறு சட்ட முன்வடிவுகள், இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளன.

கடன் ஒத்திவைப்புச் சட்டங்களைப் பற்றிக் குறிப்பிடுவது, இங்கே மிக முக்கியமானது. ஏழை உழவர்களின் கடன்கள் வசூலிக்கப்படுவது, இதன் மூலம் ஒத்தி வைக்கப்படுகிறது. கடன்பட்ட உழவர்கள் நிவாரணச் சட்டம், கடன்பட்டோர் நிவாரணச் சட்டம் ஆகியவை குடியரசுத் தலைவரின் ஆட்சியின் போது நிறைவேற்றப்பட்டாலும், 1978 ஜூலை 15 வரை நீடிக்க வகை செய்யப்பட்டுள்ளது இதனால் பயன்பெறுவோர், கிராமப்புற ஏழை மக்களேயாவர்.

## தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் சட்டம்,

பயிரிடும் குத்தகைதாரர்களை, நிலத்திலிருந்து வெளியேற்றுவதைத் தடை செய்கிறது. 1978 ஜூலை 15 வரை இச்சட்டம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. **புயல், வெள்ள நிவாரணச் சட்டம் 1977,** அக்டோபர், நவம்பர் மாதங்களில் தமிழ்நாட்டில் கொடூரமாக வீசிய புயலாலும், மழையாலும் தமிழக மக்கள் பாதிப்புக்குள்ளானார்கள். பயிர்கள் நாசமுற்றன. கணக்கில்லாத கால்நடைகள் அழிந்தன. மனித உயிர் இழப்புகள் ஏற்பட்டன. புயலால், மழையால் பாதிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்கள், தாங்கள் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் அவதியுற்றனர்; அவர்கள் நிலையுணர்ந்த அரசு நடப்பு பசலி ஆண்டில், அவர்கள் செலுத்த வேண்டிய கடன்களை 1978 ஜூன் 30 வரை ஒத்தி வைப்பதற்கான சட்டத்தை இயற்றியது.

## அரிசன நலன்களுக்காக தமிழ்நாடு அரசு நிலங்களைக் கையகப்படுத்தும் சட்டம்:

அரிசன மக்களுக்கு, குடியிருப்பு மனைகள், சாலை வசதிகள், இடுகாடுகள் மற்றும் தேவையான வசதிகள் செய்து தருவது, ஒரு சமூகப் பொருளாதாரத் திட்டமாகும். இதன் அடிப்படையில் அரிசன நலன்களுக்காக நிலங்களை கையகப்படுத்தும் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு அரசு நகரநில உச்சவரம்புச் சட்டம்:

1976ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட நகரநில உச்சவரம்புச் சட்டத்தில் காணும் சில குறைகளையும், உடன் உண்டாகும் இடையூறுகளையும் நீக்கி, இச்சட்டம் வழி செய்கிறது.

கிராமங்களே நாட்டின் உயிர்நாடிகள். கிராம மக்களின் வாழ்வு வளம் பெற்றால் அன்றி—எத்தனை திட்டங்களைத் தீட்டியும் பயன் இல்லை. தீட்டப்படும் திட்டங்கள் கிராம மக்களை மேம்படுத்துவதான அடிப்படையில் அமைய வேண்டும். ஊர் வளர்ச்சி உண்மையான மக்கள் அரசின் முக்கிய குறிக்கோளாக அமைந்தாலன்றி, பல்வேறு துறைகளில் சாதனைப் பட்டியலைக் காட்டுவது எந்த விதப் பயனையும் அளித்து விடாது. கிராம மக்களின் மேம்பாட்டுக்கு, கிராமப்புறங்களின் வளர்ச்சிக்கு இன்றைய தமிழக அரசு மிகுந்த முன்னுரிமை அளித்துப்பணியாற்றி வருகிறது. அடிப்படைத் தேவைகளில் ஒன்றான குடிநீர், அனைத்துக் கிராமங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பது இந்த அரசின் தலையாய இலட்சியம். ஊர் வளர்ச்சித் துறையில் பாராட்டத் தக்க பணிகள் இந்த ஓர் ஆண்டில் நடைபெற்றுள்ளன.



# ஊருக்கு நல்லது செய்வோம்!

### உள்ளாட்சி அமைப்பு நிர்வாகத்தை மேம்படுத்துதல் :

ஊராட்சிகளும், ஊராட்சி உறுப்பினர்களும் இருப்பினும், அரசின் திட்டங்கள் வெற்றி பெறுவது, மக்களைப் பொறுத்தே அமைகிறது. எனவே திட்டங்களின் மீது முடிவு எடுக்கும் பொறுப்பில் மக்களை ஈடுபடுத்தவும், அரசிற்கும் மக்களுக்கும் இடையேயுள்ள இடைவெளியை இணைக்கவும் வேண்டி, இம்மாநிலத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் மக்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு, கோட்ட வளர்ச்சி அலுவலர் தலைவராவர். மற்றும் 12 உறுப்பினர்களைக் கொண்ட இக்குழுவில் அந்தந்தப் பதவியைச் சார்ந்த சட்ட மன்ற, சட்டப்பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர்களும், பொது வாழ்வில் களங்கமற்ற தலைவர்களும் உறுப்பினர்களாக அமர்த்தப் பட்டுள்ளனர். இதே போன்ற குழுக்கள் ஊராட்சிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. குழுவின் தலைவர்கள் அரசு அலுவல் சார்பற்றவர்களாக இருப்பர். தேவையானால் கிராம முன்சீப்பு ஓர் உறுப்பினராக இருப்பார். சென்னை மற்றும் மதுரை மாநகராட்சிகளிலும், அனைத்து நகராட்சிகளிலும் இதேபோன்று குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சென்னை மாநகராட்சியின் நிர்வாகத் திறனை மேம்படுத்த ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட உள்ளது. முன்னாள் நகரத் தந்தை, ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர், கல்லூரிக் கல்வி இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாக இருக்கும் இக்குழு, மாநகராட்சி நிர்வாகத்தை ஆராய்ந்து, திறமையான நிர்வாகத்திற்கு ஆலோசனைகளை வழங்கும். **இப்படிப்பட்ட குழுக்கள் அமைக்கப்பெற்றது இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான்.**

### உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி உதவி :

அண்மையில் ஏற்பட்ட புயலாலும் வெள்ளத்தாலும் சிதைவுற்ற சாலைகளைப் பழுது பார்க்க, 79 நகராட்சிகளுக்கும், சென்னை மற்றும் மதுரை மாநகராட்சிகளுக்கும் சேர்த்து, ரூ. 168.75 இலட்சம் மானியமாகவும், ரூ. 171.25 இலட்சம் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சியின் சாலைகளைப் பராமரிக்க நெடுஞ்சாலைக் கிராமப் பணித் துறைகளில் தனிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், மத்திய அரசு திட்டத்தின்கீழ், ஊர்ப்புற இணைப்புச் சாலைகள் அமைக்கப்படவும், மேம்படுத்தப்படவும், ரூ. 65 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வெள்ளம், மற்றும் புயலால் சிதைவுற்ற ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களில் கட்டடங்கள், மற்றும் குறு நீர்ப்பாசனத் திட்டக் குளங்களைச் செப்பனிடும் பணிக்காக ரூ. 620 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஊராட்சி ஒன்றியங்களுக்கான நிதி ஒதுக்கீடு உயர்ந்து வருகிறது :

ஊராட்சி ஒன்றியங்களுக்கான நிதி ஒதுக்கீடு ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கப்பட்டு வருகிறது :

| ஆண்டு | ஒதுக்கீடு (ரூ இலட்சங்களில்) | ஓர் ஒன்றியத்திற்கு ஒதுக்கீடு வீதம் (ரூ. இலட்சங்களில்) |
|---|---|---|
| 1976-77 | 1,16,25.40 | 31.08 |
| 1977-78 | 1,32,55.30 | 35.44 |
| 1978-79 | 1,43,07.06 | 38.23 |

### கிராமக் குடிநீர்த் திட்டம் :

மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான, குடிநீர் இல்லாத குறையினைப் போக்குவதில் தமிழக அரசு தீவிரமாய் முனைந்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள கிராமங்களில் தற்போதுள்ள குடிநீர் வசதிகளைக் கண்டறிய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆய்வு ஒன்றினை மேற்கொண்டது. குடியிருப்புகள் யாவும் அவைகளில் உள்ள குடிநீர் ஆதாரங்களுக்கு ஏற்ப ஆறு வகைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. மொத்தம் உள்ள 55,007 குடியிருப்புகளில் ஒரு கிலோ மீட்டர் தொலைவு வரை நீர் நிலைகளே இல்லாத அல்லது குடிக்கத் தகுதியற்ற நீர்நிலைகள் மட்டுமே உள்ள குடியிருப்புகள் 5,783 ஆகும் எனக் கண்டறியப்பட்டது. இக்குடியிருப்புகளில் ஏறத்தாழ 17 இலட்சம் மக்கள் வாழுகின்றனர்.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, இப்படி ஆய்வுகள் கண்ட விவரங்களின்படி, மிகத் தேவையான இடங்களைத் தேர்ந்தெடுத்து, குடிநீர் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கியது. 1977-78ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், மேற்கூறிய முதல் இரண்டு வகைகளைச் சார்ந்த குடியிருப்புகளுக்கு, அதாவது, ஒரு கிலோ மீட்டர் தொலைவு வரை நீர்நிலைகளே இல்லாத அல்லது குடிக்கத் தகுதியற்ற நீர்நிலைகள் மட்டுமே உள்ள குடியிருப்புகளுக்கு முன்னுரிமை தந்து குடிநீர் வழங்க அரசு ஆணையிட்டு உள்ளது. இவ்விரண்டு வகைகளுக்குள் அடங்கும் குடியிருப்புகளுக்கும், பழங்குடியினர், அரிசனங்கள் வாழும் குடியிருப்புகளுக்கும் உடனே குடிநீர் வழங்கப்படும். மொத்தமுள்ள இப்படிப்பட்ட 5,783 குடியிருப்புகளில், 4,010 குடியிருப்புகளுக்கு 1978ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் இறுதிக்குள் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10ஆம் நாள் வரை முதல் இரண்டு வகைகளைச் சார்ந்த 1,364 குடியிருப்புகளில் குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுவிட்டன. 1,558 குடியிருப்புகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்கு, குடிநீரே இல்லாத அல்லது குடிக்கத் தகுதியற்ற குடிநீர் நிலைகள் உள்ள முதல் இரண்டு வகைக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் பணி முடிவுற்ற பின்னரே இதர நான்கு வகைகளைச் சார்ந்த பணி மேற்கொள்ளப்படும்.

நீர் வழங்கு சிறு திட்டங்களுக்காக, 1977-78, மற்றும் 1978-79ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 140 மற்றும் ரூ. 130 இலட்சம் அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்குப் பின் அநேகமாக நல்ல குடிநீர் வசதி இல்லாத குடியிருப்பே இல்லாமல் ஆகிவிடும் என்று கணக்கிடப்படுகிறது.

### ஊராட்சி அமைப்புப் பணியாளர்கள் நலன் :

பதினைந்து ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களில் பணியாற்றும் பணியாளர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.

அரசிதழ் பதிவுறு அலுவலர்களுக்கு அளிக்கப்படும் அத்தனை மருத்துவச் சலுகைகளும் உள்ளாட்சி நிறுவன ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டு உள்ளன. மேலும், வேளாண்மை விரிவாக்கத்தில் 'டிப்ளமோ' பயிற்சியை வெற்றிகரமாக முடிக்கும் ஊர்நல அலுவலர்களுக்கு ரூ. 100 தொகு மானியமாக வழங்கப்பட அரசு ஆணையிட்டுள்ளது.

### கிராமப்புற—நலிந்த மக்கள் நலன் :

சென்னையைச் சுற்றி வாழும் மக்களுக்கும், சென்னை வாழ் மக்களுக்கும்அளிக்கப்படும் வசதிகளை அளிக்கும் நோக்கத்துடன், சென்னையைச் சுற்றி அமைந்துள்ள பதினொரு பேரூராட்சிகளை சென்னை மாநகராட்சியுடன் இணைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

### உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேர்மையான முறையில் தேர்தல்கள் நடைபெற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் :

பாகுபாடற்ற சீரிய முறையில் தேர்தல்களை நடத்தவும், ஊராட்சி ஒன்றிய மற்றும் நகராட்சிப் பெருந் தலைவர்களைப் பொறுப்பு மிக்கவர்களாக மாற்றுவதற்காகவும் ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சிப் பெருந் தலைவர் தேர்தல்களில், வாக்காளர்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் 'நேரடித் தேர்தல் முறை' அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இம்முறை, வரும் நகராட்சி, ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களில் பின்பற்றப்படும். தீண்டாமைக் குற்றங்களின் கீழ்த் தண்டனை பெற்றவர்கள் உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களில் போட்டியிடத் தகுதியற்றவர்கள் என்று அறிவிக்கப்பட்டு அதற்குரிய சட்டத் திருத்தமும் செய்யப்பட்டுள்ளது.

### கிராம முழு வளர்ச்சித் திட்டம் :

இத்திட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில், மேலநீலிதநல்லூர் ஒன்றியத்திலுள்ள நான்கு கிராமங்களில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அக்கிராமங்களைச் சேர்ந்த 1,002 குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்த வேண்டி தீட்டப்பட்ட இத் திட்டம் நல்ல பலனை அளித்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம், மூன்றாண்டுகளுக்காக ரூ. 32 இலட்சத்திற்கான செயற்குறிப்புகள் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டதில் 1976-77க்கு ரூ. 4.96 இலட்சம் அனுமதி அளித்துள்ளது.

1977-78 ஆண்டுக்காக ரூ. 27 இலட்ச மதிப்புள்ள திட்டங்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டன. அதில் ரூ.9,39,500க்கு 1978 மார்ச் திங்களில் மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

### கிராம மேம்பாட்டுத் திட்டம் :

அரசின் ஆய்வில் உள்ள இத்திட்டம், சமுதாயத்தில் நலிந்த பகுதியினருக்கு அதிக வேலை வாய்ப்பு ஏற்படுத்தி, விளைபொருள்கள் உற்பத்தியை அதிகரித்து, கிராமப் புற மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக ஏற்படுத்தப்படும் ஒன்று. இத்திட்டம், இராமநாதபுரம், புதுக்கோட்டை, கோயம்புத்தூர், வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, மதுரை, கன்னியாகுமரி, செங்கல்பட்டு ஆகிய எட்டு மாவட்டங்களில், ஒருங்கிணைந்த பத்துப் பத்துக் கிராமங்களில் நிறைவேற்றப்படும். இந்தக் கிராமங்களில் கிடைக்கும் வெற்றி இனி வரும் திட்டங்களுக்கு அடிப்படையாக அமையும்.

### வாழ்க்கைக் கல்வித் திட்டம் :

பொருளாதாரத்தில் பின் தங்கிய, பல வகுப்புகளைச் சார்ந்த இடையிலேயே பள்ளிப் படிப்பை நிறுத்தியவர்களுக்கு இக்கல்வித் திட்டம் ஓர் அரிய வாய்ப்பாகும். படிப்பை இடையிலேயே நிறுத்தி தன் குடும்பத்துக்காக உழைக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளான அவல நிலையில் உள்ள ஏழை மாணவ மாணவிகளுக்கு இது ஒரு வரப்பிரசாதம். இந்த மாணவ மாணவிகள் அறியாமை அகற்றப்பட்டு, அவர்கள் பள்ளிப் படிப்புக்கு அனுப்பப்படவும் வசதி அளிக்கப்படுகிறது.

தற்பொழுது இத் திட்டம் 374 ஊராட்சி ஒன்றியங்களிலும், ஓர் ஒன்றியத்திற்கு இரண்டு நிலையங்கள் வீதம், கல்வித் துறையால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. நிதி வசதி அதிகமாக உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் வாழ்க்கைக் கல்வி நிலையங்களைத் தொடங்கி, இத் துறை கல்வித் துறையின் முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கும். பத்து மாவட்டங்களில் 780 வாழ்க்கைக் கல்வி நிலையங்கள் தொடங்கப்படவும் அரசு ஆணை இட்டுள்ளது. இக் கல்வி நிலையங்கள் செயல்படுவது குறித்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்குத் திருச்சி மற்றும் மதுரையில் தக்க பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

**இந்தியாவிலேயே, இம்மாநிலத்தில்தான் முதன் முறையாக இந்த மாபெரும் வாழ்க்கைக் கல்வித் திட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகள் பெரும் பங்கேற்கின்றன.**

**நகர்ப்புற குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்கள் :**

இவ்வாண்டில் மட்டும் ரூ. 316 கோடி மதிப்புள்ள நகர்ப்புற குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்கள் 34க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 34 சிறிய, பெரிய நகரங்களுக்குப் பலன் அளிக்கும். கடந்த ஆண்டில் பதின்மூன்று குடிநீர் வழங்குத் திட்டங்களும் இரண்டு வடிகால் திட்டங்களும் மொத்தம் ரூ. 4 கோடி மதிப்புள்ள திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ரூ. 16.16 கோடி மதிப்புள்ள சிறுவாணி நீர்வழங்கு திட்டம், நிறைவு தரும் வகையில் முன்னேறி வருகிறது. ரூ. 16.14 கோடி மதிப்புள்ள 64 நீர்வழங்குத் திட்டங்களும், ரூ. 9.58 கோடி மதிப்புள்ள 8 வடிகால் திட்டங்களும் நிறைவு பெறும் தறுவாயில் உள்ளன. உலக வங்கியின் துணையுடன் ரூ. 9 கோடி மதிப்பில் சென்னைக்கான நீர்வழங்கு மற்றும் வடிகால் திட்டங்களுக்கான பணிகள் செயல்படுத்தப்பட எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது.

**நகர—ஊர்ப்புறத் திட்டங்களின் வளர்ச்சி :**

நகர ஊர்ப்புறங்களை மேம்படுத்துவதற்குரிய மகத்தான பொறுப்பினை நகர ஊர்ப்புறத் திட்ட இயக்ககம் மேற்கொண்டு, திறமுடன் பணியாற்றுகிறது. இவ்வியக்ககம் ஆற்றியுள்ள பணிகளில் முக்கியமானவை பின்வருமாறு :

(அ) மதுரை, கோயம்புத்தூரிலுள்ள முக்கியமான இடங்களுக்கு முழுமையான நகர் வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்.

(ஆ) புயல் வெள்ளத்தால் விளையும் இயற்கைச் சீற்றங்களை எதிர்த்திடும் திட்டங்களை உருவாக்குதல்.

இவ்விரண்டு திட்டங்களும் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளன. நகர மக்களுக்குக் கிடைக்க வேண்டிய வசதிகளில் ஏற்படக்கூடிய குறைகளை நீக்க, தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த, இந்நகரங்களில் வசிக்கும் நலிந்த மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் முன்னதாகக் கூறியுள்ள திட்டம் பெரிதும் பயன் அளிக்கும். இயற்கையின் சீற்றத்தால் விளையும் கொடுமைகள், சேதங்களை, விஞ்ஞான முறையில் தீர்வு கண்டு, வாழ்க்கையினைச் சீராக அமைக்க இரண்டாவது திட்டம் பெரிதும் துணை செய்யும்.

முழுமையான நகர் வளர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்த மதுரைக்கு ரூ. 7.76 கோடியும், கோயம்புத்தூருக்கு ரூ. 7.86 கோடியும் சுமாராகத் தேவைப்படுகின்றன. இவற்றில் 50 சதவீதத்தை, மைய அரசு கடனாகத் தரும்.

## மிசா சட்டத்தின் கீழ் கைதானோரின் துயர் தணிக்கும் நடவடிக்கை

உள்நாட்டு அவசர நிலை பிரகடனப்படுத்தப் பட்டிருந்த காலத்தில் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து வேலையிலிருந்துநீக்கம் அல்லது தற்காலிகப் பதவி நீக்கம் செய்யப்பட்ட அரசு அலுவலர்கள் தொடர்பான கொள்கையினை 1977 அக்டோபர் மாதம் அரசு மறுபரிசீலனை செய்தது. குற்றவழக்கில் சம்பந்தப்பட்ட ஒருவரைத் தவிர மற்ற அனைவரும் மீண்டும் வேலையில் அமர்த்தப்பட்டனர். அவ்வாறு வேலையிலிருந்து நீக்கம் அல்லது தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்ட நாளில் இருந்து சம்பந்தப்பட்ட அலுவலர் மீண்டும் வேலையிலமர்த்தப்பட்ட நாள்வரையிலான இடைப்பட்ட காலத்தை ஊதிய உயர்வு மற்றும் ஓய்வூதியம் போன்றவற்றிற்கு அலுவலில் இருந்த காலமாகக் கணக்கிடப்பட வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும் அவ்வாறு வேலை நீக்கம் அல்லது தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்ட நாள் முதல் சம்பந்தப்பட்ட அலுவலர் மீண்டும் வேலையிலமர்த்தப்பட்ட நாள் வரையிலான காலத்திற்கு முழுச் சம்பளமும் இதர படிகளும் கொடுக்கப்படலாம் என்றும் உத்தரவு போடப்பட்டுள்ளது.

1977-78ஆம் ஆண்டுக்கான திட்டத்தினைச் செயல்படுத்த, 50 சதவீத மைய அரசுக் கடனையும் சேர்த்து, ரூ. 3.56 கோடிக்குரிய திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையைக் கொண்டு சிங்காநல்லூர், குறிச்சி பகுதிகளிலுள்ள தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, குடி நீர் வசதி களைச் செய்து தருவதுடன், மதுரையிலுள்ள இஸ் மாயில்புரம் வட்டத்திலுள்ள ஏழை நெசவாளர்களின் வசதிக்காக, கழிவு நீர்த் திட்டங்களை விரிவாக்குதலும் அடங்கும். தவிர, கழிவு நீரை அகற்றும் பணிகள், கழிவு நீர்ப்பண்ணை, வடக்கு மதுரைக்குக் குடிநீர் வழங்குதல், லாரிகளை நிறுத்துவதற்கான இடங்கள், மொத்த வியாபார இடங்கள், மதுரைப் பேருந்து நிலை யத்திற்கருகே சுரங்கப்பாதை அமைத்தல் போன்ற வேலைகளும் இந்நிதியினைக் கொண்டு செயல்படுத்தப் படும்.

இவ்விதமான பணிகளில் உதவி செய்வதற் கென, உலக வங்கியும் உதவி செய்யும். இவ்வங்கி யின் உதவித் தொகை ரூ. 95 கோடியாக இருக்கு மென எதிர்பார்க்கப்படுகிறது. (இதில் 39 கோடி மதுரைக்கும், ரூ. 56 கோடி கோயம்புத்தூருக்கும் ஒதுக்கப்படும்) மேற்கண்ட நிதியுதவியுடன், திருச்சி, சேலம் போன்ற நகரங்களின் மேம்பாட்டிற்கும் உதவி செய்வது பற்றி யோசனை செய்து வருவ தாகவும் உலக வங்கி கூறியுள்ளது.

**நகர்ப்புற ஏழைகள் நலன் :**

நகர்ப்புற ஏழைகளுக்கு உதவும் வகையில் தற் போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ரூ. 48 கோடி மதிப்புள்ள திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. அதன் இன்றியமையாக் கூறுகள் பின் வருமாறு:

**இடமும் இடவசதிகளும் :**

அரும்பாக்கத்தில் நிறைவேற்றப்பட்டு வரும், மற்றும் வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய பகுதி களில் நிறைவேற்றப்பட விருக்கும் இத்திட்டம் நகர்ப்புற ஏழைகளுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு இயங்கு கிறது. மொத்தத்தில் மூன்றாண்டுக் கால அளவிற் குள், பொருளாதாரத்தில் நலிந்த 10,000 குடும் பங்களுக்கு வீடு கட்டிக் கொள்ள இடங்கள் வழங்கப் படும். அதற்குரிய தொகை மாதம் ரூ. 22 வீதம் எளிய தவணையில் செலுத்தப்பட ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. சென்னை நகரின் வெகு அருகாமையில் அமைந்துள்ள இப்பகுதிகளில் மருத்துவம், கல்வி வசதி, வேலை வாய்ப்பு போன்ற பல வசதிகள் எளிதில் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

**சாலை மேம்பாடு :**

பெருகி வரும் போக்குவரத்துச் சிக்கல்களைத் தீர்ப்பதே இதன் குறிக்கோள். சென்னை நகரத் தினுள் 200 கி.மீ. நடைபாதையும் 50 கி.மீ. துவிச்சக்கர வண்டிப்பாதையும் அமைக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது. இத்துடன், அண்ணாசாலை, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலைகளில் குறுக்கே கடக்க, சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. பெரும்பான்மையோர் பயன்படுத்தும் போக்குவரத் தான பேருந்துகளைப் பொறுத்தவரை சென்னை பல்லவன் போக்குவரத்துக் கழகம், 285 பேருந்து களை அளிக்கும்.

மேலும், கட்டட அமைப்புத் திட்டங்களை ஒப்பு தலளிக்கும் முறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன. கட்டடம் கட்டும் பணி விரைவில் பொதுமக்கள் மேற்கொள்ளும் வகையில் புதிய முறைகள் சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இம்முறை, பொதுமக்களால் பெரிதும் வரவேற்கப் பட்டுள்ளது.

கிராம மக்களின் வாழ்வு மேம்பாடடைய, அடித்தளத்து மக்களின் அவல நிலையைப் போக்கிட, அடிப்படை வசதிகளை அவர்கள் பெற்றிட, தமிழக அரசு பணியாற்றி வருகிறது.

# அரிசன மக்களுக்கு அரிய உதவிகள்

புகுமுக வகுப்பிற்கு மேல் படிக்கும் அரிசன ஆதிவாசிகள் மாணவ-மாணவியர்களுக்கும் அவர் களது பெற்றோர் பாதுகாவலரின் வருமானம் ரூ. 2,500-க்கு மேற்படாமல் இருந்தால் மட்டுமே 1976-77ம் ஆண்டு முடிவு வரை கல்லூரிப் படிப்புக் கட்டணம் சலுகை அளிக்கப்பட்டு வந்தது. இந்த வருமான வரம்பை நீக்கி எல்லா அரிசன ஆதிவாசிகள் மாணவ-மாணவியர்களுக்கும் அவர்கள் பெற்றோர் பாதுகாவலரின் வருமானத்தைப் பாராமல் கல்லூரிப் படிப்புக் கட்டணச் சலுகை 1977-78ம் ஆண்டிலிருந்து அளிக்கப்பட்டு வருகிறது. இதனால் இம்மாணவர்கள் எல்லா நிலைகளிலும் இலவசக் கல்வி பெறுகிறார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை வழங்கும் திட்டம் 1949 முதல் அமுலில் உள்ளது. 1949 முதல் 1977 வரை 28 ஆண்டுகளில் இத்திட்டத் தின் கீழ் ஐந்து கோடியே பதினாறு லட்சம் ரூபாய் செலவில் 16,824 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டு 2,62,693 மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

1977-78-ல் இதற்கென ரூ. 1 கோடி ஒதுக் கப்பட்டு 1283 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 20,799 மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேபோல் 1978-79-க்கும் ஒரு கோடி ரூபாய் இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏழை அரிசனங்களில் எவரேனும் இறந்து விட் டால் அவரது ஈமக்கடன்களைச் செய்ய ரூ. 50 நிதி உதவி உடனே அளிக்கப்படும்.

தொழிற்பயிற்சி நிலையங்களில் படிக்கக் கூடிய மாணவர்களுக்கு வழங்கும் மானியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 60-லிருந்து ரூ. 82-50ஆக உயர்த்தப்பட்டிருக் கிறது.

1977-78ஆம் ஆண்டு வரை அரிசன நலத் துறையின் மூலம் குழந்தைகள் காப்பகம் நடத்தப்பட வில்லை.

1977-78ஆம் ஆண்டில் ஐம்பது குழந்தைகள் காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1978-79ல் ஐம்பது குழந்தைகள் காப்பகங்கள் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



# தூய்மையான நிர்வாகம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பதவியேற்ற அன்றே சென்னை அண்ணாசாலையிலுள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகே ஆற்றிய பேருரையில் தெளிவாக முழக்கமிட்டார்; ''இலஞ்ச லாவண்யம் இல்லாத-ஊழலற்ற-நீதித்துறையில் நிர்வாகம் தலையிடாத-அரசை நடத்துகிற மாபெரும் பணியைச் செவ்வனே செய்ய உயிரைக் கொடுத்தாகிலும் பாடுபடுவோம்'' என்று.

அந்த உறுதிமொழியை நடைமுறையில் செயல்படுத்த அரசு முழு மூச்சுடன் உடனடியாகச் செயலில் இறங்கியது. அரசு இயந்திரமானது வேகமாகச் செயல்பட அரசுப் பணிகளில் வீண் காலதாமதங்களைக் களைய, மக்கள் குறைகளை நிவர்த்திக்கும் வகையில் அரசு இயந்திரமானது முடுக்கி விடப்பட்டது. அப்புதிய அணுகுமுறையின் ஒரு சிறப்புக் கூறுபாடாக, தமிழகத்தின் தலைநகரிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் உள்ள அரசு அலுவலகங்களில் உள்ள ஆய்வுப் பிரிவுகள் ( Inspection cells ) செயல்படுவதைப் பரிசீலித்து, அவற்றை மேலும் பயனுடையவையாக ஆக்கபூர்வமானவையாக-திறமை கொண்டவைகளாக மாற்றியமைக்க அரசு மேற்கொண்ட ஏற்பாட்டினைக் குறிப்பிடலாம்.

மாநிலத் தலைநகரில் உள்ள ஆய்வுப் பிரிவின் பணிமுறை முற்றிலும் திருத்தி அமைக்கப்பட்டது. அரசுப் பணிகளை ஆய்வு செய்ய மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகள் உண்மையிலேயே பொருள் பொதிந்தனவாக ஆக்கரீதியானவையாகச் செயல்படுத்தப் படுகின்றன. அரசு இயந்திரம் மாசின்றிச் செயல்பட வழிவகைகள் காணப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் கீழ்க்கண்ட, இரண்டு புதிய அணுகு முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. அரசு அலுவலக நடைமுறையில் பயிற்சி அளித்தல், மாவட்டத் தலைமை இடங்களில்-மாவட்டத் தலைமைத் துறை அலுவலகங்களில் அலுவலக நடைமுறை பற்றி மூன்று நாள் பயிற்சி அளிப்பது; திடீர் ஆய்வுகள், சோதனைகள் செய்தல்—ஊக்குவிப்பு நடைமுறைகளையும் மேற்கொள்ளுதல். இந்தப் பயிற்சி முறையின் நோக்கங்களாவன:—

* அரசு அலுவலகப் பணி நடைமுறையின் தரத்தை உயர்த்துதல், நிர்வாகத் திறமையை மேம்பாடடையச் செய்தல்.

* அரசு அலுவலகங்களில் குறிப்பாகத் தென்படும் குறைபாடுகளைக் களைதல்.

* பொது மக்களின் குறைகள் குறைபாடுகள், புகார்களின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய தன் முக்கியத்துவத்தை அரசு அலுவலர்கள் உணரும்படிச் செய்தல்.

இதுவரை 200 அரசு ஊழியர்களுக்கும் 75 மாவட்ட[வட்டார் அளவில் உள்ள அலுவலர்களுக்கும் இம்முறையில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தூய்மையான, திறமையான நிர்வாகம் என்ற உன்னதமான இலட்சியத்தின் அடிப்படையில் மாவட்டங்களில் செயல்படும் மாவட்ட ஆய்வுப் பிரிவுகள் குறித்து, மறுபரிசீலனை செய்யப்பட்டது.

1-9-77 முதல் அரசு நிர்வாகத்தில் மாவட்ட ஆய்வுப் பிரிவுகளிடம் பல்வேறு அரசுத் துறைகளிலும், அரசு சார்புள்ள நிறுவனங்களிலும் 'திடீர்ச் சோதனைகள்' செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. மக்கள் குறைகாணும் இடங்களிலே சிறப்பாக இப்படிப்பட்ட திடீர்ச் சோதனைகள் நடத்தப்பட வேண்டும் என்பதே இதன் இலட்சியமாகும்.

இந்தச் சோதனைகளின் கண்டுபிடிப்புகளின் மீது முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. துறைத் தலைவர்களுடன் கலந்து தலைமைச் செயலகத்தில் இதற்கான 'தொடர் நடவடிக்கைகள்' மேற்கொள்ளப் படுகின்றன.

கால காலமாக நடைமுறையிலே இருந்து வரும்-காலத்திற்கொவ்வாத நடைமுறைகள் பரிசீலிக்கப்பட்டு, அந்த முறைகள் மாற்றியமைக்கப்பட்டு அரசுப் பணிகள் நடைபெறுவதில் ஏற்படும் வீண் காலதாமதம் தவிர்க்கப்படுகின்றது.

ஒன்பது திங்களுக்குள்ளாகவே, இந்தத் திடீர்ச் சோதனைகளின் விளைவாக, வரவேற்கத்தக்க நல்லதொரு மாற்றம் நிர்வாகத் துறையில் ஏற்பட்டுள்ளது. இந்தச் சோதனைகளின் விளைவாக பல ஒழுங்கீனங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அரசுப்பணியில் ஏற்படும் தாமதம், ஒழுங்கீனங்கள், குறையீடுகளை ஒழிக்க அரசின் மேல்மட்ட அளவிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிர்வாகம் தூய்மையாக நடைபெற-குறைகளைக் களைந்தெறிய தமிழக அரசு கடைப்பிடித்து வரும் நடைமுறை ஆய்வுகள்-திடீர்ச் சோதனைகள் நடத்துகின்ற நடைமுறை-மற்ற மாநிலங்களால் பெரிதும் பாராட்டப் பெற்றுள்ளன! பீகார், குஜராத், கர்நாடகம், ஒரிசா போன்ற மாநிலங்கள் தமிழ் நாட்டில் தமிழக அரசு அமலுக்குக் கொண்டுவந்துள்ள இத்திட்டம் செயல்படுகிற முறை குறித்து விவரம் கேட்டுள்ளார்கள்!

தூய்மையான, ஊழலற்ற நிர்வாகமே மக்களின் வளமான வாழ்வுக்கு அடித்தளம். ஊழலைக் களைந்து, ஒழுங்கீனங்களை ஒதுக்கித் தூய்மையான ஆட்சியை நடத்த உறுதி கொண்டுள்ளது தமிழக அரசு! அந்த எண்ணத்தின் செயல் வடிவமாகத் திகழ்பவையே மேற்சொன்ன நடைமுறை ஏற்பாடுகளாகும்!

# மின் துறையில் ஓராண்டுச் சாதனை



முடிவடையும் தறுவாயில் உள்ள சுருளியாறு நீர் மின் திட்டம்

**மின்வெட்டு நீக்கப்பட்டது:**

1972-லிருந்து நம் மாநிலத்தில் விட்டு விட்டு மின்வெட்டு இருந்து வந்துள்ளது. சென்ற ஆண்டு ஜூன் மாதம் 30 சதவிகித மின் வெட்டு அமலிலிருந்தது. ஜூலை மாதம், 1977 முதல் நாள் இந்த மின்வெட்டு நீக்கப்பட்டது. அதன்பின் இவ்வாண்டு முழுவதும் மின்வெட்டு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**மின்சாரம் உபயோகப்படுத்துவதில் புதிய சாதனை:**

கடந்த 12 மாதங்களில் தமிழ் நாட்டில் 938 கோடி யூனிட் மின்சாரம் உபயோகப்படுத்தப்பட்டது. இது அதற்கு முந்தைய 12 மாதங்களை விட 20 சதவிகிதம் அதிகமாகும். கடந்த ஆண்டு மின்சார உச்சத் தேவை 1641 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. இது அதற்கு முந்தைய ஆண்டில் பதிவாகிய உச்சத் தேவை 1313 மெகாவாட்டை விட 25 சதவிகிதம் அதிகமாகும்.

**குந்தா நீர்-மின் நிலையத்தில் மேலும் ஒரு யூனிட்:**

குந்தா மின்திட்டம் 4-ஆம் நிலையின் கீழ் குந்தா 3-வது நீர்-மின்நிலையத்தில் 60 மெகாவாட் யூனிட் ஒன்று இவ்வாண்டு நிறுவப்பட்டுள்ளது. குந்தா 4-வது நீர்மின் நிலையத்தில் மேலும் ஒரு 50 மெகாவாட் யூனிட் விரைவில் உற்பத்தித் தொடங்கும்.

**புது மின் திட்டங்கள்:**

சுருளியாறு நீர்-மின் திட்டத்தின் கீழ் 35 மெகாவாட் நிறுவனத்திறன் கொண்ட ஒரு யூனிட் நிறுவும் கட்டுமானவேலைகள் விரைவுபடுத்தப்பட்டு வேலைகள் முடியும் தறுவாயில் உள்ளன. வரும் ஆகஸ்ட் மாதம் முறைப்படி இத்திட்டம் செயல்படத் துவங்கும். இத்திட்டத்தை உரிய காலத்தில் கட்டி முடித்ததற்காக இந்திட்டத்தில் செயலாற்றும் ஊழியர்களுக்கு ஊக்க ஊதியமாக ஒரு மாத சம்பளம் கொடுக்கப்படும்.

தூத்துக்குடி அனல் மின் நிலையம் நிறுவும் பணிகளும் விரைவு படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் முதல் 210 மெகாவாட் யூனிட் டிசம்பர் 1978-ல் செயல்படத் துவங்க ஆவன செய்யப்பட்டு வருகின்றன இந்தத் திட்டத்தில் வேலை செய்பவர்களுக்கும் ஒருமாத சம்பளம் ஊக்க ஊதியமாகக் கொடுக்கப்படும். இவ்வாறு குறித்த காலத்தில் வேலைகளை முடிப்பவர்களுக்கு ஊக்க ஊதியம் கொடுப்பது தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இதுவே முதல் முறையாகும்.

காடம்பாறை நீர்-மின்விசையேற்றத் திட்டம், சேர்வலாறு நீர்-மின்திட்டம், பாண்டியாறு-புன்னம் புழா நீர்-மின்திட்டம், நெல்லித் துறை நீர் மின்திட்டம் ஆகியதிட்டங்களை நிறைவேற்றுவதற்குத் திட்டக்குழு ஒப்புதல் உள்ளது. இத்திட்டங்களின் ஆயத்தப் பணிகள் நடந்து வருகின்றன.

**மேட்டூர் அணைத்திட்டம்:**

மேட்டூரிலும், அதைச் சார்ந்த பகுதிகளிலும், மின்சக்தியை அதிக அளவில் உபயோகப்படுத்தும் தொழிற்சாலைகள் பல உள்ளன. சேலத்தில் ஒரு இரும்பு உருக்காலை அமைக்கும் பணியும் நடந்து வருகிறது. இதற்கும் அதிக அளவில் மின்சாரம் தேவைபடும். சேலம், தர்மபுரி மாவட்டங்களில் ஒரு இலட்சத்திற்கும் மேலான பம்பு செட்டுகள் இயங்கி வருகின்றன. இவ்வாறு மேட்டூரைச் சுற்றி வளர்ந்து வரும் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு, மேட்டூரில் ஒரு அனல் மின்நிலையம் அமைப்பது அவசியமாகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் இதற்கான ஒரு திட்டத்தைத் தயாரித்து, மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், இந்த மின்நிலையத்தில், இரண்டு 210 மெகாவாட் உற்பத்தி இயந்திரங்கள் நிறுவப்படும். இதற்குச் சுமார் 140 கோடி ரூபாய் செலவாகும். இந்தத் திட்டம் தமிழ்நாட்டின் வளரும் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதில் முக்கிய இடம் வகிக்கும்.

இத்திட்டம், நிறைவேற்றப்பட்டபின், தமிழ்நாட்டில், மின்சாரப் பற்றுக்குறை நீங்கும்.

மின்வெட்டு விதிக்க வேண்டிய அவசியம் நேராது.

**கீழ் மேட்டூர் அணைத்திட்டம்:**

மேட்டூர் அணைக்கும், பவானி நகரத்திற்கும் இடையே, காவிரி யாற்றின் குறுக்கே நான்கு சிறு அணைகள் கட்டி, மொத்தம் 120 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டமொன்றை, தமிழ்நாடு மின்சார வாரியம் தயாரித்து, மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளது. இந்தத் திட்டத்திலிருந்து 537 மில்லியன் யூனிட்டுகள் ஆண்டொன்றுக்குக் கிடைக்கும். இந்தத் திட்டத்திற்கும் விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது.

**தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புக்கு மின் இணைப்பு:**

சென்ற ஆண்டு 205 தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளுக்கு மின்வசதி வழங்கப்பட்டது. இன்னும் 691 குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்கப்பட வேண்டும். இந்தப் பணி நடந்து வருகிறது. இவ்வாண்டு இறுதிக்குள் இந்த 691 குடியிருப்புகளும் மின்வசதியைப் பெற்றுவிடும். இத்துடன் தமிழகத்திலுள்ள எல்லா தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளும் மின்வசதி பெற்றுவிடும்.

**கிராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் மின் இணைப்பு:**

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 64,198 கிராமங்கள், குக்கிராமங்களில் 31-5-78 வரை 63,345 கிராமங்கள், குக்கிராமங்கள் மின்வசதி பெற்றுள்ளன. கடந்த 12 மாதங்களில் 60 கிராமங்கள் குக்கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்பட்டது. மீதமுள்ள 853 கிராமங்கள், குக்கிராமங்களுக்கு இவ்வாண்டு இறுதிக்குள் தெருவிளக்கு வசதி செய்து கொடுக்க ஆவன செய்யப்படும்.

**விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு:**

தமிழ்நாட்டிலுள்ள மொத்தக் கிணறுகள் 12 இலட்சம். 31-5-78 வரை 8,09,838 விசையேற்றங்களுக்கு மின்விசை கொடுக்கப்பட்டுள்ளது. கடந்த 12 மாதங்களில் 22,373 விசையேற்றங்களுக்கு மின்விசை கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு 48,000 விசையேற்றங்களுக்கு மின்இணைப்பு கொடுக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

**விவசாயிகளுக்குச் சலுகை:**

விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் மின்கட்டணத்தை யூனிட் ஒன்றுக்கு 16 காசிலிருந்து 14 காசாக 1-7-77 முதல் சிறு விவசாயிகளுக்குக் குறைக்கப்பட்டது.

1-6-78 முதல் சிறு விவசாயிகளுக்கு மின்கட்டணம், யூனிட் ஒன்று 14 காசிலிருந்து 12 காசாகவும், பெரும் விவசாயிகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 16 காசிலிருந்து 14 காசாகவும் குறைக்கப்பட்டது

புஞ்சை 5 ஏக்கர் அல்லது நஞ்சை 2.5 ஏக்கர்-இதற்கு அதிகமாக வைத்திராதவர்கள் சிறு விவசாயிகள் என கணக்கிடப்படுவர்.

மேலும் மீட்டர் வாடகைக் கட்டணத்தை மாதமொன்றுக்கு ஒரு மீட்டருக்கு 5 ரூபாயாக இருந்தது 4 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு:**

90,000 மூன்றும் நிலை, நான்காம் நிலை மின் தொழிலாளர்களுக்கு 1977 பிப்ரவரி மாதம் அளித்த ஊதிய உயர்வைத் தொடர்ந்து 5,000 அலுவலர்களுக்கு சூன் மாதம் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது. மேலும்



எல்லா ஊழியர்களுக்கும் சிறப்பு ஊதியமும் படித்தொகையும் மாற்றியமைக்கப்பட்டன. இதன் விளைவாக வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு அதிகப்படியாக 5 கோடி ரூபாய் செலவாகும். 1977-78 ஆம் ஆண்டில் மட்டும் ஊதிய மாற்றத்தின் விளைவாக அதிகப்படியாக 12 கோடி ரூபாய் வாரியம் அளித்துள்ளது.

**அனல் மின்திட்டப் படித்தொகை:**

அனல் மின் நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் புதிதாக அனல் மின் திட்டப்படித் தொகை வழங்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி சம்பளத்தின் அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு ரூ. 40 முதல் ரூ. 100 வரை அனல் மின்திட்டப் படித்தொகையாக அளிக்க வாரியம் முன்வந்துள்ளது.



உருவாகி வரும் தூத்துக்குடி அனல் மின் திட்டம்

# பெரியாறு வைகை

## நவீனப்படுத்தும் திட்டம்



ஏற்கெனவே உள்ள நீர்ப்பாசன முறையால் விரயமாகும் நீரை விரயமாகாமல் தடுப்பது, துணை ஆயக்கட்டுகளுக்கு இதன் மூலம் நீர்ப்பாசன வசதியை அதிகப்படுத்துவது என்பவை பெரியாறு நீர்ப்பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துவதன் அடிப்படை நோக்கமாகும்.

* வைகை அணையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் கீழே தண்ணீரைத் திருப்பிவிடக் குறுக்கே ஓர் அணைக்கட்டு கட்டுதல்.

* குறுக்கே கட்டும் அணைக்கட்டிலிருந்து 32 கி.மீ. தூரமுள்ள பேரணை மதகுக்கு இணைப்புக் கால்வாய் ஒன்றை உருவாக்குதல்; இந்த இணைப்புக் கால்வாய் கான்கிரீட்டால் செய்யப்படும். இணைப்புக் கால்வாயிலிருந்து 8 துணைக் கால்வாய்கள் பிரியும். 4,000 ஏக்கர் நிலம் இதனால் புதிதாகப் பாசன வசதி பெறும்.

* குறுக்கே கட்டும் அணைக்கட்டிலிருந்து பிரதான பாசனக் கால்வாய், துணைக்கால்வாய்கள், மற்றும் சிறு கிளைக் கால்வாய்கள் (25 ஏக்கருக்குப் பாசன வசதி தரும் கால்வாய்கள்) அனைத்தும் கான்கிரீட்டினால் அமைக்கப்படும்.

* 2326 ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதி பெறும் வகையில் திருமங்கலம் பிரதான கால்வாயை மேம்படுத்துதல்.

* பெரியாறு பிரதான நீர்ப்பாசனக் கால்வாயைப் புளிப்பட்டி மதகுக்குக் கீழே 22 கி.மீ. தூரத்திற்கு விரிவுபடுத்துதல். இதனால் 23,000 ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதி பெறும்.

* பெரியாறு—வைகை நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் வரும் தற்போதுள்ள குளங்கள், கால்வாய்கள் ஆகியவைகளை மேம்படுத்துதல், குளங்களுக்குப் பாசனக் கால்வாய்களிலிருந்து தண்ணீர் பெற நேரடி நீர்வரத்துக் கால்வாய்கள் அமைத்தல்.

* திட்டப் பகுதிகளில் கிராம சாலை வசதிகளை மேம்படுத்துதல்.

**பெரியாறு முக்கியக் கால்வாய்:**

கான்கிரீட் பூசத் திட்டமிடப்பட்டுள்ள பெரியாறு முக்கியக் கால்வாயின் 58 கி.மீ.-ல், இந்த ஓராண்டில் மட்டும் 25 கி.மீ கான்கிரீட் பூசி முடிக்கப்பட்டுள்ளது.

திட்டமிடப்பட்டுள்ள மீதிப் பகுதி கான்கிரீட் பூசும் வேலை முழு வேகத்தில் நடைபெற்று வருகிறது. கால்வாயின் அடித்தளம் கான்கிரீட்டினால் உருவாக்கப்படும். அதனுடைய கரைகள் சிமெண்ட், கான்கிரீட் (Slabs)களாலும் அமைக்கப்பட்டு கால்வாய் ஓர் ஒழுங்குக்குக் கொண்டுவரப்படுகிறது.

இத்திட்டம் 1981-82ல் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும்.

இத்திட்டத்திற்கு உலக வங்கி நிதியுதவி அளிக்கிறது. இதற்கான திட்ட மதிப்பீடு ரூ. 41.04 கோடி.

விரயமாகும் தண்ணீரை மீதப்படுத்துதல் என்ற உயரிய நோக்கின்கீழ் செய்யப்படும் இத்திட்டத்தினால் 16 கோடி கியூபிக் மீட்டர் தண்ணீர் சேமிக்கப்படும். இதனால் ஒட்டுமொத்தமாக 29,500 ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதி பெறும்.

இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது 16,000 தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெறுவார்கள்.



# மீனவர்களுக்கு மேலும் சலுகைகள்



மனித வாழ்விற்கு இயற்கை வழங்கிடும் செல்வங்கள் நிலத்தில் மட்டுமல்ல - நீருக்கடியிலும் உண்டு!

ஆழ்கடலின் செல்வங்களை எடுத்துவர ஆர்ப்பரிக்கும் கடலலை மேல், வாழ்வோடு போராடி வாழ்ந்திடும் மீனவத் தொழிலாளிகளுக்குத் தமிழக அரசு பல்வேறு சலுகைகளை வாரி வழங்கியுள்ளது:

**மீனவர் குடும்பநல — துயர் துடைப்பு நலநிதி:**

மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது இறந்துவிட்டால், அவருடைய குடும்பத்திற்கு இதுகாறும் அரசு ஆயிரம் ரூபாய் உதவி வழங்கி வந்தது.

இந்தத் தொகையை ரூபாய் ஐயாயிரமாக உயர்த்தியுள்ளது இன்றைய தமிழக அரசு. இவ்வுயர்வு 25-7-'77 முதல் அமலுக்கு வந்துள்ளது. இந்த ரூபாய் ஐயாயிரத்தில், இரண்டாயிரம் ரூபாய் மொத்தமாகவும் எஞ்சியுள்ள மூவாயிரம் ரூபாயும் மாதம் நூறு ரூபாய் வீதம் 30 மாதத் தவணைகளில் வழங்கப்படும். இறந்துபோன மீனவத் தொழிலாளியின் குடும்ப மறுவாழ்வுக்காகவும், குழந்தைகளின் உயர் கல்விக்காகவும் விதவையாகிவிட்ட அன்னாருடைய மனைவிக்கு 5,000 ரூபா நிதி உதவி வழங்கப்படும்.

இதற்காக வேண்டி, ஒவ்வோர் ஆண்டும் மாநில நிதியிலிருந்து ரூபாய் மூன்று இலட்சத்தையும்- மேலும் இரண்டு இலட்சத்தை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்தும் ஒதுக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிதி 'தமிழ்நாடு மீனவர்கள், நலன் துயர் துடைப்பு நிதி' என அழைக்கப்படும்.

இந்நிதியின் மற்ற நோக்கங்களாவன:—

*மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருக்கும்பொழுது இறந்து போகின்ற மீனவத் தொழிலாளியை முழுக்க முழுக்க நம்பியுள்ள அவருடைய குடும்பத்தினைச் சேர்ந்தவர்களுக்கு நிதி உதவி அளித்தல்:

அப்படிப்பட்ட நேர்வுகளில், அந்த மீனவத் தொழிலாளியின் குழந்தைகளுக்கு மீன்பிடி தொழிற்பயிற்சி அல்லது மீன்பிடி தொழிலில் நுட்பக்கல்வி அல்லது அது சம்பந்தப்பட்ட தொழிற்கல்வி பயில நிதி உதவி அளித்தல்; படிப்பு உதவித் தொகை அளித்தல் (அந்த மாணவன் முன்னே அனுபவித்து வரும் சலுகைகளுக்கு மேல் தேவையான உதவியே இந்த நிதியிலிருந்து தரப்படும்.)

*வெள்ளம், புயல், தீ விபத்துக்கள் இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் விளைவுகள்— அப்படிப்பட்ட நேரங்களில் மீனவர்களுக்கு உணவு, துணி மற்றும் இன்றியமையாப் பொருள்களை வழங்குதல்.

*ஒவ்வோர் ஆண்டும் மீனவர் நலனுக்காக மீனவர் வாரம் என்று ஒரு வாரத்தினைக் கொண்டாடுதல்.

*மீனவக் குடியிருப்புகளில் முறைசாராக் கல்வியைச் சொல்லிக் கொடுக்க மாலைநேர வகுப்புகள் நடத்துதல்.

,அரசினால் அவ்வப்போது ஒப்புதல் அளிக்கப்படும் நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்ற உதவிபுரிதல்.

**மீனவர்களுக்குக் கடன் நிவாரணம்:**

மாதம் ரூபாய் 200-ம், அதற்குக் குறைவாகவும் வருமானம் உள்ள மீனவர்களுக்குக் கடன் நிவாரணம் அளிக்கச் சட்டமொன்று இயற்றுவது அரசின் பரிசீலனையில உள்ளது. இதற்கு முன்னால் இப்படி ஒரு நிவாரணம் அளிக்கப்பட்டதில்லை.

'உண்மையாக மீன் பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு மட்டுமே இயந்திர மீன் பிடி படகுகள் வழங்கப்பட வேண்டும்; யாருக்கு வேண்டுமானாலும் கொடுப்பது என்பது கூடாது' என்று அரசு ஆணையிட்டுள்ளது.

மீன் பிடி தொழிலாளர் கடலிலிருந்து எடுக்கும் சங்குகளுக்குரிய விலையை திருநெல்வேலி மாவட்டத்தில் 1977-78-ஆம் ஆண்டின் சங்கு எடுக்கும் பருவத்திலிருந்து இந்த அரசு உயர்த்தியுள்ளது.

**ஆழ்கடலில் மூழ்கி முத்து எடுப்போர்:**

ஆழ்கடலில் மூழ்கி முத்து எடுப்போர், தண்டுகைப்பவர் (OARSMEN) ஆகியோரின் நாள் ஊதியத்தை, அவர் செய்யும் பணியின் கடுமையை உத்தேசித்து, இந்த அரசு, மே 1978-ல் உயர்த்தியுள்ளது. எனவே ரூ. 10, ரூ. 8, ரூ. 5 என இருந்த ஊதிய அமைப்பு முறையே ரூ.20 ரூ. 15, ரூ. 10 என உயர்த்தப்பட்டுள்ளது.

**சங்குத் தொழில்:**

தமிழகத்தின் கடற்கரை முழுதும் சங்கு எடுக்கும் தொழிலை 1-4-78 முதல் அரசுடைமையாகக் கருதி, துறைவாரியாக இயக்கப்படவேண்டும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தொழில் இடைத் தரகர்களின் தலையீடு இல்லாமல் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் இம்முடிவு எடுக்கப்படுகிறது. இது குறித்து ஏதாவது மறுப்புகள் இருந்தாலும், யோசனைகள் இருந்தாலும், அவற்றைப் பொதுமக்கள் தெரிவிக்க வேண்டுமென ஏப்ரல்'78ல் அரசு ஓர் அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.



# பெருகி வரும் பெருநகர வளர்ச்சி

**1200** சதுர கி. மீ. பரப்பும் 40 இலட்சம் தொகையும் கொண்டு வளர்ந்து வரும் சென்னை மாநகரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் திட்டமிடும் அமைப்பாகச் "சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்" உருவாக்கப்பட்டது. தன்னளவில் முக்கிய அமைப்பான இது, ஜூன் 1977-லிருந்து வியத்தகு சாதனைகள் செய்துள்ளது. வாழ்வின் அடிமட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு முதன்மை தந்து, அவைகளைக் குறைந்த செலவில் தீர்வு கண்டிருப்பது, குறிப்பிடத்தகுந்த அம்சமாகும்.

* பல்நோக்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை உருவாக்குவது; 'செயற்படுத்துத் துறைகள்' மூலம் இதனைச் செயல்படுத்துவது; உலக வங்கியும், மத்திய அரசும் அளிக்கும் நிதி உதவியுடன் இவை செயல்படுகின்றன.

* மணலியில், ஒரு புறநகர் உருவாக்குவது.

* மறைமலை நகர் என்ற ஒரு புதிய நகரை நிர்மாணிப்பது,

* நகர அளவிலான வசதிகளை உண்டாக்கித் தருவதற்கான திட்டங்கள் தீட்டுதல்; ஒரு மொத்த விற்பனை நிலையம், பல்வேறு அலுவலக, வணிக மையங்கள் அமைத்தல் ஆகியவையும் இதில் அடங்கும்.

**சென்னை நகர வளர்ச்சித் திட்டம்:**

இத்திட்டம் எட்டுத் துறைகள், பத்து செயல்படுத்தும் அமைப்புக்கள் கொண்டது. இவை முழுமையும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுவின், கண்காணிப்பில், ஒத்துழைப்பில் செயற்படும்.

**அரும்பாக்கம் மனைகள், தளங்கள் திட்டம்:**

200-க்கும் அதிகமானவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தருவதற்கான திட்டம் இது. 1977-ல் இது தொடங்கப் பெற்றது. குறிப்பிடத் தகுந்த முன்னேற்ற முத்திரைகள் பதித்துள்ள இதன் பணியால், இவ்வாண்டு அக்டோபர் 2-ஆம் நாளுக்குள், ரூ. 350-க்குக் குறைவான மாதாந்திர வருமானமுள்ளோர் பலர் புதுமனையில் குடிபுகுவார்கள். சாலைவசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, மின்சார வசதி, மின்சார வசதிகளுடன் ஆன மனைகள், வீடுகளுக்கு இவர்கள் புதுச் சொந்தக்காரர்களாகிறார்கள் குளியல், கழிவறை வசதிகளுடன் 40 சதுர மீட்டர் இடத்தில் மாதா மாதம் இவர்கள் செலுத்த வேண்டியது ரூ. 22 மட்டுமே. 1980-க்குள் 13,000 மக்கள் பயன்பெறுவர். 1978-79ல் இதற்கான ஒதுக்கீட்டுத் தொகை ரூ. 275 இலட்சம். நடப்பு ஆண்டில், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய இடங்களிலும் இப்பணி தொடங்கப்படும்.

**குடிசை மேம்பாட்டுத் திட்டம்:**

4,000 மக்களை, குடிசைகளிலிருந்து அகற்றி, புதுவீடுகளில் குடியேற்றும் திட்டம், நிறைவேறும் தறுவாயில் உள்ளது. கல்வி, சுகாதாரம் ஆகிய அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்டவை இக்குடியிருப்புகள். இரண்டாண்டுகளில், இன்னும் 26 ஆயிரம் பேருக்குப் புதிய குடியிருப்புகள் தயாராகிவிடும். தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம், புதிய குடியிருப்புப் பணிகள் செயல்படுத்தப் படுகின்றன. 1978-79ல், இச்சீரிய பணிக்கான ஒதுக்கீடு ஒரு கோடி ரூபாயாகும்.

**சாலை, போக்குவரத்து வசதிகள்:**

12 கி.மீ. தூரமுள்ள 'உள்வட்டச் சாலைகள் திட்டம்' ஒன்று செயலுக்குக் கொண்டு வரப்படுகிறது. அம்பத்தூர்-கிண்டி சாலை அமைப்பதும் இதில் அடங்கும். தற்போது போக்குவரத்து நெருக்கடியும் மக்கள் நெருக்கமும் உள்ள வீதிகள் வழியே கிண்டி செல்வதுபோல், விரிவான பயணப்பாதை இதனால் உருவாகும். மக்களுக்கான போக்குவரத்து வசதிகளைப் பெருக்கும் வகையில் நகரில் 285 புதிய பேருந்துகள் விடும் திட்டம் செயல்படவிருக்கிறது. 92 புதிய பேருந்துகள் இப்போது சாலையில் ஓடத் தொடங்கிவிட்டன. மீதி 193 புதிய பேருந்துகள் இவ்

வாண்டுக் கடைசிக்குள் ஓடத் தொடங்கும். சாலை வசதிகளுக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 276 இலட்சம்; போக்குவரத்து வசதிக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 264 இலட்சம்.

**மணலி நகர மேம்பாட்டுத் திட்டம் :**

திருவொற்றியூர், எண்ணூர் பகுதிகளில் வாழும் தொழிலாளர்களுக்காக வீடுகட்டித்தரும் திட்டத்தில், 543 வீடுகள் கட்டி முடியும் நிலையில் உள்ளன. மணலி, மாதவரம், திருவொற்றியூர், வடசென்னை முதலிய தொழிற்சாலைப் பகுதிகளில் வாழும் நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்குப் படிப்படியாகக் குடியிருப்பு வசதிகளை உண்டாக்கித்தருவது என்ற திட்டத்தில் இது அடங்கும்.

**மறைமலை நகர் :**

சென்னையிலிருந்து 45 கி. மீ. தொலைவில், தாம்பரம், செங்கல்பட்டுக்கு இடையில் ஒரு இலட்சம் மக்கள் வாழ்வதற்காக உருவாகும் புதிய நகர் இது; 42 தொழிற்சாலைகள், 170 சிறு தொழிற்சாலைகள் அமைப்பதற்கான இடம் தற்போது தயார் நிலையில் உள்ளது. 177 குடியிருப்புகள் அமைக்கும் பணி விரைவில் தொடங்கப்படவிருக்கிறது. மணலி, மறைமலைநகர் உருவாக்கத் திட்டங்களுக்காக 1978-79ல் நிதி ஒதுக்கீடு ரூ. 65 இலட்சம்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டங்களுக்கு, 1978-79—க்கான நிதி ஒதுக்கீடு, ஜூன் 78 வரை செலவிடப்பட்ட தொகை ஆகியவை பின்வரும் பட்டியல் மூலம் கொடுக்கப்படுகிறது :

| | திட்டம் | திட்ட மதிப்பீடு | 31-3-78 வரை செலவிடப்பட்ட தொகை | 1978-79-க்கான முதலீடு |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| **நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்:** | | | | |
| 1. | மனைகளும் தளங்களும் | 932.88 | 175.74 | 275.00 |
| 2. | குடிசை மேம்பாட்டுத் திட்டம் | 606.00 | 27.86 | 100.00 |
| 3. | சாலை வசதி | 975.08 | 150.04 | 276.00 |
| 4. | போக்குவரத்து வசதி | 657.00 | 105.16 | 264.00 |
| 5. | குடிநீர், வடிகால் திட்டம் | 954.00 | — | 75.00 |
| 6. | பிற செலவினங்கள் | 512.90 | 16.40 | 125.00 |
| | மொத்தம் ... | 4637.86 | 475.20 | 1115.00 |
| **புறநகர் வளர்ச்சித் திட்டம்:** | | | | |
| 1. | மணலி | 810.00 | 134.78 | 65.00 |
| 2. | மறைமலை நகர் | 152.00 | 108.39 | |
| | மொத்தம் ... | 462.00 | 243.17 | 65.00 |

இதுதவிர, 1980-லிருந்து இரண்டாவது மிகப் பெரிய திட்டத்தைத் துவக்க, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், அதற்கான பணியையும் இப்போதே தொடங்கியுள்ளது. அதற்கான பல்வேறு வகையான ஆய்வுகள் செய்து முடிக்கப்பட்டு விட்டன.





# செய்தி-மக்கள் தொடர்புத் துறையின்

# சீரிய பணிகள்

மத்தியிலும் மாநிலங்கள் பலவற்றிலும் புதிய அரசுகள் அமைந்துள்ளன, கடந்த பொதுத் தேர்தலின் பின்னாலே.

பல வரலாற்றுப் பின்னணியில், பத்திரிகைகள், வானொலி, கலை நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி, திரைப்படம், பொருட்காட்சி, வெளியீடுகள் போன்றவற்றின் மூலம் மக்களுக்குச் செய்திகளைத் தெரிவிப்பதற்கான ஒரு கொள்கையை உருவாக்கிட மாநில அரசுகள் கடமைப்பட்டிருக்கின்றன.

அரசுக்கு-அதற்கான முக்கியக் கருவியாகப் பயன்படுவதே செய்தி-மக்கள் தொடர்புத் துறையாகும். அரசின் சாதனைகளையும் திட்டங்களையும் அறிவிப்புகளையும் அவ்வப்போது மக்களை உணரச் செய்வது இத்துறையின் தலையாய கடமை. அதைப் போலவே மக்களின் தேவையையும் மக்கள் எதிர்பார்ப்பையும் அவ்வத்துறைகளுக்குத் தெரிவிக்கும் அரும்பணியும் இத்துறையினுடையதே!

நாடு வாழ தான் வாழ்ந்தவர்கள், நல்வழி காட்டிகள், பொதுத் தொண்டாற்றிப் புகழ் கொண்டவர்கள், தேசியத் தலைவர்கள் ஆகியவர்களுக்கு விழா எடுப்பதனை அரசு கொள்கையளவிலே ஏற்றுப் பெருமை கொள்கிறது.

**30-6-77**ல், தமிழகத்தில் புதிய அமைச்சரவை பொறுப்பேற்ற பின்னாலேதான் அவ்வகையில்—முதன் முதலாக, பேரறிஞர் அண்ணா

அவர்களின் பிறந்த நாள் விழா, அரசின் சார்பிலே, செய்தித் துறையினல் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காயிதெ மில்லத், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனர் ஆகியோரின் விழாக்களும் அந்த அடிப்படையிலேதான் அரசு மூலம் கொண்டாடப் பட்டன.

காமராசரின் 75-வது ஆண்டு நிறைவு விழா ஜூலைத் திங்களில் கொண்டாடப்பட விருக்கிறது.

தமிழ் நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பிலே செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் ஒத்துழைப்புடன் சங்கரதாஸ் சுவாமிகள் விழா கொண்டாடப்பட்டது.

சுயமரியாதைச் சுடர் கொளுத்திய தந்தை பெரியாரின் பிறந்த நாள் நூற்றுண்டு இது. எனவே, இந்த ஆண்டில் ஒரு நாள் அல்ல, நூற்றுண்டு விழா ஆண்டு முழுவதுமே ஒவ்வொரு நாளும் தமிழகம் விழாக் கோலம் பூண்டு அந்தத் தன்மானத் தலைவனின் புகழ் பாட வேண்டுமென அரசு மூலம் திட்டமிடப் பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தந்தை பெரியாரின் நூற்றுண்டு விழா, ஈரோட்டிலுள்ள பெரியார்-அண்ணு நினைவகத்தில் தொடக்கம் செய்யப்படுகிறது.

தமிழகத்துப் பழங் கலைகள் புத்துணர்ச்சி பெற்று மலர வேண்டும் என்பதிலே இந்த அரசு பெரிதும் அக்கறையோடு செயல்பட்டு வருகிறது. அதற்கான உதாரணம்தான்—'வாடாத தாமரைக்கை வானில் ஒளி தெறிக்க ஆடாத பொற்பாவை ஆடவந்தாள்' என்ற புரட்சிக் கவிஞரின் பாடல் அடிகளுக்கு எடுத்துக்காட்டான செல்வி சுவர்ணமுகிக்கு உதவிட அரசு முன்வந்தது. அவரது நடனத்தை, அண்மையிலே பழம்பெரும் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண்கூடக் கண்டு வியந்து பாராட்டியிருக்கிறார். சென்னை வந்த வியட் நாம் கலைக் குழுவினரும் அயர்லாந்து நாட்டுத் தலைவரும் பார்த்துப் பரவசப்பட்டனர்.

அத்தகைய ஆற்றலாளருக்கு, வறிய ஏழைக் குடும்பத்தவர் என்பதால்—குடத்துக்குள் விளக்கென இருக்கும் அவர் ஆடல் திறம் குன்றின் மேலிட்ட விளக்காகித் தமிழகம் புகழ் பெற வேண்டுமென்ற கருத்தினல்—அரசு உதவ முன்வந்தது. இதன் மூலம் தமிழக நாட்டியக் கலையின் சிறப்பினை நம் நாடு முழுவதும் மட்டுமல்ல; உலகு முழுவதும் பரப்பும் பணிக்கு அரசு உதவியுள்ளது.

முத்தமிழில் மூன்றும் தமிழான நாடகத்தின் ஆக்கத்திற்கு இன்றைய அரசு அளித்து வரும் ஊக்கம் பாராட்டுக்குரியதாகும்.

தமிழகம் முழுவதும் தீண்டாமை ஒழிப்பு, மது விலக்குப் பிரச்சார நாடகங்கள் நடத்துவதற்கெனச் சிறந்த நாடகங்களைத் தேர்வு செய்திட அரசின் மூலம் ஒரு போட்டியே நடத்தப்பட்டது. அந்தப் போட்டியின் மூலம்—'விதியின் பின்னல்!', 'இருட்டு', 'முள் நடுவே ரோஜா', 'உறுதிமொழி', 'சம்பந்தி' ஆகிய நாடகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொன்றிற்கும் பரிசாக ஆயிரம் ரூபாய் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டதனை நாடறியும்.

தமிழ் நாடெங்கும் இன்றைய தினம் இந்த நாடகங்கள் நடத்தப்படுகின்றன.

திரைப்படம் சமூகத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றது; செய்திகளைச் சொல்லுவதில் அதற்கு உள்ள சக்தி மகத்தானது. ஆயிரக் கணக்கானேருக்கு வேலைவாய்ப்பும், அரசுக்கு அதிக அளவிலான வருமானமும் தரும் துறை திரைப்படத் துறை.

வெறும் பொழுதுபோக்கு அம்சமாக மட்டுமின்றி, ஏழை-எளியோர் நெஞ்சிலே ஏற்றமிகு கருத்துக்களை விதைக்கும் சாதனமாகவும்திரைப் படங்கள் பயன்பட வேண்டுமெனக் கருதுகிறது இந்த அரசு.

எனவே, குடிப்பழக்கத்தினல் விளையும் கேடுகளை விளக்கியும்—தேசிய ஒருமைப்பாடு, நாட்டுப் பற்று போன்றவற்றை வலியுறுத்தியும்



செல்வி சுவர்ணமுகி

தரமான படங்கள் தயாரித்தளிப்போர்க்கு உதவித் தொகை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

அதன் முதலாவது கட்டமாக, 1976-77ல் தயாரிக்கப்பட்ட பத்துப் படங்களில் மூன்று படங்கள் (அன்னக் கிளி, சில நேரங்களில் சில மனிதர்கள், சந்ததி) தேர்ந்தெடுக்கப்பட்டன.

கடந்த தமிழ்ப் புத்தாண்டு நாளிலே, அந்த மூன்று லட்சியப் படங்களைத் தயாரித்தவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மூன்று இலட்ச ரூபாய் பரிசளித்துச் சிறப்பித்தார்கள்.

''தமிழ்த் திரையுலகுக்குப் புத்துயிர் அளிக்கவே இந்தத் திட்டம்'' என அவ்விழாவில் பேசிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குறிப்பிட்டது எத்துணைப் பொருத்தமானது!

அதுமட்டுமல்லாமல்—சிறந்த படங்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த தொழில் நுணுக்க வல்லுநர்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுத்துப் பாராட்டிப் பரிசு வழங்கிடும் திட்டத்தை மீண்டும் செயல்படுத்துவது குறித்தும் அரசு பரிசீலித்து வருகிறது.

இது வரை, தமிழ் நாட்டில் உள்ள டூரிங் அரங்குகளுக்கு இரண்டு ஆண்டுகள் மூன்று மாதங்கள் மட்டும்ம நடத்த அனுமதி உரிமம் —வழங்கப்பட்டு வந்தது. அதனை மூன்று ஆண்டுகளாக நீட்டித்துப் பெருமை கொண்டது இந்த அரசு.

கேளிக்கை வரி விதிப்பிலும் சிறந்ததோர் சீர்திருத்தத்தினைச் செய்துள்ளது இந்த அரசு.

1977 டிசம்பர் 26 முதல் ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சிகள், மற்றும் இரண்டாம் நிலை—மூன்றும் நிலை நகராட்சிகள் ஆகியவற்றிலுள்ள திரையரங்கங்களுக்கு, அந்தந்த அரங்குகளின் மொத்த இருக்கைக்கான வசூல் அடிப்படையில் காட்சி ஒன்றுக்கு மொத்தமாக வரி விதிக்க அரசு முடிவு செய்தது.




காமராசர் இல்லம் - சென்னை



ஒரு வாரத்தில் எத்தனை காட்சிகள் நடத்தப்பட்டாலும் சரி; வாரம் ஒன்றுக்கு 14 முதல் 20 வரை குறிப்பிட்ட எண்ணிக்கையிலான காட்சிகளுக்கு ஆகின்ற மொத்த இருக்கைகளுக்கான வசூலில், 15 சதவீதத்திலிருந்து 22.5 சதவீதம் வரையிலே வரி செலுத்துவதன் மூலம் வரி இணக்கம் செய்து கொள்ள உரிமையாளர்களுக்கு விருப்ப உரிமை அளித்திடவும் இந்த முறையிலே வழிவகை உள்ளது.

சென்னையில் காமராசர் வாழ்ந்த இல்லத்தை அரசுடைமையாக்கி அதனைக் 'காமராசர் நினைவு இல்ல'மாகச் செய்வதற்கு அரசு முடிவெடுத்துள்ளது. காமராசர் பயன்படுத்தி வந்த பொருள்கள் எல்லாம் இந்த இல்லத்தில் நினைவுச் சின்னங்களாகப் பாதுகாத்து வைக்கப்பட உள்ளன.

காமராசர் வாழ்ந்த இல்லத்தை நினைவு இல்லமாக ஆக்கும் விழா ஜூலை 15ல் மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையில் நடைபெற இருக்கிறது.

தமிழகத்திலே உள்ள 1,500 திரையரங்குகளில், 1,000 திரையரங்குகள் புதிய முறை வரி விதிப்பின் கீழே வந்துள்ளன. பெரும்பான்மையான திரையரங்குகள் இணக்க முறையில் வரி செலுத்திட விரும்புவதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இத் திருத்தச் சட்டத்தின் மூலம், வரி ஏய்ப்புச் செய்திடுவோர் கடும் தண்டனைக்கு ஆளாக்கப்படுவர். தவறான முறையிலே வரி ஏய்ப்புச் செய்யும் குற்றத்திற்கு ஓராண்டு வரை சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படலாம்.

திரையரங்க உரிமையாளர்களினால் செய்யப்படும் வரி ஏய்ப்பினைத் தடுக்கவும், வரி வசூலிக்கும் அதிகாரிகள் வஞ்ச ஊழல் போன்ற சபலங்களுக்கு ஆளாவதைத் தவிர்க்கவும் அரசு எடுத்த இந்த நடவடிக்கை மிகவும் ஏற்றதென

—கலைத் துறைத் திறனாளர்களாலேயே அரசு போற்றிப் புகழப்படுகின்றது.

காமராசர் நினைவாலயத்தை நன்முறையில் பராமரிக்கவும், பெரியார், அமரர் அண்ணா ஆகியோர் இல்லங்களை ஈரோட்டிலும் காஞ்சியிலும் சிறந்த முறையில் பாதுகாக்கவும் தமிழக அரசு உடனடி நடவடிக்கைகள் மேற்கொண்டது.

திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரியின் பணிகள் செம்மைப்படுத்தப்பட்டுள்ளன. அதன் செயல்முறை நடவடிக்கைகள் சிக்கல் இன்றி நிகழப் புதிய கட்டடமொன்றும் பல்வேறு வசதிகளோடு கட்டப்பட்டிருக்கிறது. நடிப்புக் கல்லூரியிலே சேர்வோருக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருக்கின்றன.



செய்தித் துறைக்கும் பத்திரிகையாளர்களுக்கும் உள்ள உறவு மிகவும் நெருக்கமானதாகும். அதனை உறுதிப்படுத்தும் வகையிலே 'பத்திரிகையாளர் உதவி நிதி' ஒன்றினை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

நீண்ட நெடுங்காலம் பத்திரிகைத் துறையிலே பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் — மற்றும் எதிர்பாராமல் இயற்கை எய்திய பத்திரிகையாளர்கள் குடும்பங்கள் வறுமையிலே வாடாமல் காக்க வழி செய்யும் திட்டமிது.

இத்திட்டத்தின் முதற் கட்டமாக — குறைந்த பட்சம் ரூ. 5 இலட்சத்தோடு இந் நிதி துவங்கும். அரசு கொடுக்கும்ஆரம்பத்தொகை, பத்திரிகை நிர்வாகங்களும், பத்திரிகையாளர்களும் வழங்கும் பங்கு ஆகிய மூன்றையும் அடிப்படையாகக் கொண்டே இந்தப் பத்திரிகையாளர் உதவி நிதி' துவக்கப்படுகிறது.

இந்த உதவி நிதியின் முதலீட்டுத் தொகைக்கு அரசின் பங்காக இரண்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும். இந்த நிதியிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய்க்குக் குறையாமலும், இருநூற்றைம்பது ரூபாய்க்கு மேற்படாமலும் உதவித் தொகை வழங்கப்படும்.

சிறு பத்திரிகையாளர்களுக்கு உதவிட அரசின் மூலம் மற்றோர் அரிய திட்டமும் உருவாக்கப்பட்டு வருகிறது.

அவற்றிற்குத் தேவைப்படும் 'நியூஸ் பிரிண்ட்' காகிதங்களைத் தமிழக அரசின் சார்பில் 'சிட்கோ' மூலமாக வெளிநாட்டிலிருந்து ஏற்றுமதி செய்து மொத்தமாக அளித்துதவுவது பற்றிய திட்டமே இது.

இதனை அரசு ஆழ்ந்து பரிசீலித்து வருகிறது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் இந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகளில் சிலபல இந்தக் கட்டுரையிலே தொகுத்துரைக்கப்பட்டன. இத்தகைய அரும் பணிகள் இனியும் தொடரும்—இனிதே வளரும்!

ஜூலை 16உ

தமிழரசு இதழில்

தமிழரசு கூட்டாசிரியர்

திரு. பி. சி. கணேசன்

எழுதும்

**வளர்ச்சிப் பாதையில் தமிழகம்**

தொடர் கட்டுரை

ஆரம்பமாகிறது.

பல்லவன் போக்கு வரத்துக்கழகத்திற்கு தமிழ்நாடு அரசு அளிக்கும் 4.05 கோடி ரூபாய்கள், இனி உங்களுக்கு அளிக்கப்போவது இன்னும் அதிக புதிய பேருந்துகள், அதிக பேருந்து நிலையங்கள், அதிக பேருந்துப் பணிமனைகள், அதிக அளவு பேருந்து நிழற் குடைகள்.

சமீப காலத்தில் நீங்கள் அதிக அளவில் புதிய வெளிர் பச்சை நிற பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகளைக் காணத் தொடங்கியிருப்பீர்கள். இன்னும் இரண்டு ஆண்டுகளில் இதே மாதிரியான 285 பேருந்துகள் சாலையில் ஓடத்துவங்கும். விசாலமான இப்பேருந்துகள் மற்ற பேருந்துகளிலிருந்து மாறுபட்டு, பலவிதங்களில் புதுமை கொண்டதாக மிளிருகின்றன. இப்பேருந்துகளில் புதுவகை இருக்கைகள் மிருதுவான ரெக்ஸினால் மூடப்பட்ட லேடக்ஸ் ரப்பர் குஷன் கொண்டவை. இருக்கையின் சாய்மானம் சற்று சரிவாக அமைந்திருப்பது எல்லோராலும் வரவேற்கப்படுகிறது. பேருந்துகளில் இருக்கும் அகலமான நடை வழி, பயணிகள் நிற்பதற்கு சௌகரியமாய் உள்ளது. இறங்கும் வழியும், ஏறும் வழியும் அகலமாக இருப்பதால் பயணிகள் விரைவாக ஏறுவதற்கும் இறங்குவதற்கும் வசதியாக இருக்கிறது. இரவில் அதிக வெளிச்சத்திற்காக பேருந்தினுள் குழல் விளக்குகள் அமைக்கப்பட்டிருக்க, படிக்கட்டுகள் அருகில் இருக்கும் விளக்குகள், பயணிகள் படிகளைப் பார்த்து ஏறவும், இறங்கவும் வசதியாக இருக்கும்.

பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு வசதி அளிப்பதற்காகவும், பயணிகளின் எண்ணிக்கை மிகவும் வேகமாக அதிகமாகிவரும் இடங்களுக்கு அதிக தடங்களை ஏற்படுத்துவதற்காகவும், வில்லிவாக்கம், திருவொற்றியூர், திருவேற்காடு, சிம்சன் (பெரியார் பாலம்), திருவான்மியூர், பூவிருந்தமல்லி, அரும்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் ஆகிய எட்டு இடங்களில் புதிய பேருந்து நிலையங்கள் கட்டப்பட விருக்கின்றன.

இப்பேருந்துகளில் தினமும் பயணம் செய்யும் 20 லட்சம் மக்களை மழை, வெய்யில், இவற்றினின்று பாதுகாக்கவே 400 புதிய பயணிகள் நிழற்குடைகள் சென்னை முழுவதும் கட்டப்பட்டு வருகின்றன. தவிர, விரைவில் பூவிருந்தமல்லி, பெரம்பூர், பேஸின் பிரிட்ஜ் ஆகிய மூன்று இடங்களிலும் தலா 100 பேருந்துகளைப் பராமரிக்கும் வகையில் புதிய பணிமனைகள் கட்டப்படவிருக்கின்றன.

இப்புதிய திட்டத்தால் உங்கள் பயணம் இனி வசதியாகவும் விரைவாகவும் இருக்குமென நம்புகிறோம். ஏனெனில் வசதியான பேருந்துப் பயணமே சென்னை நகரில் சிறப்பாக வாழ்வதற்கு ஓர் வழியாகும் என்று நம்புகிறோம்.

# பல்லவனின் மகத்தான முன்னேற்றம்

## இனி உங்கள் பேருந்துப் பயணங்கள் மிக வசதியாக இருக்கும்




பல்லவன் போக்கு வரத்துக் கழகம்,
"போக்குவரத்து இல்லம்"
அண்ணா சாலை, சென்னை 600 002.

# குடிநீர் வடிகால் வாரியப் பணிகள்

கிராமப்புறக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்குதல், என்ற திட்டத்தின் அடிப்படையில், தமிழ் நாட்டிலுள்ள கிராமக் குடியிருப்புக்கள் ஆறு வகையாகப் பிரிவு செய்யப்பட்டன. உடனடியாக 5794 கிராமங்களில் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வது என்று அரசு முடிவு செய்தது. இவை முற்றிலும் குடிநீர் வசதியே இல்லாத கிராமங்கள், அல்லது குடிப்பதற்குத் தகுதியான நீர் இல்லாத கிராமங்கள். இந்தக் கிராமங்களின் மொத்த மக்கள் தொகை 23 இலட்சத்து, 66 ஆயிரத்து 175. இப் பகுதிகளில் குடிநீர்ப் பற்றுக்குறையைப் போக்குவதற்குப் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு 1-7-'77 முதல் செயல்வடிவம் கொடுக்கப்பட்டு வருகின்றன.

முழுமையான பொறியியல் ஆய்வுக்குப்பின், 1329-கிராமங்களில் தனித்திட்டமாக அல்லது கூட்டுத் திட்டமாக, குடிநீர் வழங்குதல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் பயனடையும் மக்கள் தொகை 4,80,792. இதுவல்லாமல், வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் குறைந்தபட்சத் தேவையைப் பூர்த்தி செய்தல் என்ற அடிப்படையில், 1205 கிராமங்களில் 9,80,381 மக்கள் பயன் பெறும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

மேலும் 1411-கிராமங்களில், 7,95,000 பேர் பயன் பெறும் வகையில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதித் திட்டங்கள் பூர்த்தியடைந்து வருகின்றன. இன்னும் 2540 கிராமங்களில் 9,11,886 பேருக்குக் குடிநீர் வழங்கும் பல்வேறு திட்டங்கள் ஆய்வு செய்து, திட்டமிடல் முடிந்து செயல்பாட்டில் உள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் மட்டும் 45 குடியிருப்புக்களில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதித் திட்டங்கள், பல்வேறு கட்டங்களில் பூர்த்தியாகி வருகின்றன. இதனால் 19 ஆயிரத்து 839 பேர் பயன் பெறுவர்.

மேற்கூறிய திட்டங்களுக்கு, இதுவரை ரூ. 5 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது.

விஞ்ஞான முறையில் குடிநீரைச் சோதித்தறிதல், பின்னர் செயல்படுத்துதல் என்ற வகையிலான திட்டங்களின் இன்னொரு நேர்த்தியான அம்சம். இனி வறட்சிக்காலத்திலும் குடிநீர் கிடைக்கும்படியான நிரந்தர நிவாரணத்தை அளிக்கிறது. நிரந்தர நிவாரணத்தை வழங்கும் சிறப்புத் திட்டங்களை, பொருட் செலவைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல் அரசு செயற்படுத்தி வருகிறது.

ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் பயன்கள் சிதறிவிடாமல், பாதுகாக்கிற பணியையும் அரசு கொண்டிருக்கிறது. கைப்பம்புகளைப் பாதுகாக்கும் பணி, 'யூனிசெப்' என்ற உலக அமைப்பின் உதவியுடன், செய்யப்பட்டு வருகின்றது. செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில், 3,000 கைப்பம்புகளைப் பாதுகாக்கும் பணியை, 1-4-78லிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஏற்றுக் கொண்டுள்ளது. பழுதடைந்த கைப்பம்புகள் முறையாகப் பழுது பார்க்கப்பட்டு, எப்போதும் பயன்பாட்டில் இருக்கும் வகையில் வைக்கப்பட்டுள்ளன.

ஐயாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய 740 நகரங்கள், தமிழகத்தில் உள்ளன. சென்னை, மதுரை ஆகிய இரு மாநகராட்சிகள், 97 நகரவைகள், 8 நகரியங்கள், 13 பேரூராட்சி நகரியங்கள், 620 நகரப் பஞ்சாயத்துக்கள் இதில் அடங்கும். இந்த 740 நகரங்களின் மொத்த மக்கள் தொகை ஒரு கோடியே 55 இலட்சம்.

இதில் 740 நகரங்களில், இரு மாநகராட்சிகள், 88 நகரவைகள், 5 நகரியங்கள், 8 பேரூராட்சி நகரியங்கள், 101 நகரப் பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றில் குடிநீர் வசதி செய்யப்பட்டிருக்கிறது. பயன் பெறுவோர் எண்ணிக்கை 105 இலட்சம். இது மொத்த நகர மக்கள் தொகையில் 68 விழுக்காடு ஆகும்.

புதிய குடிநீர் வழங்கு திட்டங்கள், 50 நகரங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 138 நகரங்களில் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள கழிவுநீர்த் திட்டங்களினால் மொத்த நகரவாழ் மக்கள் தொகையில் 25 சதவிகிதமக்களே பயனடைந்துள்ளனர். இத் திட்டம் 12 நகரங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஏழு நகரங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது; மேலும் 24 நகரங்களில் நிறைவேற்றுவதற்கான ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

ஜூலை 1977-லிருந்து, நகர்ப்புற குடிநீர்த் திட்டத்திற்காக அரசு வழங்கிய தொகை ரூபாய் 302.45 இலட்சம்; இதில் ரூ. 274.56 இலட்சம் செலவிலான 13 குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன; ரூ. 142.82 இலட்சம் செலவிலான இரண்டு பெரிய கழிவுநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

1977-78-ஆம் ஆண்டுக்கான, திருத்தப்பட்ட புதிய மதிப்பீட்டுத் திட்டத்தில், நகர்ப்புற குடிநீர், வடிகால் திட்டத்திற்காக ரூ. 849.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ. 518 இலட்சம் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்தும், ரூ. 307.17 இலட்சம் தமிழக அரசிடமிருந்தும் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, ரூ. 10.38 இலட்சம் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டது. பழனி, திருவாரூர், லப்பைக் குடிக்காடு ஆகிய நகரங்களில் உள்ள உயர்ந்த கழிப்பிடங்கள், சுகாதாரக் கழிப்பிடங்களாக மாற்றுதல் என்ற 'முன்னோடி கழிவுநீர்த் திட்டங்களுக்காக' பயன்படுத்தப்படும். உள்ளாட்சி நிறுவனங்களிலிருந்து 1977-78ஆம் ஆண்டுக்காகப் பெறப்பட்ட ரூ. 13.80 இலட்சம் இத்திட்டங்களுக்காகப் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 1977-78ஆம் ஆண்டுகளுக்கு, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூ. 518 இலட்சமும் தமிழக அரசு ரூ. 251.907 இலட்சமும் குடிநீர் வடிகால் திட்டங்களுக்கு வழங்கியுள்ளன. மேலும் பழனி, திருவாரூர், லப்பைக்குடிக்காடு ஆகிய மூன்று நகரங்களிலும் 'முன்னோடி கழிவுநீர்த் திட்ட' நிறைவேற்றத்துக்காக, ரூ. 31.62 இலட்சம் செலவிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



# நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை!

'நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை'

அருமை பெருமைக்குரிய கைத்தறித் தொழில், கூட்டுறவு மூலம் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகப் பெற்றுவரும் ஏற்றம் அளவிடற்கரியதாகும்.

1976-77 ஆம் ஆண்டு வரை சுமார் 1.50 இலட்சம் நெசவாளர்களைக் கொண்டு 756 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ் நாட்டில் இயங்கி வந்தன. ஆண்டொன்றுக்கு, சுமார் ஆறுயிரத்துக்கும் குறைவான தனியார் துறை நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்பட்டு வந்தனர்.

1-7-77-க்குப் பின் தமிழ்நாட்டில் 81 புது நெசவாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டு தனியார் துறையிலிருந்த 22,489 நெசவாளர்களுக்கு இப்புதுச் சங்கங்கள் மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது தமிழ் நாட்டில் 946 கைத்தறி நெசவாளர் சங்கங்கள் 2.07 இலட்சம் உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன.

இதுவரை தனியார் துறையில் செயல்படும் நெசவாளர்களுக்கென எவ்விதத் திட்டமும் செயல்படுத்தப்படவில்லை. தற்பொழுது இவ்வகை நெசவாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் இதர வசதிகளும் செய்து கொடுக்க மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட திட்டப்படி கீழ்க் கண்ட தீவிர கைத்தறி அபிவிருத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டுச் செயல்படத் துவங்கியுள்ளன.

| | இயங்கும் தறிகள் |
|---|---|
| குறிஞ்சிப்பாடி கைத்தறி ஏற்றுமதி உற்பத்தி நிலையம் | 400 |
| சேலம் தீவிர கைத்தறி அபிவிருத்தி நிலையம் | 300 |
| மதுரை கூட்டுறவு தீவிர கைத்தறி அபிவிருத்தி நிலையம் | 350 |

செங்கை மாவட்டம் பொதட்டூர்பேட்டைப் பகுதியில் காஞ்சீபுரம் கைத்தறித் தீவிர அபிவிருத்தி நிலையத்தின் கிளை ஒன்று சமீபத்தில் திறக்கப்பட்டு 300 தனியார் துறை நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகிறது.

கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு ரிசர்வ் வங்கியினர் மூலதனக் கடன் வழங்கும் திட்டப்படி ஒரு சங்கத்தின் முந்தைய ஆண்டு உற்பத்தி மதிப்பில் 25 சதவிகித அளவு அடுத்த ஆண்டு கடன் வழங்கப்பட்டு வந்தது. இந்தக் கடன் அளவு, சங்கங்களின் முழு உற்பத்திக்குப் போதவில்லை என்றும் அளவை உயர்த்த வேண்டுமென்றும் எல்லா நெசவாளர் சங்கங்களும் பல ஆண்டுகளாகக் கோரி வந்தன. ஆனல் ரிசர்வ் வங்கி அக்கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. மத்திய அரசின் கைத்தறி வளர்ச்சி ஆணையர் மூலம் தமிழக அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளின் பலனக 77-78-ம் ஆண்டு முதல் இந்தக் கடனளவு முந்தைய ஆண்டு உற்பத்தியில் 33-33 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. இதனல் 1976-77-ஆம் ஆண்டில் ரூ. 15.57 கோடி கடன் பெற்ற தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 24.29 கோடி கடன் வசதி பெற்றன.

சென்ற ஆண்டுகளில் ரிசர்வ் வங்கியினரிடமிருந்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 8.2 சதம் வட்டி விகிதத்தில் மூலதனக் கடன் வசதி பெற்று வந்தன. வட்டி விகிதத்தைக் குறைக்க வேண்டும் என்று அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகளின் பலனக இந்த வட்டி விகிதம் 1-4-1978 முதல் 6.5 சதவிகிதம் ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனையைப் பெருக்குவதற்கு முந்தைய ஆண்டுகளில் தீபாவளி, ரம்ஜான், கிறிஸ்துமஸ், பொங்கல், அகில இந்திய கைத்தறி வார விழா ஆகிய காலங்களில் அரசு சிறப்பு விற்பனைத் தள்ளுபடி அளித்து வந்தது. சென்ற ஆண்டு மேலே கண்ட காலங்கள் தவிர தந்தை பெரியார், அறிஞர் அண்ணு அவர்கள் பிறந்த தின விழாவையொட்டி 3-9-'77 முதல் 17-9-'77 வரை தமிழக அரசு கைத்தறித் துணி விற்பனைக்கு 10 சதவிகிதம் தள்ளுபடி மானியம் வழங்கியது. அந்த 15 தினங்களில் கூட்டுறவுத் துறையில் ரூ. 3.64 கோடி பெறுமானமுள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிவாரணம் அளித்தது குறிப்பிடத்தக்கது.

கைத்தறித் துணியின் தரத்தையும் கவர்ச்சியையும் உயர்த்துவதில் முந்தைய ஆண்டுகளில் எவ்வித கவனமும் செலுத்தப்படவில்லை. தற்பொழுது இவ்வகையில் முழுக்கவனம் செலுத்தப்பட்டு பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தரமான கெட்டிச்சாயமிட்டு துணியின் கவர்ச்சியைப் பெருக்க, தமிழ்நாட்டில் சேலம், கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி

ஆகிய ஐந்து மாவட்டங்களில் ரூ. 60 இலட்சம் செலவில் ஐந்து பெரிய நவீன சாயச்சாலைகள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கென தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 48 இலட்சம் கடன் வசதி பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஈரோட்டில் உள்ள கூட்டுறவு துணி பதனிடும் ஆலையும் ரூ. 22 இலட்ச செலவில் விஸ்தரிப்பு வேலையைத் தொடங்கியுள்ளது. இதில் ஒரு துணி அச்சிடும் பிரிவும் துவக்கப்பட்டுள்ளது.

புது டிசைன்கள் உருவாக்குவதற்கும், சங்கங்களில் அவைகளை உற்பத்தி செய்வதில் தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவதற்கும் மதுரையில் ஒரு புது 'வடிவமைப்பு நிலையம்' (Design Cum Service Centre) ரூ. 3.5 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. இதுபோன்ற நிலையங்கள் சேலம் கோவை, மற்றும் இதர இடங்களிலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக, மெருகூட்டுதல், முன்கூட்டிச் சுருக்குதல் போன்ற பதனிடப்பட்ட துணிகளுக்கு மக்களிடையே பெருமளவு வரவேற்பு இருந்த போதிலும் இதுவரை கைத்தறித் துணிகள் இவ்வாறு பதனிடப்பட்டதில்லை. பதனிடப்பட்ட கைத்தறித் துணிகளுக்கு ஆலைத் துணிகள் அளவுக்கு மத்திய அரசு சுங்க வரி விதித்து வந்தது இதற்கு முக்கிய காரணம். எனவே, தமிழக அரசு கைத்தறி துணிகள் பதனிடுவதற்கு சுங்க வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் வற்புறுத்தியதன் பயனாக கூட்டுறவு பதனிடும் ஆலைகள் அல்லது அரசு சம்பந்தப்பட்ட ஆலைகளில் பதனிடப்படும் கைத்தறித் துணிகளுக்கு முழு வரி விலக்கு அளித்துள்ளது. இதனால் தற்பொழுது கைத்தறித் துணிகள் தமிழ்நாடு கூட்டுறவு துணி பதனிடும் ஆலையின் மூலம் பதனிடப்பட்டு மக்கள் விரும்பக் கூடிய வகையில் விற்பனை செய்யப்படுகின்றன.

கூட்டுறவுத் துறையின் மூலம் இதுவரை வெளிநாடுகளுக்கு கைத்தறித்துணி ஏற்றுமதி நடைபெறவில்லை. சென்ற ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் ''கோ—ஆப்டெக்ஸ்'' நிறுவனமும் 'கைத்தறி நிதி வர்த்தக கார்ப்பரேஷனும்' அமெரிக்கா, இங்கிலாந்து பிரான்ஸ், சிங்கப்பூர், ஜப்பான், மலேசியா போன்ற நாடுகளுக்கு இரு தூதுக் குழுக்களை அனுப்பி, ஒரு கோடி ரூபாய் பெறுமான டவல்கள், லுங்கிகள், சட்டைத் துணி ரகங்கள் போன்ற கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்ய ஆர்டர் பெற்று வந்தன. இந்த ஆர்டர்கள் தற்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அடுத்த இரண்டு ஆண்டுகளில் இந்த இரு நிறுவனங்களும் ரூ. 5 கோடி அளவிற்கு கைத்தறித் துணி ஏற்றுமதியை உயர்த்த நடவடிக்கை எடுத்து வருகின்றன.

பல ஆண்டுகளாக உண்மையான கைத்தறி நெசவாளர்களுக்கு செயற்கைப் பட்டு நூல் நியாய விலையில் கிடைக்காமலிருந்தது. இதுபற்றி மீண்டும் தமிழக அரசு, புது டில்லியிலுள்ள கைத்தறி வளர்ச்சி ஆணையர் அவர்களுடனும், மத்திய அரசுடனும் தொடர்பு கொண்டு வற்புறுத்தியதன் விளைவாக சுய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழ் நாட்டுக்குகென ஒதுக்கப்படும் செயற்கைப்பட்டு நூல் விநியோகம் கைத்தறி இயக்குநருக்கு மாற்றப்பட்டுள்ளது. தற்பொழுது புதிய அணுகு முறையின் காரணமாக முன்பு ஏற்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகள் தவிர்க்கப்பட்டு, நெசவாளர்களுக்கு, செயற்கைப் பட்டு விநியோகம் சீரான முறையில் செய்யப்பட்டு வருகிறது.

இதுவரை கைத்தறி நெசவாளர்களின் சுகாதாரத்தைப் பற்றியோ, வேலைப்பாதுகாப்பு மற்றைய வசதிகள் பற்றியோ, எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதில்லை.

இவ்வகையில் தற்பொழுது தமிழக அரசு தீவிர சிந்தனை செய்து கீழ்க்கண்ட திட்டங்களைத் தீட்டியுள்ளது. அவை விரைவில் செயல்படுத்தப்பட உள்ளன.

* சுகாதாரமற்ற சூழ்நிலையில் இரவு பகல் பாராமல் கைத்தறி நெசவாளர்கள் தங்கள் தொழிலைச் செய்வதால் நெசவாளர்கள் குழுமியுள்ள பகுதிகளுக்குச் சென்று ''எக்ஸ்ரே'' மூலம் சோதனை செய்து அவர்களுக்குத் தக்க சிகிச்சை அளித்து சேலம் மாவட்டத்தில் ஒன்றும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒன்றும், மதுரை, இராமநாதபுரம் ஆகிய இரு மாவட்டங்களுக்கு ஒன்றும் ஆக மூன்று நடமாடும் மருத்துவ சோதனை நிலையங்களை ரூ. 25 இலட்சம் செலவில் அமைக்க ஒரு திட்டம் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட உள்ளது.

* பல ஆண்டுகளாக, தங்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்க நெசவாளர்கள் வற்புறுத்தி வந்த போதிலும் இதற்கென ஒரு திட்டம் வகுக்கப்படவில்லை. நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க கிராம வீட்டு வசதித் திட்டத்துடன் இணைத்து ஒரு திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 78-79-ம் ஆண்டில் நெசவாளர்களுக்கு சுமார் 2,000 வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.



* பொதுவாக, பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு அவர்களுடைய ஊதியம், வேலை உத்தரவாதம், போனஸ் முதலியவற்றிற்குச் சட்டப் பாதுகாப்பு உள்ளதுபோல் கைத்தறி நெசவாளர்களுக்கு எவ்வித சட்டப் பாதுகாப்பும் இல்லை. இதுவரை இதற்காக தமிழக அரசால் அமைக்கப்பட்ட குழு கொடுத்துள்ள பரிந்துரைகளை அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டு நெசவாளர்களுக்குத் தக்க சட்டப் பாதுகாப்பு அளிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

தனியார் துறையில் மாஸ்டர் வீவர்கள் கீழ் வேலை செய்யும் நெசவாளர்களுக்கு நூல் விலையேற்றம், துணித்தேக்கம் ஆகிய காரணங்களைக் காட்டி வேலைக் குறைப்பு செய்தார்கள் என்பதற்



காக கரூர், அருப்புக்கோட்டை, பரமக்குடி ஆகிய இடங்களில் நெசவாளர்கள் கிளர்ச்சி, போராட்டங்கள் ஆகியவற்றில் ஈடுபட்டனர். கரூர் போராட்டம் சம்பந்தப்பட்ட வரையில் இரு தரப்பாரும் மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடத்தி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. மற்ற போராட்டங்கள் மாண்புமிகு கைத்தறி அமைச்சர், கைத்தறித் துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சியாளர் ஆகியோர் சம்மந்தப் பட்டவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன.

கடந்த நவம்பர் மாதம் தமிழ் நாட்டில் ஏற்பட்ட பெரும் மழை புயல் காரணமாக தஞ்சாவூர், திருச்சி, தென் ஆர்க்காடு, மதுரை, கோவை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் சுமார் 5,000 கைத்தறி நெசவாளர்கள் தங்கள் வீடு மற்றும் உடைமைகளை இழந்து பாதிப்புக்கு உள்ளாயினர்.

அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் தமிழக அரசு ரூ. 40.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. வீடு, தறி, இழந்த நெசவாளர்களுக்கு வீட்டுக்கு ரூ. 500-ம் (ரூபாய் 300 கடன், ரூ. 200 மானியம்) தறி அமைக்க ரூ. 125 மானியமும் வழங்கப்பட்டது. புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சொந்தத் தறியில்லாத நெசவாளர்களுக்கென 10 புதிய தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து 1,000 நெசவாளர்களுக்கு வேலை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



தமிழ்நாடு அரசின் உடனடி முயற்சியால் 1,200 பேருக்கு, நலிந்த ஆலையில் உள்ளோருக்கு மீண்டும் வேலை வாய்ப்புக் கிடைத்தது.

'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்றார் இராமலிங்க அடிகள். அதே போல், நெசவுத் தொழிலுக்கு, இடையில் ஏற்பட்ட நலிவினாலே வாடிய தொழிலாளர்க்காக வருந்திடும் இன்றைய தமிழக அரசு அவர்களின் வாட்டம் போக்கிட மேற்கண்ட வகையிலெல்லாம் செயல்படுத்தி வரும் திட்டங்கள் அளவிடற்கரியதாகும்!



## அகதிகள் அவலம் போக்கிட!.

பர்மா, ஸ்ரீலங்கா, வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் குடிபெயர்வோரை குடியமர்த்திடும் நோக்கோடு பணியாற்றி வருகிறது மறுவாழ்வுத்துறை.

தமிழகத்தில் இப்போதைய அரசு பதவியேற்றுக் கொண்ட பிறகு ஸ்ரீலங்காவிலிருந்து 7,815 அகதிகள் குடும்பம் தாயகம் குடிபெயர்ந்தன. இவர்கள் தேயிலைத் தோட்டங்கள், சின்கோனா தோட்டங்கள், வேளாண்மைத் திட்டங்கள், மாநில பண்ணைக் கழகத் திட்டங்கள், நூற்பாலைகள் ஆகிய இடங்களில் வேலைக்கு அமர்த்தப் பட்டனர். வியாபாரம் செய்வதற்காக சிலருக்கு கடன்களும் வழங்கப் பட்டன.

பர்மாவிலிருந்து வந்த 936 குடும்பங்களுக்கும் வியட்நாமிலிருந்து வந்த 26 குடும்பங்களுக்குச் சிறு வியாபாரங்களுக்கான கடன்கள் வழங்கப்பட்டன.

தாயகம் குடிபெயர்ந்தவுடன், உடனடியான செலவுகள், போக்குவரத்துச் செலவு, உணவு பங்கீடு முதலியவைகளுக்காக 1977-78ஆம் ஆண்டு ஜூலை முதல் இதுவரை ரூ.31,26,511 செலவிடப்பட்டுள்ளது. அவர்களை நிரந்தரமாக குடியமர்த்துவதற்காக ரூபாய் 3,84,33,378 செலவிடப்பட்டது.

கீழ்க்கண்ட புதிய திட்டங்களை கடந்த ஓராண்டில் நமது அரசு நிறைவேற்றியுள்ளது :—

* ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்புவோர் மண்டபம் முகாமில் தங்கும் பொழுது அவர்களுடைய சுகாதாரப் பணிகளுக்காக பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டன. குடிநீர் வடிகால் வசதிகளுக்காக மொத்தம் ரூ. 88,000 செலவிடப்பட்டுள்ளது.

* நெய்வேலியிலுள்ள மாநில பண்ணைக் கழகத்தின் திட்டத்தில் பணியாற்றும் ஸ்ரீலங்கா அகதிகள் நல்வாழ்வுப் பணிகளுக்காக ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டது.

* அகதிகள் மறுவாழ்வு வங்கியின் உதவியுடன் ஸ்ரீலங்காவிலிருந்து குடிபெயர்ந்த அகதிகள் குடும்பத்தினருக்கு சலுகை விலையில் ஒரு கிலோ அரிசி 57 காசுகள் என்ற விலையில் வழங்கப்பட்டது.

* உடனடியாக நிரந்தரக் குடியிருப்பு வசதி அளிக்க முடியாத அகதிகள் குடும்பங்களுக்கு — அவர்களுக்கு நிரந்தரக் குடியிருப்புகள் வழங்கும்வரை தங்கியிருக்க —குடிசைகள் போட்டுக் கொள்ள ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ரூ 250 வழங்கப்பட்டது.

* இலங்கையிலிருந்து குடிபெயர்வோருக்காக நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டம் அமைக்க 1,500 ஏக்கர் ஒதுக்கப் பட்டது.

* அகதிகளின் குழந்தைகளுக்கு கல்விச்சலுகைகள் வழங்க, அகதிகள் வருமானம் ரூ. 250- க்குள்ளாக இருக்க வேண்டும் என்று உச்ச வரம்பு விதிக்கப்பட்டுள்ளது, அது இப்பொழுது ரூ. 400-க்கு உயர்த்தப்பட்டுள்ளது.

ஆருவது திட்டக் காலத்தில் 1-4-1978 முதல் 31-3-83 முடிய ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவிற்கு குடிபெயர்வோரின் குடும்பங்களின் எண்ணிக்கை 64,000 ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1,600 குடும்பங்களுக்கு, கிராமக் கைத்தொழில்களிலும், 1,400 குடும்பங்களுக்கு மாநில பண்ணைக் கழகத் திட்டங்களிலும், 2,750 குடும்பங்களுக்கு கூடலூர் தேயிலைத் தோட்டங்களிலும், 100 குடும்பங்களுக்கு மலர்ச்செடி தோட்டப்பணிகளிலும், 2,000 குடும்பங்களுக்கு, டிட்கோ போன்ற அமைப்புகளின் உதவியுடன் செயல்படும் தொழிற்கூடங்களிலும் வேலைவாய்ப்பு அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அகதிகள் மறுவாழ்வுத் திட்டங்களை முனைப்புடன் விரைந்து செயல்படுத்துவதற்காக மாநில அளவில் ஆலோசனைக்குழு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

# வருவாய்த்துறை வழங்கியுள்ள சலுகைகள்



கடந்த ஓராண்டில் மாவட்ட நிருவாகத்தில் பல்வேறு சீரமைப்புப் பணிகள் நடைபெற்றுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமேசுவரம் பிர்க்கா, 1977 அக்டோபர் 8ஆம் நாளிலிருந்து துணை வட்டமாக ( Sub-Taluk ) அமைக்கப் பட்டது. இராமேசுவரம் தீவில் வாழும் மக்களுக்கு பல்வேறு வகையில் இது நன்மை பயக்கும்.

துணை வட்டங்களாக உள்ளவைகளை வட்டங்களாக உயர்த்த வேண்டும் என்ற கொள்கையின்படி 43 துணை வட்டங்களில் 11 துணை வட்டங்கள் 1977 ஜூலை முதல் நாளுக்கு முன்னர் வட்டங்களாக மாற்றப்பட்டன.

1977 அக்டோபர் 15ஆம் நாள் முதல் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர், சேலம் மாவட்டத்திலுள்ள ஏர்க்காடு, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள விருதுநகர் ஆகியவை துணைவட்டங்களாக உயர்த்தப்பட்டன. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள காட்டுமன்னார்கோவில் துணை வட்டத்தை வட்டமாக உயர்த்த தீர்மானிக்கப்பட்டது.

1978 மே முதல் நாள் முதல் நீலகிரி மாவட்டத்திலுள்ள கூனூர் கோத்தகிரி என்று இரண்டு வட்டங்களாகப் பிரிக்கப்பட்டன.

கன்னியாகுமரி மாவட்டம் முழுமைக்கும் பத்மநாபபுரம் வருவாய்க் கோட்டம் ஒன்று மட்டுமே இருந்தது. 1978 ஏப்ரல் 17-ம் தேதி முதல் பத்மநாபபுரம், நாகர்கோயில் என்று இரு வருவாய்க் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.



**வறட்சி நிவாரணப்பணிகள்:**

தமிழ்நாட்டில் 1977-78ஆம் ஆண்டில் வறட்சிநிலை சென்னை, செங்கல்பட்டு, நீலகிரி கன்னியாகுமரி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் சில இடங்களில் இருந்ததைத் தவிர வேறு எங்குமில்லை.

அந்தப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் பெருமளவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. குடிநீர்த் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. 1977 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் திங்களில் பெய்த பெருமழையினால் வறட்சிநிலை பிற மாவட்டங்களில் தொடரவில்லை.



கடந்த ஓராண்டில் தமிழகத்தில் இப்போதைய அரசு பதவி ஏற்ற பின்னர் ஆற்றியுள்ள பணிகள் பற்றிய விவரம் வருமாறு:—

**குடிநீர் வழங்கும் திட்டங்கள்**

| | முடிக்கப்பட்ட பணிகள் | செலவு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| துளைக்கிணறுகள் | 960 | 96.00 |
| ஆழமாக்கப்பட்ட கிணறுகள் | 1,153 | 22.69 |
| ஆழமாக்கப்பட்ட நீர்நிலைகள் | 98 | 1.80 |

**அந்த வட்டார மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்த திட்டங்களின் செலவு விவரம் :**

| | செலவு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| பாசனத் திட்டங்கள் | 300.875 |
| சாலை வேலைகள் | 32.19 |
| மண்வள பாதுகாப்புப் பணிகள் | 47.70 |
| காடு வளர்ப்புப் பணிகள் | 1.562 |

**குடிநீர் வழங்கும் திட்டங்கள்**
**விவசாயிகளுக்குச் சலுகைகள் :**

1978 ஏப்ரல் திங்களில் விவசாயிகள் சங்கத்தினர் வைத்த கோரிக்கைகளை ஆழ்ந்து பரிசீலித்து உழவர் பெருமக்களுக்கு மன நிறைவு அளிக்கும் வகையில் சக்தி மீறிய சில சலுகைகளை 10-5-1977 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அதன் விவரம் வருமாறு:—

**மின்கட்டணம் குறைப்பு :**

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 8 இலட்சம் பம்பு செட்டுகள் மின்சார இணைப்பைப் பெற்றுள்ளன. விவசாயத்திற்குப் பயன்படும் மின்சாரக் கட்டணத்தை யூனிட்டுக்கு 12 காசிலிருந்து 16 காசாக உயர்த்தி 1975-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அப்போது இருந்த அரசு ஆணையிட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, சிறு விவசாயிகளுக்கு யூனிட்டுக்கு 14 காசாக 1-7-1977 முதல் குறைத்து ஆணையிட்டது. இப்போது அரசு மேலும் ஒரு சலுகை அளிக்க முடிவு செய்துள்ளது. பெரிய விவசாயிகளுக்கு யூனிட்டுக்கு 14 காசாகவும், சிறு விவசாயிகளுக்கு யூனிட்டுக்கு 12 காசாகவும் மின் கட்டணத்தைக் குறைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டுக்கு ஆறு கோடி ரூபாய் கூடுதல் நட்டம் ஏற்படும். இந்தச் சலுகை 1-6-'78 முதல் அமலுக்கு வந்துள்ளது.

விவசாயிகளுக்குப் பயன்படும் பம்பு செட்டுகளைப் பொறுத்தவரையில் மீட்டர் வாடகை இப்போது மாதம் 5 ரூபாய் என்று நிர்ணயிக்கப் பட்டுள்ளதைக் குறைத்து, மாதம் 4 ரூபாயாக நிர்ணயிக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்தச் சலுகையும்



1-6-1978 முதற் கொண்டு அமலுக்கு வந்தது. இதன் விளைவாக மின்சார வாரியத்திற்கு ஆண்டுக்கு மேலும் 1 கோடி ரூபாய் நட்டம் ஏற்படும்.

மின் கட்டணப் பாக்கியைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாதமும் பாக்கியில் ஒரு மாதத் தவணையையும் அந்த மாதத்திற்குரிய கட்டணத்தையும் செலுத்த விவசாயிகளை அனுமதிக்கும் சலுகையை அரசு அளிக்க முடிவு செய்துள்ளது.

**கூட்டுறவுக் கடன்கள் :**

1977-'78 ஆம் ஆண்டில் குறுகிய காலப் பயிர்க் கடன்களாக விவசாயிகளுக்கு வழங்கிய 121 கோடி ரூபாய்க்கு மாறாக 1978-79 ஆம் ஆண்டில் 140 கோடி ரூபாய் கடன்கள் வழங்க அரசு




முடிவு செய்துள்ளது. சென்ற ஆண்டு வழங்கப்பட்ட கடன்களை வசூலித்து, ரிசர்வ் வங்கி ஏற்றுக் கொள்ளும் குறைந்த பட்ச அளவுக்காகிலும், 30-6-78-க்கு முன் செலுத்த வேண்டிய கடன்களைச் செலுத்தாவிட்டால் ரிசர்வ் வங்கியின் நிதியுதவி கிடைக்காது. விவசாயிகளுக்குக் கூடுதலாக நிதியுதவி ஒதுக்கச் செய்யும் அரசாங்கத்தின் திட்டம் நிறைவேற்ற இயலாமல் போய் விடும். இதனால் விவசாயிகளுக்குப் பெருத்த நிதிப் பாதிப்பு ஏற்படும். இந்த நிலையைத் தடுப்பதற்காக இப்போது பெற்றுள்ள குறுகிய காலக் கடன்களை விவசாயிகள் செலுத்த வேண்டுமென்று அரசு கேட்டுக் கொள்கிறது. இருந்த போதிலும் இந்த ஆண்டு தமிழகத்தின் எந்தப் பகுதியிலும் கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதற்காக சிறு விவசாயிகளின் மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்று அறிவிக்கப் பட்டது.



1977-'78 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடன்களாக வழங்கப்பட்ட 121 கோடி ரூபாயில் 12 கோடி ரூபாய் அளவில் உள்ள கடன்கள் மத்திய காலக் கடன்களாக ஏற்கெனவே மாற்றப்பட்டுள்ளன. மேலும் 16 கோடி ரூபாய் அளவு உள்ள குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்ற ரிசர்வ் வங்கிக்குப் பரிந்துரை செய்யப் பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டுள்ள கடன்களைப் பொறுத்த வரையில் தவணைகளில் செலுத்தும் காலத்தை 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே 4.30 கோடி ரூபாய் அளவுள்ள கடன்களுக்கு கால நீட்டிப்பு அளிக்கப்பட்டு விட்டது. மேலும் 14 கோடி ரூபாய் அளவிலே உள்ள கடன்களுக்குக் கால நீட்டிப்புச்செய்ய ரிசர்வ் வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பயிர்க் கடன்களுக்கான வட்டி விகிதம் 12.6 சதவிகிதத்தில் இருந்தது, 12 சதவிகிதமாக அண்மையில் குறைக்கப்பட்டுள்ளது. உணவுப் பயிர் செய்யும் சிறு விவசாயிகளுக்கான கடன்களின் வட்டி விகிதம் 10.5 சத விகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. சிறு விவசாயிகளுக்கு மேலும் ஒரு சலுகை வழங்கும் நோக்கத்துடன் இந்த 10.5 சதவிகித வட்டி உணவுப் பயிர்களுக்கு மட்டும் பொருந்தும் என்ற நிலையினை மாற்றி, சிறு விவசாயிகளின் எல்லாப் பயிர்க் கடன்களுக்கும் பொருந்துமாறு இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

1971-ஆம் ஆண்டுக்குப் பிறகு நிலவள வங்கியிடமிருந்து கடன் பெற்று தோண்டப்பட்ட கிணறுகளுள் பொய்த்துப்போன கிணறுகளைப் பொறுத்த வரையில் கடனில் 75 சதவிகிதத்தை பத்தாயிரம் ரூபாய் வரம்புக்குட்பட்டு, தள்ளுபடி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. சிறு விவசாயிகளைப் பொறுத்த வரையில் இந்தப் பொய்த்துப்போன கிணறுகளுக்காக வாங்கிய கடனில் 90 சத விகிதம் வரை பத்தாயிரம் ரூபாய் வரம்புக்கு உட்பட்டுத் தள்ளுபடி செய்யப்படும். நில வள வங்கியிலிருந்து கடன் பெற்று பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டு, இன்னமும் மின் இணைப்புப் பெறாத கிணறுகளுக்கு நட்டத்தையும் பொருட்படுத்தாமல் உடனடியாக மின் இணைப்பை வழங்குமாறு அரசு மின் வாரியத்திற்கு ஆணையிட்டுள்ளது.

**அரசுக் கடன்கள் :**

புயலாலும் - வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரசு கடன்களைப் பொறுத்த வரையில். இந்த ஆண்டு 2 கோடி ரூபாய் அளவுக்குக் கடன் வசூல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மற்ற பகுதிகளைப் பொறுத்த வரையில் கடன் பாக்கித் தொகை முழுவதையும் வசூல் செய்ய வேண்டாம் என்றும், ஒரு தவணையை மட்டும் இந்தப் பசலியில் வசூல் செய்ய வேண்டும் என்றும் அரசு முடிவு செய்துள்ளது. சிறு விவசாயிகள் மீது அரசாங்கக் கடன்களை வசூலிக்க ஜப்தி நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட மாட்டாது என்றும் அரசு உறுதிகூற விரும்புகிறது.

சில பணப்பயிர்களுக்கு முதன் முறையாக வரிவிதித்துக் குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது சட்டம் பிறப்பிக்கப்பட்டது. 1386-ஆம் பசலிக்கு உரிய வரி வசூல் குடியரசுத் தலைவர் ஆட்சியில் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த அரசு பொறுப்பு ஏற்ற பின்பு, ஒத்தி வைக்கப்பட்ட அந்த வரி வசூலை முழுமையாகத் தள்ளுபடி செய்தது. மேலும் திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை ஆகியவற்றின் மீது ஏக்கர் ஒன்றுக்கு, பயிர் ஒன்றுக்கு விதிக்கப்பட்டு இருந்த வரி விகிதத்தை ரூபாய் 20லிருந்து 15 ஆக இந்த அரசு குறைத்தது. புகையிலை, மிளகாய், பாசன வசதியுடன் சாகுபடியாகும் பருத்தி, வேர்க்கடலை ஆகியவற்றின் மீது விதிக்கப்பட்ட வரியை முழுமையாக இந்த அரசு நீக்கியுள்ளது. இந்த வரி விதிப்பையும் ஆராய்ந்து பரிசீலனை செய்யுமாறு அரசு அமைத்துள்ள விவசாயிகள் உயர் மட்டக்குழு கேட்டுக்கொள்ளப்படும். இதற்கிடையில் இந்தப் பசலியில் பணப்பயிர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இந்த வரி வசூலிக்கப்பட மாட்டாது. இதன் விளைவாக மட்டும் இந்த ஆண்டில் தமிழக அரசுக்கு ஒரு கோடி ரூபாய் இழப்பு ஏற்படும்.

இவ்வாறு பல்வேறு சலுகைகளை அளித்து, சிக்கலான பிரச்சினைகளுக்குச் சீரான தீர்வு காண சாதகமான நிலையை நமது அரசு உருவாக்கியுள்ளது உழவர் பெருமக்களுக்கு மனநிறைவு அளிக்கும் மகத்தான பணியாகும்.

# கல்வி சிறந்த தமிழ்நாடு



'கல்வி சிறந்த தமிழ்நாடு' என்று, தமிழகத்தைப் பாராட்டிப் போற்றினர் கவியரசர் பாரதியார்.

கல்வியைச் செல்வமாக நம் முன்னோர்கள் மதித்துப் போற்றினர்.

''எண்ணும் எழுத்தும் இருகண் ஆகும்'' என இசைப் புலவர்கள் பாட்டுக் குரலில் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த உண்மைகளை எல்லாம் நன்கு உணர்ந்திருக்கும் தமிழக அரசு—கல்வித் துறையில் தனிக் கவனம் செலுத்தி வருகிறது; கல்வியை வளர்க்கும் திருத்தொண்டில் பேரார்வம் காட்டி வருகிறது; நாட்டில் அறிவாலயங்கள் பெருகிட — அரும்பணி ஆற்றி வருகிறது; நம்மரும் நாட்டில் கல்வி அனைவர்க்கும் கிடைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தைக் கடைப்பிடித்து, அதற்கான முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது.

**கல்வித் துறைக்கு அதிக ஒதுக்கீடு :**

தமிழ்நாட்டில் தற்போது 36,000 பள்ளிகள் உள்ளன. மொத்தம் 2.5 இலட்சம் ஆசிரியர்கள் இருக்கின்றனர். இந்தப் பள்ளிகளில் ஏறக்குறைய 85 இலட்சம் மாணவர்கள் பயில்கின்றனர். 1978-79ஆம் ஆண்டில் கல்விக்காக ரூ. 176 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. 1975-76ல் செலவிடப்பட்ட தொகை ரூ. 123 கோடிதான். இந்தத் தொகை, மாநிலத்தின் மொத்த செலவினத் தொகையான 727 கோடி ரூபாயில் 24 சதவீதம் ஆகும். 1960ஆம் ஆண்டிலிருந்து—கல்விக்காக ஒதுக்கப்பட்டு வந்த தொகை, எந்த வருடத்திலும் 22 சதவீதத்திற்கு மிகவில்லை. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர்தான் கல்விக்கெனச் செலவிடப்படும் தொகை 24 சதவீதமாகியது. எல்லா நிலைகளிலும் கல்வியின் வளர்ச்சிக்கு இந்த அரசு ஏராளமான நடவடிக்கைகளை எடுத்து வருவதுடன், குக்கிராமங்களில் உள்ள மக்களும் கல்விக் கனியைப் பெறுவதற்குரிய வழி வகைகளை வகுப்பதற்கு உறுதியளிக்கிறது.

**பள்ளிக் கல்வி :**

கல்வித் தரத்தை உயர்த்துதல் : 1977-78ஆம் ஆண்டில், 36 துவக்கப் பள்ளிகள், 44 உயர் துவக்கப் பள்ளிகள், 29 உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவை புதிதாகத் துவக்கப்பட்டுள்ளன. 6 வயதிலிருந்து 11 வயது வரை உள்ள மாணவர்கள் 2.19 இலட்சம் பேரும், 11 வயதிலிருந்து 19 வயது வரை உள்ள மாணவர்கள் 94 ஆயிரம் பேரும் 14 வயது முதல் 17 வயது வரை உள்ள மாணவர்கள் 30 ஆயிரம் பேரும், பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஆக, ஏறக்குறைய 85 இலட்சம் மாணவர்கள் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தற்பொழுது கல்வி பயில்கின்றனர். இந்த மாணவர்களுக்குக் கல்வி தரும் 2 இலட்சத்து 53 ஆயிரம் ஆசிரியர்களுள், 1 இலட்சத்து 56 ஆயிரம் பேர் ஆடவர்; 97 ஆயிரம் பேர் பெண்டிர். 1977-78ஆம் ஆண்டில்—ஏறக்குறைய 1,100 ஆசிரியர் பதவிகள் அனுமதிக்கப்பட்டன. தமிழாசிரியர் 200 பேரும், உடற்பயிற்சி ஆசிரியர் 200 பேரும் இந்தத் தொகையில் அடங்குவர்.

1978-79ல் 1,000 உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களையும், 200 தமிழாசிரியர்களையும், 200 உடற்பயிற்சி ஆசிரியர்களையும் நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1972-73 கல்வியாண்டிலிருந்து, பல நிலைகளில் அறிமுகம் செய்யப்பட்ட—திருத்தப்பட்ட கல்வித் திட்டம், மாணவர்களுக்கு மிகவும் பளுவாக உள்ளதென்று பல முனைகளிலிருந்தும் குற்றச்சாட்டுகள் இருந்து வந்தன. பல வருடங்களுக்கு முன்பிருந்தே இந்தக் குரல் தொடர்ந்து ஒலித்து வந்தாலும் — முந்தைய அரசு இக் குறைபாட்டைக் களைவதற்கு நிலையான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. ஆனால், இந்த அரசு—பொறுப்பேற்றுக் கொண்டவுடன், கல்வித் துறை நிபுணர்களைக் கலந்து, 1978-79ஆம் கல்வியாண்டில் எல்லா வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கும் உள்ள பாடங்களின் பளுவைக் (குறிப்பாகக் கணிதம்) குறைப்பதற்கு உடனடியாக ஆணை பிறப்பித்தது.

1977-78 கல்வி ஆண்டிலிருந்து துவக்கப் பள்ளியின் முதல் மூன்று (1 — 3) வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் தேர்ச்சி வழங்குவது என்றும் அவர்களை 'ஃபெயில்' ஆக்குவது கூடாது என்றும் முடிவெடுக்கப்பட்டது. மாணவர்களிடையே ஏற்படும் தொய்வு, இந்த நடவடிக்கையினால், ஓரளவு குறைக்கப்படுகிறது.

அறிவியல் கல்வியின் போதனையை அதிகரிக்கும் வகையில் ஆய்வுக் கூடம் அமைப்பதற்காக 1977-78 ஆம் ஆண்டில் பள்ளி ஒன்றினுக்கு ரூபாய் 55

ஆயிரம் வீதம் 50 உயர்நிலைப் பள்ளிகளுக்குப் பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 1978-79ஆம் ஆண்டில் 25 பள்ளிகள் இந்த வாய்ப்பைப் பெறுகின்றன. 1977-78ஆம் ஆண்டில் நடமாடும் அறிவியல் ஆய்வுக் கூட வாகனங்கள் 6 வாங்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக, கிராமப் புறங்களில் ஆய்வுக்கூடங்கள் இல்லாத உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் அறிவியல் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள 48 கல்வி மாவட்டங்களில் 42 மாவட்டங்களில், மாவட்டத்துக்கு ஒன்றாக நடமாடும் அறிவியல் கூடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மாநில அளவில் அறிவியல் கண்காட்சி ஒன்று 1977 நவம்பர் மாதத்தில் சென்னையில் நடத்தப் பெற்றது. 64 பள்ளிகள் அதில் கலந்து கொண்டன.

குடியரசுத் தலைவரின் ஆட்சிக் காலத்தில், தமிழ்நாட்டுப் பாட நூல்களில் வெளியிடப்பட்டு இருந்த அறிஞர் அண்ணா, பெரியார் ஆகியோரைப் பற்றிய பாடங்கள் அகற்றப்பட்டு இருந்தன. இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு அந்தப் பாடங்களை மீண்டும் இடம் பெறச் செய்தது. இந்தப் பாடங்கள் மட்டும் கொண்ட இணைப்பு நூல் ஒன்று வெளியிடப்பட்டு ஏற்கனவே விநியோகம் செய்யப்பட்ட பாடப் புத்தகங்களுடன் இணைத்துத் தரப்பட்டது.

எஸ்.எஸ்.எல்.சி., ஏ.ஐ.எஸ்.எஸ்.எல்.சி., ஓ.எஸ்.எல்.சி. ஆகிய வகுப்புத் தேர்வுகளில் வெற்றி பெறும் முதலாவது, இரண்டாவது, அதையடுத்த சில வரிசைகளில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு முறையே தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம், சான்றிதழ்கள் ஆகியவற்றை 1977 டிசம்பரில் அரசு வழங்கிச் சிறப்பித்து இருக்கிறது. மாணவர்களுக்கு இது போன்ற பரிசு வழங்கப்படுவது இதுதான் முதல் முறை என்பது குறிப்பிடத் தக்கது.

1977-78 கல்வியாண்டில் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளாவன :

ரூ. 5 இலட்சம் செலவில் உயர்நிலைப் பள்ளிகளுக்கு நூலகப் புத்தகங்கள் வழங்கியது, உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு ரூபாய் 1.5 இலட்சத்திற்கு அறிவியல் கருவிகள் வழங்கியது ; ஐந்து உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூபாய் 5 ஆயிரம் செலவில் 16 மி.மீ. திரைப்படக் கருவி (புரொஜக்டர்) வழங்கியது ; மாநில திரைப்பட நூலகத்திற்காக 50 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள திரைப்படங்கள் வழங்கியது.

இந்தத் திட்டங்கள் 1978-79 ஆம் கல்வியாண்டிற்கும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

1977ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயலின்போது சேதமுற்ற, அரசு உதவிப் பள்ளிகளுக்கு, புதுப்பிக்கும் பணிகளுக்காக, 40 இலட்ச ரூபாய் உதவித் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தால் சேதமுற்ற அரசுப் பள்ளிகளின் கட்டடங்களை மராமத்து, செய்வதற்காக 60 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டு இருக்கிறது.

எஸ்.எஸ்.எல்.சி. பயிலும் மாணவர்கள் மேல் வகுப்புக்குச் செல்ல வேண்டுமென்றால் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்குரிய எல்லாப் பாடங்களிலும் ஏககாலத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிலை இருந்தது. முந்தைய அரசு இந்த விஷயத்தில் சற்றுத் தாராளமான மனப்பான்மையுடன் நடந்து கொள்வதில் அக்கறை காட்டவில்லை. இந்த அரசு பழைய வழக்கத்தை அடியோடு மாற்றி, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் புதிய 'கம்பார்ட்மென்டல் முறையை' அறிமுகம் செய்திருக்கிறது. இதனால் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தேர்ச்சி பெறாத பாடங்களை ஒவ்வொன்றாக எழுதித் தேர்ச்சி பெறும் மாணவர்கள் கல்லூரிக் கல்வியைத் தொடர்வதற்குத் தகுதி உள்ளவர்களாகிறார்கள்.

1978-79 கல்வியாண்டிலிருந்து ஆங்கிலோ — இந்தியப் பள்ளிகளில் பயிலும், ஆங்கிலோ—இந்திய மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு 8 இலட்ச ரூபாய் அதிகச் செலவாகிறது.

அண்மைக் காலம் வரை, தமிழகத்தில் உள்ள 375 ஊராட்சி ஒன்றியங்களில் கிராமப் புறத் திறமை உதவித் தொகைத் திட்டத்தின் வாயிலாக ஆண்டொன்றுக்கு ஒன்றியத்திற்கு இருவருக்குப் பரிசு வழங்கப்பட்டு வந்தது. 1978-'79 முதல் இந்த எண்ணிக்கை இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது, ஒன்றியத்திற்கு நான்கு பேர்களுக்கு இந்தப் பரிசு வழங்கப்படுகிறது. இந்த அரசின் கிராம வளர்ச்சிக் கொள்கைக்கு இந்தத் திட்டம் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.

மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு, துவக்கப் பள்ளிகளில் கல்வி முறையை வளர்ச்சியடையச் செய்வதற்குப் பல திட்டங்களை அமல் செய்து வருகின்றது. அவையாவன : கல்வி நிலையங்களில் இனவாரியான ஒதுக்கீடு ; கல்வியின் மூலமாக கிராமப்புற வளர்ச்சி; வீணாக்குதலையும், முடக்கத்தையும் குறைத்தல், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் வெற்றி பெற்ற அரிசன, மலைச்சாதி மாணவர்களுக்குத் தகுந்த இடத்தை அளித்தல்.

**பள்ளி ஆசிரியர்கள் நலன் :**

1973ல் ஊதிய உயர்வு கேட்டுப் போராட்டம் நடத்திய ஆசிரியர்களிடத்தில் முந்தைய அரசு கொடுமையாக நடந்ததுடன் மன்னிப்புக் கடிதங்கள் தருமாறு ஆசிரியர்களை வற்புறுத்தியது. ஆசிரியர்கள் நடத்திய போராட்டக் காலங்கள் அவர்களது பணிக் காலத்துடன் சேர்க்கப்படவில்லை. அந்த ஆசிரியர்களின் மன்னிப்புக் கடிதங்களை ரத்து செய்ததுடன் அவர்களது பணிக் காலத்தில் ஏற்பட்ட இடைவெளிக் காலம் ஆசிரியர்களுக்கு உரிமையுள்ள விடுமுறைக் காலமாகக் கருதப்பட வேண்டுமென்று இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

செகண்டரி கிரேட் தகுதி பெற்றிருந்தும், பல ஆசிரியர்கள், பல துவக்கப் பள்ளிகளில் ஹையர் கிரேட் ஆசிரியர்களாகப் பணி புரிந்து, குறைவான ஊதியம் பெற்று வந்தார்கள். இத்தகைய ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேட் ஆசிரியர் பதவிகள் அளிக்கப்பட்டன. இதனால் 1-6-77 முதல் 1,500 ஆசிரியர்களும் 1-6-78 முதல் 1,500 ஆசிரியர்களும் பயன்பெற்றனர்.

ஏற்கெனவே அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்து வந்த பட்டதாரி ஆசிரியர்களுள் 1-4-70 முதல், தமிழ்நாடு அரசுப் பணிக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியில் நிலைப்படுத்தப்பட்டனர். மேற்குறிப்பிட்ட ஆசிரியர்களின் தற்காலிகப் பணிக் காலத்திலிருந்து அவர்களது பணியை நிலைப்படுத்துவதுடன் முழு ஊதிய உயர்வுக்கும், அவர்களை, உரியவர்களாக்குவதற்கு முடிவு செய்துள்ளது இந்த அரசு.

31-3-'77 அன்று ஓராண்டுப் பணிக்கு மேல் (1-4-74 அன்று பணியில் இருந்து விலக்கப்பட்டவர்கள், விலக்கப்படுவதற்கு முன்பு ஓராண்டுப் பணியில் இருந்தவர்கள் உட்பட) உயர்நிலைப் பள்ளிகளில் தாற்காலிகமாகப் பணி புரியும் பட்டதாரி ஆசிரியர்

கள், இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் ஆகியோரைத் தமிழ்நாடு அரசுப் பணிக் கழகத்தின் மூலம் நிரந்தர ஊழியராக்குவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்துள்ளது.

1977-'78 கல்வியாண்டிலிருந்து ஆசிரியர்களின் (பணியிலிருப்பவர்—ஓய்வு பெற்றவர்—காலமானவர்) ஆண் மக்கள், பெண் மக்கள் ஆகியோர் வேலை வாய்ப்புக் கல்வி பெற உதவித் தொகை வழங்கும் திட்டமொன்றினை இந்த அரசு அனுமதித்துள்ளது. ஆண்டொன்றுக்குப் பொறியியல் கல்விக்கு 25 பேர், மருத்துவக் கல்விக்கு 25 பேர், வேளாண்மைக் கல்விக்கு 20 பேர், கால்நடைக் கல்விக்கு 10 பேர் ஆக 80 பேர்களுக்குப் புதிதாகப் படிப்பு உதவித் தொகை வழங்கப்படும். ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு 500 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**முறை சாராக் கல்வி:**

முதியோர் கல்வி வளர்ச்சிக்கும், படிப்பின்மையைப் போக்கும் முயற்சிக்கும், தேவைப்படும் நியாயமான அக்கறையை முந்தைய அரசு காண்பிக்கவில்லை. முதியோர் கல்விக்கும் முறைசாராக் கல்விக்கும் இந்த அரசு முனைப்பான ஆர்வத்தைச் செலுத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. இந்தக் கல்வி முறை, பள்ளிக் கல்வியில் உருவாகும் வீண் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கும், அனைவருக்கும் எழுத்தறிவை வழங்குவதற்கும் வழி வகுப்பது திண்ணம்.

1971ஆம் ஆண்டு கணக்குப்படி, தமிழ்நாட்டில் எழுதப்படிக்கத் தெரிந்தவர் எண்ணிக்கை 39.39 சதவீதமாக இருந்தது (இதில் ஆடவர் 51.68 சதவீதமும், பெண்கள் 26.83 சதவீதமும் ஆவர்). அப்போது அனைத்திந்திய அளவில் எழுத்தறிவு பெற்றவர் 29.34 சதவீதம் ஆவர். (இதில் ஆடவர் 39.51 சதவீதமும் பெண்கள் 18.44 சதவீதமும் ஆவர்). சுருக்கமாகச் சொன்னால் 1971ஆம் ஆண்டுக் கணக்குப்படி தமிழ்நாட்டின் 4.12 கோடி மக்கள் தொகையில் 1.63 கோடி பேர்தான் எழுத்தறிவு பெற்றிருந்தார்கள். இந்த அரசு எழுத்தறிவை வளர்ப்பதற்குத் தன்னால் இயன்ற பல்வேறு வழி முறைகளைக் கடைப்பிடித்து வருகிறது. மாநில அளவில் முதியோர் கல்விக்காகவும், முறைசாராக் கல்விக்காகவும் 1978-'79ஆம் ஆண்டில் 40 இலட்ச ரூபாயைச் செலவு செய்ய அனுமதித்திருக்கிறது. இந்தக் குறிப்பிட்ட ஆண்டில் மாநிலத்தில் உள்ள 375 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொரு ஒன்றியத்தையும் சார்ந்த கிராமப் புறங்களில்; கல்வியைத் தொடராமல் இடையிலேயே நிறுத்தி விட்ட மாணவர்களுக்காக முறைசாராக் கல்வி நிலையங்கள் 4 உருவாக்கப்படுகின்றன. இவை தவிர மத்திய அரசின் உதவியுடன் முதியோர் கல்வி, முறைசாராக் கல்வி ஆகியவற்றில் மையங்கள் 1,400 உருவாக்கப்பட இருக்கின்றன.

**விளையாட்டுக்கள் :**

எல்லாக் கல்வி நிலையங்களிலும் பயிலும் மாணவர்களின் உடல் நலத் தகுதி, விளையாட்டுத் திறமை ஆகியவை குறித்து தனிக் கவனம் செலுத்த வாய்ப்புத் தருவதற்கு அரசு மிகுந்த அக்கறை காட்டி வருகிறது. தமிழ்நாடு மாநில விளையாட்டுக் குழுவுக்கு வழங்கி வரும் ஆண்டு மானியத் தொகை 16 இலட்ச ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. கல்வி நிலையங்கள், தமது மாணவர்களுக்காக உடற் பயிற்சிக் கூடங்களை உருவாக்குவதற்கு, உதவி செய்யும் திட்டத்தை அரசு அனுமதித்திருக்கிறது.

மாநிலத்தில் விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் ஊக்குவித்து, அவர்களின் வீர விளையாட்டுக்களை வளர்ச்சியுறச் செய்வதற்கும் அவர்களைச் சிறப்பிப்பதற்கும் அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்வதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு கருத்துச் செலுத்தி உள்ளது. **நூற்றைம்பது ரூபாய்க்கும் குறைவாக மாத வருமானம் பெற்று வரும் புகழ் பெற்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோரின் முதுமைக் காலத்தில் அவர்களுக்குப் பொருளாதார உதவி வழங்கும் திட்டத்தை அரசு உருவாகியிருக்கிறது.** இவர்களுக்கு மாதத்திற்கு 75 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. 1978-79ஆம் ஆண்டில் 25 விளையாட்டு வீரர்கள் இந்த உதவித் தொகை பெற இருக்கிறார்கள்.

**மேல்நிலைக் கல்வி :**

பத்தாண்டுக் கல்வி முறையைப் பள்ளிகளில் அமலாக்குவதற்கு முந்தைய அரசு 1972-73ல் ஆணையிட்டிருந்தாலும் கூட—10+2+3 என்ற கல்வி முறையில், தக்க சமயத்தில் தகுந்த—நிலையான முடிவுகளை அது எடுக்கத் தவறிவிட்டது. அந்தப் பிரச்சினையைக் குழப்பத்துக்குரியதாக்கிவிட்டது. இந்த அரசு, முக்கியமான இந்தக் கல்வி முறைப் பிரச்சினையில் தீர்வு காணத் தனிக் கவனம் செலுத்தியதோடு நிலையான நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறது. கிராமப்புற வளர்ச்சியை மனத்தில் கொண்டு, கல்வித் துறை நிபுணர்களைக் கலந்தாலோசித்து — 10+2+3 முறைக் கல்வியில் 2வது நிலை, பள்ளிகளிலேயே இருக்கலாம் என அரசு முடிவு செய்தது. மாநிலத்தில் மொத்தம் 800 உயர்நிலைப் பள்ளிகளில், பெரும்பாலும் கிராமப் புறத்தைச் சேர்ந்த பள்ளிகளில்தான் இந்த மேல்



# அழகிய கைவினைப் பொருட்களை உருவாக்கும் பூம்புகார் அளிக்கும் உறுதி!

பூம்புகார் கலை கைவினைப் பொருட்கள் துறையில் இந்தியா விலேயே பெரிதான இயக்கம்

இதனால் உங்களுக்குத் தேவையான கலை கைவினைப் பொருட்களை தேடி அலைய வேண்டாம்.



பூம்புகாரின் உற்பத்திக் கூடங்கள் உங்களது விருப்பத்திற்கேற்ற வாறும், நீங்கள் ரசிக்கும் வடிவமைப் புக்கு ஏற்றவாறும், அழகிய கலைப் பொருட்களை, கல், உலோகம், பிரம்பு, மூங்கில், பனை ஓலை, சடம்பு நார், தஞ்சா வூர் கலைத்தட்டுக்கள் அரக்கு கடைசல், காகித மாவுப்பொருட் கள், போன்றவற்றில் செய்து தரவல்லவை. இந்த வசதி தரும் ஒரே நிறுவனம் பூம்புகார்தான்.



பூம்புகாரின் நியாய விலை.

— காரணம் பூம்புகார் ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்

தரமான பொருட்கள், நியாயமான விலை எங்கள் குறிக்கோள்.



வாருங்கள், கண்களுக்கு விருந்து அளித்து தேவையானவற்றை வாங்கிச் செல்லுங்கள்.

# பூம்புகார்

கைநுட்ப கலைத்திறன் பொருட்கள் களஞ்சியம் இந்தியாவிலேயே கைவினைப் பொருட்களுக்கான அமைப்புகளில் மிகப்பெரியது.

ஷோரூம்கள்: பெங்களூர் • பம்பாய் • புதுடெல்லி சென்னை • கோயம்புத்தூர் • மதுரை • மாமல்லபுரம் ஊட்டி • சேலம் • திருச்சி • திருநெல்வேலி • வேலூர் தஞ்சாவூர் • கடலூர் • நெய்வேலி, மற்றும் ஈரோடு.

தமிழ்நாடு கைநுட்ப கலைத்திறன் வளர்ச்சி இணையகம்
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
சென்னை 600 006

ADWAVE/THDC/765 A

நிலைக் கல்வியைத் தொடங்குவதற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது. மேல்நிலைக் கல்வியைத் தொடங்குவதற்குரிய எல்லா நடவடிக்கைகளும் மிகவும் இலகுவாக எடுக்கப்படுகின்றன. தேவைப்படும் திறமை மிக்க ஆசிரியர்களும்— தேவையான இட வசதிகளும், துணைக் கருவிகளும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு விரைவில் ஏற்பாடு செய்யப்பட இருக்கின்றன.

மேல்நிலைப் பள்ளிகளின் விவரங்களும் அவற்றிற்குரிய பாடத் திட்டங்களும் அனுமதிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. மேல்நிலைப் பள்ளி வகுப்பை நடத்துவதற்கு ஆசிரியர்களுக்குத் தேவைப்படும் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த வகுப்புகளுக்குரிய பாடப் புத்தகங்கள் தயாரிப்பில் உள்ளன. மேல்நிலைக் கல்வியின் ஒரு சிறப்பு அம்சம் என்னவென்றால் கல்வியுடன் சேர்ந்த வேலை வாய்ப்புக் கல்வியாக இது இருக்கும் என்பதுதான்.

தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு பயிலும் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் பயிற்சிக்குப் பணம் செலுத்தத் தேவையில்லை.

**கல்லூரிக் கல்வி :**

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு கல்லூரிக் கல்விக்குச் செலவிடப்படும் தொகை 2 மடங்காகப் பெருகியிருக்கிறது. 1975-76ல் 10 கோடி ரூபாய்; 76-77ல் 12 கோடி ரூபாய், 77-78ல் 21 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 78-79ல் 23 கோடி ரூபாய் செலவிடப்பட இருக்கிறது.

பல்கலைக் கழக மானியக் குழு-1974 ஆம் ஆண்டிலேயே பல்கலைக் கழக ஆசிரியர்கள் சம்பள விஷயமாக முந்தைய மாநில அரசை அணுகியபோதும் கூட அந்த அரசு அப்பிரச்சினையைக் கவனிக்காமலும் கல்லூரி ஆசிரியர்களின் கிளர்ச்சிக்கு வழி வகுத்தும் வந்தது. இந்த அரசு, ஆசிரியர்களின் நலனில் அக்கறை கொண்டு சென்னை, மதுரை, அண்ணாமலை ஆகிய பல்கலைக் கழகங்களைச் சார்ந்த அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு உதவிபெறும் கலைக் கல்லூரிகள், விஞ்ஞானக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள், பல்தொழில் பயிலகங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியப் பெரு மக்களுக்கும் 1-1-74ல் இருந்தே சம்பள உயர்வு கிடைக்கும் வகையில்—ஆனால் 1-1-77ல் பணப்பயன் கிடைக்கும் வகையில் அரசு ஆணையிட்டது. இதனால் அரசுக்கு 1979-80ல் இருந்து கூடுதல் செலவு ஏற்படும்.




1-12-77 அன்று மூன்று ஆண்டும் அதற்கு மேலும் பணிபுரிந்து வரும் பட்ட மேற்படிப்புப் பட்டதாரி டெமான்ஸ்ட்ரேட்டர்களும், டியூட்டர்களும், விரிவுரையாளர்களாக / உதவிப் பேராசிரியர்களாக 1-12-77ல் இருந்து உயர்த்தப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் பதவி உயர்வுக்குத் தக்க வகையில் சம்பள உயர்வு பெறுவதற்கும் அனுமதிக்கப்பட்டது.

அரசு உதவி பெறும் கல்லூரியின் ஆசிரியர்களும் 18 மாத மருத்துவ விடுமுறைக்குத் தகுதியுடையவர்கள் என அரசு அனுமதித்திருக்கிறது. முன்பு இவர்களுக்கு 12 மாத மருத்துவ விடுமுறை வசதிதான் கொடுக்கப்பட்டு வந்தது.

திருச்சிராப்பள்ளியிலும், கோயம்புத்தூரிலும் இரு பல்கலைக் கழகங்களைத் தொடங்குவதற்கு மத்திய அரசினிடமும், பல்கலைக் கழக மானியக் குழுவினிடமும் தமிழ்நாடு அரசு வலியுறுத்தி வருகிறது.

எல்லா வகையிலும் தமிழைப் பரப்பும் நோக்கத்தின் அடிப்படையில், கல்லூரியில் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு படிக்கும் மாணவர்களுக்கு, முன்பு புத்தகங்கள் இனமாக வழங்கி வந்ததற்குப் பதிலாக 1978-79 முதல், உதவித் தொகை வழங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

**1977-78ல் இருந்து கல்லூரிகளில் பயிலும் அரிசன, மலைவாழ் வகுப்பு மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பைப் பற்றிக் கருத்தில் எடுத்துக்கொள்ளாமல் அந்த இன மாணவர்கள் அனைவருக்கும், கல்வி பயில முழுச் சம்பளச் சலுகை அளிக்க அரசு முன் வந்துள்ளது. ஆண்டு வருமானம் 2,500 ரூபாய்க்குக் குறைவாக உள்ள அரிசனப் பெற்றோரின் குழந்தைகளுக்குத்தான் சலுகை உண்டு என்ற நிலை தற்போது மாற்றப்பட்டுவிட்டது.**

**கல்லூரிகளில், பி. யு. சி. வகுப்பை முடித்துவிட்டு, பட்ட வகுப்பின் முதலாவது ஆண்டில் சேர்ந்துள்ள மாணவர்களுக்கு, மருத்துவக் கல்லூரி போன்ற தொழில் துறைக் கல்லூரிகளில் இடம் கிடைத்து அவர்கள் செல்ல விரும்பினால், கலைக் கல்லூரியில் அவர்கள் கட்டிய பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.**

**தொழிற் பயிற்சிக் கல்வி :**

பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைப்படி, கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சம்பள விகிதம், பொறியியல் கல்லூரிகள், பல்தொழில் பயிலகம் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் என அரசு அறிவித்தது. தமிழ் நாட்டில் 12 பொறியியல் கல்லூரிகளும், 34 பல்தொழில் பயிலகங்களும் தொழில் நுட்ப உயர் நிலைப்பள்ளிகளும் உள்ளன. இவற்றில் பயிலும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 20 ஆயிரம் ஆகும். 1977-78, 1978-79 ஆகிய ஆண்டுகளில், பொறியியல் கல்லூரிகளிலும், பல்தொழில் பயிலகங்களிலும் பல்வேறு புதிய பிரிக்கப்பட்ட— வேலை வாய்ப்பு அதிகம் உள்ள பயிற்சி வகுப்புகள் துவக்கப்பட உள்ளன.

**தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்று தமிழ் நாட்டில் உருவாக்கப்பட வேண்டும் என்று முந்தைய அரசு பல முறை சொல்லி வந்தபோதிலும், இந்த அரசு பொறுப்பேற்ற உடனேயே இந்தப் பிரச்னையில் தனிக் கவனம் செலுத்தி — சென்னையில் "பேரறிஞர்**

அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக"த்தை உருவாக்க, சட்ட மன்றத்தில் மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளது. கிண்டியி லுள்ள பொறியியல் கல்லூரியில் இந்தப் பல்கலைக் கழகம் அமைய இருக்கிறது. கீழ்க்கண்ட நிறுவ னங்கள், அந்தப் பல்கலைக் கழகத்தின் அங்கங்களாக இருக்கும் :

1. சென்னை, பொறியியற் கல்வி நிறுவனம், குரோம்பேட்டை.

2. கட்டடக் கலை—நகரமைப்புப் பள்ளி, சென்னை.

3. நெசவுத் தொழில் நுட்பக் கல்லூரி, தோல் தொழில் நுட்பக் கல்லூரி, சென்னையில் உள்ள அழகப்பச் செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த இரசாயனப் பொறியியல் துறைகள்.

## கலை மற்றும் கலாச்சாரம்

### தொல்பொருள் ஆய்வு :

திருமலை நாயக்கர் மஹால், இராமநாதபுரத்தி லுள்ள இராமலிங்க விலாசம், தரங்கம்பாடியிலுள்ள டேனிஷ் கோட்டை போன்ற முக்கியத்துவம் வாய்ந்த பழங்காலக் கட்டடங்களைப் பாதுகாக்கும் முயற்சியும்—அந்தந்த இடங்களில் அரும்பொருட் காட்சியகங்களை அமைக்கவும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

மாநிலத்தில் 4 மாவட்டங்களில் காணப்படும் மதிப்பு வாய்ந்த உதிரிச் சிற்பங்களையும் ஓலைச் சுவடிகளையும் சேகரித்துப் பாதுகாக்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படுகிறது.

### நூலகங்கள்—அரும்பொருட் காட்சியகங்கள் :

பொது நூலக முறையின் மூலமாகவும் அரும் பொருட் காட்சியகத்தின் மூலமாகவும் பொதுமக்க ளுக்குச் சேவை செய்யும் பணியில் அரசு முனைப்புக் காட்டி வருகிறது.

தமிழ்நாட்டின் புராதன—பரம்பரைக் கலை களைக் காப்பதற்குரிய வகையில்—நடவடிக்கைகளை எடுத்து வரும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், ஓவியம் நுண்கலைக் குழு ஆகியவற்றின் பணிகளுக்கு அரசு ஒத்துழைப்புத் தந்து உதவுகிறது.

1978-79ல் மதுரையில் இசைக் கல்லூரி ஒன்று நிறுவப்பட இருக்கிறது.

நாதஸ்வரத்தைக் கற்றுக் கொள்ளும் 5 மாண வர்களுக்கு, நபர் ஒருவருக்கு ரூ. 500 படிப்புக்கால உதவித் தொகையும், தவுல் வாசிக்கக் கற்றுக் கொள்ளும் 5 மாணவர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 300 படிப்புக் கால உதவித் தொகையும் வழங் கும் திட்டமொன்றை அண்மையில், அறநிலையத் துறை அறிமுகம் செய்து, தொகையை வழங்கி யிருக்கிறது.

**ஒவ்வோராண்டும்—பாரம்பரியப் பெருமையைப் பாட்டில் எடுத்துரைக்கும் கவிஞர் ஒருவருக்கு, 5,000 ரூபாய் பரிசளிக்கப்படவிருக்கிறது. இதைப் போலவே, நமது பாரம்பரிய இசைக்குத் தக்கவாறு தமிழ்ப் பண் பாட்டுக்கு எந்த விதமான குந்தகமும் ஏற்படாமலும் புதிய இராகங்களை—புதிய மெட்டுக்களை உருவாக்கு கின்றவர்களுக்கும் பரிசு வழங்கப்பட உள்ளது.** இந்தத் திட்டங்களையெல்லாம் இயல் இசை நாடக மன்றம் நடைமுறைப்படுத்த விருக்கிறது.

நாடகக் கலையை வளர்ப்பதற்குப் பல புதிய திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட உள்ளன. பொதுக் கல்வியுடன் நாடகக் கலையையும் இளம் மாணவர்களுக்குக் கற்பித்துத் திறமை மிக்க நாடகக் கலைஞர்களாக அவர்களை உருவாக்க—அவர்களுக்குத் தேவையான வசதிகளைத் தருவதற்குரிய திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்தவிருக்கிறது.

### தமிழ் வளர்ச்சித் துறை :

தமிழ் மொழியையும் இலக்கியங்களையும் வளர்ப்பதில் இந்த அரசு, முனைப்பான நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறது.

வசதியற்ற தமிழ்ப் புலவர்களுக்கு மாதம் ரூ. 100 உதவித் தொகையாக வழங்கும் திட்டத்தை மேற்கொள்ள அரசு அனுமதித்துள்ளது.

பிற மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்கள் —கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பகுதி நேரத் தமிழ் டிப்ளமா பயிற்சியை ஏற்பாடு செய்வதற்குத் தாராளமாக நிதி உதவியைத் தமிழக அரசு அளித்து வருகிறது.

பிற மொழிகளில் வெளியாகும் நூல்களை, தமிழ் மொழியில் பெயர்த்து வெளியிடுவதற்குரிய திட்டத்தைச் செயலாக்க, நிபுணர்கள் கொண்ட குழு உருவாக்கப்பட்டுள்ளது.

கம்பர், வள்ளலார் போன்ற தமிழ்ச் சான் றோர்களைச் சிறப்பிக்கும் வகையில், ஒரு தமிழ்ப் பண்பாட்டு மையம் ஒன்றைச் சென்னையில் உரு வாக்க, அரசு முடிவெடுத்திருக்கிறது. நூலகம், படிப்பகம், கண்காட்சிக் கூடம், அரங்கம் ஆகி யவை இந்த மையத்தில் இடம் பெறும்.

**உமறுப் புலவரின் பெயரால் இஸ்லாமிய இலக் கியங்களுக்கு ரூ. 2 இலட்சம் தொகை கொண்ட அறக்கட்டளை ஒன்றை மதுரைப் பல்கலைக் கழகத்தில் நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.**

தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அகம், தமிழ் வளர்ச்சித் துறையின் பல்வேறு பணிகளைச் செய்து வருகிறது. அந்தப் பணிகளாவன : சிறந்த நூல்களுக்குப் பரிசளித்தல், தமிழகத்தின் ஆதார பூர்வமான வரலாற்றைத் தயாரித்தல், தமிழ் மொழியில் நல்ல புத்தகங்களை வெளியிட உதவி செய்தல்—மாநில அரசின் அலுவலகங்களில் எல்லா நிலைகளிலும் கடிதத் தொடர்பு கொள்வதில் தமிழ் மொழியைப் பயன்படுத்தும் திட்டத்தை நடை முறைப்படுத்துவதை மேற்பார்த்தல்.

தமிழக அரசில் நியமிக்கப்பட்டிருந்த அரச வைக் கவிஞர் பதவி 1953லிருந்து நடைமுறைப் படுத்தப்படாதிருந்தது. நாமக்கல் கவிஞர் திரு வே. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் 1948-1953 வரை அரசவைக் கவிஞராக இருந்தார். முந்தைய அரசு இந்தப் பிரச்சினையில் எவ்வித அக்கறையை யும் காட்டவில்லை. **இந்த அரசு இந்தப் பிரச்சினையில் தக்க கவனம் செலுத்தித் தமிழகத்தின் புகழ்பெற்ற கவிஞர் கண்ணதாசன் அவர்களை அரசவைக் கவிஞ ராக நியமித்துள்ளது.** புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் அவர்களின் பிறந்த நாள் விழாவின்போது, ஆண்டுதோறும் சிறந்த தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு ரூ. 10 ஆயிரம் வழங்கப்படும் என்றும் முதலமைச் சர் அறிவித்துள்ளார். **இந்த ஆண்டு கவிஞர் சுரதா அவர்களுக்கு அந்தத் தொகை கொடுக்கப் பட்டுள்ளது.**

இத்தகைய சிறந்த—ஆக்கப் பணிகளை இந்த அரசு— மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயே செய்து முடித்திருப்பது பாராட்டுக்குரியது என்பதை எவ ரும் ஒப்புக் கொள்வர்.

# உழைக்கும் கரங்களை



# உயர்த்துவோம்!

தமிழ்நாடு இன்று தொழில் அமைதியில் முன்னோடியாக விளங்குகிறது.

தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள், தோட்டத் தொழில் நிறுவனங்கள், மோட்டார் தொழில் நிறுவனங்கள், மோட்டார் தொழிற்கூடங்கள் ஆக 10,374 நிறுவனங்கள் 6,61,245 தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தியுள்ளன. இவற்றுள் 92,141 தோட்டத் தொழிலாளர்கள் உள்ளனர்.

அவற்றில் இன்று தொழில் தகராறுகளினாலும், வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்பினாலும் பாதிக்கப்பட்டவை 15 தொழில் நிறுவனங்களும் 4,469 தொழிலாளர்களுமே ஆவர்.

இவ்வாண்டு ஜூன் திங்கள் முடிய 5,375 தொழில் நிர்வாகத்தினருக்கும், தொழிலாளருக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தக் கால கட்டத்தில், கீழ்க்காணும் முக்கிய தொழில் நிறுவனங்களோடு உடன்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

(அ) டி. யூ. சி. எஸ். நிறுவனம் சென்னை.

(ஆ) பல்லவன் போக்குவரத்துக் கழகம், சென்னை.

(இ) நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம், நெய்வேலி.

(ஈ) இங்கிலீஷ் எலெக்ட்ரிக் கம்பெனி லிமிடெட், சென்னை

(உ) சென்னை ரப்பர் தொழிற்சாலை, சென்னை.

(ஊ) பக்கிங்காம்-கர்னாட்டிக் ஆலை லிமிடெட், சென்னை.

(எ) இ. ஐ. டி. இந்தியா லிமிடெட், இராணிப்பேட்டை.

(ஏ) டி. வி. எஸ். தொழிற்பிரிவு, பாடி.

(ஐ) என்பீல்டு இந்தியா, சென்னை.

(ஒ) யூனியன் கார்பைடு இந்தியா லிமிடெட், சென்னை.

(ஓ) கரூர் மில்ஸ், கரூர்.

கீழ்க்கண்ட நிறுவனங்கள், தொழிலாளர் நல, தொழில் துறைகளால் எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சியின் விளைவாக மீண்டும் திறக்கப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகின்றன:

(அ) சிவகாமி மில்ஸ் லிமிடெட், திருநெல்வேலி.

(ஆ) சோமசுந்தரா சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், முத்தனேந்தல்.

(இ) இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், சென்னை.

(ஈ) பிரகாஷ் மில்ஸ் (பிரைவேட்) லிமிடெட், கோயம்புத்தூர்.

(உ) லோட்டஸ் மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

தொழிலாளர்களுக்குச் சட்ட ஆலோசனை வழங்குவதற்காகச் சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் மூன்று குழுக்கள் செயலாற்றி வருகின்றன. அவை ஒவ்வொன்றும் ஓய்வு பெற்ற நீதித்துறை அதிகாரியால், அல்லது ஓய்வு பெற்ற ஓர் தொழிலாளர் நல அதிகாரியால் நிர்வகிக்கப்படுகின்றன.

வசதி குறைந்த மக்களுக்குச் சட்ட ஆலோசனை வழங்குவது குறித்துத் திட்டமொன்றினை உருவாக்குவதில் ஏற்படும் பிரச்சினை பற்றி ஆய்வு செய்யும் பொருட்டு நியமிக்கப்பட்ட ஒரு நபர் குழுவால் செய்யப்பட்ட பரிந்துரைகளை ஒட்டி அரசால் இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

முதல்தர நிறுவனமாக உயர்த்தப்பட்டுள்ள தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனம், தொழிலாளர் சட்டங்கள், மனித உறவுகள், நிர்வாகப் பயிற்சி ஆகியவற்றில் பாடங்கள் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சி, தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் உரிமைகள்

முதலானவற்றுக்கு மிக்க உதவியாக இருக்கின்றன.

தொழில்துறை அலுவலர்கள், தொழிலாளர் நீதிமன்றம் அல்லது தொழில் நடுவர் நீதிமன்றங்கள் முன்னிலையில் தொழிலாளரால் அல்லது தொழிலாளர் சார்பாகத் தொழிலாளர் சட்டங்கள்படி தாக்கல் செய்து கொள்ளப்படும் மனுக்களில், நீதிமன்றக் கட்டண முத்திரைத் தாள் ஒட்ட வேண்டியதில்லை என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக்குழு முதன்மையான ஆலோசனைக் குழுவாகும். இதனிடம் தொழிலாளர் தொடர்பான கொள்கைகள் பற்றிய பொருள்கள் அனைத்துக்கும் அறிவுரைகள் கேட்கப்படுகின்றன. மாநிலத் தொழிலாளர்கள் நல அமைச்சர் அவர்களின் தலைமையில் இந்த முத்தரப்பு ஆலோசனைக்குழு மாற்றியமைக்கப்பட்டது. தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் அவர்களுடைய பிரதிநிதிகள், மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவார்கள்.

**தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் பணிகள்:**

இவ்வாரியம் தொழிலாளர் நலத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்தி வருகின்றது.

தாம்பரத்திலுள்ள உடல் உருக்கிநோய் மருத்துவ நிலையத்தில் தொழிலாளர்களுக்கென்றே 26 படுக்கைகளுடன் கூடிய உடல் உருக்கு நோய் வார்டு (இணைப்பு) ஒன்று கட்டப்பட்டுள்ளது; தற்போது நோயாளிகள் சென்று தங்குவதற்கு ஏற்ற நிலையில் உள்ளது.

தொழிலாளர்களுக்கான விடுமுறை இல்லம் ( Holiday Home ) ஒன்று ஏர்க்காட்டில் 8-5-'78 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. கோடைக்கானல், உதகமண்டலம் ஆகிய இடங்களில் விடுமுறை இல்லம் அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாமல்லபுரத்தில் விடுமுறை இல்லம் ஒன்றைக் கட்டுவதற்கு ரூ. 7.51 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் இரண்டும், கோயம்புத்தூரில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக மொத்தம் நான்கு படிப்பகங்கள் தொழிலாளர்களின் நலன் கருதித் திறக்கப்பட்டுள்ளன.

# அன்றும் இன்றும்
# அரிசி நெல் நிலை

முந்தைய பல ஆண்டுகளில் விவசாயிகளிடமிருந்து கட்டாயக் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. இப்போது அப்படிச் செய்யப்படுவதில்லை.

முன்னர் ஒவ்வொரு மாவட்டமும் ஒரு தனித் தொகுதியாகப் பாவிக்கப்பட்டு, அந்த மாவட்டத்திலிருந்து அரிசியையோ, நெல்லையோ மற்ற மாவட்டத்திற்குக் கொண்டுபோகத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இப்போது அந்தக் கட்டுப்பாடெல்லாம் அடியோடு நீக்கப்பட்டு தமிழகம் முழுவதும் நெல்லும் அரிசியும் தாராளமாகப் புழங்கிட வகை செய்யப்பட்டு உள்ளது.

தனிப்பட்ட வியாபாரிகள் முன்பு அரிசியையோ, நெல்லையோ மொத்த வியாபாரம் செய்வது தடை செய்யப்பட்டிருந்தது. இப்போது அந்தத் தடை நீக்கப்பட்டு, மொத்த வியாபார உரிமங்களும் தாராளமாக வழங்கப்படுகின்றன.

முன்பு சில்லறை வர்த்தகர்கள், வியாபாரிகள் நெல்லை வாங்குவதில் பல நிபந்தனைகளும், தடைகளும் இருந்தன. இப்போது அவைகளும் நீக்கப்பட்டுவிட்டன.

சொந்தத் தேவைக்கான அரிசியைக்கூட அதிகாரிகளிடம் சான்றிதழ் பெற்றே கொண்டு போக வேண்டுமென்ற நிலை முன்பு இருந்தது. இன்றே அந்தத் தடையும் நீக்கப்பட்டுவிட்டது.

இவற்றின் காரணமாகத் தமிழகம் முழுவதும் நெல்லும், அரிசியும் தாராளமாகவும்-தடையேதுமின்றியும் புழங்கிடவும், தனியார்-வியாபாரிகள் சுதந்தரமாகச் செயல்படவும், விவசாயிகள் தங்கள் நெல்லை இலாபகரமான விலைக்கு வெளிச்சந்தையில் விற்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.





# தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு ஆற்றிடும் பணிகள்!

'தாழ்த்தப்பட்ட மக்களை 'தெய்வத்தின் குழந்தைகள்' என்று அழைத்தார் அண்ணல் காந்தியடிகள். தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றம் அடைந்தால்தான் சமுதாயம் வளர்ச்சியடையும் என்றும் எடுத்துரைத்தார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட நமது அரசு, அவர்களின் வாழ்வில் ஒளியேற்றி வைப்பதை தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. எனவே, அரிசன மக்களின் நல்வாழ்வுக்கான பல பணிகளை அரசு கடந்த ஓராண்டில் முனைப்புடன் செயல்படுத்தியது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு அளிக்கும் உதவிகளில் முக்கியமானது கல்விக்காக அளிக்கும் உதவியேயாகும்.



1976-77 இறுதி வரையில், முதல் படிவத்திலிருந்து 11ஆம் படிவம் வரை தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பு மாணவர்களுக்கும், மதம் மாறிய மாணவர்களுக்கும் புத்தகம் வாங்கவும், சிறப்புக் கட்டணம் கட்டவும் உபகாரச் சம்பளம் தரப்பட்டது. இது தவிர, தேவையான காலங்களில், தேர்வுக் கட்டணமும் தரப்பட்டது. இதற்கு பெற்ருேர் அல்லது காப்பாளர் ஆண்டு வருமானம் ரூ. 3,000க்குள் இருக்க வேண்டும் என்ற வரம்பு இருந்தது. 1977-78லிருந்து நான்காம் வகுப்பிலிருந்து 11ஆம் வகுப்பு வரை மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் வருமான வரம்பைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மற்ற சலுகைகள் வழங்குவதிலும் வருமான வரம்பைக் கணக்கில் எடுத்துக் கொள்வது தவிர்க்கப்பட்டது.



**கல்லூரிக் கல்வி...**

1977-78லிருந்து வருமான வரம்பைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் தாழ்த்தப்பட்டமற்றும் பழங்குடி மாணவர்களுக்கும்—மதம் மாறிய மாணவர்களுக்கும் அனைவருக்கும் புகுமுக வகுப்பு முதற் கொண்டு இலவசக் கல்வி தரப்படுகிறது.



மலைவாழ் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்காக 1977-78ல் தங்கிப் படிக்கும் வசதியுடன் கூடிய ஏழு பள்ளிகள் திறக்கப்பட்டன.

அரிசன மக்கள் வசிக்கும் பகுதிகளில், குழந்தைகளின் கல்வி பராமரிப்புக்காக 100 குழந்தைகள் காப்பகங்கள் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

1977-78ல் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த உயர் நிலைப் பள்ளி மாணவர்களுக்காக 7 விடுதிகளும், மாணவிகளுக்காக 5 விடுதிகளும் கட்டப்பட்டன. மாணவர்களுக்கு உணவுக்காகத் தரப்படும் மான்யமும் கீழ்வருமாறு உயர்த்தப் பட்டது :

| | ஒவ்வொரு மாணவருக்கு | |
|---|---|---|
| | முன்பு தரப்பட்டது | இப்போது தரப்படுவது |
| | ரூ. | ரூ. |
| 1. சென்னையில் கல்லூரி மாணவர்களுக்கான அரசினர் விடுதி | 65 | 80 |
| 2. வெளியூர்களில் கல்லூரி மாணவர்களுக்கான அரசினர் விடுதி | 55 | 65 |
| 3. உயர்நிலைப் பள்ளி மாணவர் விடுதி | 40 | 45 |

தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்குத் தரப்படும் உதவித் தொகையும் மாதத்திற்கு ரூ. 60லிருந்து ரூ. 82.50 ஆக அதிகரிக்கப் பட்டது.

பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள அரிசனங்களுக்குக் கறவை மாடுகள் வாங்குவதற்கென தரப்படும் நிதி உதவி ரூ. 1,500 ஆக (ரூ. 500 மான்யம், ரூ. 1,000 கடன்) உயர்த்தப்பட்டு, இந்த ஓராண்டில் மட்டும் 1,200 பேருக்குத் தரப்பட்டுள்ளது.

இதேபோல் கிணறுகள் தோண்டுவதற்கு நிதி உதவி தரும் திட்டத்தில் 1978 பிப்ரவரியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் பயனாக ஒரு கிணறு வெட்டி முடிப்பதற்கு ஆகும் முழுச் செலவையும் மதிப்பிட்டு அதனை அரசாங்கமும்—நிலவள வங்கிகளும் ஏற்றுக்கொள்கின்றன.

அனைத்திந்தியப் பணித் தேர்வுகளில் வெற்றி பெறும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பு மாணவர் ஒவ்வொருவருக்கும் மேற்கொண்டுபயிற்சி செலவுக்காக ரூ. 1,000 தரப்படும். இது 1977 ஜூலைத் திங்களில் அறிவிக்கப்பட்ட புதிய திட்டமாகும்!

அரிசனங்களுக்கு வீட்டு மனை வழங்குவதில் காலதாமதம் ஏற்படாமல் இருக்க இந்த அரசு 1978 ஏப்ரலிலிருந்து ஒரு புதிய ஏற்பாட்டைச் செய்துள்ளது. அதன்படி புறம்போக்கு நிலம் இல்லாமற்போனால் தனியார்களிடமிருந்து நிலத்தை விரைவாக ஆர்ஜிதம் செய்து அரிசனங்களுக்கு வழங்குவதற்கான அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1977-78ல் ரூ. 63 இலட்சம் மதிப்புள்ள 20,800 வீட்டு மனைகள் வழங்கப்பட்டன. 1978-79ல் இதற்கென ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

முன்பு அரிசனங்களுக்காகக் கட்டித் தரப்பட்ட வீடுகள் ஒழுகுவதாகவும்—இட வசதி போதவில்லை யென்றும் முறையீடுகள் வந்தன. எனவே அரசு இப்போது புது மாதிரி டிசைன் ஒன்று தயாரித்து —இட வசதியையும் அதிகப்படுத்தி வீடுகள் கட்டித் தருமாறு ஆணையிட்டுள்ளது. இதன்படி 1977-78ல் புது டிசைனில் 5,000 வீடுகள் கட்ட ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டது.



நகராட்சிகளில் வேலை செய்யும் துப்புரவுப் பணியாளர்கள், நகராட்சிக்குச் சொந்தமான வீடுகளில் குடியிருந்தால், அவர்கள் வேலையிலிருக்கும் வரை வாடகை தர வேண்டியதில்லை என்று 1978 மே திங்களில் அரசு புதிதாக ஆணை பிறப்பித்தது.

## மலைவாழ் மக்கள்

தமிழ் நாட்டில் 3.11 இலட்சம் மலைவாழ் மக்கள் உள்ளனர். இவர்களது முன்னேற்றத்திற்காக வேளாண்மை—கால்நடை வளர்ப்பு—கல்வி—மருத்துவம் ஆகிய பல்வேறு துறைகளின் கீழ் 1976-77ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 101.32 இலட்சம் தான். ஆனால் 1977-78ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 153 இலட்சம். அதாவது 50 விழுக்காடு அதிகம்.

கடன் தொல்லைகளிலிருந்து மலைவாழ் மக்களுக்கு நிவாரணம் அளிக்கவும், மலைப் பகுதிகளில் வெளியார் நிலம் வாங்குவதைத் தடுக்கவும் அரசு சட்டம் கொண்டுவர ஆலோசித்து வருகிறது.

குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினரின் நலனுக்காகவும் அரசு ஆவன செய்துள்ளது. அந்த வகுப்பைச் சேர்ந்த மகளிர்க்கு தையல் மற்றும் பிற தொழில்களில் தொழிற் பயிற்சி வழங்கப்படுகிறது. இந்த ஓர் ஆண்டில் மட்டும் புதிதாக ஐந்து தையல் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த வகுப்பினைச் சேர்ந்த பள்ளி மாணவர்களுக்குப்பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப் படுகின்றன.

கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள 'போயர்' வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு ரூ. 100 மதிப்புள்ள கருவிகளை அரசு இலவசமாகத் தருகிறது. சலவைத் தொழிலாளர்களுக்கும் —முடி திருத்துவோருக்கும் தொழிற் கருவிகளை இலவசமாகத் தரவும் அரசு 7 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது.

பிற்பட்ட—மிகவும் பிற்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மாணவர்கள் பெருமளவில் உதவிச் சம்பளம் மற்றும் பிற சலுகைகளைப் பெற வேண்டும் என்பதற்காக, அம்மாணவர்களின் பெற்றோர்களது ஆண்டு வருமான வரம்பு உயர்த்தப்பட்டிருப்பதானது அப் பிரிவு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் துணை புரிகிறது.

இவ்வாறு கடந்த ஓராண்டில் தாழ்த்தப்பட்ட—மிகவும் பிற்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காக அரிய பணிகளை அரசு ஆற்றியுள்ளது.



# பாசன வசதிக்குப்

## பயனுள்ள பணிகள்!

கடந்த ஓராண்டில் தமிழ் நாட்டில் பாசன வசதிக்காகப் பயனுள்ள பல்வேறு பணிகளை நமது அரசு மேற்கொண்டுள்ளது. அப்பணிகள் இங்குக் கோடிட்டுக் காட்டப்படுகின்றன:

தமிழகத்தில் 30-6-1977-ல் நமது அரசு பொறுப்பேற்ற போது காவிரி நீர்ப்பாசன வசதிப் பகுதியில் வழக்கமான குறுவைச் சாகுபடி ஏற்கெனவே தொடங்கிவிட்டிருந்தது. ஜூனில் மேட்டூரிலிருந்து பாசனத்துக்கு நீர் திறந்துவிடப்படவில்லை. ஏனெனில் மேட்டூர்த் தேக்கத்தில் நீர்மட்டம் மிகக் குறைவாக இருந்தது. மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களின் நேரடி முயற்சியினால், கர்நாடக மாநிலத்திலிருந்து தண்ணீர் கிடைத்து, மேட்டூர் நீர்த்தேக்கம் 15-7-'77ல் பாசனத்துக்குத் திறந்துவிடப்பட்டது. 1977-ல் புயல்-வெள்ளத்தினால் ஏற்பட்ட இழப்பை ஈடுகட்டுவதற்காக விவசாயிகள் கூடுதலாக ஒரு போகம் விளைவிக்க, உதவியாக காவிரி ஆயக்கட்டில் 1978 மார்ச் மூன்றாம் வாரம் வரை நீர் விடப்பட்டது.

**மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகள்**

மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் உபரி நீரை இந்த மாநிலத்துக்குத் திருப்பி விடுமாறு பல ஆண்டுகளாக முறையீடு செய்யப்பட்டு வந்தது. ஆனால் இப்பிரச்சினையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. தமிழகம் குடியாட்சித் தலைவரின் நிர்வாகத்தில் இருந்தபோது, மத்திய அரசு ஒரு தொழில் நுணுக்கக் குழுவை அமைத்தது. ஆனால் இந்தக் குழு செயல்படாததோடு, இக்குழுவின் பணிகள் என்ன என்பதும் வரையறுக்கப்படாமல் இருந்தது. 1977 செப்டம்பரில் இந்தியத் தலைமையமைச்சர் தமிழ்நாட்டுக்கு வருகை தந்தபோது, தமிழக முதல்வர் எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாக திருவனந்தபுரத்தில் தலைமையமைச்சர் முன்னிலையில் கேரளா-தமிழ்நாடு முதல்வர்களின் பேச்சுவார்த்தை நடைபெற்றது. முன்பு அமைக்கப்பட்ட தொழில் நுணுக்கக் குழுவின் பணிகள் எவை என்பது பற்றி இரு முதல்வர்களின் பேச்சுவார்த்தையின்போது வரையறுக்கப்பட்டது.

**சென்னைக்குக் கிருஷ்ணா ஆற்றுநீர்**

சென்னை நகரின் குடிதண்ணீர்த் தேவையை நிறைவு செய்ய கிருஷ்ணா ஆற்றுநீரைக் கொண்டுவர தமிழக அரசின் முயற்சியின் பேரில், மத்திய வேளாண்மை மற்றும் பாசன அமைச்சரின் முன்னிலையில் தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிர மாநிலங்களின் முதல்வர்களின் கூட்டம் நடைபெற்றது. 15 T. M. C. கிருஷ்ணா ஆற்று நீரைச் சென்னைக்கு எப்படிக் கொண்டு வருவது என்பது பற்றி இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

**கெளவேரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம்**

தர்மபுரி மாவட்டத்தில் பொன்னையாற்றுக்குக் குறுக்கே ரூபாய் 5.5 கோடி செலவு மதிப்பீட்டில் கெளவேரப்பள்ளி நீர்த்தேக்கம் கட்டுவதற்கு 13-10-'77 அனுமதி வழங்கப்பட்டது.

இதனால் புதிதாக 8,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் கிடைப்பதுடன், 1,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் உறுதிப்படுத்தப்படும். ஹோசூரில் உள்ள 'சிப்காட்' தொழில் நிறுவன அமைப்புகளுக்கும் இதிலிருந்து நீர் கிடைக்கும்.

**பெரியாறு-வைகை புதுப்பிக்கும் திட்டம்**

உலக வங்கியின் உதவியைக் கொண்டு பெரியாறு-வைகைத் திட்டத்தை நவீனப்படுத்துவதற்கான பணிகள் தொடங்கி விட்டன. இதற்கு ரூ. 41 கோடி செலவாகும். இந்த வேலைகளைக் கவனிப்பதற்காக ஒரு சிறப்புத் தலைமைப் பொறியாளரும், மூன்று விசேஷப் பிரிவுகளும் தேவையான பிற பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**வெள்ள நிவாரணம்**

1977 நவம்பர் மாதத்தில் புயல்-வெள்ளக் கொடுமையால் பல்வேறு பகுதிகளில் ஆறுகளிலும்-கால்வாய்களிலும் ஏற்பட்ட உடைப்பையும் சேதங்களையும் பொதுப்பணித்துறையினர் இரவு பகலாகப் பணியாற்றி மிகக் குறுகிய காலத்தில் சரிசெய்து விட்டனர். இந்தப் பணிகளுக்காக ஒரு தனித் தலைமைப் பொறியாளரும்-அவருக்குக் கீழ், சிறப்பு அலுவலர்களும் நியமிக்கப்பட்டனர்.

**பணி ஆலோசனைக் குழுக்கள்**

பொதுமக்கள் பணம் பயனுள்ள முறையில் செலவிடப்படுகிறதா? நடைபெறும் வேலை தரமுள்ளதாக—ஊழலுக்கு இடமில்லாததாக இருக்கிறதா? என்று மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக வட்ட அளவில் பணி ஆலோசனைக் குழுக்களை அரசு அமைத்துள்ளது.

# கதர் கிராமத் தொழில்கள்







**வே**லையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க கிராமத் தொழில்களும், குடிசைத் தொழில்களும் வளர்வதுதான் நல்லது என்று கண்டு, அதன் மூலமே கிராமப் புறங்களில் பெருமளவு வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க அரசு திட்டமிட்டுள்ளது. கதர்-கிராமத் தொழில்களின் மூலம் கடந்த ஓராண்டில் 9634 கைத்திறப் பணியாளர்களுக்கு அரசு வேலை வாய்ப்பைத் தந்துள்ளது; அதற்கேற்ற நிதி உதவிகளையும் அரசு அளித்துள்ளது.

1977 ஏப்ரல் முதல் 1978 மார்ச் திங்கள் வரை ரூ. 511.01 இலட்சம் மதிப்புள்ள கதர்த் துணி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கதர் விற்பனையை அதிகப்படுத்துவதற்காக 10 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடி தரப்பட்டு, மூன்று மாத காலம் விற்பனை நடந்தது. இச் சிறப்புத் தள்ளுபடியினாலும் கதராடைகளை வாங்கும்படி தமிழக முதல்வர் விடுத்த வேண்டுகோளாலும் கதர் விற்பனை அதிகமாகி, கதர் உற்பத்தி செய்யும் கிராமங்களில் வேலைவாய்ப்பும் அதிகரித்தது. இதனால் கதர் விற்பனையில் 20 சதவிகிதம் கடந்த ஆண்டைவிட முன்னேற்றம் காணப்பட்டது. 1976-77-இல் ரூ. 405.55 இலட்சத்திற்கு விற்ற கதர் இந்த ஆண்டு ரூ. 607.64 இலட்சத்திற்கு விற்கப்பட்டது. கதர் வாரிய வரலாற்றில் இது என்றுமே இல்லாத ஒன்றாகும்.

இந்த ஆண்டு இத்தாலி நாட்டுக்கு ரூ. 26.31 இலட்சம் மதிப்புள்ள 3.88 இலட்சம் மீட்டர் கதர் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த அளவுக்கு அதிக ஏற்றுமதி இந்த ஆண்டுதான் நடந்துள்ளது. இதனால் ஒரு புதுவழி பிறந்துள்ளது; ஏற்றுமதிக்கு மேலும் அதிகமாகக் கதராடை தேவை என்று கேட்கப்பட்டுள்ளது.

கோகோகோலாவைச் சுவைத்துக் கொண்டிருந்த உயர்குடியினரிடமும் பனைவெல்லத்திலிருந்து தயாரிக்கப்பட்ட 'பாம் கோலா' எனும் சுவை நீர் செல்வாக்குப் பெற்று சீராக வளர்ந்து வருகிறது. வளர்ந்து வரும் தேவையை நிறைவேற்ற நாள்தோறும் 3,500 புட்டி பாம் கோலாவைத் தயாரித்து சென்னை நகரிலும் அதன் சுற்றுப்புறத்திலும் விரைந்து வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 'பாம் கோலா' டில்லி, மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, கன்னியாகுமரி ஆகிய இடங்களிலும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

கையினால் செய்யப்படும் காகிதத்தைக் கொண்டு முட்டைகள் வைக்கும் தட்டுகளைச் செய்வதற்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. மத்திய அரசை அணுகி இந்தத் தட்டுகளைத் தயாரிக்கும் உரிமையை கிராமத் தொழிலுக்கு மட்டுமே தரும்படி கேட்கலாம் என்று கதர் குழுவுக்குத் தமிழக அரசு ஆலோசனை கூறியுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட நெல்லை, இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களில் உள்ள கைவினைப் பொருள் உற்பத்தியையும், கிராமத் தொழிலையும் ஊக்கப்படுத்தி உதவுவதற்காகக் கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்துக்கு ரூ. 15.09 இலட்சம் மானியமாகவும், ரூ. 4.30 இலட்சம் கடனாகவும் தமிழக அரசால் வழங்கப்பட்டது. இத்துடன், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் ரூ. 16.9 இலட்சம் கிடைக்கும்.

கதர் நெசவாளர்களையும் கைத்தறி நெசவாளர்களைப்போலவே கருதி, நெசவுக் கருவிகள் வாங்குவதற்காக ரூ. 2 இலட்சத்தை அரசு வழங்கியுள்ளது. இதில் 50 சதவிகிதம் கடன்; 50 சதவிகிதம் மானியமாகும்.

பழங்குடி மக்களுக்கு 4,000 தேன்கூடுகள் வழங்குவதற்காக ரூ. 1.75 இலட்சம் உதவித் தொகையாக அரசால் வழங்கப்பட்டுள்ளது. கடந்த நவம்பர் திங்களில் புயலால் பாதிக்கப்பட்ட கைவினைத் தொழிலாளர்களுக்கு உதவித் தொகையாக ரூ. 9.74 இலட்சம் மானியமாகவும், கடனாகவும் அரசால் அளிக்கப்பட்டது. இப்படிப்பட்ட உதவி தரப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

கதர்-கிராமக் கைத்தொழில் வாரியம் 3,09,844 பேருக்கு வேலை கொடுத்துள்ளது. 1976-77-ல் சம்பளமாகக் கொடுத்தது, ரூ. 770.7 இலட்சம். 1977-78-ல் இத்தொகை ரூ. 905.3 இலட்சமாக உயர்ந்தது.

# பால்வளம் பெருக்குவோம்!



பெரும்பான்மையான பால் வள மேம்பாட்டுப் பணிகள் 1972-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதற்கொண்டு தமிழ்நாடு பால் வள நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டது. அதன்பிறகு தமிழ்நாடு அரசு பால் வள மேம்பாட்டுத் துறை, தனது வளர்ச்சிப் பணிகளை, மாதவரம் அரசு பால் பண்ணையிலும், தஞ்சை, திருச்சி ராப்பள்ளி, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியா குமரி மாவட்டம் உள்ளடக்கிய பகுதிகளிலும் (பால்வள நிறுவனத்தின் தீவிர செயல்பாட்டுக்கு உட்படாத பகுதிகள்) தனது வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

மாதவரம் பால்பண்ணைப் பகுதியில், குறிப்பாக அரசு கால் நடைப் பண்ணையில் காசநோயற்ற கறவைகளை மட்டுமே இனம் கண்டு கொள்ளும் பொருட்டும், அவைகளை மட்டுமே பால் உற்பத்திக்கு இருத்திக் கொள்ளும் பொருட்டும் 1977-78ஆம்ஆண்டில் அரசு பால்பண்ணையின் எல்லா இனங்களும் காசநோய் ஆய்வு செய்யப்பட்டு, நோயற்றவை என்ற இனங்களை மட்டுமே தனியாக நிலைப்படுத்திச் செயல்பட்டு வருவது சாதனைகளையெல்லாம் மிஞ்சிய சாதனையாகும்.

நடப்பாண்டில் ஒரு பசுவின் பால் உற்பத்தித் திறன் நாளொன்றிற்கு 5.5 லிட்டர்களாக உயர்ந்து காணப்படுகிறது. இவ்வுற்பத்தித் திறன் அளவை மேலும் உயர்த்தும் பொருட்டு, பெங்களூரிலுள்ள தேசிய பால் பண்ணை ஆராய்ச்சித் துறையின் களப்பணி அலுவலர்களைக் கொண்டு ஆய்ந்தறிந்து கொள்ளவும் அதிக உற்பத்திக்கு வடிவமைப்புக் கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

சென்னைவாழ் கறவையாளர்களுக்கு மாதவரம் பண்ணையில் மறுவாழ்வு வழங்குவதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

செப்டம்பர் 1977-ல் பால் வளத்துறையில் மூன்று நடமாடும் கால்நடை ஊர்திப் பிரிவுகள் முறையே கன்னியாகுமரி, திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கி உள்ளது. இதன் முக்கிய நோக்கம் விவசாயிகள் மற்றும் கூட்டுறவு பால் சங்க உறுப்பினர்களுடைய கால்நடைகளுக்கு உரிய காலத்தில் வேண்டிய மருத்துவ உதவியை வழங்குவதாகும். ஐந்து அல்லது பத்து மைல் தூரத்தில் ஒரு மருத்துவ மனை இருப்பதால் உரிய காலத்தில் மருத்துவ உதவியினை கால்நடைகளுக்கு அளிக்க முடியவில்லை. ஆதலால் உரிய காலத்தில் மருத்துவ உதவியினை அளிக்கவும், நோய்த் தடுப்பு முறைகளை மேற்கொள்ளவும், கன்னியாகுமரி, திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் மூன்று நடமாடும் கால்நடை ஊர்திப் பிரிவுகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், கிராமங்களில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு இராமநாதபுரம், திருச்சி மாவட்டங்களில் முறையே இரு பால் கொள்முதல் குழுக்களை ஏற்படுத்த அரசு 1977-78-ல் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதன் முக்கியப் பணிகள் பால் உற்பத்தி ஆகும் இடங்களை ஆய்வு செய்வதும், குறிப்பிட்ட இடங்களில் பால் சங்கங்களை ஏற்படுத்துவதும் ஆகும். மேலும் இக்குழுக்கள் பால் அதிகமாகக் கிடைக்கும் இடம் எது எனவும் ஆராயும்.

மேலும், இம்மாநிலத்தில் 'ஆனந்த்' பாணியில் புதிய வகை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இந்த 'ஆனந்த்' பாணியில் அமைக்கப்பட்ட உற்பத்தியாளர் சங்கங்களின் சிறப்பு அம்சங்களாவன:

(அ) ஒவ்வொருவர் தரும் பாலிலும் உள்ள கொழுப்புச் சத்து எவ்வளவு என்று முடிவு செய்து அதன் அடிப்படையில் பாலுக்கு அந்த இடத்திலேயே பணம் கொடுக்கப்படுகிறது.



(ஆ) சங்கங்கள் கடனை மையமாகக் கொண்டதல்ல.

(இ) பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் கால்நடை மருத்துவப்பணி, செயற்கை முறைக் கருத்தரிப்பு, கால்நடை சமனீட்டுத் தீவனம் முதலிய அடிப்படை வசதிகள் உறுப்பினர்கள் இருப்பிடங்களிலேயே செய்து கொடுக்கப்படுகின்றன.

மேற்கண்ட திட்டங்கள் ஒருங்கிணைந்து செயல்படும்போது நகர்ப்புற மக்களின் பதப்படுத்தப்பட்ட பால் மற்றும் பால் பொருட்களின் தேவையைப் பூர்த்தி செய்வதோடு கிராமப்புற பால் பண்ணையாளருக்கு ஏற்ற வருவாயும் கிடைக்க வழி செய்யும்.

102 பாலுற்பத்திக் கூட்டுறவு சங்கங்களுக்கு அவற்றின் 2077 உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்குவதற்காக ரூபாய் இருபது இலட்சம் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டோர் நலத்துறையின் ஒத்துழைப்புடன் கடன் திட்டத்தின் கீழ் 32 தாழ்த்தப்பட்டோர் பாலுற்பத்திச் சங்கங்களின் 1200 உறுப்பினர்கள் 6 இலட்சம் ரூபாயை மான்யமாகவும், 17.5 இலட்சம் ரூபாயை கடனாகவும் பெற்றிருக்கிறார்கள். பசும்புல் தீவனம் மிகுந்த அளவில் உற்பத்தி செய்யும் பொருட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சங்க உறுப்பினர்களுக்கு ரூ. 10,000 மான்யமாக வழங்கப்பட்டிருக்கிறது. உற்பத்தி செய்யப்பட்ட பால் சுகாதார முறைகளில் கையாளப்படுவதற்கு வேண்டிய சாதனங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும், கறவை இனங்களுக்கு வேண்டிய கட்டட வசதிகள் ஏற்படுத்திக் கொள்ளவும், பால் சேகரிப்புக்கு வாகன வசதிகள் ஏற்படுத்திக் கொள்ளவும் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கங்களுக்கு ரூ. 2 இலட்சம் அளவிற்கு நிதி வசதி அளிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கண்டவாறு திட்டமிட்டு செயல்பட்டதன் விளைவாக 4555 பாலுற்பத்திச் சங்கங்களாலும், 25 பால் வழங்கு சங்க ஒன்றியங்களாலும் நாள் ஒன்றுக்கு, சராசரி 3087 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு, 1.85 இலட்சம் லிட்டர் பால் மேற்படி ஒன்றியங்களால் சென்னை மற்றும் மதுரை நகர்ப்புற மக்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாகத் தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 2.02 இலட்சம் லிட்டர் பால் மேற்படி ஒன்றியங்களிலேயே அந்தந்த ஊர் மக்களுக்கு உள்ளூரிலேயே விற்கப்பட்டு வருகிறது.




தொழிலாளர் நலத்தைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு பால்வள நிறுவனத்திலும், தமிழ்நாடு அரசு பாலுற்பத்தித் துறையிலும் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு (காலநிலை அடிப்படைச் சம்பள விகிதத்தில் உள்ளவர்கள் மற்றும் அவ்வடிப்படையின் கீழ் வராதவர்கள்) முடிந்தவரை தனித்தனி இருக்கை வசதி ( Residential accommodation ) வாடகைக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள், மேலாளர்கள் என்ற பாகுபாடின்றி 1976-77, 1977-78 ஆண்டுகளில் அவர்களது சீரிய பணிக்காகக் கருணைத் தொகையாக இவ்வாண்டில் (1977-78) ( Exgratia Payment ) அளிக்கப்பட்டுள்ளது.

1977-78-ஆம் ஆண்டில் திட்டமிட்ட செலவினங்கள் மற்றும் திட்டம் சாரா செலவினங்கள் இவைகளுக்காக ரூ. 77.49 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இவை தவிர தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் மூலமாக நீலகிரி மாவட்டத்தின் மலைப் பகுதிகளில் பாலுற்பத்திக்கு ரூ. 17.70 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது.

மேற்கண்டவாறு திட்டங்களும் பணிகளும் நன்கு செயலாற்றப்பட்டதால் ஓரளவிற்கு கிராமப்புறங்களில் வேலையில்லாத திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு இத்துறையும் செயல்பட்டுள்ளது.





# பெருகி வரும் வேலை வாய்ப்புகள்

**1977**—ஜூன் முதல் 1978 ஏப்ரல் வரை 3,18,431 பேர்கள் பல்வேறு வேலைவாய்ப்பகங்களில் வேலைக்காகப் பதிவு செய்துள்ளனர். இவர்களில் 21,000 பேர் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இக்கால கட்டத்தில் வேலை வாய்ப்பகத்தில் தெரிவிக்கப்பட்ட காலி இடங்கள் 34,993. வேலை வாய்ப்பகங்களைப் பயன்படுத்தி, 11,200 பேர் வேலையில் அமர்ந்துள்ளனர்.

*தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலை வாய்ப்பிற்காகப் பதிவு செய்யப்பட்ட ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை 2,045. இவர்களில் மதுரை முதலான இடங்களில் வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 353. சொந்தமாகத் தொழில் தொடங்குவதற்காக, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடன் உதவி பெற, உதவி பெற்ற ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை 104.

*1978-ஆம் ஆண்டில் ஊனமுற்றோர் உலகநாள் விழா சென்னையில் கொண்டாடப்பட்டது. 1978-ஆம் ஆண்டில் ஊனமுற்றவர்களை வேலையில் அமர்த்த சிறப்பு முயற்சிகள் ஏற்கெனவே மேற்கொள்ளப் பட்டுள்ளன. உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியத்திற்கு அரசு அனுமதித்த தொகையாகிய 60,000 ரூபாயை உடல் ஊனமுற்றோர்களின் மறுவாழ்வுக்கான பல்வேறு திட்டங்களுக்காகச் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்ற திறமையான பணியாளர்களுக்கான விருது பெற்றவர்களில் 9 பேர்களில் 4 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். தேசிய விருதுக்காகத் தேர்வு பெற்ற 18 பேர்களில் இருவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்.

**பயிற்சிப் பிரிவுகள்:**

கலைவினைஞர் (பொது மின்னணுவியல்) துறையில் பயிற்சி பெற்ற கலைவினைஞர்கள் பெருகி வரும் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்ய 1977-78ஆம் ஆண்டுகளில் 32 பயிற்சியாளர்கள் கொண்ட தொழிற்பயிற்சிப் பிரிவு ஒன்று ரூ. 3.95 இலட்சம் செலவில் அடையாறு மின்அணுத் தொகுதி வளாகத்தில் தனியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொழில்களைப் பலதிறப்படுத்துதல் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூரிலுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் 32 கலைவினைஞர்களைக் கொண்ட (குளிர்ப்பதனம்-தட்ப, வெப்ப நிலையைக் கட்டுப்படுத்துதல்) பயிற்சிப் பிரிவு ஒன்றைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. இதற்கான சாதனங்களை வாங்க ரூ. 2.35 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. ஓட்டல்கள் சிற்றுண்டிச்சாலைகள், கடைகள், திரைப்பட அரங்குகள் முதலானவற்றில் பணி புரிகின்ற தொழிலாளர்கள், தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

கோயம்புத்தூர், மதுரை நகர்களிலும், வடார்க்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருநெல்வேலி, கன்னியா குமரி, இராமநாதபுரம், தென்னார்க்காடு மாவட்டப் பகுதிகளிலும் மேற்சொன்ன பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள், இத்திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளனர். கோயம்புத்தூரிலுள்ள தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை 500 ஆக உயர்த்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இவ்வாறு, தொழிலாளர் நலத்துக்கும், வேலைவாய்ப்புக்கும் தக்க உதவிகளைச் செய்து வருகின்றது தமிழக அரசு.

# தாழ்த்தப்பட்டோருக்கு தனியே இட ஒதுக்கீடு

மருத்துவத் துறையிலே, பட்டமேற்படிப்புக்குத் தேர்ந்தெடுக்கும்பொழுது—பிற்பட்ட வகுப்பினர்களுக்கும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கும், மலைவாழ் பிரிவினருக்கும் தனியே இட ஒதுக்கீடு செய்திட வேண்டாம் எனக் கருதியது இந்திய மருத்துவக் கவுன்சில்.

அந்தக் கருத்து தமிழக அரசினால் ஆழ்ந்து பரிசீலிக்கப்பட்டது. முடிவில், இப்போதுள்ள இடஒதுக்கீட்டு முறையையே தொடர்ந்து செயல்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த மாநில மக்களின் சமூக-பொருளாதார அளவில் உள்ள பின்தங்கிய நிலையையும், சமுதாயத் துறையிலும்—பொருளாதாரத் துறையிலும் பிற்பட்ட வகுப்பினரின் நலனைப் பாதுகாக்கும் நல்லுணர்வோடும் எடுக்கப்பட்ட இந்த முடிவு மத்திய அரசுக்கும், இந்திய மருத்துவக் கவுன்சிலுக்கும் நமது அரசின் மூலம் தெரிவிக்கப்பட்டுவிட்டது!



# வேளாண்மை வளர்ச்சிக்குத் திட்டங்கள்

வேளாண்மை வளர்ச்சியே நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் என நன்கு அறிந்த தமிழக அரசு, வேளாண்மை உற்பத்திக்காக நிதி ஒதுக்கீட்டினை அதிகப்படுத்தி, பல திட்டங்களை உடனடியாகச் செயல்படுத்தியது.

சென்ற சில ஆண்டுகளாக, ஆண்டொன்றுக்கு 22 முதல் 24 கோடி ரூபாய் வரை இத்துறைக்குச் செலவிடப்பட்டு வந்ததை இவ்வாண்டு ரூ. 30 கோடி அளவிற்கு இத்துறையின் வளர்ச்சிக்காக அதிகப்படுத்தப்பட்டது. கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள், வேளாண்மை வளர்ச்சிக்கு அரசு எத்துணை முக்கியத்துவம் அளிக்கிறது என்பதை விளக்கும் :

| ஆண்டு | செலவிடப்பட்ட தொகை (கோடி ரூபாய்) |
|---|---|
| 1973-74 | 22.91 |
| 1974-75 | 24.08 |
| 1975-76 | 22.93 |
| 1976-77 | 23.45 |
| 1977-78 | 30.75 |

1976-77ல் வேளாண்மை வளர்ச்சிக்கு ரூ. 23.45 கோடி செலவிடப்பட்டது. அது 1977-78ல் ரூ. 30.75 கோடியாக அதிகரித்தது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

**உற்பத்தியில் சாதனை :**

1976-77ஆம் ஆண்டு, 53 இலட்சம் டன்னாக இருந்த அரிசி உற்பத்தி 1977-78ஆம் ஆண்டில் 62 இலட்சம் டன் அளவிற்கு உயர்த்தப்பட்டது. இது, இது வரை அடைந்திராத சாதனையாகும். இதன் மூலம் அரிசித் தட்டுப்பாடு அறவே நீங்கியது குறிப்பிடத் தக்கது. ஏனையப் பயிர்கள் விளைச்சலும் பெருமளவிற்கு அதிகப்படுத்தப்பட்டுள்ளன. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | பயிர் | 1970-71 | 1976-77 | 1977-78 |
|---|---|---|---|---|
| | | (இலட்சம் டன்களில்) | | |
| 1. | அரிசி | 50.67 | 53.00 | 62.00 |
| 2. | சிறு தானியங்கள் | 15.65 | 18.00 | 19.00 |
| 3. | பயறு வகைகள் | 1.33 | 2.90 | 3.00 |
| 4. | கரும்பு (வெல்லமாக) | 10.74 | 13.43 | 14.00 |
| 5. | பருத்தி (இலட்சம் பேல்களாக) | 0.59 (3.23) | 0.58 (3.09) | 0.68 (4.04) |
| 6. | எண்ணெய் வித்துகள் | 10.36 | 13.50 | 14.90 |

# விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவிகள்! சலுகைகள்!



**நீர்ப் பாசனம் :**

1976-77ஆம் ஆண்டு, சில அணைகள் காலம் தாழ்ந்து திறக்கப்பட்டன. ஆனால், 1977-78ஆம் ஆண்டு எல்லா அணைகளும் அரசின் சீரிய முயற்சியால், பாசனத்திற்கு முன்னதாகவே திறக்கப்பட்டு செயல்பட்டமை விளைச்சலைப் பெருக்குவதற்கு உறுதுணையாக அமைந்தது.

| அணைகள் | வழக்கமாக திறந்துவிடப் படும் நாள் | 1976-77ஆம் ஆண்டு திறந்த நாள் | 1977-78ஆம் ஆண்டு திறந்த நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. மேட்டூர் | | | |
| அ. காவேரி டெல்டா | 12 ஜூன் | 24-7-76 | 15-7-77 |
| ஆ. காவேரி மேட்டூர் திட்டம் | 12 ஜூன் | திறக்கவில்லை | 1-8-77 |
| இ. மேட்டூர் கால்வாய் | | | |
| ஈ. கட்டளைக் கால்வாய் | 1 ஆகஸ்டு | திறக்கவில்லை | 1-8-77 |
| உ. புள்ளம்பாடி கால்வாய் | | | |
| 2. பவானிசாகர் (முதல் முறை) | 15 ஆகஸ்டு | திறக்கவில்லை | 16-8-77 |
| 3. அமராவதி | 1 ஆகஸ்டு | 15-12-76 | 5-8-77 |
| 4. பெரியாறு (இருபோகப் பகுதி) | 1 ஜூன் | 1-11-76 | 1-6-77 |
| (ஒரு போக பகுதி) | 14 ஆகஸ்டு | 1-11-76 | 15-8-77 |
| 5. வைகை (திருமங்கலம் கால்வாய்) | 1 ஜூன் | 9-12-76 | 5-8-77 |
| (பெரியாறு புதிய பகுதி) | 15 செப். | திறக்கவில்லை | 15-10-77 |
| 6. சித்தாறு அணை | 1 ஜூன் | 26-11-76 | 10-6-77 |



**புயல் மற்றும் வெள்ள நிவாரண நடவடிக்கைகள் :**

இயற்கையின் சீற்றத்தால் தமிழகம் அடிக்கடி அவதிக்குள்ளாகிறது. இதனுல் வேளாண்மை உற்பத்தி குறைவதுடன் வேளாண் பெருமக்கள் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகிறுர்கள். 1972ல் இத் தமிழ் நாட்டை பெரு வெள்ளமும் புயலும் தாக்கியது. ஆனுல் 1977ஆம் ஆண்டு தமிழ்நாடு வரலாறு காணுத வகையில் கொடிய புயலாலும் வெள்ளத்தாலும் தாக்கப்பட்டுப் பெருத்த சேதத்திற்கு உள்ளாகியது. இது வரை எந்த அரசும் வழங்கியிராத அளவுக்கு வேளாண்மை மக்களுக்கு குறிப்பாக சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு இலவசமாக விதைகளும் தென்னங் கன்றுகளும் இவ்வரசு வழங்கியது. அத்துடன் கரும்பு, வாழை, வெற்றிலை போன்ற தோட்டங்களை புதுப்பிக்க மான்யமும் வழங்கியது. 1972ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின்போது, அன்றைய அரசு, நிலத்தை சமன்படுத்துதற்காக ரூ. 75 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. இன்றைய அரசு இதற்கென ரூ. 230 இலட்சம் ஒதுக்கீடு செய்தது மட்டுமின்றி, விவசாயிகளின் துயர் துடைக்க வேறு பல நிவாரணப் பணிகளையும் செயல்படுத்தியது. நிவாரணப் பணிகளுக்கென ரூ. 380 இலட்சம் செலவிடப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

1. சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு ரூ. 30 இலட்சம் மதிப்புள்ள 1,718 டன் நெல் விதைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

2. கரும்பு சாகுபடி செய்திருந்த சிறு விவசாயிகள் மற்றும் குத்தகை தாரர்களுக்கு ரூ. 87,352 மான்யமாக வழங்கப்பட்டு உள்ளது.

3. வாழை சாகுபடி செய்திருந்த சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு ரூ. 5,42,602 மான்யமாக வழங்கப்பட்டு உள்ளது.

4. சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு 98,164 தென்னங் கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

5. வெற்றிலைச் சாகுபடி செய்திருந்த சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு ரூ. 10,27,420 மான்யமாக வழங்கப்பட்டுள்ளன.

6. இது வரை 7,064 ஹெக்டேர்களில் நிலச் சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இவற்றில் சிறு விவசாயிகளுக்கு இலவசமாகவும் இதர விவசாயிகளுக்கு 50 சத மான்யத்திலும் சீர்திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

7. தமிழகம் முழுவதும் எவ்வித பாகுபாடும் இன்றி எல்லா விவசாயிகளுக்கும் பூச்சி பூசன மருந்துகள் 23 சதவிகித மான்ய விலையில் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு என ரூ. 100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**அமோக விளைச்சல் திட்டம் :**

அமோக விளைச்சல் திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்படும் திட்டம் என்றுலும் இவ்வரசு பொறுப்பேற்றவுடன் இதில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியது. இதனுல் 20.08 இலட்சம் ஹெக்டேரில் பயிரிடப்பட்டிருந்த நெல் உயர் விளைச்சல் ரகம் 24.36 இலட்சம் ஹெக்டேரிலும், 4.69 இலட்சம் ஹெக்டேரில் பயிரிடப்பட்டிருந்த சிறு தானியங்கள் 5.30 இலட்சம் ஹெக்டேரிலும் பயிர் செய்யப்பட்டது.

| | 1974-75 | 1976-77 | 1977-78 |
|---|---|---|---|
| | (இலட்சம் | ஹெக்டேரில்) | |
| நெல் | 18.60 | 20.08 | 24.36 |
| சிறு தானியங்கள் | 3.56 | 4.49 | 5.39 |

ஏனைய ரகங்களை விட உயர் விளைச்சல் தரவல்ல ஏடீடி, ஐஇடி 1722, டிகேஎம் 8 ரகமும், சோளத்தில் ஐஎஸ் 3541, சி.எஸ் 3541 கோயில் பட்டி நெட்டை, சிஎஸ்எச் 5 மற்றும் சிஎஸ்எச் 6 ஆகிய ரகங்கள் பரப்பும் அதிகப்படுத்தப்பட்டது.

**பயறு வகைகள் :**

பயறு வகைகளைப் பொறுத்த வரை உற்பத்தி நமது தேவையை விடக் குறைவாகவே உள்ளது. அண்டை மாநிலங்களில் இருந்துதான் நாம் இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம். இந்



நிலையினைப் போக்க அரசு பல திட்டங்களை உடனடியாக மேற்கொண்டது. 9.70 இலட்சம் எக்டேர்களாக இருந்த பரப்பு 10.40 இலட்சம் எக்டேருக்கு உயர்த்தப்பட்டது. மான்ய விலையில் 80,000 எக்டேர்களில் ஒட்டு மொத்த மருந்து தூவவும் 20,000 எக்டேரில் மணிச் சத்து தெளிக்கவும் புதிய திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இது நாள் வரை 600—800 டன் விதைகள் மட்டுமே விநியோகம் செய்யப்பட்டு வந்த நிலை மாறி இவ்வாண்டு 1,430 டன் அளவிற்குத் தரமான விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இன்று வரை விநியோகம் செய்யாத அளவுக்கு இவ்வாண்டு 3.60 இல்ட்சம் நுண்ணுயிர்க் கலவைகள் வழங்கப்பட்டன.

பயறு வகைகள் உற்பத்திக்காக ரூ. 13.72 இலட்சம் மத்திய அரசிடம் இருந்து பெற்று கீழ்க்கண்ட திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- 2,150 எக்டேருக்கு நுண்ணுயிர்க் கலவை இலவசமாக வழங்கப்பட்டது.
- 1,770 எக்டேரில் பயிர்ப் பாதுகாப்புக்காக இயக்கும் செலவு மேற்கொள்ளப்பட்டது.
- 115 பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் 50 சதம் மான்யத்தில் வழங்கப்பட்டது.
- பயறு வகைப் பயிர்களுக்கு 25 சதம் மான்யத்தில் 14,284 எக்டேருக்கு பூச்சி மருந்துகள் வழங்கப்பட்டன.

பயறு வகைகள் உற்பத்திக்காக உலக வங்கி உதவியுடன் தீவிர பயறு வகைகள் அபிவிருத்தித் திட்டம் ஒன்றினை மேற்கொள்ள, பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**எண்ணெய் வித்து அபிவிருத்தித் திட்டம் :**

எண்ணெய் வித்துகள் உற்பத்தி நமது தேவைக்குச் சற்றுக் குறைவாகவே இருக்கின்றது. இதிலும் தன்னிறைவு காணப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நிலக்கடலையில் விளைச்சலைப் பெருக்குவதற்காக நுண்ணூட்டச் சத்துக்கள் வேளாண் துறை மூலம் தயாரிக்கப்பட்டு பெருமளவில் 1977-78ஆம் ஆண்டு விநியோகிக்கப்பட்டது. 332 டன் (MICRO NUTRIENTS) நுண்ணூட்டச் சத்துக்கள் 26,560 எக்டேர் பரப்பளவிற்கு இவ்வாண்டு விநியோகிக்கப்பட்டது. இது ஒரு புதிய முயற்சியும் பெரும் சாதனையுமாகும். இதன் மூலம் நிலக்கடலையின் உற்பத்தி பெருமளவில் பெருகியுள்ளது.

தவிர, இது வரை 1,000—2,000 டன் என்ற அளவில் விநியோகிக்கப்பட்டு வந்த ஜிப்சம் என்ற ஊட்டச் சத்தும் கடந்த ஆண்டு 11,374 டன் விநியோகிக்கப்பட்டது. இது நிலக்கடலை உற்பத்திக்கு ஓர் திருப்பு முனையாக அமைந்தது.

பயிர்ப் பாதுகாப்புப் பணியில் நிலக்கடலையைப் பொறுத்த வரை இவ்வாண்டு ஒட்டு மொத்தமாகச் சுமார் 5,000 எக்டேர் பரப்பில் பயிர்ப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நிலக்கடலைப் பயிரில் பிற பயிர்களைப் போல் அதிக விளைச்சல் தரும் ரகங்கள் இல்லாத குறையை நீக்கிப் புதிய உயர் விளைச்சல் ரகங்கள் (டி.எம்.வி. 11ம், டி.எம்.வி. 12ம்) கண்டுபிடிக்கப்பட்டன.

நிலக்கடலையில் தரமான விதைகள் போதிய அளவு விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை என்ற குறையை நீக்க இந்த ஆண்டு தனித் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இதன் மூலம் கரு விதைகள் (BREEDERS SEEDS) செங்கல்பட்டு மாவட்டம் புட்லூர் அரசு விதைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டு விதைப் பண்ணைகள் அமைக்க விவசாயிகளுக்கு விதைகள் விநியோகிக்கப்படுகின்றன.

சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தியை மேலும் பெருக்குவதற்காகத் தரமான விதைகள் உற்பத்திக்கான திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் 13.5 டன் சிறப்பு விதைகள் (ELITE SEEDS) வழங்கப்பட்டன. இவைகள் நமது மாநிலத்திற்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்ய வழி வகுக்கும். மேலும் அதிக விளைச்சல் தரும் உயரிய ரகத்தை உருவாக்குவதற்கான புதிய ஆராய்ச்சித்திட்டம் திண்டிவனம் ஆராய்ச்சிப் பண்ணையில் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டது.



தென்னை அபிவிருத்தித் திட்டத்தில் இதுவரை பெரும்பாலும் நெட்டை ரகங்களே அதிக அளவு விநியோகிக்கப்பட்டு வந்தது. நெட்டை குட்டை ரகம் தென்னை விநியோகத்தில் இந்த ஆண்டு 28,000 கன்றுகள் வழங்கப்பட்டன. மேலும் ஒரு இலட்சம் நெட்டை குட்டை தென்னங் கன்றுகளும் உற்பத்தி செய்யப் புதிய திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னைச் சாகுபடியையே அழிக்கக் கூடிய வாடல் நோய் அண்டை மாநிலத்தில் இருந்து பரவியது. இதனைத் தடுக்க ஓர் ஆராய்ச்சித் திட்டம், இம்மாவட்டத்தில் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டது. தென்னை அபிவிருத்திக்கென கோவை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் புதிய தென்னை அபிவிருத்தித் திட்டம் இவ்வாண்டு செயல்படுத்தப்பட்டது.

**பருத்தி :**

பருத்திச் சாகுபடியிலும் புதிய வரலாறு படைத்துள்ளோம். சீரிய வீரிய ஒட்டு ரக வரலட்சுமி பருத்தி ரக விதைகள் இது வரை கர்நாடக மாநிலத்தில் இருந்துதான் பெற்று வந்துள்ளோம். கிலோ ஒன்றுக்கு ரூ. 200 என்று விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை இருந்தது. இதனை மாற்றித் தமிழகத்திலேயே விதைகள் உற்பத்தி செய்வதற்கென ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் இந்த ஆண்டு 25 மெட்ரிக் டன் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் விதை கிலோ ஒன்றுக்கு ரூ. 60 முதல் 70 என்ற அளவில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்தப் பருத்தி ரகம் 31,515 எக்டேரில் இந்த ஆண்டு பயிரிடப்பட்டுள்ளது. 15,000 எக்டேர் பரப்பில் கூடுதலாகப் பருத்திப் பயிர் செய்ததுடன் 1 இலட்சம் பேல்கள் கூடுதலாகவும் உற்பத்தி செய்யப்பட்டன.

தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக்கோட்டையில் கூடுதலாக ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**கரும்பு :**

கரும்பு உற்பத்தியிலும் இவ்வரசு பெரும் சாதனை புரிந்துள்ளது. 12,000 எக்டேர் பரப்பில் கூடுதலாகப் பயிர் செய்யப்பட்டு, 50,000 டன் வெல்லம் கூடுதல் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு உள்ளது. கரும்பு உற்பத்தியை மேலும் அதிகரிக்கத் தரமான கரணைகள் உற்பத்திக்காக ஆறு வட்டார நாற்றங்கால்கள் அமைக்க அரசு அனுமதியளித்து அவற்றில் கீழ்க்கண்ட ஐந்து இடங்களில் நாற்றங்கால்கள் நிறுவப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| கோனேரிகுப்பம் | காஞ்சிபுரம் வட்டம்,<br>செங்கை மாவட்டம் |
| காட்டேரி<br>மாமண்டூர் | ஆரணி வட்டம்,<br>வட ஆர்க்காடு மாவட்டம் |
| வளவனூர் | விழுப்புரம் வட்டம்,<br>தென்னார்க்காடு மாவட்டம் |
| ஒட்டபள்ளி<br>பாப்பாரபாளையம் | கிருஷ்ணகிரி வட்டம்,<br>தர்மபுரி மாவட்டம் |
| மூவா நல்லூர் | மன்னார்குடி வட்டம்,<br>தஞ்சாவூர் மாவட்டம் |

ஆறுவது வட்டார நாற்றங்கால் திருச்சி மாவட்டத்தில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இடுபொருள்கள் :**

வேளாண்மைக்கு உறுதுணையாக உள்ள இடுபொருள்கள்—விதை, உரம், பூச்சி மருந்துகள் ஆகியவைகளின் விலைகள் தொடர்ந்து அதிகமாக இருந்து வந்துள்ளன. இதனைக் குறைக்க அரசு பல நடவடிக்கைகள் எடுத்ததுடன் மத்திய அரசுடன் தொடர்ந்து வலியுறுத்தி உரங்களின் விலையை—முக்கியமாக யூரியாவின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. 1974ஆம் ஆண்டு, டன் ஒன்றுக்கு ரூ. 1,920 ஆக இருந்த யூரியாவின் விலை 1977 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் ரூ. 1,435 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. உயர் விளைச்சல் ரகம் மற்றும் வீரிய ஒட்டு ரகங்களின் விதைகள் உற்பத்தியை அதிகப்படுத்தி விதைகளின் விலை பெருமளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது. கிலோ ஒன்றுக்கு ரூ. 10 முதல் 12 வரை விற்று வந்த விதைகள் இன்று ரூ. 6 முதல் 8 வரை விற்கப்படுகின்றன.

**உர விநியோகம் :**

உரங்கள் கார்டுகள் மூலம்தான் வழங்கப்பட வேண்டும் என்ற கட்டுப்பாட்டினை 1973ஆம் ஆண்டு முந்தைய அரசு விதிமுறைகள் வகுத்தது. இதன் மூலம் விவசாயிகள் பல தொல்லைகளுக்கு ஆளாக நேர்ந்ததை இவ்வரசு அறிந்து, அம்முறையை அடியோடு ஒழித்ததுடன் உரங்கள் தாராளமாகக் கிடைக்கவும் வழி வகைகள் செய்துள்ளது. இதன் மூலம் உர விநியோகத்தில் இது வரை ஏற்படாத அளவு பெரும் சாதனையை இவ்வரசு ஏற்படுத்தியது.

| | 1974-75 | 1976-77 | 1977-78 |
|---|---|---|---|
| | (இலட்சம் டன்னில்) | | |
| தழைச்சத்து | 1.48 | 1.96 | 2.87 |
| மணிச்சத்து | 0.53 | 0.45 | 0.78 |
| சாம்பல் சத்து | 0.43 | 0.57 | 0.97 |

குறிப்பாக தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம், கோவை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் சென்ற ஆண்டில் விநியோகம் செய்ததை விட இரட்டிப்பு மடங்கு இவ்வாண்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

| | 1976-77ம் ஆண்டின் தழைச்சத்து விநியோகம் (டன்) | 1977-78ம் ஆண்டின் தழைச்சத்து விநியோகம் (டன்) |
|---|---|---|
| திருச்சி | 17,518 | 27,816 |
| தஞ்சாவூர் | 26,565 | 41,736 |
| புதுக்கோட்டை | 2,815 | 4,692 |
| மதுரை | 15,663 | 25,691 |
| இராமநாதபுரம் | 7,585 | 14,518 |
| திருநெல்வேலி | 11,816 | 18,922 |
| கோவை | 28,099 | 45,072 |

**பெயர் மாற்றம் !**

கிராமங்களில் தலையாரி, வெட்டி, நீர்கண்டி என்று அழைக்கப்பட்ட ஊழியர்கள் முறையே கிராமக் காவலர், கிராமப் பணியாளர், பாசனக் காவலர் என்று அழைக்கப்பட வேண்டும் என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வளமான வேளாண்மைக்குத் தரமான விதைகளே அடிப்படை என்பதற்கு இணங்க இவ்வரசு தரமான விதைகளை விவசாயிகளுக்கு வழங்குவதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. இதற்கு உறு துணையாக விதைச் சட்டத்தின் கீழ் விதைச் சான்று இதழ் நிறுவனம் ஒன்று இவ்வாண்டு நிறுவப்பட்டு உள்ளது. இது வேளாண்மை இயக்குநரின் நேரடி மேற்பார்வையில் தனி நிறுவனமாக இயங்கி வரும். இதன் மூலம் வேளாண் பெரு மக்களுக்குச் சான்று இதழ் பெற்ற விதைகள் அதிக அளவு கிடைக்க வகை செய்யப்படும்.

மேலும் விற்பனை மையங்களில் தரமற்ற விதைகள் விற்பனை செய்வதைத் தடுப்பதற்கும் விற்கப்படும் விதைகள் நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்குச் சிறிதும் குறையாமல் இருக்கிறதா என்பதனைப் பரிசோதிக்கவும், தனியே ஓர் ஆய்வகம் இவ்வாண்டு நிறுவப்பட்டது. இது கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்டு மதுரை, கோவை மற்றும் சேலம் மாவட்டங்களில் முன்னோடியாகச் செயல்பட்டு வருகிறது.

தரமான விதைகளின் அதிகப்படியான தேவையைக் கருத்தில் கொண்டு மேலும் ஒரு விதை உற்பத்தி மையம் கோவையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மையம் கோவை, சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களின் தேவையைப் பூர்த்திசெய்யும்.

விதைகளின் தரத்தினையும் தூய்மையையும் சோதிப்பதற்கென ஓர் ஆய்வு மையம் புதுக்கோட்டை மாவட்டம் அண்ணா பண்ணையில் நிறுவப்பட்டுள்ளது.

**பயிர்ப் பாதுகாப்பு :**

இந்த ஆண்டு இது வரை இல்லாத அளவு புரோடீனியா என்ற வெட்டுப் புழு கோவை மாவட்டம் பொள்ளாச்சிப் பகுதியிலும், மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பகுதியிலும் பல பயிர்களைத் தாக்கிப் பெரும் சேதத்தினை உண்டு பண்ணியது. இவற்றினை அறவே ஒழிக்க அரசு உடனடி நடவடிக்கைகள் எடுத்ததுடன் இதற்கான பூச்சிமருந்துகள் 25 சதவிகித மான்ய விலையில் வழங்கவும் உத்தரவிடப்பட்டது. இதற்கு மான்யமாக 4,372 எக்டேருக்கு ரூ. 53,148 செலவிடப்பட்டுள்ளது. இத்தகையதொரு சலுகை விவசாயிகளுக்கு சமீப காலங்களில் வழங்கப்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நெல்லில் தோன்றும் புகையான் பூச்சியைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, மத்திய அரசின் உதவியுடன் ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. மத்திய அரசு முதலில் 8,000 எக்டேர்களுக்கு மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்தது. இவ்வரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க மத்திய அரசு 20,000 எக்டேர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்தது. இத்திட்டத்திற்கென ரூ. 17.74 இலட்சம் செலவிடப்பட்டு, 20,000 எக்டேர்களில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பிட்ட பகுதிகளில் நெல்லைத் தாக்கும் தண்டுப் புழு மற்றும் மணிலாவைத் தாக்கும் சிவப்பு கம்பளிப் பூச்சி மற்றும் சுருள் பூச்சி ஆகியவைகளைக் கட்டுப்படுத்த மத்திய அரசின் உதவியுடன் ஒட்டு மொத்த மருந்துத் தெளிப்பு மேற்கொள்ளப்பட்டது. நெற்பயிர் 34,000 எக்டேர் பரப்பிலும், மணிலாவில் 53,000 எக்டேர் பரப்பிலும் மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்விதம் மருந்து தெளிப்பதற்கு மான்யமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3 வழங்கப்பட்டது. இம்மான்யத்திற்காக மத்திய அரசு ரூ. 7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**ஏற்றம் காண ஏற்ற வழி**

படித்தவன் உழவேண்டும்; உழுபவன் படிக்க வேண்டும். படிப்பவன் அறிவுப் பசியைத் தீர்க்க, உழுபவன் உற்பத்தியைப் பெருக்க, இருசாராரும் இணைந்தால் தானே ஏற்றம் காண முடியும்?

—பேரறிஞர் அண்ணா

இவ்வாண்டு மேலும் புதிதாக 900 விசைத் தெளிப்பான்கள் வாங்கி விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் வாடகைக்கு விடப்பட்டன. எல்லா விவசாயிகளுக்கும் காலத்தே மருந்து தெளிப்பதற்காக மேலும் பல தெளிப்பான்கள் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மான்ய விலையிலும் விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் வழங்கப்படுகின்றன. தீவிர எண்ணெய் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இவ்வாண்டு 5,386 பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இது இதுவரை கண்டறியாத சாதனையாகும்.

தீவிரப் பருத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 550 தெளிப்பான்களும் மான்ய விலையில் வழங்கப்பட்டன.

**இந்திய ஜெர்மானிய நீலகிரி மாவட்ட அபிவிருத்தித் திட்டம் :**

மேற்கு ஜெர்மனி அரசு ஒத்துழைப்புடன் நீலகிரி மாவட்ட அபிவிருத்திக்காக இத்திட்டம் 1967ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் தேதி தொடங்கி 31-3-1977 அன்றுடன் முடிவடைந்தது. நீலகிரி மாவட்ட மலைவாழ் மக்களின் நலன் கருதி இத்திட்டத்திற்கு ஆகும் செலவினைத் தமிழக அரசே ஏற்று இத்திட்டத்தினைத் தொடர்ந்து நடத்திட உத்தேசித்துள்ளது. இதன் மூலம் உருளைக் கிழங்கு மற்றும் காய்கறிகள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்க வழி வகைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின் கீழ், நீலகிரி காய்கறி உற்பத்தியாளர் சங்கத்தின் மூலமாகப் பெருமளவு காய்கறிகள் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இவ்வாண்டு 43.83 இலட்ச ரூபாய் மதிப்பில் 9,583 டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டன. இது இதுவரை கண்டறியாத சாதனையாகும்.

**மலைப் பகுதிகள் அபிவிருத்தி :**

மலைப் பகுதிகள் அபிவிருத்திக்காக, குறிப்பாக நீலகிரி மலைப் பகுதிக்காகத் தனியே ஒரு திட்டமும், பிற மலைப் பகுதிகளுக்கான தனியே ஒரு திட்டமும் செயல்படுத்தப்படுகின்றன.



**நீலகிரி மலைப் பகுதிக்கான திட்டம் :**

இதன் கீழ் 9 திட்டங்கள் செயல்படுகின்றன. இத்திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தாலும் அரசு இப்பகுதி வாழ் மக்களின் நலன் கருதி 1975-76ல் 10.73 இலட்சமும், 76-77ல் 41.15 இலட்சமும் செலவு செய்யப்பட்டிருந்ததை 77-78ல் ரூ. 85.30 இலட்சம் அளவிற்கு உயர்த்தியது. 78-79ல் மேலும் இத்தொகையை ரூ. 110.38 இலட்சத்திற்கு உயர்த்தி ஒதுக்கீடு செய்துள்ளது.

**பிற மலைப் பகுதிகளின் மேம்பாட்டுத் திட்டம் :**

இத்திட்டத்தின் மூலம் மலைவாழ் மக்களுக்கு பழக் கன்றுகளும், கருவிகளும் 50 சத மான்யத்தில் வழங்கப்படுகின்றன. இது நாள் வரை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 18 இலட்சம் முதல் ரூ. 20 இலட்சம் வரை மட்டுமே செலவு செய்து வந்திருந்ததை இவ்வரசு இத்திட்டத்திற்கு 77-78ஆம் ஆண்டில் ரூ. 24 இலட்சம் ஒதுக்கீடு செய்து மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியது.

**ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டம் :**

பல்வேறு திட்டங்கள் செயல்பட்டு வந்தாலும், இவ்வரசு மிகப் பின்தங்கிய மாவட்டங்களில் வேளாண் மக்களின் நல்வாழ்விற்காக ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தை மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தியதில் தீவிர கவனம் செலுத்தியது. இதற்கு முன்னோடித் திட்டமாக தர்மபுரி மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு 69.66 இலட்சம் வேளாண்மைத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன. அடுத்த ஆண்டில் இப்பணி மிக அதிக அளவில் நடைபெற வழி வகைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

**வறட்சிச் சார்புப் பகுதித் திட்டம் :**

அடிக்கடி வறட்சியால் பாதிக்கப்படும் மாவட்டங்களான தர்மபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களின் அபிவிருத்திக்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் பெரும்பான்மையான சிறு விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உற்பத்தியினைக் கணிசமாகப் பெருக்கவும் வழி வகை செய்கிறது. இத்திட்டத்திற்கான செலவை மத்திய அரசும் மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. 1976-77ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 219.43 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இவ்வரசு பொறுப்பேற்ற பின் இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து 77-78 ஆம் ஆண்டில் இதற்கான ஒதுக்கீட்டினை ரூ. 299.02 இலட்சம் என உயர்த்தி திட்டங்கள் நிறைவேற்றப் பட்டன.

**தோட்டக் கலை :**

பெரிய அளவில் பழத் தோட்டங்கள் அமைக்கும் திட்டத்தை இதுவரை தமிழகத்தில் செயல்படுத்தியது இல்லை. பழங்களின் உற்பத்தியைப் பெருக்கவும் வேளாண் பெருமக்களுக்குத் தரமான பழக் கன்றுகள் கிடைக்கவும் பெரிய அளவில் பழத்தோட்டங்கள் அமைக்க அரசு உத்தேசித்து முன்னோடித் திட்டமாகப் புதுக்கோட்டை மாவட்டத்தில் 400 எக்டேர் பரப்பில் ஒரு பழத்தோட்டம் அமைக்க அனுமதியளித்து அதற்கான வேலைகள் தொடங்கப் பட்டுள்ளன.

ரொபாஸ்டா வாழையைப் பெருக்குவதில் அரசு தீவிர நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கு முன்னோடியாக நல்ல தரமான சிறப்புக் கன்றுகள் வழங்குவதற்கு இரண்டு நாற்றங்கால்கள் புதுக்கோட்டை மாவட்டம் முதலைப்பட்டியில் ஒன்றும், வட ஆர்க்காடு மாவட்டம் நவ்வாக்கில் ஒன்றும் இவ்வாண்டு நிறுவப்பட்டுள்ளது.

**வாழையில் முடிக்கொத்து நோய்த் தடுப்பு :**

கொடைக்கானல் மலைப் பகுதிகளில் வாழை சாகுபடியே அழிந்து போகும் நிலையில் கடுமையான அளவில் முடிக்கொத்து நோய் காணப்பட்டது. இவ் வரசு இந்நோயைக் கட்டுப்படுத்த உரிய பாதுகாப்பு முறைகளை உடனடியாகக் கையாண்டு, நோய் தாக்கப்பட்ட தோட்டங்கள் மீண்டும் வளம் காண வழி வகைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாண்டு இத்திட்டம் 36,000 ஏக்கரில் ரூ. 12.47 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன. இந்நோயை அறவே ஒழிக்க இத்திட்டம் வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



**பயிற்சித் திட்டம் :**

உழவர்களுக்குப் பயிற்சி அளிக்க, இம்மாநிலத்தில் ஒன்பது பயிற்சி நிலையங்கள் ஏற்கெனவே இயங்கி வருகின்றன. எனினும் மாவட்டத்திற்கு ஒரு பயிற்சி நிலையம் இருந்தால்தான் உழவர் பெருமக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நிலையம் அமைக்க இவ்வரசு தீர்மானித்து இவ்வாண்டில் புதுக்கோட்டை, கன்னியாகுமரி மற்றும் தர்மபுரியில் மூன்று பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தியது. நடப்பு ஆண்டில் மேலும் மூன்று பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட இருக்கின்றன.

**ஆராய்ச்சிப் பணிகள் :**

இவ்வாண்டு 16 புதிய ரகங்களை வேளாண்மைத் துறை வெளியிட்டுள்ளது. அவை நெல்லில் 2 ரகங்களும், சிறு தானியத்தில் 7 ரகங்களும், பயறு வகைகளில் 4 இரகங்களும், எண்ணெய் வித்தில் 2 ரகங்களும் மற்றும் பருத்தியில் ஒரு ரகமும் ஆகும்.

**நீர்ப் பராமரிப்பு :**

மண் மற்றும் நீர்ப் பராமரிப்பு வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்துள்ளது என்பதனை அறிந்த அரசு புதிய முயற்சியாக மண் மற்றும் நீர்ப் பராமரிப்புப் பணிகளுக்காக மதுரை மாவட்டத்தில் மேலூரிலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகாசியிலும் இரண்டு திட்டங்களை ஆரம்பித்துள்ளது. பெரியார் நீர்ப் பிடிப்புப் பகுதிக்கு மேலூர் மையமும், வறட்சி சார்ப்புப் பகுதிக்குச் சிவகாசி மையமும் செயல்படும்.



**கசிவு நீர்க் குட்டைகள் :**

இத்திட்டம் மிகச் சிறிய அளவிலே நடைபெற்று வந்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் இறைவைப் பாசனப் பகுதிகளை அதிகப்படுத்த முடியும் என எண்ணிய அரசு பெரிய அளவில் திட்டத்தைச் செயல்படுத்த எண்ணி இவ்வாண்டு மட்டும் ரூ. 54.85 இலட்சம் செலவில் 280 கசிவு நீர்க் குட்டைகளை நிறுவியது. தொடர்ந்து பெரும் அளவில் கசிவு நீர்க் குட்டைகளை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**நிலச் சீர்திருத்தம் :**

இப்பணி மேலும் தீவிரப்படுத்தப்பட்டு இவ்வாண்டில் புல்டோசர்களின் உதவியால் 4,600 எக்டேர் நிலம் சமப்படுத்தப்பட்டது. தவிர டிராக்டர்கள் மூலம் 29,324 எக்டேர் நிலம் உழவு செய்யப்பட்டது.

அதிக அளவு பரப்பு நீர்ப்பாசனத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன்



இவ்வாண்டு 4,172 குழாய்க் கிணறுகளும் 2,689 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும் நிறுவப்பட்டன. மேலும் 2,109 கிணறுகளில் துளைகள் இட்டும், 2,215 கிணறுகளை ஆழப்படுத்தியும் அதிக அளவு நீர்ப்பாசனத்திற்கு வழி வகைகள் மேற்கொள்ளப் பட்டன.

கிணறுகளைத் தோண்டுவதற்கும் ஆழப்படுத்துதற்கான நவீன கருவிகள் நம்மிடையே இல்லாத குறையை நீக்க வேண்டி நடப்பு ஆண்டில் ரூ. 116 இலட்சம் செலவில் நவீன 4 ஹாமர் ( Hammer Drill )துளையிடும் கருவிகளை இத்துறை வெளி நாட்டில் இருந்து இறக்குமதி செய்துள்ளது. இக் கருவி மிகவும் கடினமான பாறைப் பகுதிகளிலும் ஒரு நாளைக்கு 120 அடி ஆழம் துளைக்க வல்லது.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரி, திருச் செந்தூர் மற்றும் ஸ்ரீவைகுண்டம் பகுதிகளில் காற்றரிப்பினால் பெரிதும் அவதிக்குள்ளாகிய வேளாண் மக்களின் துயர் துடைக்க 1977ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ரூ. 3.80 இலட்சம் செலவில் காற்றரிப்புத் தடுப்புத் திட்டம் ஒன்றினை மேற்கொண்டது. இதன் மூலம் 10,000 எக்டேர் நிலப்பரப்பு காற்றரிப்பினால் ஏற்படும் பாதகமான விளைவுகளில் இருந்து பாதுகாக்கப்படும். இத்திட் டம் ஐந்து ஆண்டுகளுக்குத் தொடர்ந்து செயல் படும்.

**நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் :**

நடமாடும் மண் பரிசோதனை நிலையம் தமிழகத் தில் மூன்று இடங்களில் இயங்கி வருகின்றன. எனினும், பின்தங்கிய மாவட்டமான இராமநாத புரம் மாவட்ட வேளாண் மக்களின் நலம் கருதி, ஒரு நடமாடும் மண் பரிசோதனை நிலையம் பரமக் குடியைத் தலைமையிடமாகக் கொண்டு இவ்வாண்டு நிறுவப்பட்டுள்ளது. இது, இம்மாவட்ட மக்களின் நெடுங்காலக்குறையைப் போக்குவதாக அமைந்து உள்ளது.

**கோட்ட அளவு மண் பரிசோதனை நிலையங்கள் :**

தற்பொழுது மாவட்டத்திற்கு ஒரு மண் பரி சோதனை நிலையம் இயங்கி வருகிறது. வேளாண்மை மக்கள் அடிக்கடி சென்று மண் வளத்தைப் பரிசோ தனை செய்து கொள்வதற்கு வசதியாக கோட்ட அளவிலும் மண் பரிசோதனை நிலையங்கள் இருக்க வேண்டும் என்று அரசு கருதிய முன்னோடித் திட்ட மாக மதுரை மாவட்டம் தேனியிலும், இராமநாத புரம் மாவட்டம் சிவகங்கையிலும் ஆக இரண்டு கோட்ட மண் பரிசோதனை நிலையங்கள் இவ்வாண்டு நிறுவப்பட்டுள்ளன. இத்திட்டம் மேலும் பல கோட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

**உரம் மற்றும் பூச்சி மருந்துகள் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் :**

இவ்வாண்டு இது வரை காணாத அளவு உரம் மற்றும் பூச்சி மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு உள்ளன. அதிக அளவு விற்பனை செய்யப்படும் பொழுது அவற்றில் ஏற்படும் தரக் குறைவினைத் தடுக்க இவ்வரசு தீவிர கவனம் செலுத்தி மத்திய அரசின் உதவியுடன் இரண்டு பரிசோதனை நிலையங் கள் இவ்வாண்டு நிறுவப்பட்டுள்ளன. திருநெல் வேலி மாவட்டம் கோவில்பட்டியில் நிறுவியுள்ள நிலையம் உரங்கள் பரிசோதனை செய்யவும், செங்கல் பட்டு மாவட்டம் காஞ்சிபுரத்தில் நிறுவியுள்ள நிலையம் பூச்சி மருந்துகள் பரிசோதனை செய்யவும் இயங்கிவரும். இவ்விரண்டு நிலையங்கள் ரூ. 9.58 இலட்சம் செலவில் அமைக்கப்படுகின்றன.

மாவட்டங்களின் மண் தன்மை பற்றி ஆய்வு செய்ய இரண்டு நிலையங்கள் கோவையிலும் தஞ்சை யிலும் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத் திலும் உள்ள மண் தன்மை பற்றி ஆய்வுகளை உட னடியாக மேற்கொள்ள வேண்டும் என்று கருதிய அரசு மேலும் இரண்டு ஆய்வு நிலையங்கள் (ஒன்று வேலூரிலும் மற்றொன்றுபாளையங்கோட்டையிலும்) ரூ. 6.92 இலட்சம் செலவில் இவ்வாண்டு நிறுவி யுள்ளது.

இவ்வாண்டு புதிய முறையாக மணிலாவில் நுண்ணூட்டச் சத்துக்கள் இடும் முறை புகுத்தப்பட்டுள்ளது. இதனைப் பெருமளவில் வேளாண் மக்கள் வரவேற்றதைத் தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் ஆண்டொன்றுக்கு 1,000 டன் நுண்ணூட்டச் சத் துக்கள் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று துவக்கப் பட்டுள்ளது.

**விதை சுத்திகரிக்கும் நிலையங்கள் :**

தமிழகத்தில் இரண்டு விதை சுத்திகரிக்கும் நிலையங்கள் மட்டுமே இயங்கி வந்தன. பெருமளவு தரமான விதைகளை விவசாயப் பெருமக்களுக்கு விநியோகிக்க வேண்டும் என்று கருதிய அரசு மேலும் மூன்று விதை சுத்திகரிக்கும் நிலையங்களை போரூர், சோழவந்தான் மற்றும் கள்ளக்குறிச்சியில் இவ்வாண்டு நிறுவியது. இது போன்று மேலும் இரு நிலையங்கள் திருநெல்வேலி மாவட்டம் கிள்ளி குளத்திலும், கோயம்புத்தூர் மாவட்டம் பவானியி லும் கட்டப்பட்டு வருகின்றன.

'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்பதை நன்கு உணர்ந்துள்ள தமிழக அரசு, விவசாயப் பெருங்குடி மக்களின் நல்வாழ்வில் மிகுந்த அக் கறை கொண்டு, தன்னுடைய சக்திக்கு மீறிய பல சலுகைகளை அவர்களுக்கு வழங்கியுள்ளது. வேளாண்மையைப் பெருக்க —உழவர் வாழ்வில் உவகை பொங்கிட —அரசு கொண்டுள்ள ஈடு பாடும் அக்கறையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிறதல்லவா?

'நோய்நாடி நோயின் முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்'

என்பது திருக்குறள்.

அதற்கிணங்க மருத்துவத் துறை செயல்பட்டாலன்றி மக்கள் வாழ்வு நல்வாழ்வாவது முயற்கொம்பாகிவிடும்.

அந்த வகையிலே அத்துறை செயல்படுவதற்கான ஆக்கபூர்வமாக அத்தனை முயற்சிகளையும் அயராது மேற்கொண்டிருக்கிறது இந்த அரசு. அவ்வாறான அரிய நடவடிக்கைகளிலே ஒன்று தான் மக்கள் நல்வாழ்வுத் துறையின் புதிய அமைப்பான நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஆகும்.

**கிராம மக்களுக்கு மருத்துவ நல்வாழ்வுப் பணிகள் :**

கிராம மக்களுக்கு ஒருங்கிணைந்த நல்வாழ்வுப் பணிகளை அளிக்கும் குறிக்கோளுடன் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டிருந்த போதிலும் ஒரு வட்டாரத்திலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மருத்துவ அலுவலர்கள் சென்று மருத்துவ வசதி அளிக்க முடிவதில்லை. **ஆதலால் 1977-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட புதிய திட்டமான நடமாடும் மருத்துவக் குழுக்களின் மூலம் கிராம மக்களுக்கு மருத்துவ நல்வாழ்வுப் பணிகள் அளிக்கப்படுகின்றன.** இத்திட்டத்தின் கீழ் மூன்று மருத்துவ அதிகாரிகள் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு மருத்துவ அதிகாரி காலையிலும், மாலையிலும் நிலையத்திலேயே தங்கி நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பார். மற்ற இரு மருத்துவர்கள் கிராமப் புற மக்களுக்கு நோய்த் தடுப்பு, நோய்த் தீர்ப்பு, நோய்த் தீர்ப்புக்குப் பின் நலம் பேணுதல் ஆகிய பணிகளை அளிப்பார்கள். ஒவ்வொரு குழுவும் ஒரு நாளில் 6 முதல் 8 கிராமங்களுக்குச் செல்லும். அக் குழு குறிப்பிட்ட கிராமத்திற்கு ஒரு குறிப்பிட்ட நாளில் செல்லும். அவ்வாறு ஒரு வாரத்திற்குள் அந்த வட்டாரம் முழுவதும் சென்று வரும். சிக்கலான நோய் கண்டவர்களை அருகிலுள்ள பெரிய மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பார்கள்.

கிராம மக்களுக்கும் வருகை தரும் நடமாடும் மருத்துவக் குழுவிற்கும் இடையே உடல் நல ஆய்வாளர்கள் சிகிச்சை சம்பந்தமான ஆதாரப் பணிகளைச் செய்கிறார்கள். மருத்துவ அதிகாரியும் மருத்துவக் குழுவும் வருவதற்கு முன்னதாக நியமிக்கப்பட்ட நாட்களில் தகுந்த பிணியாளர்களைச் சிகிச்சைக்காக ஒன்று சேர்ப்பார்கள். மற்ற நாட்களில் வேண்டிய மருத்துவப் பணிகளைச் செய்வார்கள். இவ்வாறாக, மக்களுக்கு மருத்துவப் பணிகள் அவர்கள் இருப்பிடங்களிலேயே அளிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திலும் இது வரை இரண்டு மருத்துவ அதிகாரிகளே இருந்தனர். இப்புதிய திட்டத்தின் கீழ், இப்பொழுது, மூன்றாவது மருத்துவ அதிகாரி ஒருவரும் இருப்பார். இதனால் ஒன்றியத்தில் உள்ள எல்லாக் கிராமங்களையும் கவனிக்க முடியும். இத்திட்டம் ரூ. 7.16 இலட்சம் செலவில் 24 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் துவக்கப்பட்டுள்ளது. இந்தப் புதுமையான திட்டம் துவக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இரண்டு வாகனங்கள் உள்ளன. மருத்துவக் குழுவின் நடமாட்டத்தை மேம்படுத்துவதன் பொருட்டு பெட்ரோல் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மருந்துகள் வாங்குவதற்கென ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 14,000 அல்லாமல் மேலும் ரூ. 10,000 இம் மருத்துவக்குழுக்களின் பணிக்காக அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு மருந்து கலக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய அரசு இந்தியா முழுவதிலும் உள்ள கிராம மக்களுக்கு, சுகாதாரப் பணிகள் மற்றும் மருத்துவ உதவி அளிக்கின்ற வகையில் "சமூக சுகாதாரப் பணியாளர்கள் திட்டத்தை" கடந்த 2-10-77லிருந்து துவக்கியது. இத்திட்டத்தை தமிழ்நாட்டிலும் செயல்படுத்த மத்திய அரசு கோரியது. இதற்கான முழுச் செலவையும் இந்திய அரசு ஏற்றுக் கொள்ளும். எனினும் இத்திட்டத்திற்கு, தமிழ்நாட்டில் ஆதரவு இல்லாதது மட்டுமின்றி, மருத்துவக் கல்விப் பட்டம் பெறும் மாணவர்களும் மருத்துவர்களும் மற்றும் மருத்துவப் பட்ட மேற்படிப்பு மாணவர்களின் நலனைக் கருதி இத்திட்டத்தைத் தமிழ்நாட்டில் செயல்படுத்தவில்லை. இதற்கு மாற்றுத் திட்டமாகத் தமிழ்நாட்டில் துவக்கப்பட்டதுதான் நடமாடும் மருத்துவக் குழுத் திட்டமாகும்.

*130* ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் மூன்றாவது மருத்துவர் ஒருவர் பணியாற்றுகிறார். தமிழ்நாட்டில் மொத்தம் *383* ஆரம்ப சுகாதார நிலையங்களும், *2,880* கிளை நிலையங்களும் இருக்கின்றன. வெளிப்புற நோயாளிகளின் எண்





ணிக்கை அதிகமாயிருப்பதை கருத்தில் கொண்டும் நடமாடும் மருத்துவக் குழுத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தவும் 1978-79ஆம் ஆண்டு 100 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மூன்றுவது மருத்துவர் ஒருவரை நியமிக்க அரசு இப்போது ஆணை பிறப்பித்துள்ளது. ஏற்கெனவே, 24 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் தங்கள் பணிகளைச் செய்து வருகின்றன. 78-79ஆம் ஆண்டில் மேலும் மேற்குறிப்பிட்ட 100 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் பணிகளைத் தொடங்கும். இதற்காக, இவ்வாண்டிற்கு மேலும் 100 மருத்துவ அதிகாரிகளையும், 200 மருந்து கலக்குநர்களையும் நியமிக்கவும், 50 புதிய ஊர்திகளை வாங்கவும், 50 ஊர்தி ஓட்டுநர்களை நியமிக்கவும் அரசு ஆணை பிறப்பித்து உள்ளது. மேலும் 1979-80ஆம் ஆண்டு 153 மூன்றும் மருத்துவர்களையும் 125 நடமாடும் மருத்துவக் குழுக்களையும், 1980-81ஆம் ஆண்டு 134 நடமாடும் மருத்துவக் குழுக்களையும் ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் ஏற்கெனவே நடமாடும் மருத்துவப் பிரிவுகள் ( Mobile Medical Unit ) என்னும் ஒரு திட்டம் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவுகள், தமிழ்நாட்டில் 11 இடங்களில் மட்டுமே உள்ளன. இந்த நடமாடும் மருத்துவப் பிரிவுகள் தொலை தூரங்களில் உள்ள சிறிய கிராமங்களில் உள்ள மக்களுக்கு மருத்துவ வசதி அளிக்கின்றன. இவைகளின் சேவை நோய்த் தீர்ப்புக்கு மட்டுமே பயன்படுகின்றன. நோய்த் தடுப்பு, நோய்த் தீர்ப்புக்குப் பின் நலம் பேணுதல் ஆகிய முறைகளுக்கு இப்பிரிவுகள் பணி புரிவதில்லை. இம் மூன்று பணிகளும் ஒரே அமைப்பில் கிராம மக்களுக்கு அவர்களுடைய இருப்பிடங்களிலேயே கிடைக்க வழி செய்யும் அரிய திட்டமே நடமாடும் மருத்துவக் குழுத் திட்டமாகும்.

**அரசினர் தொழுநோய் மருத்துவ நிலையங்களில் பணியாற்றும் மருத்துவ அலுவலர்களுக்கு ஊக்கச் சலுகைகள் :**

தொழுநோய்க் கட்டுப்பாட்டு நிலையங்களில் பணியாற்றும் எல்லா உதவி மருத்துவர்களும் தொழுநோய் நிவாரணப் பணியில் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தும்படி செய்யவும், அவர்கள் இந்நோய்க்கான சிறப்புச் சிகிச்சை முறையில் உண்மையான ஆர்வம் கொள்ளுமாறு செய்யவும், 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் அரசு பின்வரும் ஆணைகளைப் பிறப்பித்துள்ளது :

* அரசினர் தொழுநோய் மருத்துவ நிலையங்களில் உள்ள எல்லா மருத்துவ அலுவலர்களும் தொழுநோய் நிவாரணப் பணியில் தங்கள் முழு நேரத்தையும் கவனத்தையும் செலுத்தும் பொருட்டு அவர்கள் எந்த வகையிலும் தனித் தொழில் நடத்துவது முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

* மேற்படி மருத்துவ அலுவலர்களுக்கு அப்போது வழங்கப்பட்டு வந்த சம்பள விகிதமான ரூ. 525—25—600—30—690—35—900 என்பது ரூ. 575—25—600—40—1,000 என்பதாக உயர்த்தப்பட்டுள்ளது.

* மேற்படி மருத்துவ அலுவலர்களுக்கு முன்பு வழங்கப்பட்டு வந்த ஈடுசெய் படியான ரூ. 75க்குப் பதிலாக தனித் தொழில் நடத்தாமைக்கான படியாக மாதமொன்றுக்கு ரூ. 100 வழங்கப்பட்டுள்ளது.

* மேற்படி மருத்துவ அலுவலருக்கு மாதமொன்றுக்கு ரூ. 125 வீதம் வழங்கப்பட்டு வந்த தொழுநோய்ச் சிறப்புப் படி மாதமொன்றுக்கு ரூ. 200 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**பள்ளிச் சிறுவர்களுக்குத் தொழுநோய் மருத்துவச் சோதனை செய்யும் திட்டம் :**

தமிழ்நாடு தொழு நோய் பெருமளவு பரவியுள்ள மாநிலம் என்பதாலும், சிறுவர்கள் இந்நோயால் வெகு எளிதாகப் பாதிக்கப்படக் கூடிய பருவத்தினர் என்பதாலும், குழந்தைகள் காப்பகங்களுக்குச் செல்லும் சிறுவர்களுக்கும் தொடக்கப் பள்ளிகளில் படிக்கும் 11 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கும் சத்துணவுக் குறைவு மற்றும் பொதுவாக தீர்க்கப்படக் கூடிய பிற நோய்களைக் குறிப்பாகத் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை—கண்டு பிடிக்கும் நோக்கத்துடன் மருத்துவச் சோதனை செய்யும் திட்டத்திற்கு 1977 நவம்பரில் அரசு ஒப்புதல் அளித்தது. இத்திட்டம் செங்கல்பட்டு, வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், தர்மபுரி, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் மற்றும் தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்களில் நோய் பரவியுள்ள பகுதிகளிலும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் பணியாற்றும் பொருட்டு குடும்ப நலப் பிரிவைச் சேர்ந்த இருநூற்று நாற்பது சுகாதார ஆய்வாளர்களுக்கு ஒரு குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின்போது இவர்களுக்கு, தொழுநோயின் அறிகுறிகளைக் கண்டறியும் முறைகள் பயிற்றுவிக்கப்படும்.

**தொழுநோய், காசநோய் மருத்துவ நிலையங்களில் "முதுநிலைப் பயிற்சி மருத்துவர்களை" நியமிக்கும் திட்டம் :**

மருத்துவப் பட்டதாரிகள் தொழுநோய், காசநோய் ஆகியவற்றுக்கான சிறப்புச் சிகிச்சை முறைகளில் உண்மையான ஆர்வம் கொள்ளுமாறு செய்திடும் பொருட்டு, 1977 அக்டோபரில் அரசு ஐம்பது முதுநிலைப் பயிற்சி மருத்துவர் ( Senior House Surgeons) பதவியிடங்களை ஓராண்டுக் காலத்திற்கு ஏற்படுத்தியது. இப்பதவியிடங்களில் ஐம்பது மருத்துவப் பட்டதாரிகள் (ஆண்கள்) நியமிக்கப்

பட்டு அவர்களுள் இருபத்தைந்து பேர் தொழு நோய்க் கட்டுப்பாட்டு நிலையங்களிலும் மற்றுமுள்ள இருபத்தைந்து பேர் காச நோய் நிலையங்களிலும் பணியாற்றிட அனுப்பப்படுவர். அவ்வாறு அனுப்பப்படுவதற்கு முன்பு இரண்டு மாத காலத்திற்கு அவர்களுக்கு முறையே தொழு நோய், காச நோய் ஆகியவற்றின் தடுப்பு, சிகிச்சை முறைகளில் முறையான பயிற்சி அளிக்கப்படும். மேற்படி பதவியிடங்களில் நியமிக்கப்படுபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 450 வீதம் மதிப்பூதியமாக வழங்கப்படும்.

**இயங்கும் நடமாடும் விபத்து மருத்துவக் குழு :**

பொது மக்களிடமிருந்தோ காவல் துறையினரிடமிருந்தோ விபத்து நடந்து விட்டதற்கான அழைப்பு வந்த உடனேயே விபத்து நடந்த இடத்திற்கே சென்று விபத்துக்குள்ளானவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிப்பதற்காக சென்னை, அரசு பொது மருத்துவமனை மற்றும் அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, ஒவ்வொன்றிலும் மூன்று மருத்துவர்கள், மூன்று அரங்க உதவியாளர்கள் மற்றும் மூன்று ஓட்டுநர்கள் அடங்கிய குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. விபத்து நடந்ததற்கான செய்தி கிடைத்த உடனேயே நடமாடும் விபத்து மருத்துவர் தன்னுடைய குழுவுடன் விபத்து நடந்த இடத்தினை அடைந்து விபத்துக்குள்ளானோருக்கு அளிக்க வேண்டிய முதல் உதவிச் சிகிச்சைகளை அந்த இடத்திலேயே அளிப்பர். மேலும் விபத்துக்குள்ளானோருக்குத் தேவையான கூடுதல் சிகிச்சை அளிக்க வேண்டியதாக இருந்தால் அவர்களை மருத்துவ மனைக்குக் கொண்டு வந்து தேவையான சிகிச்சைகளை அளித்து உதவுவர். மேற்கண்ட நடமாடும் விபத்து மருத்துவக் குழு ஏற்படுத்தப்பட்டதால் அரசுக்கு ஆண்டிற்கு ரூ. 1,38,000 கூடுதல் தொடர் செலவும், ரூ. 1,20,000 தொடராச் செலவும் ஆகும்.

இந்த நடமாடும் விபத்து மருத்துவக் குழுவானது மேற்கண்ட மருத்துவ மனைகளில் மிகவும் திருப்திகரமான சேவையைச் செய்து வருகிறது.

**அரசு இலவச கண் சிகிச்சை முகாம் திட்டம் :**

அரசு இலவசக் கண் சிகிச்சை முகாம் திட்டம் 1972ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தொடங்கப்பட்டது. இலவசக் கண் சிகிச்சை முகாம் செயல்படும் முறையில் காணப்பட்ட சில குறைபாடுகள் அரசின் கவனத்திற்குத் தெரியவந்தன. அதாவது, முன்பு புரை அறுவை செய்துகொண்ட நோயாளிகளுக்குக் கண்களில் தையல் போடப்படுவதில்லை. புரை அறுவை செய்து கொண்டவர்களுக்குக் கண்களில் ஏற்படும் இரணத்தைக் குணப்படுத்துவதற்குரிய கண் நோய் ஆயின்மெண்ட் வழங்கப்படவில்லை. புரை அறுவை செய்து கொண்ட நோயாளிகள் முகாம் முடிந்து வெளியேறும்போது அவர்களுடைய கண்கள் தனித் தனியே பரிசோதனை செய்யப்படாமலேயே ஒரே மாதிரியான மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டு வந்தன. மேலும் அந்த மூக்குக் கண்ணாடிகள் ரூ. 2.50 மதிப்புள்ள தாக-தரத்தில் குறைந்தவையாகவும் உறுதியற்றதாகவும் இருந்தன. புரை அறுவைகள் நிதானமான முறையில் நடைபெறாமல் அவசரமான முறையில் நடைபெற்றதுமன்றி எண்ணிக்கையில் அதிகமாகவும் நடைபெற்று வந்தன. அதாவது சில தினத்தில் 400க்கு மேல் புரை அறுவைகள் செய்யப்பட்டன. இக்குறைகளைக் கண்ணுற்ற இந்த அரசு, இவற்றை நீக்கப் புதிய வழி முறைகளை மேற்கொண்டது. இதன் பயனாக, தற்போது புரை அறுவை செய்து கொள்ளும் நோயாளிகளுக்கு அவர்களது கண் நலத்தினைக் கருத்திற் கொண்டு கண்களில் தையல் போடப்படுகிறது. புரை அறுவை செய்து கொண்ட நோயாளிகளுக்குக் கண்களில் உள்ள இரணம் ஆறுவதற்கான ஒரு ரூபாய் விலையுள்ள கண் நோய் ஆயின்மெண்ட் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றது —ஆயின்மெண்ட் உபயோகப்படுத்தப்பட வேண்டிய விதமும் தெரிவிக்கப்படுகிறது. அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட நோயாளிகள் ஆறு வாரம் கழித்து தனித் தனியே பரிசோதனை செய்யப்பட்டு அவரவர் பார்வைக்கேற்ப ரூ. 20 மதிப்புள்ள தரம் மிக்க உறுதி வாய்ந்த மூக்குக் கண்ணாடிகள் வட்டார வளர்ச்சி அதிகாரி மூலம் நோயாளிகளின் வீட்டிலேயே வழங்கப்படுகின்றன. புரை அறுவை நிதானமாகச் சரிவர நடைபெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தினால் ஒவ்வொரு முகாமிலும் 300 புரை அறுவைக்கு மேல் செய்யக் கூடாது என்றும், ஒரு நாளில் 150 புரை அறுவைகளுக்கு மேல் செய்யக் கூடாது என்றும், ஒரு மருத்துவர் ஒரு நாளில் 30 புரை அறுவைக்கு மேல் செய்யக் கூடாது என்றும் அரசு பணித்துள்ளது. எனவே, தற்பொழுது இலவசக் கண் சிகிச்சை முகாம் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றது.

**மருத்துவக் கல்லூரிக்குத் தேர்வு :**

எம்.பி.பி.எஸ். படிப்புக்கான தேர்வு 1975ல் 'இண்டர்வியூ' முறை மூலம் செய்யப்பட்டது. தேர்வு பெறாத மாணவர்களில் 19 பேர் ரிட் மனு தாக்கல் செய்தனர். அனைத்தும் நிராகரிக்கப்பட்டன.

1976-77ல் இந்தத் தேர்வு முறையானது தகுதியை அடிப்படையாகக் கொண்ட இண்டர்வியூ முறையில் நடைபெற்றது.

1977-78ல், 76-77ஆம் ஆண்டின் நடைமுறையே கையாளப்பட்டது. ஐந்து ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஒன்று தவிர மற்ற நான்கும் நிராகரிக்கப்பட்டன. ஒன்றில் வழக்கு மன்றத்தின் ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும்.





ஜூலை 1977ல் நடைபெற்ற எம்.பி.பி.எஸ். படிப்புக்கான தேர்வு நியாயமானதாகவும் தகுதி அடிப்படையிலும் அமைந்திருந்தது.

'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்'

என்கிற குறளுக்கு ஏற்ப வாழ்வது நம்மில் பெரும்பாலானோர்க்கு நடைமுறைச் சாத்தியமில்லைதான். ஆனாலும் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதனை நம்மால் மறக்கவோ, மறுக்கவோ இயலாது.

நாலரைக் கோடி மக்களின் நல்வாழ்விலே நாட்டம் கொண்ட இந்த அரசு அத்தகைய வாழ்வு அனைவர்க்கும் அமைந்திட, துவளாமல் தொண்டாற்றும் என்பது உறுதி!

---

கடந்த நான்கு ஆண்டுகளில் எம்.பி.பி.எஸ். படிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் விவரம் :

| | 1974-75 சதவிகிதம் | 1975-76 சதவிகிதம் | 1976-77 சதவிகிதம் | 1977-78 சதவிகிதம் |
|---|---|---|---|---|
| பிற்பட்ட வகுப்பினர் ... ... | 51.6 | 51 | 54.7 | 55.1 |
| தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (மலைவாழ் மக்கள்) | 18 | 18 | 18.1 | 18.4 |
| மற்ற வகுப்பினர் ... ... | 30.4 | 31 | 27.2 | 26.5 |







# அறநிலையத் துறையின் அரும் பணிகள்

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று படித்திருக்கிறோம். அந்த ஆலயங்கள் வழிபடும் தலங்களாக மட்டுமல்லாது, அறிவாலயங்களாக, அனாதைச் சிறுவர்களுக்கு ஆதரவளிக்கும் அன்பு இல்லங்களாக விளங்குவதைப் பார்க்க முடிகின்றது.

சமய நிறுவனங்களின் உபரி நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சமூகநலப்பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றன.

செவிடர், ஊமையர் பள்ளிகள், அன்பு இல்லங்கள், நூலகங்கள், சித்த மருத்துவமனைகள், கருணை இல்லங்கள், கல்லூரிகள், தொடக்க நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், நாதஸ்வரப் பள்ளிகள் ஓதுவார்களுக்கான பள்ளிகள், வேத ஆகமப் பள்ளிகள் முதலானவை செவ்வனே செயல்பட்டு வருகின்றன.

கோயில்களைப் புதுப்பித்துச் சீரமைக்க இந்த ஆண்டு கீழ் வருமாறு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது:

| | | ரூபாய் |
|---|---|---|
| (1) | ஆணையாளரின் பொதுநல நிதி | 30,000 |
| (2) | ஆலயங்களில் உபரி நிதி | 4,02,982 |
| (3) | அரசு மான்யம் | 17,01,000 |

இராமேசுவரத்தில் உள்ள இராமநாதசுவாமி ஆலயத்தில் இந்து கலை-கலாச்சாரத் துறை யில் ஒரு டிப்ளமா படிப்பு தொடங்கப்பட்டுள்ளது.

அரிசன மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள கோயில்களைப் புதுப்பிக்க அரசு ரூ. 1 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இதுவரை 36 கோயில்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

நாதஸ்வரம்-தவில் ஆகியவற்றில் பயிற்சி பெறும் மாணவர்களில் 5 + 5 மாணவர்களுக்கு 'வித்வான் டி. என். ராஜரத்தினம் பிள்ளை நினைவு உதவிநிதி' எனும் திட்டத்தின்கீழ் மாதமொன்றுக்கு ஒவ்வொரு மாணவருக்கும் முறையே ரூ. 500, ரூ. 300 வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு உதவிநிதி வழங்கப்படும்.

அறநிலையத்துறையினர் நடத்தும் தேவாரப் பாடசாலைகளில் பயின்று சிறந்த முறையில் தேறிய முதல் மூன்று மாணவர்களுக்கு அவர்கள் ஓதுவார்களாக வேலையில் சேரும்வரை ஆண்டொன்றுக்கு ரூ. 1000 ரொக்க மானியமாகத் தரப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களுக்கு மீண்டும் அறங்காவலர் குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலில் இருந்த போது பரம்பரை அறங்காவலர்கள் அல்லாதவர்கள் அனைவரும் அறங்காவலர் குழுவிலிருந்து 1976 ஜூன் மாதத்திலிருந்து நீக்கப்பட்டனர். அந்த ஆலய நிர்வாகங்கள் தனி அதிகாரியின் நிர்வாகத்தின்கீழ் வந்தன. இவ்வாறு அறங்காவலர் குழுக்கள் கலைக்கப்பட்டு, தனி அதிகாரிகள் நிர்வாகப் பொறுப்பு ஏற்றுக் கொண்ட திருக்கோயில்களின் எண்ணிக்கை சுமார் 12 ஆயிரம் ஆகும். இத்தகைய ஆலயங்களுக்குப் புதிய அறங்காவலர்கள் 3 மாதத்திற்குள் நியமிக்கப்படுவார்கள்.

இவ்வாறு, நமது கலைகளுக்கும் பண்பாட்டிற்கும் கருவூலங்களாகவும், நிலைக் களங்களாகவும் உள்ள கோயில்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு அரசு அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

எங்கள் சேமிப்புத் திட்டங்கள் அனைத்தும்
தங்கள் வாழ்வின் முக்கியமான கட்டங்களில்
கைகொடுத்து உதவிடும்!

மேலும், மேலும் உங்கள் சேமிப்பு வளரத்

துணையாகும்!

TNSC BANK

# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,

(ஒரு ஷெட்யூல்டு வங்கி)

379, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை-600 001.
(தொலைபேசி எண். 20367)
*மற்றும் சென்னையில் உள்ள அதன் கிளைகள்.*

சேயின் நலனே தாயின் பணி.
உங்கள் நலனே எங்கள் பணி.

# சுற்றுலாப் பெருமை



சுற்றுலா, உலகம் தழுவிய நமக்கு மிகுந்த பயன் தரக்கூடிய ஒரு தொழிலாக இன்று விளங்குகிறது. பல நாடுகளின் பொருளாதார மேம்பாட்டிற்குச் சுற்றுலா பெரிதும் உதவியுள்ளது. எனவே, சுற்றுலாவின் முக்கியத்துவத்தை உணர்ந்த தற்போதைய அரசு, தமிழ் நாட்டின் சுற்றுலா வளர்ச்சிக்காகத் தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

புதிய அமைச்சரவை பொறுப்பு ஏற்றவுடன், இம்மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சிக்காக ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றினைத் தீட்டுவதற்கான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**வளர்ச்சியும் விளம்பரமும் :**

சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க சுற்றுலா முகவர்களையும், பயண எழுத்தாளர்களையும் வரவேற்பதன் மூலம் நல்ல பயன் அடையலாம் என்பதால் தமிழக அரசு உலகின் பல்வேறு நாடுகளைச் சார்ந்த 60 பயண எழுத்தாளர்களை, ''தென்னகத்தை நோக்கி'' எனும் திட்டத்தின் கீழ் செப்டம்பர் '77ல் வரவேற்று உபசரித்தது.

இத்திட்டம் மத்திய அரசின் சுற்றுலாத் துறை, ஏர் இந்தியா, இந்தியன் ஏர்லைன்ஸ், தென் மாநிலங்கள் ஆகியவற்றின் கூட்டு முயற்சி ஆகும். அவர்களுக்காகத் தென்னிந்தியாவின் கலாச்சாரம், சுற்றுலா முக்கியத்துவம் பெற்ற இடங்கள் போன்ற மற்றும் பல்வேறு அம்சங்களைக் குறித்து ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் முதலமைச்சரும், செய்தி - சுற்றுலா அமைச்சரும் பங்கேற்றனர். சென்னை, மாமல்லபுரம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களை இப்பயண எழுத்தாளர்கள் பார்வையிட்ட பின்னர் தென்னகத்தைச் சுற்றிப் பார்க்க முப்பிரிவுகளாக அழைத்துச் செல்லப்பட்டனர். தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்பு மிக்க இடங்களை (Tourism Potential) யாவரும் தெரிந்து கொள்ளும் வகையில் பல்வேறு நாளிதழ்களில் சுற்றுலாச் சிறப்பு மலர்கள் வெளியிடப்பட்டன. இதன் பயனாக இந்தப் பயண எழுத்தாளர்கள் தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்புகளை விளக்கிக் கட்டுரைகளையும், படங்களையும் அவர்கள் நாட்டுப் பத்திரிகைகளில் வெளியிட்டார்கள்.

அகில உலக பசிபிக் கடற்கரைப் பகுதிச் சுற்றுலா முகவர்கள் சங்க 27வது ஆண்டுக் கூட்டம் டில்லியில் சனவரி 1978ல் நடைபெற்றது. அதில் 2,000 சுற்றுலா நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். அக் கூட்டத்திற்குச் சென்னை வழியாகச் சென்ற நூற்றுக்கும் அதிகமான பிரதிநிதிகளை இத்துறை வரவேற்றுச் சிறப்பித்தது. அக்கூட்டத்திற்கு முன்னதாகக் கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடலுக்குச் (Work Shop) சென்றவர்களையும் இத்துறை உபசரித்தது. இப் பிரதிநிதிகளை வரவேற்பதற்கு விமான நிலையத்தில் சிறப்பான ஏற்பாடுகளை இத் துறை செய்து இருந்தது. அவர்கள் சென்னை, மாமல்லை, காஞ்சி போன்ற இடங்களைச் சுற்றிப் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டது. இத்துறை செய்திருந்த ஏற்பாடுகளைப் பாராட்டி நிறையக் கடிதங்கள் வந்துள்ளன. தமிழகத்தில் சுற்றுலாப் போக்குவரவை அதிகரிக்க அவர்கள் உதவி அளித்துள்ளார்கள். இக்கூட்டத்தை யொட்டி புதுதில்லியில் உள்ள அசோகா ஓட்டலில் நடைபெற்ற ''பசிபிக் அணி வகுப்பு'' எனும் பொருட்காட்சியில் இத்துறையும் பங்கு கொண்டது. இதனல் நல்ல விளம்பரம் கிடைத்தது.

இந்தியப் பயண முகவர்களின் 29வது ஆண்டுக் கூட்டம் ஏப்ரல் 7ஆம் தேதி முதல் 12ஆம் தேதி வரை பெங்களூரில் நடைபெற்றது. தமிழக அரசு இதில் பெரிய அளவில் பங்கு பெற்றது. அக்கூட்டத்தை ஒட்டி நடத்தப்பட்ட பொருட்காட்சியில் இத் துறை அரங்கு

அமைத்து முதல் பரிசு பெற்றது. 'தமிழ் நாடு மாலை' (Tamil Nadu Evening) வெஸ்ட் எண்ட் ஓட்டலில் கொண்டாடப்பட்டது. இதில் தமிழ் நாட்டின் கலாச்சாரங்களை வெளிப்படுத்தும் வகையில் சங்கீதம், நாட்டியம், கிராமியக் கலை போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டன. பிரதிநிதிகளுக்கு விருந்தும் ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழகத்தின் சிறப்பு மிக்க சைவ, அசைவ உணவுகளும் பரிமாறப்பட்டன. நிகழ்ச்சிக்கு ஒருமித்த பாராட்டுக்கிடைத்தது. செய்தி-சுற்றுலா அமைச்சர் அவர்கள் சுற்றுலா முகவர்களை நேரில் சந்தித்து அவர்களுக்கு அரசு ஒத்துழைப்பை நல்கும் என்று உறுதியளித்தார்.

கைவினைப் பொருட்கள், கைத்தறி, பீங்கான் மற்றும் சுற்றுலாச் சிறப்புகளை விளக்கும் வகையில் வண்ணப் படங்கள் கொண்டு தமிழ் நாடு அரங்கு அமைக்கப்பட்டது. நடுவர் குழுவிற்குத் தலைமை வகித்த திரு இந்தர் சேத்தி, ஏர் இந்தியா வணிக இயக்குநர் அவர்கள் பரிசு வழங்கும் விழாவில் பேசும்போது, 'இந்தியப் பயண முகவர்கள் மாநாடு எதிர்பார்த்த எல்லாச் சிறப்புகளையும் தமிழ் நாடு அரங்கு பெற்று இருந்தது' என்று பாராட்டி முதல் பரிசான 'வசந்த கோதக் சுழற்கேடயத்'தைத் தமிழ் நாடு அரசிற்கு வழங்கினார். (Vasanth Kodak Trophy) இதனால் தமிழகத்திற்கு நல்ல விளம்பரம் கிடைத்தது.

பெங்களூரில் நடந்த இந்தியப் பயண முகவர்களின் மாநாட்டில் இத்துறை எடுத்துக் கொண்ட முயற்சியின் தொடர்ச்சியாக செய்தி—சுற்றுலா அமைச்சர் அவர்கள் 11-5-78 அன்று தமிழ் நாட்டில் உள்ள சுற்றுலாத் தொடர்புள்ள பிரதிநிதிகளின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டினார். முன்னணி ஓட்டல் அதிபர்கள், விமானக் கம்பெனி பிரதிநிதிகள், பயண முகவர்கள் ஆகியோர் யாவரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு, சுற்றுலா மேம்பாட்டிற்காக அரசு எடுக்க வேண்டிய பலவித முயற்சிகளைப் பற்றி விளக்கிக் கூறினர்.

தமிழ் நாட்டில் உள்ள சுற்றுலா இடங்களைப் பற்றி விரிவான தகவல்கள் அடங்கிய பல வண்ண வெளியீடு ஒன்றும் கொண்டுவரப்பட்டுள்ளது.

1977 நவம்பரில் தில்லியில் நடைபெற்ற வேளாண்மைப் பொருட்காட்சியில் சுற்றுலாத் துறை பங்கேற்றது.

கொடைக்கானலில் இரு தொலை நோக்காடிகள் ஒன்று ''கோக்கர்ஸ் வாக்' எனுமிடத்திலும், மற்றொன்று ''குறிஞ்சி ஆண்டவர் ஆலயத்தின்' அருகாமையிலும் 1977ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டன. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இத்தொலை நோக்காடிகள் ரூ. 1.60 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டன. மிகத் தொலைவில் அமைந்துள்ள வைகை அணையின் அழகு மிகு காட்சிகளையும், பழனி ஆண்டவர் ஆலயத்தின் வடபகுதியையும், இத்தொலை நோக்காடிகளின் வழியாக மக்கள் கண்டு



களிக்க முடிவதால், இது மிகவும் சிறப்புப் பெற்றுள்ளது. கொடைக்கானலில் உள்ள ஏரியை அழகுபடுத்துவதற்காக ரூ. 58,100 சென்ற ஆண்டு செலவிடப்பட்டது.

1978-79ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கைகள், மேலும் அதனுடைய மேம்பாட்டுப் பணிகளுக்குக் கூடுதலாக ரூ. 2.03 இலட்சம் செலவு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஏர்க்காடு ஏரியை மேம்படுத்துவதற்காக ரூ. 2.06 இலட்சம் ஏற்கனவே வழங்கப்பட்டு, அப்பணியும் நடைபெற்று வருகின்றது. மேலும் இதனுடைய மேம்பாட்டுப் பணிக்கு ரூ. 1.5 இலட்சம் 1978-79ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்த மரங்கள் மண்ணில் புதையுண்டு, தற்போது பாறைபோல் கடினமாகத் தோற்றமளிக்கும் பகுதியான தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள திருவக்கரைக்குச் செல்ல அணுகுசாலை அமைப்பதற்கு ரூ. 1 இலட்சம் வழங்கப்பட்டு அவ்வேலை விரைவில் முடிவடையும் நிலையில் உள்ளது.

கீழ்க்காணும் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களை, 1978-79ல் செயற்படுத்துவதற்கு, சுற்றுலாத் துறையின் சார்பாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் செயற்படுத்தி வருகின்றது.

கோடை, ஏர்க்காடு ஏரிகளை மேலும் மேம்படுத்துதல்.

இராமேஸ்வரம், மற்றும் குருசடை தீவிற்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக மண்டபத்தில்



ஓய்விடமும், படகுத் துறையும் ரூ. 2 இலட்சம் செலவில் அமைத்தல்.

பிச்சாவரத்தில் ரூ. 3.5 இலட்சம் செலவில் (அடிப்படை வசதிகளான) படகுத் துறையும், படகு வீடும் அமைத்தல்.

மாமல்லபுரத்தில் மத்திய, மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு, தங்குமிடம் ரூ. 3.10 இலட்சம் செலவில் அமைத்தல். இதற்கான நிலத்தைக்கையகப்படுத்தும் தொகையும் இதில் அடங்கும்.

ஆவுடையார் கோயிலிலும், விராலிமலையிலும் ரூ. 75,000 செலவில் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல்.

## 1977-78-ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சாதனைகள்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் 13 சுற்றுலா மாளிகைகளை நிர்வகித்து வருகிறது; சொகுசுப் பேருந்துகளில் பல்வேறு சுற்றுலாப் பயணங்களுக்கு ஏற்பாடு செய்து நடத்தி வருகிறது. உதகையில் உல்லாசப் படகு விடுதலும் இக்கழகத்தால் நடத்தப்பட்டு வருகிறது.

உதகையில் உள்ள சுற்றுலா மாளிகை 76 அறைகள் கொண்டது. சராசரி ஆண்டு முழுவதற்கும் 80 சதவிகிதம் அறைகள் வாடகைக்கு விடப்படுகின்றன. கூடுதல் தங்கும் வசதி இவ்விடத்தில் தேவையெனக் கருதப்பட்டதால் எட்டுக் குடில்கள் (Cottages) கட்டும் பணியை இக்கழகம் மேற்கொண்டது. ஒரு சில மாதங்களில் இக்குடில்கள் கட்டி முடிக்கப் பெறும். மாமல்லபுரம், கோடைக்கானல் ஆகிய இரு இடங்களிலும் மாநாடுகள் நடத்துவதற்கேற்ற அரங்குகள் கட்டி முடிக்கப்பட்டன. கடந்த 1977-78 ஆண்டில் பல்வேறு திட்ட வேலைகளுக்காகச் சுமார் ரூ. 30.28 இலட்சம் செலவிடப்பட்டது.

### போக்குவரத்து :

தென்னகத்து மாநிலங்களை உள்ளடக்கிய சுற்றுலாப் பயணங்களை ஏற்பாடு செய்து நடத்துவதில் இக்கழகம் தனிப் பெருமை தேடிக் கொண்டுள்ளது. மொத்தம் 10 சொகுசுப் பேருந்துகள் உள்ளன. அவற்றில் 9 இந்தியா முழுவதும் செல்லக் கூடிய அனுமதி பெற்றவை. ஆறு வகைச் சுற்றுலாப் பயணங்களை நடத்தி வருகிறது. இச்சுற்றுலாப் பயணங்கள் தமிழகத்தில் உள்ள எல்லா முக்கியச் சுற்றுலா இடங்களையும் அண்டை மாநிலங்களில் சில இடங்களையும் சுற்றுலாப் பயணிகள் சென்று பார்க்க வகை செய்கிறது. கப்பல் படையைச் சார்ந்தோர் மற்றும் சாதாரணக் கப்பல்களில் பணி புரியும் அலுவலர்களுக்கும் சிறப்புச் சுற்றுலாப் பயணங்கள் ஏற்பாடு செய்யப்படுகிறது. இவற்றைத் தவிர கழகத்தின் பேருந்துகள் பொது மக்களுக்கும் பயண முகவர்கள் போன்றவர்களுக்கும் வாடகைக்கு விடப்படுகின்றன.

### நெடுஞ்சாலை ஓய்விடங்கள் (Motels)

1977-78ஆம் ஆண்டில் சாலைவழிச் செல்லும் சுற்றுலாப் பயணிகளின் சௌகரியத்தைக் கருத்தில் கொண்டு இராணிப்பேட்டை, உளுந்தூர்ப்பேட்டை ஆகிய இடங்களில் தேசிய நெடுஞ்சாலைக்கருகில் ஓய்விடங்கள் (Motels) கட்டும் வேலை மேற்கொள்ளப்பட்டது.

இராணிப்பேட்டையில் உள்ள நெடுஞ்சாலை ஓய்வு விடுதி ரூ. 8 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. இது 1978 ஜூலை மாதத்தில் திறக்கப்பட உள்ளது.

இந்தச் சாலைவழி ஓய்விடங்களின் இரவில் தங்கும் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

### அகில இந்திய சுற்றுலா-வர்த்தகப் பொருட்காட்சி......

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னையில் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியை ஆண்டு தோறும் நடத்துகிறது. இவ்வருடம் 24 ஏக்கர் பரப்பளவில் 5-வது தடவையாகப் பொருட்காட்சியை நடத்தியது. 255 அரங்குகள் இப்பொருட்காட்சியில் அமைக்கப்பட்டன. தென்னிந்தியாவிலேயே இது மிகவும் பெரிய பொருட்காட்சியாகும்.




இப்பொருட்காட்சி பல வகை மனமகிழ்வு வாய்ப்புக்கள் மட்டுமல்லாது மக்களுக்குப் படிப்பினை ஊட்டுவதாகவும் அமைந்திருந்தது. இப்பொருட்காட்சியின் வாயிலாகச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ. 5.5 இலட்சம் இலாபமாகக் கிடைத்தது.

### சித்திரைச் சுற்றுலாப் பொருட்காட்சி, 1978........

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் முன்னிலையில், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் 12-4-'78 அன்று இப்பொருட்காட்சியைத் தொடங்கி வைத்தார். இப்பொருட்காட்சியை எட்டு இலட்சம் மக்கள் கண்டு களித்தனர். இப்பொருட்காட்சியின் மூலம் ரூ. 3 இலட்சம் இலாபம் கிடைத்தது.

# போராட்டங்களும் அரசின் அணுகுமுறையும்

தமிழகத்தில் 17 மாத காலம் நடைபெற்ற குடியரசுத் தலைவர் ஆட்சி முடிவுற்று, அச்சமற்ற நேர்மையான தேர்தல் நடைபெற்றது. 30-6-1977ல் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 'மக்களாட்சி' மலர்ந்தது!

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, கடந்த ஓராண்டுக் காலத்தில் துறைதோறும் நடைபெற்றுள்ள பணிகளைப் பட்டியல் போட்டு மகிழ்கின்ற இந்த நேரத்தில், கடந்த ஓராண்டில் தொடர்ந்து மாணவர்கள் போராட்டம், பஸ் தொழிலாளர்கள் போராட்டம், விவசாயிகள் போராட்டம் என்று பல போராட்டங்களையும், கிளர்ச்சிகளையும் தமிழக அரசு சந்திக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. போராட்டங்களை எப்படியும் அடக்க வேண்டும் என்ற பழி வாங்கும் உணர்வுக்குச் சிறிதளவும் இடம் கொடுக்காமல், மனிதாபிமான உணர்வுடன், சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்து பேசி, பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்க்க வேண்டும் என்னும் சீரிய அணுகுமுறையை இவ்வரசு கையாண்டு வந்துள்ளது.

## விவசாயிகள் போராட்டம் :

1970, 1972, 1978 ஆகிய ஆண்டுகளில் இதுவரை மூன்று விவசாயப் போராட்டங்கள் நடந்துள்ளன. போராட்டத்தின் முக்கியக்கோரிக்கையாக மின்சாரக் கட்டணக் குறைப்புத்தான் வைக்கப்பட்டது.

**மின்கட்டண உயர்வு :**

1971ல் மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 9 காசாக இருந்தது. முன்பிருந்த தி.மு.க. அரசு இதனை 1.1.72லிருந்து 12 காசாக உயர்த்தியது. இதன் விளைவாக, தமிழகமெங்கும் விவசாயப் போராட்டம் வெடித்தது.

இதன் விளைவாக 100 யூனிட்டுக்குமேல் மின்சாரம் உபயோகப்படுத்துவதற்கு மட்டும் யூனிட் மின் கட்டணத்தை 12 காசிலிருந்து 11 காசாக தி.மு.க. அரசு குறைத்தது. 1974ல் அதை14காசாகவும், நாட்டில் அவசர நிலை அமலில் இருந்தபோது 1975 செப்டம்பரில், 16 காசாகவும் மீண்டும் உயர்த்தியது.

**அரசின் முதல் நடவடிக்கை :**

ஆனால் இன்றைய அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் செய்த முதல் உன்னதமான காரியம் மின்கட்டணத்தை 16 காசிலிருந்து 14 காசாகக் குறைத்ததுதான்.

இதனால், மின்சார வாரியத்திற்கு ஆண்டொன்றுக்கு 2.5 கோடி ரூபாய் கூடுதல் இழப்பு ஏற்பட்டது. ஏற்கெனவே விவசாயத்திற்கு அளிக்கப்படும் மின் சலுகைகளால், மின் வாரியத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 40 கோடி இழப்பு ஏற்பட்டுக் கொண்டிருந்தாலும், உழவுத் தொழிலின் முக்கியத்துவத்தையும் வேளாண் பெருங்குடி மக்களின் பிரச்சினைகளையும் நன்குணர்ந்துள்ள இன்றைய அரசு, தன் இரத்தத்தையும் பாலாக மாற்றித் தருகிற தாய் போல், கூடுதல் இழப்பையும் பொருட்படுத்தாமல் விவசாயிகளுக்குத் தன் சக்திக்கும் மீறிய சலுகைகளை வழங்க முன் வந்தது.

**விவசாயிகள் பிரச்னை : தனிக் குழு அமைப்பு :**

விவசாயிகளின் கோரிக்கைகளை ஆராய்ந்து பரிசீலனை செய்வதற்காக 1977, டிசம்பரில் அரசு ஒரு குழுவை நியமித்தது. குழுவை அமைத்த கையோடேயே, கீழ்க்கண்ட சலுகைகளையும் அறிவித்தது:

*1-3-77 முதல் 31-11-77 சேர்ந்துள்ள விவசாயிகள் செலுத்த வேண்டிய பம்பு செட்டுகளுக்கான மின் கட்டண வசூலிப்பு, குழுவின் அறிக்கை வரும் வரை நிறுத்தி வைக்கப்படும். மின் இணைப்புத் துண்டிக்கப்பட மாட்டாது.

*வறட்சிக் காலத்தில் செலுத்த வேண்டிய மின் பாக்கிக்காக, மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தால் மீண்டும் மின் இணைப்புத் தரப்படும். தவணை தவணையாகப் பாக்கித் தொகையைச் செலுத்தவும் வகை செய்யப்படுகிறது.

*1-12-77 முதல் உபயோகிக்கப்படும் மின்சாரத்திற்கு, தற்போது நடைமுறையிலுள்ளபடியே வசூலிக்கப்படும்.

*விவசாயப் போராட்டத்தினைத் தொடர்ந்து, விவசாயிகளின்மீது போடப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்படும்.

கோரிக்கைகளை ஆராயும் குழுவின் அறிக்கை வருவதற்கு முன்பே பல்வேறு சலுகைகளை அளித்த அரசின் இந்த அறிவிப்பு, விவசாயிகள்மீது அரசு கொண்டுள்ள பரிவான அணுகுமுறையைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

**விவசாயிகளுக்குப் பல சலுகைகள் :**

இதற்கும் முன்பாகவே, இந்த அரசு பதவியேற்றதிலிருந்து மேலும் பல சலுகைகளை விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது:

1. மோட்டா ரக நெல்லின் கொள்முதல் விலையைக் குவிண்டாலுக்கு ரூ. 90 ஆகவும், நடுத்தர நெல்லுக்கு குவிண்டால் விலையை ரூ. 95 ஆகவும் உயர்த்தியது.

2. கூட்டுறவு விவசாயக் கடன்கள் வசூலிப்பது, அறுவடை முடியும் வரை ஒத்தி வைக்கப்பட்டது.

3. கூட்டுறவு விவசாயக் கடன்களுக்கான வட்டி 12.6 சதவிகிதத்திலிருந்து 12 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

4. மதுரை, கோவை மாவட்டங்களில் பருத்தி, கம்பு போன்ற பயிர் வகைகளுக்கு உர வகைககள், பூச்சி மருந்துகள் 25 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது.

5. கரும்பின் அகில இந்திய விலையை டன்னுக்கு ரூ. 85 என்று மத்திய அரசு நிர்ணயித்த போதிலும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் மூலம் டன் ஒன்றுக்கு ரூ. 100 முதல் ரூ. 125 வரை சர்க்கரைத் தரத்தின் அடிப்படையில் விலை கிடைக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.

மீண்டும் 7-4-78ல் இவ்வரசு மேலும் பல சலுகைகளைச் சட்டமன்றத்தில் அறிவித்தது.

கூட்டுறவுக் கடன் வசூல் இன்னும் இரண்டு மாத காலத்திற்கு அறுவடைக் காலம் முடியும் வரை ஒத்தி வைக்கப்படும் என்று அரசு அறிவித்தது. சட்டமன்றத்தில் இந்த அறிவிப்பு வந்து கொண்டிருக்கிறபோதே, வெளியில் போராட்ட ஆவேசக் குரல்கள் கேட்டன. விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த சில குறிப்பிட்ட பிரிவினர் போர்க் கொடி உயர்த்தினர்கள். சாலைப் போக்குவரத்துகள் தடைசெய்யப்பட்டன. போக்குவரத்து வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டன. இத்தடைகளை நீக்குவதற்காகச் சென்ற காவல் துறையினரின் ஜீப்புகள் தீக்கிரையாக்கப்பட்டன. மக்கள் பேருந்துகளிலிருந்து ஈவிரக்கமின்றி இறக்கப்பட்டனர்; பேருந்துகள் கொளுத்தப்பட்டன.

**போராட்டம் என்ற பெயரால்....**

அதுமட்டுமல்லாமல், சாலைகளைக் குறுக்கே வெட்டி, வெட்டப்பட்ட மண்ணால் தடைச் சுவர் எழுப்பினர்கள்.

விவசாயிகள் போராட்டம் என்னும்பெயரால், சட்டம்-ஒழுங்கைக் குலைக்க முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒரு சதியேயாகும் இது. பாலங்களை வெடி வைத்துத் தகர்ப்பது, இடித்துத் தகர்ப்பது—இவையெல்லாம் அப்பாவி ஏழை எளிய விவசாயிகளின் செயலாக—அவர்கள் செய்கின்ற காரியங்களாக நிச்சயம் இருக்காது. இப்போராட்டத்தின் பின்னணியிலிருந்து இப்படிப்பட்ட நாசவேலைகளில் நன்கு பழக்கப்பட்ட ஒரு கூட்டம் இதை இயக்கியது என்றே கூற வேண்டியுள்ளது.

என்றைக்குமே இந்த அரசுக்குப் பழி வாங்கும் உணர்வு இல்லை. பரிவுணர்ச்சிதான் உண்டு. உள்ளும் புறமும் இப்பரிவுணர்ச்சி ஊடாடுவதால்தான், உடனே விவசாயச் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி அரசு மேலும் 13 சலுகைகளை வாரி வழங்கியது:

அச்சலுகைகள் 'விவசாயிகளுக்குத் தமிழக அரசு வழங்கும் சலுகைகள்' என்ற அரசு வெளியீட்டில் தெளிவாக இடம் பெற்றுள்ளன.

**தாராள மனப்பான்மை:**

விவசாயப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் மேலுள்ள வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. கைது செய்யப்பட்ட அனைவரும் நிப்பந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார்கள்.

தாராள மனப்பான்மை, தயை நோக்கு இவைகளுடனேயே ஒவ்வொரு கட்டத்திலும் விவசாயிகளின் பிரச்சினையை இவ்வரசு அணுகி வந்திருக்கிறது. அதிகாரப் போக்குடன் அல்ல என்பதை நல்லிதயம் படைத்த எவருமே மறுக்க முடியாது. மறக்க முடியாது!

## மாணவர்கள் போராட்டங்கள்:

இந்த அரசு பதவியேற்று எண்ணி முப்பது நாள் கூட ஆகவில்லை. மாணவர் போராட்டங்கள் 26-7-77ல் மாநிலத்தில் ஆங்காங்கே தொடங்கப்பட்டு—பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து நடைபெற்றது.

26-7-77ல் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் ஊர்வலமாகச் சென்றனர். நகரின் எல்லா வழித் தடங்களுக்கும் செல்லும் வகையில் இலவச பாஸ் வழங்க வேண்டுமென்பது மாணவர் கோரிக்கை.

**முதல்வர்-மாணவர்கள் சந்திப்பு:**

27-7-77ல் பச்சையப்பன் கல்லூரி மாணவர் போராட்டம் நடந்தது. பேருந்துகளை வழிமறித்தனர். பயணிகளுக்கும் மாணவர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. மற்ற கல்லூரி மாணவர்களும் போராட்டத்திற்கு ஆதரவாய், தலைமைச்செயலகம் நோக்கி ஊர்வலம் சென்றனர். சட்டக் கல்லூரி மாணவர்கள் செயலகத்திற்குள் நுழைந்தனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே வெளியே வந்து மாணவர்களைச் சந்தித்து மாணவர்களின் கோரிக்கைகளைப் பொறுமையுடன் கேட்டார். அவர்களின் கோரிக்கைகள் சிலவற்றிற்கு அந்த இடத்திலேயே மாண்புமிகு முதல்வர் ஏற்பளித்தார்.

4-8-77ல் மீண்டும் மாணவர் போராட்டம்! மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாணவப் பிரதிநிதிகளுடன் நடத்திய நேரடிப் பேச்சுவார்த்தையால் போராட்டம் திரும்பப் பெறப்பட்டது.

29-8-77ல் கல்லூரி முதல்வர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் கூட்டத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டி மாணவர் பிரச்சினைகள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

**இவையனைத்தும் இந்த அரசின் புதிய அணுகுமுறைக்கு அசைக்க முடியாத சான்றுகளாய் நின்று, பின்வரும் உண்மைகளை மக்கள் மன்றத்தின் முன் தெளிவாக்குகின்றன.**

நியாயமான பிரச்சினைகளை அனுதாபத்தோடு கவனித்தல், மாணவர், பெற்றோர், கல்லூரி முதல்வர்கள் ஆகியோருடன் கலந்தாலோசித்தல், இதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணல்.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நேரடியாக மாணவர்களைச் சந்தித்தல்; பிரச்சினைகளுக்கு விரைந்து சுமுகமான தீர்வு காணல்.**

மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் மோதல் ஏற்படும் நேரங்களில் தலையிடுவது தவிர, பிற வகையில் காவல் துறையினர் தலையீடு என்பது கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

எல்லாக் கட்டங்களிலும், எவ்வளவு மோசமான நிலைமை உருவானாலும் பிரச்சினைகளை உயிர்த்துடிப்போடு, உன்னதமான நோக்கோடு அணுகி நிவர்த்திக்க முயல்வது, பேச்சளவில் அல்ல-செயல் வடிவம் பெற்று ஒரு புது அத்தியாயமே இந்த ஓராண்டில் உருவாக்கப்பட்டுள்ளது.

பயிற்சி மருத்துவர்கள் வேலைநிறுத்தத்தின் போது முதலமைச்சர் அவர்களே நேரடியாகச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியது குறிப்பிடத் தக்கதாகும்.

மதுரைக் கல்லூரி மாணவர்களின் போராட்டம் வன்முறையில் திசை திருப்பிவிடப்பட்டபோது —என்.சி.சி. துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டு அவர்களில் சிலர் வன்முறையில் ஈடுபட்டபோது—அதனை அடக்கக் காவல்துறையினர் முயன்றதில் சில மாணவர்கள் காயமுற்றனர். காயமுற்ற மாணவர்களை மதுரை மருத்துவமனைக்குச் சென்று கவனிக்க, சென்னையிலிருந்து தேர்ச்சி பெற்ற மருத்துவ வல்லுநரைத் தமிழக முதல்வர் அவர்கள் அனுப்பியதோடு

மட்டுமல்லாமல், முதல்வரே நேரில் சென்று காய முற்றவர்களைப் பார்வையிட்டார்கள்.

**மாணவர்க்கு உறுதுணை :**

மாணவர் பிரச்சினை என்பது எப்பொழுதுமே ஒரு சிக்கலான பிரச்சினைதான். இந்நாட்டின் எதிர் காலத்தின் வழிகாட்டிகளாக, தலைமைப் பொறுப் பேற்கிறவர்களாக வரவேண்டியவர்கள் மாண வர்கள். அவர்களின் வளர்ச்சிப் பாதையில் தடைக் கல்லாக எதுவும் நடைபெறக் கூடாது என்பதை இந்த அரசு மிக நன்ருக உணர்ந்திருக்கிறது. அதே சமயத்தில் சில கட்டங்களில் வன்முறை வடிவம் எடுக்கும்பொழுது, அவ்வன்முறைச் செயல்களால் அவற்றுடன் சம்பந்தப்படாத பொதுமக்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது என்பதில் இந்த அரசு தீவிர அக்கறை கொண்டுள்ளது. எந்த ஓர் அரசுக்குமே மாணவர் பிரச்சினை என்பது ஒரு சிக்கலான பிரச்சினைதான். ஆனுலும், ஆத்திரமூட் டப்பட்டாலும், அமைதியுடன் பிரச்சினைகளை அணு குவதன் மூலம் மாணவர்களுக்கு உறுதுணையாகவும், அதே நேரத்தில் மக்கள் சமுதாயத்திற்கு உற்ற நண்பனுகவும்—பொதுமக்களின் அன்ருட வாழ்க்கை பாதிக்கப்படாத வகையில் பார்த்துக் கொள் ளும் பாதுகாவலனுகவும் தமிழக அரசு செயல்பட்டு வருகிறது.

## போக்குவரத்துத் தொழிலாளர் போராட்டம்:

**வன்முறையும் நன்முறையும் :**

30-6-77-ல் இன்றைய அரசு பொறுப்பேற்ற தென்ருல், ஒருமாத கால இடைவெளிக்குப் பின்னுல் 27-8-77-ல் போக்குவரத்துத் தொழி லாளர் போராட்டம் தொடங்கியது. கல்வீச்சு, கடமையுணர்வோடு வேலைக்குச் செல்லும் ஊழியர் களைத் தடுத்தல் ஆகியவை அந்தப் போராட்டத்தில் முக்கிய அங்கங்களாயின.

போராட்டத்தை ஒடுக்குவதில், போராடு வோரின் உணர்வுகளை அப்படியே பிரதிபலிப்பது ஒருமுறை எனினும், இந்த அரசு அந்த முறை யினைக் கையாளவில்லை. வன்முறை என்பது நன் முறையல்ல என்று வலியுறுத்திய அமரர் அண்ணு வின் வழி நடக்கும் அரசாதலால், புயல் வேகத் தில் வந்த தொழிலாளர்களை, அரசு தென்றல் வேகத்திலேயே அணுகி அமைதிப்படுத்தியது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன், அவர்களது கோரிக்கைகளை நிவர்த்திப்பது தொடர்பான அரசின் கருத்துப்பரிமாற்றம் தொடர்ந்து நடை பெற்றது. அந்தக் கலந்துரையாடலின் முடிவு நன்முடிவாகவே அமைந்தது.

செப்டம்பர் 3-ஆம் நாளன்று போக்குவரத் துத் தொழிலாளரின் அந்தப் போராட்டம் திரும்பப் பெறப்பட்டது.

**அணுகுமுறை அன்றும்—இன்றும் :**

1975-ல் தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறையிலும் பல்லவன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களும் போராட்டம் துவக்கியபோது அன்றிருந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் இங்கே நினைவுகூரத்தக்கவை.

அன்றைய அரசு, கோரிக்கைகளை முன்வைத் துப் போராடிய தொழிலாளர்கள்மீது அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டது. அவர்களு டைய கோரிக்கைகளிலே செம்பாதிகூட அல்ல ஒரே கோரிக்கைகூட ஏற்றுக் கொள்ளப்படவில்லை. போராட்டம் அடக்கி ஒடுக்கப்பட்டது.

அதுமட்டுமல்ல; அன்றைய தினம் இந்தப் போராட்டத்திற்குக் காரணமூனர்கள்மீது, காரணமில்லாமலே பழிவாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தொழிலாளர் நலனில் அன்றிருந்த அரசுக்கும், இன்றிருக்கும் அரசுக்கும் எவ்வளவு வேறுபாடி ருக்கிறது பார்த்தீர்களா?

அடக்குமுறையினுலே அல்ல; அமைதி முறை யினுலேயே தொழிலாளர் நலனைக் காப்பது என்ப தில் எத்தனை இன்னலானுலும் அதை இன்முகத் தோடு ஏற்பதைத்தான் இந்த அரசு பெருமையாகக் கருதுகிறது.

**திரும்பவும் வேலை :**

1973-ல் நடைபெற்ற போராட்டங்களிலே பங்கேற்ருர்கள் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக அன்று பழிவாங்கப்பட்டனர், 98 பல்லவன் வரத்துக் கழகத் தொழிலாளர்கள்! அவர்கள் அனை வருக்கும் திரும்ப வேலைதந்து, அவர்கள் முகத் திலே அரும்பும் மகிழ்ச்சி கண்டு இறும்பூதெய்திய அரசு இன்றைய அரசு!

இந்த ஆண்டு மேத் திங்கள் 8ஆம் நாள்கூட போக்குவரத்துத்துறை தொழிற்சங்கப் பிரதிநிதி களிடமிருந்து, 16ஆம் நாளன்று போராட்டம் தொடங்கப்படவிருப்பதாக அறிவிப்பொன்று வெளியாயிற்று.

அதனை அறிந்த இந்த அரசு 'என்னதான் நடக்கும் நடக்கட்டுமே!' என்று வாளாவிருக்க வில்லை. 'எதைச் சந்திக்கவும் நாங்கள் தயார்' என கரடுமுரடான தர்பார் வாசகங்களிலே பதில் சொல்லவில்லை.

அந்த அறிவிப்பு வந்ததுமே-மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரும், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து அவர்களது கோரிக்கைக் குறித்துப் பேச்சுவார்த்தை நடாத்தி னர்.

அதன்முடிவில்-போராட்டம் திரும்பப் பெறப் பட்டது. இப்படிப்பட்ட அணுகுமுறையிலே எப் படிப்பட்ட போராட்டத்தையும் இந்த அரசு இல் லாமலாக்கிவிடுவது சொல்லாமல் விளங்கக்கூடிய தாகும்.

**கேட்காமலே கொடுக்கப்படும் !**

நெருக்கடி நிலைக் காலத்தில் போக்குவரத்துத் துறையில் சிறு குற்றங்களுக்கெல்லாம் வேலைநீக்கம் போன்ற பெருந்தண்டனைகள் அளிக்கப்பட்டன. அவையாவும் மறுபரிசீலனை செய்யப்பட்டு இந்த அரசு அவர்களை மீண்டும் வேலைபெறச் செய்தது. கடுந்தண்டனை என்பதே பெருமளவில் குறைக்கப் பட்டது.

போக்குவரத்துத் தொழிலாளர்கள் கேட்ட டால்தான் கிடைக்குமென்பதில்லை; அவர்கள் கேட்காமலே பல்வேறு சலுகைகள் இந்த அரசின் மூலம் அளிக்கப்பட்டிருக்கின்றன.

43 ஆயிரம் போக்குவரத்துத்துறைத் தொழி லாளர்களின் நலனைக் காப்பதில் இன்றைய அரசு பெரிதும் கவனமாகச் செயல்பட்டு வருகிறது. 'வாழ்வதிலும் நலம் சூழ்வதிலும் புவி மக்களெ லாம் ஒப்புடையார்' எனப் புரட்சிக் கவிஞர் பாரதி தாசனுர் பாடியதற்கேற்ப, தொழிலாளர் இல்லந் தோறும் மகிழ்ச்சி தேக்கிடுவதிலே இந்த அரசு கொண்டுள்ள அக்கறை குன்ருது! குறையாது!

## ஆசிரியர்கள் போராட்டம் :

'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்' என்ப தனை இந்த அரசு பெரிதும் உணர்ந்தே செயல் பட்டு வருகிறது. ஆசிரியப் பெருமக்களின் குறைகள் அவ்வப்போது களையப்படுவதே அதற் கான எடுத்துக்காட்டு உதாரணமாகும்.

கல்லூரி-பல்கலைக்கழக ஆசிரியர்களின் நீண்ட நெடுநாளைய கோரிக்கையான, பல்கலைக்கழக ஊதியக் குழுவின் சம்பள விகிதத்தைச் செயல்படுத்திச் சிறப்புற்றது இந்த அரசு.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த ஆண்டு டிசம்பர் திங்களில் மதுரைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் பல்கலைக்கழகத் தேர்வுகளைப் புறக்கணித்தார்கள். அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலே சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சில கல்லூரி ஆசிரியர்களும் அடையாள வேலை நிறுத்தம் செய்யலாயினர்.

இந்த நிலை நீடித்தால் கல்வி வளர்ச்சியிலே மந்த நிலை ஏற்பட்டுவிடும் எனக் கருதியது அரசு. ஆசிரியர்களின் போராட்டத்தினாலே மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை விளக்க, போராட்டத்தைத் திரும்பப் பெறுமாறு அறிக்கை விடப்பட்டது.

**முதல்வர்-ஆசிரியர்கள் சந்திப்பு:**

*10*-ஆம் தேதியன்று அப்போராட்டத்தின் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே போராடும் ஆசிரியப் பெருமக்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர், அரசுத் தலைமைச் செயலாளர் ஆகியோரும் அந்தக் கலந்துரையாடலிலே பங்கேற்றனர்.

ஆசிரியப் பெருமக்களின் பெரும்பான்மையான கோரிக்கைகளுக்கு அப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காணப்பட்டது. அதன் விளைவாகப் போராட்டம் முற்றுப் பெற்றது. ஆசிரியப் பெருமக்களும் அரசின் அணுகுமுறை கண்டு வியந்து, அளித்த சலுகைகளை மனத்தில் நிறுத்தி நெஞ்சார்ந்த நன்றியை இன்றைய அரசுக்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

## மீனவர் பிரச்சினைகள்:

தரைமேல் பிறக்க வைத்தான்; எங்களைத் தண்ணீரில் பிழைக்கவைத்தான்' என்று ஓலமிடும் உள்ளத்திற்குச் சொந்தக்காரர்கள் மீனவர்கள். அப்படி அல்லல் வாழ்வை நடாத்தும் அவர்கள் அண்மையில் ஒரு தொல்லை நிலைக்கு ஆளாயினர்.

பெருவாரியாக மின்விசைப் படகுகள் அறிமுகம் செய்யப்பட்டதால் மீன்பிடிப்பதில் விசைப்படகு மீனவர்களுக்கும், கட்டுமர மீனவர்களுக்கும் இடையிலே மோதல்கள் மூண்டன; கலவரங்கள் கிளைவிட்டன.

வழிவழியாகக் கட்டுமரத்தினைப் பயன்படுத்துவோர், விசைப்படகுகளின் வரவினாலே தங்கள் தொழில் பாதிக்கப்படுவதாக உணர்வது இயல்பே. அதன்காரணமாக அவர்களிடையே மூண்ட தகராறுகளைத் தவிர்ப்பதில் அரசு கொண்ட அக்கறை மகத்தானது.

எப்போதெல்லாம் இப்படிப்பட்ட பிரச்சினைகள் எழுகிறதோ, அப்பொழுதெல்லாம் — மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மீன்வளத்துறை அதிகாரிகளும் உடனுக்குடன் தலையிட்டு அவர்களிடையே அமைதி நிலவுவதற்கான ஆக்கப்பூர்வமான காரியங்களை ஆற்றியுள்ளனர்.

இந்தப் பிரச்சினை மீனவர்களுக்குள்ளேயே— இருசாரார்க்கு இடைப்பட்டு நடப்பதேயல்லாமல், அரசுக்கும், மீனவர்களுக்கும் இடையிலான பிரச்சினையல்ல.

ஆகவே, அதனைத் தீர்த்து வைப்பதில் அரசு மிக மிகக் கவனமாகச் செயல்பட்டது.

கடந்த ஆண்டு நவம்பரிலும், இந்த ஆண்டு ஏப்ரலிலும் அவ்வாறான பிரச்சினைகள் தலைதூக்கிய போது, மாண்புமிகு உணவு-மீன்வளத்துறை அமைச்சர், சென்னை, செங்கற்பட்டு, தஞ்சை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விசைப்படகு—கட்டுமர மீனவர்களுடன் பயன்மிகு பேச்சுவார்த்தை நடத்தினார்.

இருசாராரும் ஏற்கத்தக்க நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. முடிவுகள் தெரிவிக்கப்பட்டன, கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. மீன்பிடி தொழிலில் மீனவர்களுக்கு இடையிலிருந்த குழப்பங்களும், கொந்தளிப்பு நிலையும் அரசு மேற்கொண்ட அந்த முயற்சியினாலே மிக எளிதாகத் தீர்த்து வைக்கப்பட்டன.

## அரசு ஊழியர் போராட்டம்:

**புதிய அரசு பொறுப்பேற்றதுமே உடனடியாக அரசு ஊழியர்களின் குறைகள் பற்றியும் கோரிக்கைகள் குறித்தும் ஆராய்ந்து முடிவெடுத்திட மூன்றாவது ஊதியக் குழு அமைக்கப்பட்டது.**

அக்குழு ஆக்கபூர்வமான பணியில் ஈடுபட்டிருந்தபோதே-கடந்த பிப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களில் அரசு ஊழியர்கள் போராட்டம் துவங்கியது. *15* அம்சக் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டது.

போராட்டம் அமைதியின் எல்லைகளுக்குள் இருக்கும்வரை, அரசு அனுமதித்தது. அலுவலகங்கள் முன்பு அமைதியான முறையில் மறியல் செய்தபோதும் பொறுத்தது. வேலைக்குச் செல்லும் ஊழியர்களிடம் விரும்பத்தகாத முறையில் நடக்க ஆரம்பித்தபோதுதான், அப்படிச் செய்தவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது அரசு மூலமாக!

பிப்ரவரி, *1975*-ல் முந்தைய அரசு இருந்த போது, நடைபெற்ற அரசு ஊழியர்கள் போராட்டம், இவ்வேளையில் ஒப்புநோக்கத்தக்கது. அவ்வேளையில் அரசிதழ் பதிவிலா ஊழியர் சங்கத்தின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டது. அதுபோல், இப்போது செய்யப்படவில்லை.

பழிவாங்கும் நோக்கம் இம்மியளவும் எழாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, அரசு பெருந்தன்மையுடன் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியது.

இரண்டு முறை மாண்புமிகு முதலமைச்சரே அரசு ஊழியர்களுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். மூன்றாவது ஊதியக் குழுவின் முன்னுள்ளவை தவிர, பிற கோரிக்கைகள், ஏற்கெனவே உடன்படிக்கையில் உள்ள கோரிக்கைகள் ஆகியவைமீது உடனடியாக முடிவுகள் அறிவிக்கப்பட்டன. மனிதாபிமான, நேச நோக்கில் நடந்து கொண்டதால் விளைந்த நலன்கள் இவை என்றால் மிகையல்ல!

கோரிக்கைகளுக்காகப் போராடுவதை இந்த அரசு தடை செய்யவில்லை. போராடுபவர்களின் பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதை இந்த அரசு ஒருபோதும் கௌரவப் பிரச்சினையாகக் கொண்டதில்லை.

போராட்ட நேரங்களில் 'அரசின் அணுகுமுறைகள் இருந்தவிதமே இன்றைய அரசின் சீருக்கும் சிறப்புக்கும் எடுத்துக்காட்டாகும்!

# பெருமை கொள்கிறோம்; பெருமகிழ்ச்சி அடைகிறோம்!

கடந்த ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாளன்றுதான் தமிழகத்திலே புதிய அமைச்சரவை ஆட்சிப் பொறுப்பேற்றது. திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்றார்.

பாட்டாளிகளின் கூட்டாளி எனப் புகழப்படும் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களின் அமைச்சரவைப் பதவியேற்பு விழா சென்னை—ராஜாஜி மண்டபத்தில் சீரோடும் சிறப்போடும், நல்லிதயங்களின் வாழ்த்தோடும் நடைபெற்றது.

ராஜாஜி மண்டபத்திலே அரசுச் சார்பிலான பதவியேற்பு விழா முடிவுற்றதும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அண்ணாசாலையில் உள்ள அமரர் அண்ணா திருவுருவச் சிலையினை வந்தடைந்தார்.



கடல் நடுவே மிதக்கும் கப்பலெனத் திகழ்ந்தது அங்கு அமைக்கப்பட்டிருந்த அலங்காரமேடை; மக்கள் வெள்ளத்தில்! அங்கே அன்றைய தினம்—நமது முதல்வர் அவர்கள் ஆற்றிய அரிய உரை, வரலாற்றுப் பெருமையுடையதாகும். அந்த உரைவருமாறு:

“அன்புக்குரிய தாய்க்குலமே! என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புக்களே! இதய தெய்வம் அண்ணாவின்மீது ஆணையிட்டு இங்கே உறுதி எடுக்க விரும்புகிறேன்.

“அங்கே—ராஜாஜி மண்டபத்தில் நடந்தது அரசாங்கச் சடங்கு, ஆனால் இங்கே நடப்பது உங்களின் கட்டளையை எதிர்பார்த்து நடக்கும் சடங்கு.

“மக்களின் குரலே மகேசன் குரல்” என்ற அண்ணாவின் தத்துவப்படி, மக்களின் பிரதிநிதிகள் நாங்கள் என்ற எண்ணம் தவறாமல் இந்த அரசாங்கத்தை நடத்துவோம்.

“எங்கள் அமைச்சரவையின் சார்பில் தமிழகத்தில் உள்ள மக்களுக்கும், இந்தியத் துணைக் கண்டத்தின் பிற மாநிலங்களில் வாழுகின்ற தமிழ் மக்களுக்கும் நாங்கள் உழைப்போம்.

“மக்களின் எண்ணங்களை—மக்களின் விருப்பங்களைச் சட்டமாக்கவும், அவர்களது தேவைகளை நிறைவேற்றவும்தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் சட்டமன்றத்திற்கு அனுப்பப்படுகிறார்கள், என்று அமரர் அண்ணா அவர்கள் சொன்னதைப்போல அதனை உள்ளத்திலே இருத்தி, இலஞ்ச லாவண்யம் இல்லாத—ஊழலற்ற—நீதித்துறையில் நிர்வாகம் தலையிடாத அரசை நடத்துகின்ற மாபெரும் பணியைச் செவ்வனே செய்ய உயிரைக் கொடுத்தாகிலும் பாடுபடுவோம்.

“எங்களது வாழ்வு, வசதிகள் அத்தனையும் இழக்கவேண்டிய நிலை வந்தாலும் அதற்காக எதிர்ப்படுகிற அத்தனை தடைகளையும் எதிர்த்து எங்கள் கடமைகளை நிறைவேற்றுவோம்.

“இதனை, அமரர் அண்ணா அவர்களின் மீது ஆணையிட்டு அமைச்சரவையின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

“இப்பொழுது, உங்களது ஆசி பெற்று எங்களது பணியைத் தொடரச் செல்கிறோம்.

“அண்ணா நாமம் வாழ்க!”

—இவ்வாறு தமிழக முதல்வர் அவர்கள் அன்றைய தினம் கொள்கை முழக்கம் செய்தார்.

இந்த ஓராண்டுக் காலத்தில், முதல்வர் அவர்கள் வலியுறுத்திய கொள்கைகள் அரசுத் துறைதோறும் கண்ணும் கருத்துமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதனைக் காண்கிறோம்.

இந்த ஓராண்டில்—பொறுப்பேற்ற புதிய அரசு சந்தித்த போராட்டங்கள் ஏராளம். ஆனாலும், அவற்றைத் தவிர்க்கும் முயற்சியிலேயே காலம் கடத்திடாமல், தவிர்க்கும் முயற்சி ஒரு பக்கம்; நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தும் முயற்சி மறுபக்கம் என்ற வகையிலே தமிழக அரசின் பணிகள் அமைந்திருப்பதை அகிலம் பாராட்டுகிறது!

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்று சொன்ன சொல்லில் அணுவளவும் பிசகாமல்—

நாடு நலம்பெற—

நன்மை விளைந்திட—

நாளும் உழைத்திடும் இந்த அரசின் ஆக்கபூர்வமான திட்டங்களைப் பொதுமக்களுக்கு எடுத்துரைக்க வாய்ப்புக் கிடைத்தமைக்காகப் பெருமை கொள்கிறது ‘தமிழரசு’! பெருமகிழ்வும் அடைகிறது!



# அரசு சந்தித்த போராட்டங்கள்

**மா**ண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையிலான தமிழக அரசு இரண்டாவதாண்டில் அடியெடுத்து வைக்கின்ற இந்த நேரத்தில், கடந்த ஓராண்டுக் காலத்தில் மட்டும் அரசு சந்தித்த போராட்டங்களையும் கிளர்ச்சிகளையும் பட்டியல் போட்டுக் கீழே காட்டியுள்ளோம்

**26-7-77**

சென்னையில் ஐந்து கல்லூரிகளின் மாணவர்கள் போராட்டம்.

**27-7-77**

மாணவர்கள் சட்டசபைக் கட்டடத்திற்கு முன் ஆர்ப்பாட்டம்.

**12-8-77**

தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் போராட்டம்.

**16-8-77**

சென்னையில் மாணவர்கள் — பொது மக்கள் மோதல்.

**17-8-77**

கோவை மாவட்டத்தில் 65 ஆயிரம் ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்.

**18-8-77**

சென்னை எம். சி. ராசா அரிசன விடுதி மாணவர்களுக்கும் — பொது மக்களுக்கும் மோதல்.

**18-8-77**

சட்டக் கல்லூரி மாணவர்கள் ஊர்வலம்.

**21-8-77**

என்பீல்டு தொழிற்சாலையின் தொழிலாளர் ஊர்வலம்.

**22-8-77**

மதுரையில் பாண்டியன் போக்குவரத்துக் கழக பஸ் தொழிலாளர்கள் நான்காயிரம் பேர் வேலை நிறுத்தம்.

**23-8-77**

காஞ்சி கலெக்டர் அலுவலகம் முன்பு 500 கிராம அதிகாரிகள் ஊர்வலம்— உண்ணாவிரதம்.

திருப்பாதிரிப் புலியூரில் தென் ஆர்க்காடு மாவட்ட கிராம அதிகாரிகள் உண்ணாவிரதம்.

சென்னை சட்டக்கல்லூரி மாணவர்கள் ஊர்வலம்.

**24-8-77**

இலங்கையில் தமிழர் படுகொலையைக் கண்டித்து சென்னையில் 5 இலட்சம் பேர் ஊர்வலம். பஸ்கள், டாக்சிகள் ஓடவில்லை. கடைகள் அடைக்கப்பட்டன.

**27-8-77**

பல்லவன் போக்குவரத்து ஊழியர்கள் வேலை நிறுத்தம். கல்லூரிகள் மூடப்பட்டன.

**27-8-77**

செமஸ்டர் தேர்வுமுறையை எதிர்த்து மதுரை தியாகராசர் கல்லூரி மாணவர்கள் ஊர்வலம்.

**28-8-77**

தொடர்ந்து வேலைநிறுத்தம்.

**1-9-77**

தஞ்சை சரபோஜி கல்லூரி மாணவர்கள்—சோழன் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் மோதல்—கல்லூரி மூடப்பட்டது.

**5-9-77**

பயிற்சி டாக்டர்கள், மருத்துவக் கல்லூரி மாணவர்கள் உண்ணாவிரதம்.

**6-9-77**

மதுரையில் கல்லூரி மாணவர்கள் பஸ் கண்டக்டர்கள் மோதல்.

**7-9-77**

தமிழ்நாடு முழுவதுமுள்ள பயிற்சி டாக்டர்கள், மருத்துவக் கல்லூரிகளின் மாணவர்கள் உண்ணாவிரதம்.

**8-10-77**

தஞ்சை மருத்துவக் கல்லூரி முதல்வரை கேரோ செய்தனர்.

**13-10-77**

சென்னையின் அடுத்த பாடியில் உள்ள டி. வி. எஸ். தொழிலாளர்களுக்கும் போலீசாருக்கும் இடையே மோதல்.

**19-10-77**

விசைப்படகு மீனவர்களுக்கும் கட்டுமர மீனவர்களுக்கும் இடையே மோதல்—பஸ்களை நிறுத்தி மறியல் செய்தனர்.

**29-10-77**

மதுரையில் திருமதி இந்திரா காந்திக்கு எதிராகக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம்.

திருச்சியில் இந்திரா காந்திக்கு எதிராகக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம்.

**30-10-77**

சென்னையில் இந்திரா காந்திக்கு எதிராகக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம்.

கைது செய்யப்பட்ட தி. மு. க. தலைவர்களை விடுதலை செய்யக்கோரி கடையடைப்பும் – ஊர்வலமும்.

வேலூர், கோவை, தஞ்சை, காஞ்சி முதலிய பல்வேறு நகர்களிலும் அமளி.

**31-10-77**

சென்னையில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்-தமிழ்நாடு எங்கும் கலவரம் – மோதல்கள்.

**2-11-77**

சென்னையில் ஆட்டோ-டாக்சி ஓட்டுநர்கள் வேலை நிறுத்தம்.

**3-11-77**

சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்.

**1-12-77**

சென்னையில் கல்லூரி மாணவர்கள் ஊர்வலம்—பஸ்களின் மீது கல்வீச்சு.

**5-12-77**

மதுரைப் பல்கலைக் கழகக் கல்லூரிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் மறியல் —மாணவர்கள் போராட்டம்.

சென்னையில் பஸ்தொழிலாளர்கள்— மாணவர்கள் மோதல்.

**6-12-77**

தொடர்ந்து, மாணவர்கள் பஸ்களில் கல் வீசினர்.

**9-12-77**

கேள்வித் தாள்களைக் கிழித்தெறிந்து மதுரைப் பல்கலைக் கழகக் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்.

**13-12-77**

சென்னையில் கல்லூரி ஆசிரியர்கள் ஊர்வலம்.

**15-12-77**

தாம்பரம் அருகே மிராசுதாரர்கள்—விவசாயத் தொழிலாளர்கள் மோதல்.

**18-12-77**

மீனவர்கள் மோதல்.

**19-12-77**

18 ஊர்களைச் சேர்ந்த-பொதுப்பணித் துறையிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட என்ஜினியர்கள், தலையை மொட்டை அடித்துக் கொண்டு ஊர்வலம்.

மீனவர்கள் மோதல்.

**21-12-77 30-12-77**

என்ஜினியர்கள் உண்ணாவிரதம்.

**9-1-78**

தமிழ்நாடு அடித்தள அரசு ஊழியர்கள்—ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சித்துறை ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் கோட்டையை நோக்கி ஊர்வலம்.

**11-1-78**

பல்லவன் பஸ் ஊழியர்கள் (மூன்று பணிமனைகளைச் சேர்ந்தவர்கள்) திடீர் வேலை நிறுத்தம்.

**27-1-78**

சென்னையில் 4 மருத்துவமனைகளைச் சேர்ந்த சுமார் 500 பயிற்சி டாக்டர்கள் வேலை நிறுத்தம்.

கோவை அரசினர் மருத்துவமனையைச் சேர்ந்த 175 பயிற்சி டாக்டர்கள் வேலைநிறுத்தம்.

**28-1-78 - 1-2-78**

சென்னையில் 8 மருத்துவக் கல்லூரிகளின் பட்ட மேற்படிப்பு மாணவர்களும் பயிற்சி டாக்டர்களும் வேலைநிறுத்தம்.

**2-2-78**

கல்லூரி ஆசிரியர்கள் 800 பேர் கோட்டையை நோக்கி ஊர்வலம்.

**8-2-78**

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த இரு டிப்போக்களில் திடீர் வேலை நிறுத்தம்.

**9-2-78**

பல்லவன் போக்குவரத்து ஊழியர்கள்—மாணவர்கள் மோதல்.

**13-2-78 - 27-2-78**

தமிழ்நாடு முழுவதுமுள்ள என்.ஜி.ஓ.வினர் அந்தந்த மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முன்பும், வட்டாட்சி அலுவலகம் முன்பும் ஆர்ப்பாட்டம்.

**16-2-78**

சென்னையில் கல்லூரிகளின் பேராசிரியர்கள் ஊர்வலம்.

**22-2-78 - 13-3-78**

என்.ஜி.ஓ.வினர் போராட்டம்.

**3-3-78 - 13-3-78**

ஊதிய உயர்வு கோரி, தமிழ்நாடெங்கும் என்.ஜி.ஓ.வினர் திடீர் வேலை நிறுத்தம்—ஊர்வலம் முதலியன.

**8-3-78**

கோர்ட்டுகள் மூடப்பட்டன.

மாநகராட்சிப் பள்ளிகள், மாநகராட்சி ஊழியர்கள் வேலைநிறுத்தம்.

அரசினர் பொதுமருத்துவமனை டாக்டர்கள், செவிலியர்கள் வேலை நிறுத்தம்.

மருந்துகலக்குநர்கள், செவிலியர்கள், துப்புரவுப் பணியாளர்கள் வேலை நிறுத்தம்.

**12-3-78**

சென்னை ஆசிரியர் கில்டு ஊர்வலம்.

**3-4-78**

10 ஆயிரம் மீனவர்கள் ஊர்வலம்.

**7-4-78**

மீண்டும் விவசாயிகள் போராட்டம். வட ஆர்க்காடு மாவட்டத்தில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்.

**9-4-78**

விவசாயிகள் போராட்டம். சேலம் ராசிபுரம் அருகே தாளம்பாக்கத்தில் ஒரு பாலத்திற்கு வெடிகுண்டு வைக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் 2 பஸ்களைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

கள்ளக் குறிச்சியில் ஓர் எக்ஸ்பிரஸ் பஸ் தீயிடப்பட்டது.

போலீசார் மீது வெடிகுண்டு வீச்சு.

**31-5-78**

தமிழ்நாடு முழுவதும் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முன்பும், வட்டாட்சியர் அலுவலகம் முன்பும் 6,000 விவசாயிகள் தர்ணா.

**13-6-78**

விவசாயிகள் போராட்டம் — இரண்டாவது கட்டம்.

**14-6-78**

சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகம் முன்பும் விவசாயிகள் உண்ணாவிரதம்.

**15-6-78**

தமிழகம் முழுவதும் விவசாயிகள் உண்ணாவிரதம்.

**16-6-78**

விவசாயிகள் கிளர்ச்சி.

**18-6-78**

விவசாயிகள் தீக்குளிக்க முயற்சி.

கோவையில் விவசாயிகள் உண்ணாவிரதம்.

கோவை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திற்கு விவசாயிகள் கோவணத்தோடு ஊர்வலமாகப் போய் மறியல் செய்தனர்.

**20-6-78 - 21-6-78**

தொடர்ந்து விவசாயிகள் கிளர்ச்சி; ஏராளமான பெண்களும் கலந்து கொண்டனர்.

**22-6-78**

சென்னையில் 2,000 விவசாயிகள் ஊர்வலம்.

# அரசு ஆற்றிய பணிகளில் சில...

புதிய அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்ட பின்னர் ஆற்றியுள்ள பணிகள்-வகுத்துள்ள முக்கியத் திட்டங்களில் சில இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

1977-78-ஆம் ஆண்டில் கல்வித்துறையில் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ள தொகை ரூ: 176 கோடி. இது மாநிலத்தின் மொத்தச் செலவினத் தொகையில் 24 சதவீதமாகும்.

1977-78-ஆம் ஆண்டில் ஏறத்தாழ 1100 ஆசிரியர் பதவிகள் அனுமதிக்கப்பட்டன. 1978-1979-ல் 1000 உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களையும் 200 தமிழாசிரியர்களையும் 200 உடற்பயிற்சி ஆசிரியர்களையும் நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இப்போதைய அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு கல்லூரிக் கல்விக்காகச் செலவிடும் தொகை இருமடங்காகப் பெருகியுள்ளது.

வாழ்க்கையில் வசதியற்ற தமிழ்ப் புலவர்களுக்கு மாதம் ரூ. 100 உதவித் தொகை வழங்கப்படுகிறது.

பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரைப்படி-கல்லூரி ஆசிரியர்களுக்குத் தரும் சம்பள விகிதத்தை அரசு உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் அளித்தல்.

ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ-இந்திய மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளித்தல்.

கம்பர், வள்ளலார் போன்ற தமிழ்ச் சான்றோர்களைச் சிறப்பிக்கும் வகையில் ஒரு தமிழ்ப் பண்பாட்டு மையத்தை உருவாக்க அரசு முடிவெடுத்துள்ளது.

தமிழகத்தின் புகழ்பெற்ற கவியரசர் கண்ணதாசன் அவர்களை அரசவைக் கவிஞராக நியமித்துள்ளது.

800 உயர்நிலைப் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகளை அமைத்தல்.

பள்ளி இறுதித் தேர்வில் 'கம்பார்ட்மெண்டல்' முறையை அறிமுகம் செய்தல்.

துவக்கப் பள்ளிகளில் முதல் மூன்று வகுப்பு வரையிலும் எல்லா மாணவர்களுக்கும் தேர்ச்சி வழங்குதல்.

சென்னையில் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைக்க முடிவு.

ஆண்டுதோறும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாள் விழாவின் போது சிறந்த தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாயும், பதக்கமும் கொண்ட பாவேந்தர் பாரதிதாசனார் விருது வழங்கப்படுகிறது. இவ்வாண்டு கவிஞர் சுரதா அவர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1972-லிருந்து தமிழ்நாட்டில் மின்வெட்டு இருந்தது. இப்போதைய அரசு பதவி ஏற்ற அன்றே 1977 ஜூலை முதல்நாளில் மின்வெட்டு நீக்கப்பட்டது. இவ்வாண்டு முழுவதும் மின்வெட்டு இல்லை.

சென்ற ஆண்டு 205 தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளுக்கு மின்வசதி வழங்கப்பட்டது. இவ்வாண்டு 691 குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்படும். இத்துடன் அனைத்துக் குடியிருப்புகளும் மின் வசதி பெற்றுவிடும்.

விவசாயிகள் பயன்படுத்தும் மின்கட்டணம் யூனிட்டு ஒன்றுக்கு 16 பைசாவிலிருந்து 14 பைசாவாக 1-7-'77 முதல், குறைக்கப்பட்டது

1-6-'78 முதல் சிறு விவசாயிகளுக்கு மின்கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 14 பைசாவிலிருந்து 12 பைசாவாகவும், பெரும் விவசாயிகளுக்கு 16 பைசாவிலிருந்து 14 பைசாவாகவும் குறைக்கப்பட்டது. மீட்டர் வாடகைக் கட்டணம் மாதமொன்றுக்கு ஒரு மீட்டருக்கு 5 ரூபாயாக இருந்தது, 4 ரூபாயாகக் குறைக்கப்பட்டது

புகுமுக வகுப்பிற்கு மேல் படிக்கும் அரிசன பழங்குடி மாணவர்களின் பெற்றோர்களுடைய ஆண்டு வருமானம் ரூ. 2500-க்குக் குறைவாக இருந்தால் தான் கல்லூரிப் படிப்புக்குக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டு வந்தது. இதனை மாற்றி இந்த வருமான வரம்பு நீக்கப்பட்டு 1977-1978 முதல் பெற்றோரின் வருமானம் எவ்வளவு இருந்தாலும், அரிசன பழங்குடி மாணவர்களுக்கு கல்லூரிப் படிப்பு முழுவதும் இலவசமாக்கப்பட்டுள்ளது.

ஏழை அரிசனங்களில் எவரேனும் இறந்து விட்டால், அவரது ஈமக்கடன்களைச் செய்ய ரூ. 50 - நிதி உதவி உடனே அளிக்கப்படும்.

உள்ளாட்சி நிருவாக அமைப்பை மேம்படுத்தும் வகையில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் மக்கள் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஊராட்சியிலும் மக்கள் குழு அமைக்கப்படும்.

தமிழ்நாடு அரசு மூன்றாவது ஊதியக் குழுவை 1977-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அமைத்தது.

விரைவுப் பேருந்துகளில் கட்டணம் கிலோ மீட்டருக்கு 6 காசாக இருந்தது, 5 காசாகக் குறைக்கப்பட்டது.

கிராமப்புறங்களில் 221 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விடப்பட்டு 466 கிராமங்களில் உள்ள 7 லட்சம் மக்களுக்குப் போக்குவரத்து வசதி கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்துத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு கூடுதலாக ரூ. 53 கோடி நிதி ஒதுக்கியுள்ளது.

போக்குவரத்துத் தொழிலாளிக்கு கூடுதல் ஊதியமாக ரூ. 62 கூடுதலாகப் படி, ஓட்டுநருக்கு ரூ 69, பிற சலுகைகள் ரூ. 24, மருத்துவ வசதி, விபத்தின்றிப் பேருந்து செலுத்துவோருக்கு, ரொக்கப் பரிசுத் திட்டம், பணிக்காலத்தில் இறந்து போகும் தொழிலாளியின் குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு.

கிராமப் புறங்களில் தொழில் வளர, சிறு தொழில்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இந்த ஓராண்டில் 8,567 தொழில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சிறுதொழில்கள் மூலம் உற்பத்தி செய்ய முன்பு ஒதுக்கப்பட்ட பொருட்கள் 180, இப்போது 504.

1978 பிப்ரவரித் திங்கள் முடிய 946 சிறு தொழிலமைப்புகள் தொடங்கப்பட்டு 12,714 பேருக்கு வேலை தரப்பட்டுள்ளது.

'சிட்கோ' கிராமப்புறங்களில் 11,661 பேருக்கும் நகர்ப்புறங்களில் 10,161

பெருக்கும் வேலைவாய்ப்புகளைத் தந்துள்ளது. அதற்காகப் பயன்பட்ட தொகை ரூ. 1,672 லட்சமாகும்.

- 1976-77-ஆம் ஆண்டில் நபர் வாரித் திட்ட முதலீடு ரூ. 59 ஆகும். ஆனால் 1977-78-ஆம் ஆண்டில் நபர் வாரித் திட்ட முதலீடு 73 ஆகும்.

- வேளாண்மைத் துறைக்காக இதுவரை ஆண்டொன்றுக்கு 22 முதல் 24 கோடி ரூபாய் வரை செலவிடப்பட்டுள்ளது. இப்பொழுது 30 கோடி ரூபாய்க்கு உயர்த்தப்பட்டது.

- 1976-77-ஆம் ஆண்டு 53 லட்சம் டன்னாக இருந்த அரிசி உற்பத்தி 1977-78-ஆம் ஆண்டில் 62 இலட்சம் டன் அளவிற்கு உயர்ந்தது.

- வெள்ளச் சேத நிவாரணப் பணிக்கு ரூ. 380 இலட்சம் செலவிடப்பட்டது.

- இவ்வாண்டு வீட்டு வசதித் திட்டங்களுக்காக ரூ. 17.41 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

- 1978-79-ல் ரூ. 24 கோடி செலவில் 10,000 குடியிருப்புகளைக் கட்டித் தரும் பணியினை மேற்கொண்டுள்ளது.

- பொதுத் தொண்டாற்றிப் புகழ் கொண்டவர்கள், தேசியத் தலைவர்கள் ஆகியோருக்கு அரசுச் சார்பில் விழா எடுக்கப்படுகிறது.

- மதுவிலக்கு, தேசிய ஒருமைப்பாடு, நாட்டுப்பற்று போன்றவற்றை வலியுறுத்தும் தரமான படங்கள் தயாரிப்போருக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

- கேளிக்கை வரி விதிப்பிலும் சிறந்ததோர் சீர்திருத்தம் செய்யப்பட்டு 'காம்பவுண்டிங் முறையில்' வரி செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது.

- பத்திரிகையாளர்களுக்கு உதவும் வகையில் பத்திரிகையாளர் உதவி நிதி அமைக்கப்பட்டுள்ளது. சிறு பத்திரிகையாளர்களுக்கு உதவிட 'சிட்கோ' மூலம் நியூஸ் பிரிண்ட் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

- 1329 கிராமங்களில் தனித் திட்டமாகவும் கூட்டுத் திட்டமாகவும் குடிநீர் வழங்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் பயனடைவோர் 4,80,798 பேர்.

- வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் குறைந்தபட்சத் தேவையை நிறைவேற்றும் நோக்குடன், 1,205 கிராமங்களில் 9,80,381 பேர் பயன்பெறும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட்டது.

- 1411 கிராமங்களில் 7,95,000 பேர் பயன்பெறும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதித் திட்டங்கள் நிறைவேறி வருகின்றன.

- 2540 கிராமங்களில் 9,11,886 பேருக்குக் குடிநீர் வழங்கும் பல்வேறு திட்டங்களுக்குத் திட்டமிடப்பட்டுள்ளன.

- நீலகிரி மாவட்டத்தில் மட்டும் 45 குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள், பல்வேறு கட்டங்களில் நிறைவேறி வருகின்றன. இதனால் 19,839 பேர் பயன்பெறுவர்.

- புதிய குடிநீர்த் திட்டங்கள் 50 நகரங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 138 நகரங்களில் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

- நகர்ப்புற குடிநீர்த் திட்டத்திற்காக அரசு வழங்கிய தொகை ரூ. 302.45 இலட்சம். இதில் ரூ. 274.55 இலட்சம் செலவில் 13 குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- 1977-78-ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட புதிய மதிப்பீட்டுத் திட்டத்தில் நகர்ப்புற குடிநீர் வடிகால் திட்டத்திற்காக ரூ. 849.35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ. 142.82 இலட்சம் செலவில் இரண்டு பெரிய கழிவுநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- 1978-79-ல் நகர்ப்புற குடிநீர் வடிகால் பணிகளுக்காக ரூ. 850 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

- 1974-முதல் மூடிக்கிடந்த இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம் புதுவாழ்வு பெற தமிழக அரசு திட்டமிட்டது. இந்நிறுவனத்திற்கு ரூ. 47 இலட்சம் தந்துதவிய இந்திய மத்திய வங்கிக்கு தமிழக அரசு பொறுப்புறுதி அளித்தது. இதனால் இந்நிறுவனம் 1977 டிசம்பரில் திறக்கப்பட்டது. 436 பேர் மீண்டும் வேலை பெற்றனர்.

- 30-6-77-ல மூடிக்கிடந்த 8 நெசவாலைகளில் தமிழக அரசின் முயற்சியால், லட்சுமி மில்ஸ் மதுரை, சிவகுமார் ஸ்பின்னிங் மில்ஸ் நெல்லை, பிரகாஷ் மில்ஸ் கோவை, லோட்டஸ் மில்ஸ் கோவை, சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ் முத்தனேந்தல், (முகவை மாவட்டம்) ஆகிய ஐந்து ஆலைகள் திறக்கப்பட்டன

- மூடிக்கிடந்த ஆலைகள் மீண்டும் இயங்க தமிழக அரசு ரூ. 30 இலட்சம் கடனுதவி வழங்கியதுடன் வங்கிகள் அளித்த 120 இலட்ச ரூபாய்க்குப் பொறுப்புறுதியும் அளித்துள்ளது. இந்த ஆலைகளை இயக்க வைத்ததால் 1,740 பேர் வேலைவாய்ப்புப் பெற்றனர்.

- மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்பொழுது இறந்துவிட்டால் ஆயிரம் ரூபாய் நிதி வழங்குவது என்பதை மாற்றி ரூ. 5000 நிதி உதவி 25-7-77 முதல் வழங்கப்படுகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!



"சாராயம் நம் உடலையும், நடத்தையையும், அறிவையும் பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும், கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்."

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல் அரிசனங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விமோசனம் இல்லை!"

— பேரறிஞர் அண்ணா




வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

பதிவு எண். M. 8676

# தமிழக அரசின் ஓராண்டுப் பணிகள் தொகுப்பு மலர்

1-7-1978 50 காசு.

